பாலைவனச் சிறையில் இயேசுவுக்காக...

பிரபு ஐசக்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பாலைவனச் சிறையில் இயேசுவுக்காக

"கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல,
அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு
அருளப்பட்டிருக்கிறது" (பிலி. 1:29)

சகோ. பிரபு ஐசக்

கன்மலையின் குரல் ஊழியங்கள்
13, 2வது குறுக்கு சி.எம். ஜான் தெரு
செங்குட்டை, காட்பாடி, வேலூர் மாவட்டம்
PHONE : : 0416 - 2297676 CELL : 94862 48250
EMAIL - ADMIN @ VOSR MINISTRIES.COM
PRABHU ISSAC @ YAHOO.COM WWW.VOSR MINISTRIES.COM

பாலைவனச் சிறையில் இயேசுவுக்காக

Copyright © சகோ. பிரபு ஐசக்

ALL RIGHTS RESERVED

NO PART OF THIS PUBLICATION MAY BE REPRODUCED OR TRANSMITTED IN ANY FORM OR BY ANY MEANS, ELECTRONIC OR MECHANICAL, INCLUDING PHOTOCOPYING, RECORDING, OR ANY INFORMATION STORAGE AND RETRIEVEL SYSTEM, WITHOUT PERMISSION IN WRITING FROM THE PUBLISHER.

வெளியீடு :

கன்மலையின் குரல் ஊழியங்கள்

13, 2வது குறுக்கு சி.எம். ஜான் தெரு
செங்குட்டை, காட்பாடி, வேலூர் மாவட்டம்
PHONE : : 0416 - 2297676 CELL : 94862 48250
EMAIL - ADMIN @ VOSR MINISTRIES.COM
PRABHU ISSAC @ YAHOO.COM WWW.VOSR MINISTRIES.COM

PRINTED BY

Vasanth Prints
Chennai
Ph : 044-2435 5802
Mobile : 94440 12139
E-mail : t.simonpeter@yahoo.co.in

ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !

இந்தப் புத்தகத்தின் 3000 Copies முடிந்து - இரண்டாவது பதிப்பு வெளியிட கிருபை புரிந்த கர்த்தர் இயேசுவுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளில் இந்த 3000 புத்தகங்களை குறைந்தது 25000 தமிழ்விசுவாசிகள் படித்திருக்கின்றனர். (ஒரு புத்தகம் x 5 பேர் (அ) 10 பேர் என்று) என்னுடைய சிறையின் பாடுகளின் மத்தியில் கொண்ட உறுதியான விசுவாசம் - வாசித்த அநேக ஆயிரம் விசுவாசிகளை இன்னும் கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்தியுள்ளது. எங்களுக்கு வரும் கடிதங்களும், நேரிலும், தொலைபேசி மூலமும் பகரும் சாட்சிகளும் இன்னொரு பதிப்பை வெளியிடத் தூண்டியுள்ளது !

கர்த்தர் அடியேனை சவுதி அரேபிய சிறையிலிருந்து 2002 ம் ஆண்டு பிப்ரவரி 8-ம் தேதி இந்தியாவிற்கு அற்புத விதமாக விடுதலையாக்கி கொண்டு வந்த நாள் முதல், இன்று வரை, (அக்டோபர் 2006) தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பிள்ளைகள் வாழ்விலும், குறிப்பாக ஊழியத்திலும், நினைப்பதற்கும், வேண்டிக் கொள்வதற்கும் மேலாகவே வல்லமையாய் கிரியை செய்து, அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். இந்தியாவின் பல மாநிலங்களிலும் குவைத், 2004-2005-ல் பஹ்ரைய்ன், கட்டார் (Qatar) மஸ்கட் (Muscat) அபுதாபி, துபாய் (U.A.E.) போன்ற வளைகுடா நாடுகளுக்கும், கொண்டு சென்று அடியேனின் சாட்சியின் ஊழியத்தை செய்யவும் அநேகரைத் திடப்படுத்தி, கர்த்தருக்குள் நிலை நிற்கவும் செய்தார்.

மேலும் கர்த்தர் 2006-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் - என் மனைவி சகோதரி. சுசிலா பிரபுவை, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு கொண்டு சென்று அங்கு Staff Nurse பணியில் சேர வைத்தார். இதன் மூலமாக அடியேனின் ஊழிய வாசல்கள் மேற்கு நாடுகளிலும் திறக்கும் படியாக செய்த தேவனுக்கு கோடி நன்றிகள். உரித்தாகட்டும்.

கடந்த 2006 -ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ம் தேதியிலிருந்து 2006 ஜூலை மாதம் வரை அமெரிக்க நாடுகளில் பல மாநிலங்களில் உள்ள இந்திய, பாகிஸ்தானிய, தென் கொரிய, அமெரிக்க சபைகளிலும் மற்றும் பல ஜெபக்கூடுகைகளிலும் கலந்து ஊழியங்களை வல்லமையாக செய்ய கர்த்தர் கிருபை புரிந்தோர் இவ்விதமாக, "நீ ஆசீர்வதிக்கப்பட்டவன், நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மென்மேலும் பலப்படுவாய்" என்று

அவ்வப்போது எனக்கு ஆண்டவர் நினைவூட்டும் வேதவாக்கின் படி (1 சாமுவேல் 26:25) ஊழியங்களின் எல்லைகளைப் பெரிதாக்கி வருகின்றார், கர்த்தருடைய நாமம் ஒன்றே மகிமைப்படுவதாக.

மேலும் - இந்த பாலைவனச் சிறையில் ''இயேசுவுக்காக'' தமிழ்ப்புத்தகத்தின் ஆங்கில மொழியாக்க மாக **"For Christ in the Wilderness"** என்ற தலைப்பில் புத்தகங்கள் 3000 பதிப்புகளை வெளியிடவும் கர்த்தர் உதவி புரிந்தார்.

தமிழ் அறியாத மற்ற அனைத்துலக விசுவாசிகளும், பலரும் இந்த அனுபவங்களை வாசிக்க கர்த்தர் உதவி செய்தார். மார்ச் 2006-ல் கன்மலைக் குரலின் கீதங்கள் Vol-2 அடியோ கேசட்டுகள் DVD, VCD, ACD வெளியிட்டு குறுகிய காலத்தில் அநேகர் பாராட்டி கர்த்தருக்குள் களிகூறும்படி இப்பாடல்கள் ஒலி, ஒளி வடிவத்தில் வெளியிடவும் கர்த்தர் கிருபை செய்தார்.

- ஆங்கிலத்தில் சாட்சி ACD வெளியிடவும் கர்த்தர் துணை புரிந்தார்.
- Angel TV, Blessing TV, Channel களிலும், 'கன்மலைக் குரலின்' பாடல்கள் மற்றும் பேட்டிகள் வெளிவரக் கர்த்தர் கிருபை செய்தார்.
- Feba வானொலி வாயிலாய தேவ செய்திகளை அளிக்க கர்த்தர் வாய்ப்பளித்தார்.
- 'கன்மலையின் குரல்' ஜெபவீட்டை எனது வீட்டு மேல்மாடியில் ரூ 5 லட்சம் செலவில் கட்டி 200 பேர் அமர்ந்து, ஆராதிக்க சிறப்புக் கூட்டங்கள் நடத்தவும் கர்த்தர் கிருபை செய்து வருகின்றார்.

ஞாயிறு மாலை ஆராதனை, சிறுவர் பள்ளி, செவ்வாய் உபவாக்க கூட்டம் மற்றும் மாதந்தோறும் - வேலூரை சுற்றியுள்ள கிராமங்களில் 'இலவச பொது மருத்துவ முகாம்', மாலையில் இன்னிசை நற்செய்தி கூட்டங்களையும் நடத்திவர கர்த்தர் கிருபை செய்து வருகிறார்.

மற்றும் பல சபைகளிலும், நற்செய்தி, எழுப்புதல் கூட்டங்களிலும் கர்ததர் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இவை அனைத்தையும் எழுத வேண்டிய காரணம் என்னவெனில், கர்த்தர் உளையான சேற்றிலிருந்து (KSA சிறைவாசம்) தூக்கி எடுத்து, கன்மலைமேல் நிறுத்தி எங்கள் அடிகளை (குடும்பம், ஊழியங்கள்) உறுதிப்படுத்தி - அநேகருக்கு ஆசீர்வாதமாகவும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும் வைத்திருக்கிற பெரிதான கிருபையை - வெளிப்படுத்தவே ஆகும்.

"எனக்கு நேரிட்ட சம்பவங்கள்" எல்லாம் சுவிசேஷம் பிரபலமடைய ஏதுவாயிற்று (பிலிப்பியர் 4:12) என்று அப். பவுல் கூறியது போலவே எனக்கு (எங்களுக்கு) ஏற்பட்ட 7 மாத -கடும் உபத்திரவங்கள் பாடுகள் எல்லாம் உண்மையாகவே இன்று சுவிசேஷம் பிரபலமாகவும், சோர்ந்து போன உள்ளங்களை திடப்படுத்தவும் காரணமானது என்பதில் ஐயமில்லை.

தொடர்ந்து எங்களுக்காக எங்கள் ஊழியங்களுக்காக தேவைகளுக்காக, மனைவி பிள்ளைகளுக்காக உடன் ஊழியர்களுக்காக தயவு செய்து ஜெபியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் இயேசுவினருகே வர இவ்வூழியங்கள், குறிப்பாக இந்த பாலைவனச் சிறையில் இயேசுவுக்காக - 2 -வது பதிப்பு புத்தங்களை இன்னும் அநேகரைத் திடப்படுத்தி, பெலப்படுத்தி, சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, கர்த்தரில் நிலை நிற்க செய்யட்டும், ஜெபியுங்கள்

இயன்றவரை ஆவியானவரின் ஏவுதலின்படி ஊழியம் பெருக உதவுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

Rev. பிரபு ஐசக்

முன்னுரை

"பாலைவனச் சிறையில் பரமன் இயேசுவுக்காக" என்ற பெயரில் எனது அன்பு தம்பி பிரபு ஐசக் வெளியிடும் இப்புத்தகத்திற்கு முகவுரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் இப்புத்தகம் பெருமகிழ்ச்சியினால் முளைந்தது அல்ல; பெரும் அதிர்ச்சியினால் வெடித்தது என்றே கூறவேண்டும். உலகில் பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ புத்தகங்கள் நூற்றுக்கணக்கான மொழிகளில் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவித்த இம்மனிதரின் சாட்சி புத்தகம் போன்ற பிற புத்தகங்கள் உலகில் விரல்விட்டு எண்ணக்கூடியவைகளே.

வெயிலில் இருக்கும்போதுதான் நிழலின் அருமை தெரியும். அவ்வண்ணமே, சவூதி அரேபியாவில் மதச்சுதந்திரம் இல்லை என்பதால் உண்மைக் கிறிஸ்தவர்களிடையே ஆவிக்குரிய தாகம் வேறெந்த தேசத்திலும் காணப்படாத அளவிற்கு உள்ளதைக் கண்கூடாகக் கண்டேன்.

அந்நாட்டில் இரகசியமாக ஊழியம் செய்யும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்து ஊழியம் செய்கின்றனர். அப்படிப்பட்டவர்களுள் சகோ. பிரபு ஐசக்கின் ஊழியம் மெச்சத்தகுந்தது. இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நாள் கூட்டங்களிலும் செய்தியளித்தது நான்தான். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அத்தேசத்தில் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களின் பெருங்கூட்டத்தைப் பார்க்கவே முடியாது. மாலை ஏழரை மணிக்கு துவங்கின கூட்டம் அடுத்த நாள் காலை மூன்றரை மணிக்கு தான் முடிந்தது. பல நாட்டவர் கலந்து கொண்டனர். இக்கூட்டங்களில் கலந்து கொள்ள பலர் ஆறு மணி நேரம், எட்டு மணி நேரமெல்லாம் காரை ஓட்டிக்கொண்டு குடும்பம் குடும்பமாக வந்தனர். அற்புத அடையாளங்களினால் கர்த்தர் வசனத்தை உறுதிப்படுத்தினார். பரலோகம் பூலோகத்தில் இறங்கிவிட்டதோ என்ற வியப்பு அநேகருக்கு ஏற்பட்டது!

சுமார் ஒரு மாதம் அங்கு ஊழியம் செய்த நான் இந்தியா திரும்பின சில நாட்களில் எனது இரண்டு நாள் ஜெத்தா கூட்டங்களை ஒழுங்கு செய்த சகோ. பிரபு ஐசக் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஒருவேளை நான் பிடிபட்டிருந்தால் சுவிஷேத்தினிமித்தம் கொல்லப்பட்டுமிருக்கலாம். என் ஸ்தானத்தில் பாடுபட்ட என் அன்பு தம்பி பிரபு ஐசக்கை நினைக்கும்பொழுது "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" (ஏசாயா 53:4) என்ற வசனம் நினைவிற்கு வருகிறது. இயேசு கிறிஸ்து நமக்காக பட்ட பாடுகளில் ஒரு சிறு பகுதியை தானும் அனுபவித்ததை விளக்குவதே இப்புத்தகம்.

முகவுரை எழுதுவதற்காக இப்புத்தகத்தை வாசித்தபொழுது என் கண்களில் பெருக்கெடுத்த கண்ணீர் கன்னத்தில் வழிந்து நெஞ்சை நனைத்தது. இப்புத்தகத்தை வாசிக்கும் அனைவருக்கும் சகோ. பிரபு ஐசக்கினுடைய அனுபவம் ஓர் சவாலாக அமையும் என்பதில் ஐயமில்லை. இப்புத்தகம் ஊழியர்களை உயிர்ப்பிக்கும்; விசுவாசிகளை வீரநடை போட வைக்கும்!

"நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன்" (சங். 119:71) என்ற வசனத்தின்படி சகோ. பிரபு ஐசக்கினுடைய அனுபவம் ஊழியப் பாதையில் அவருக்கு அனுகூலமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இவருக்காகவும், இவரது மனைவி திருமதி சுசிலா பிரபுவிற்காகவும், பிள்ளைகள் ஜோஹன்னா பிரபு, பெஞ்சமின் பிரபு ஆகியோருக்காகவும் ஜெபிப்போம். பல இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு இக்குடும்பத்தினைக் கர்த்தர் ஆசீர்வாதமாக மாற்றப் போகிறார் என்பதில் எவ்வளவேனும் சந்தேகம் எனக்கில்லை. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

சுவி. டாக்டர் ஜான் சாலமோன்

ANTANTULLA APPAM TRUST

{A Non-Profitable Religious & Charitable Trust}

C/o The Post Master, Padappai - 601 301.
Chengalpattu Dist. Tamil Nadu (INDIA)
Phone : 044-24840407 / 044-24835299 Fax : 044-24840941

J. Sam Jebadurai, M.A.
Evangelist & Managing Trustee

Date ....

வாழ்த்துரை

"பாலைவனச் சிறையில் இயேசுவுக்காக" என்ற இந்த அருமையான புத்தகத்தை அன்பு சகோதரர் பிரபு ஐசக் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களை ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேலாக அறிவேன். ஊழிய வாஞ்சையும் கர்த்தருக்காக ஏதாவது பெரிய காரியத்தை செய்ய வேண்டும் என்ற துடிப்பும் உள்ள நல்ல தேவ மனிதர். சத்தியத்திற் காகவும், சுவிசேஷத்திற்காகவும் அவர் சிறையில் அடைக்கப் பட்டதை அறிந்து துடித்துப்போனேன். எண்ணற்ற விசுவாசிகள் அவருக்காக கண்ணீருடனும், பாரத்துடனும் ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதமான விடுதலையைத் தந்தார்.

விசுவாசத்திலே இரண்டு வகை உண்டு. ஒரு வகை விசுவாசம் கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்கிற விசுவாசம். அடுத்த விசுவாசம் கர்த்தருக்காக பாடு அனுபவிக்கிற விசுவாசம். எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் அந்த இரண்டு வகை விசுவாசத்தையும் காணலாம். "விசுவாசத் தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை

நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்," (எபி. 11:33).

அதே நேரத்தில் மறு பக்கத்தில் "வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்" (எபி. 11:35,36).

சகோதரன் இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகள் சுயபரிதாபத்தைத் தட்டி எழுப்புவதற்காக அல்ல, உங்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக, இப்படி பாடுகளின் பாதையில் போகும்போது நாம் என்ன செய்யவேண்டும் என்பதை தன்னுடைய அனுபவத்திலிருந்து கொடுத்திருக்கிறார். ஜெபத்தோடு படியுங்கள். மற்றவர்களுக்கும் இந்த புத்தகத்தை வாங்கிக் கொடுங்கள்.

நம்முடைய தேசத்திலும் சுவிசேஷத்தின் கதவுகள் வேகமாய் அடைக்கப்பட்டு வருகிறது. இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடுகிறது. அநேக கிறிஸ்தவர்கள் போதகர்கள் கொல்லப்பட்டு கன்னியாஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டார்கள். தேசம் எந்த பாதையில் சென்றாலும் தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கு விரோதமாய் வருகிற ஒவ்வொரு சவாலையும் எதிர்கொண்டேயாகவேண்டும்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போதெல்லாம் சகோதரர் பிரபு ஐசக் அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் ஜெபத்திலே நினைவுகூருங்கள். கர்த்தர் அவர் ஊழியத்தின் எல்லைகளை விரிவாக்கி மகிமையான சாட்சியாக பயன்படுத்துவாராக.

ஜே. சாம் ஜெபத்துரை

"Your Sorrow shall be turned into Joy" (John 16:20)

சமர்ப்பணம்

இந்நூலை

மரணத்தின் வாசலிலிருந்து என்னை விடுவித்த "விடுதலையின் தேவன்" இயேசு கிறிஸ்துவுக்கும்

என் சிறுபிராயம் முதல் நீடிய பொறுமை, சகிப்புத் தன்மையை கற்றுத் தந்து மறைந்த என் அன்புத் தாய் திருமதி. ஹெலன் ஐசக், என் அன்புத் தந்தை திரு. ஐசக் ஆபிரகாம் மற்றும் என் அன்பு மாமனார் திரு. விக்டர் மோஸஸ், எளிமை, தாழ்மையின் சின்னமான என் மாமியார் திருமதி. ஜெயமணி விக்டர் ஆகியோருக்கும்

என் சிறைப்பாடுகளில் சமபங்கை சிறைக்கு வெளியே இருந்து அனுபவித்து, மனைவியாக மட்டுமன்றி ஒரு தாயாகவும் இருந்து என்னை தேற்றி, ஆற்றிய என் அன்பு மனைவி திருமதி. சுசிலா பிரபுவுக்கும் அர்ப்பணம் செய்கின்றேன்.

சுவி. பிரபு ஐசக்

பொருளடக்கம்

1. தனிச்சிறை

2. பொதுவான சிறை

3. ஷரபியாவிலுள்ள சிறை

4. புரைமான் சிறை

1

தனிச்சிறை

ஜூலை 18 ஆம் தேதி, 2001, இரவு நேரம் 11:20 எதிர்பாராத அந்நேரத்தில், வாசல் அழைப்பு மணியின் சத்தம் என் சிந்தனையைச் சிதறடித்தது. நானும் என் மனைவியும் ஒரு சகோதரி வீட்டில் குடும்ப ஜெபத்தை முடித்துவிட்டு இரவு 10 மணிக்குத் தான் திரும்பினோம். மறுநாள் நடக்கயிருந்த ஜெபக் கூட்டத்திற்கு எங்களுடைய ஜெப அறையிலிருந்து தேவன் தந்த வெளிப்படுத்தலின்படி தேவ செய்தியை ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். இந்த வேளையில் யார்? என்ற கேள்விக்குறியோடு எழுந்து சென்று கதவைத் திறந்தேன். 30 வயது மதிக்கத்தக்க, சவுதி உடையில் ஒரு நபர் "உன் பெயர் 'இஷ்பக்' தானே?" என்றார். அவன் கேட்ட தோரணை எனக்கு சிறிது அதிர்ச்சி அளிப்பினும் சமாளித்துக் கொண்டு "இஷ்பக் அல்ல, என் பெயர் ஈசாக் பிரபு" என்று பதிலளித்தேன். ஈசாக் என்ற பெயரை சவுதியில் பெரும்பாலும் இஷ்பக் என்று உச்சரிப்பார்கள். அவரும் மன்னிக்கவும் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். ஆனாலும் அது என் சிந்தனையின் அமைதியைக் குலைத்தது. இருப்பினும் அதை மேற்கொண்டு தேவசெய்தியை ஆயத்தம் செய்வதில் அமர்ந்தேன்.

10 நிமிடம் கழித்து, மறுபடியும் என் வீட்டு 'அழைப்பு மணி' சத்தம்! எழுந்து சென்று கதவைத் திறந்தேன். 3 சவுதி நபர்கள். நாட்டு உடையில்! அங்கு கதவருகே நின்று கொண்டிருந்தார்கள். "உங்களை சில கேள்விகள் கேட்க வேண்டும். உங்கள் வீட்டை சோதனையிட வேண்டும்" என்றார்கள். உடனே நான் "நீங்கள் யார்?" என்று கேட்டேன். அப்போது ஒருவர் (சுமார் 50 வயது) தன்னுடைய போலீஸ் அதிகாரிக்குரிய அடையாள அட்டையைக் காட்டினார். புரிந்து கொண்டேன். திடீர் அதிர்ச்சி, திகில், பயம் உடனே தோன்றினாலும், "ஆண்டவரே ஸ்தோத்திரம்", "என்னையும் மனைவியையும் பாதுகாத்துக் கொள்ளும்" என்று மனதில் சொல்லிக் கொண்டேன். உடனே நுழைந்தவர்கள் 'முன்னறையில் வரவேற்பு அறையில் உள்ள

சோபாவில் உட்கார்ந்தார்கள். அதிகாரி போன்றவர் சில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். சரி, கேட்டுவிட்டு அப்படியே போய்விடுவார்கள் என்று நினைத்தேன். "எங்கள் ஜெப அறையை இவர்கள் பார்த்துவிடக் கூடாது ஆண்டவரே" என்று மனதில் வேண்டிக் கொண்டேன். என் மனைவியும் படுக்கை அறையிலிருந்து திகைப்புடன் ஓடிவந்தாள். ஜெப அறை கதவு மூடியிருந்தது. அது பார்வையில் படாத வண்ணம் அக்கதவை மறைத்தபடி என் மனைவி நின்று கொண்டாள். அப்படியும் அந்த இரகசிய போலீஸாரும், சில மூத்தவர்களும் "உள்ளே அறைகளை சோதனையிடவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்றார்கள். வேறு வழியின்றி ஜெப அறை கதவைத் திறந்தோம். மட்டுமன்றி, சிறிது நேரத்தில் ஒருவர்பின் ஒருவராக 13 பேர் வந்துவிட்டார்கள். ஜெப அறை : இரண்டு அறைகளை ஒன்றாக இணைத்து ஒரு ஆலயம் போலவே அமைத்திருந்தோம். எல்லா சுவர்களையும் சத்தம் வெளியே கேட்காதிருக்க "தெர்மாகூல்" வைத்து ஒட்டியிருந்தோம். அவற்றின் மேல் அழகிய வண்ணங்களில் ஹால் முழுவதும் அழகான துணிகள் தொங்கவிட்டிருந்தோம். பிரசங்கமேடை (Altar) அமைத்திருந்தோம். கன்மலையின் குரல் (VOICE OF THE SOLID ROCK) மற்றும் அட்டைகளில் வசனங்களுடன் அமைத்திருந்தோம். இவற்றை அவர்கள் கண்டதும் அவர்களுக்கு ஆச்சரியம் ஒரு பக்கம், கோபம் மறுபக்கம் பொங்கியது. நமது நாட்டிற்குள் ஒரு கிறிஸ்தவ சபையை வீட்டிற்குள்ளேயே அமைத்திருக்கிறார்களே! என்று ஒருவருக்கொருவர் ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டார்கள். வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகளை பிய்த்து எறிந்தார்கள். சிலுவை போஸ்டரை கிழித்து எறிந்தார்கள். அங்கிருந்த பாடல் புத்தகங்கள், முன் அறையிலே வைத்திருந்த பல 'வீடியோ டேப்புகளை' கைப்பற்றி எடுத்துக் கொண்டார்கள். சில போலீஸார் இப்படி செய்து கொண்டிருக்கும்போது அந்த ஹாலில் ஒரு போலீஸ் அதிகாரி முதல் விசாரணையை என்னிடம் துவக்கினார். "எப்படி கிறிஸ்தவ ஆலயத்தை உன் வீட்டில் நடத்துகிறாய்?" என்றும் முன்பே அவர்கள் சேகரித்திருந்த தகவல்களின் அடிப்படையில் எதற்காக இரண்டு பெரிய கூட்டங்களை ஒழுங்கு செய்தீர்கள்?", "எத்தனை கிறிஸ்தவ தலைவர்கள் சேர்ந்து இதை நடத்துகிறீர்கள்?" என்று கேட்டார். இந்தக் கூட்டமானது நானும் என் மனைவியும் பல வருடங்கள் KSAவில் பணிபுரிந்து வெளியேறி கடைசியாக தாய்நாடு திரும்புவதால் எங்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவு உபசார கூட்டம் (Farewel) ஆகும். இதற்கு நானே பொறுப்பு எடுத்துக் கொள்ளுகிறேன். மற்றவர்கள் இதற்கு பொறுப்பல்ல. என்னை எதுவேண்டுமானாலும் செய்யுங்கள்" என்றேன். உடனே அந்த அதிகாரி சரியாக மற்ற கிறிஸ்தவர்கள் பெயர்களை சொல்லாவிட்டால் பக்கத்தில்

நிற்கிற இந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளை விட்டு உன் மனைவியின் முன்பாக உன்னை அடிக்க சொல்வேன் என்றவாறு பக்கத்தில் நின்ற வாட்டசாட்டமான, உயரமான போலீசாரிடம் என்னை அடிக்க சைகை காட்டினார். நான் ஒன்றும் பதில் பேசவில்லை. அப்படியே நடப்பது நடக்கட்டும் என்று "ஸ்தோத்திரம் ஆண்டவரே" என்று சொல்லிக் கொண்டே நின்றுகொண்டிருந்தேன். அந்நேரம் ஒரு செல்போன் அழைப்பு, அந்த அதிகாரிக்கு மேல் அதிகாரியிடமிருந்து வந்தது. அவர் என்னை "மேலும் எதுவும் செய்யாமல் விசாரணை அலுவலகத்திற்கு அழைத்து வாருங்கள்" என்று சொல்லியிருந்தார். ஆம், அவர்கள் என்னை மிரட்டுவதை உடனே நிறுத்திவிட்டு புறப்படு, புறப்படு! என்று துரிதப்படுத்தினார்கள். சத்துருவின் கரம் என்மேல் படாதபடி என் தேவன் என்னைக் காத்தார்.

அது மட்டுமல்ல அந்த அறையின் மூலையிலிருந்த ஒரு பெரிய போட்டோ காப்பி மெஷினையும் (Photo Copy Machine IRS 2 லட்சம் மதிப்புள்ளது) பார்த்துவிட்டார்கள். அது "கன்மலையின் குரல்" என்ற மாதாந்திர பத்திரிகை தயாரிக்க நாங்கள் வாங்கி வைத்திருந்தோம். மிகவும் ஆச்சரியம் அவர்களுக்கு. "யார் கொடுத்தது எவ்வளவிற்கு வாங்கினாய்? என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். "நான் இது SR 5000/–க்கு மலிவு விலையில், இந்தியாவிற்கு திரும்பிய ஒரு இந்திய நண்பரிடமிருந்து வாங்கினது" என்றேன். "எதற்காக வாங்கினாய்" என்றார்கள். "நாங்கள் சில காலம் கழித்து போவதால் ஊரில் உபயோகப்படுத்த இப்போது வாங்கினோம்" என்றேன். அவர்கள் நம்பவில்லை என்பதை அவர்களின் முகபாவத்தை வைத்தே புரிந்துகொண்டேன். மேலும் அங்கிருந்த என் பர்சனல் கம்பியூட்டரையும் (Personal Computer) எடுத்துக் கொண்டார்கள். அந்த அதிகாரி மேலும் உனக்கு நெருங்கிய உறவினர்கள் இருக்கிறார்களா? இருந்தால் உன் மனைவியை அவர்கள் பொறுப்பெடுத்து பார்த்துக்கொள்ளட்டும். இல்லாவிட்டால் உன் மனைவியையும் பெண்கள் ஜெயிலில் போடுவோம், விசாரணை முடியும் வரை என்று சொன்னார். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நான் பாடுகளை அனுபவிக்கத் தயார். ஆனால், இந்த சிறையின் பாடுகள் என் மனைவிக்கு வேண்டாம் என்று நினைத்தேன், அந்த அதிகாரியிடம் சொன்னேன் எனக்கு நண்பர் குடும்பங்கள் உண்டு. அவர்கள் அவளை பார்த்துக் கொள்வார்கள் என்றேன். "சரி உடனே அவர்களை கூப்பிடு" என்றார். உடனே என் மனைவி சகோ. இம்மானுவேல் குடும்பத்தை உடனே பதினைந்து நிமிடத்திற்குள் வரச் சொல்லி அழைக்க, அவர்களும் கர்த்தர் கிருபையால் உடனே குடும்பத்துடன் வந்துவிட்டார்கள். பிறகு "இரண்டு நாட்களில் உன் கணவனை

விசாரித்து விட்டு அனுப்பி விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு என்னைமட்டும் அழைத்துச் செல்ல தயாராகிவிட்டனர். என் அருமை மனைவியை கட்டித் தழுவியவாறு ''பயப்படாதே, கர்த்தர் நம்மோடு இருக்கிறார்'' என்று கூறி திடப்படுத்தினேன். ஆனால் கண்களில் கண்ணீர் புரள தலையை அசைத்தவாறு அவளும், மிகவும் அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல் தைரியமான முகத்துடன் காணப்பட்டாள். அது எனக்கு மிகவும் தைரியத்தை கொடுத்தது. நடு இரவு 2¾ மணி வரை நடத்திய சோதனையின்போது படுக்கை அறையிலிருந்த சில வீடியோ டேப்புகள், ஸ்டோர் ரூமிலிருந்த நான்கு பெட்டி புதிய வீடியோ நாடாக்கள் (பதிவு செய்வதற்காக) வைத்திருந்தவைகளையும் கைப்பற்றினார்கள். ''இத்தனை வீடியோ டேப்ஸ் எதற்கு?'' என்றார்கள். ''ஊருக்கு கொண்டு செல்ல வாங்கியது'' என்றேன்.

பிறகு கைப்பற்றப்பட்ட வேதாகமங்கள், பாடல் புத்தகங்கள், படச்சுருள், 25 கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் அடங்கிய வீடியோ நாடாக்கள் இவற்றை ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் இவற்றை நிரப்பிக் கொண்டு அதை என்னையே தூக்கிக் கொண்டு வரச் சொன்னார்கள். சுமக்க முடியாத அளவு பெரும் பாரமாக இருந்தது. எனினும் சிரமத்தோடு சுமந்தேன். முதல் மாடியில் இருந்து கீழே இரண்டாம் மாடிக்கு சென்றேன். கூட இருந்த போலீஸ், உதவிக்கு ஒரு கரத்தைக் கூட நீட்டவில்லை. ஆனால், ஆண்டவர் முதல் சம்பவத்திலேயே அற்புதம் செய்ய ஆரம்பித்தார். எப்படியெனில், என் படுக்கையறை, ஸ்டோர் ரூமில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ வீடியோ கேசட்டுகள். அதிலும் அரபு மொழியில் இயேசு படங்கள், அரபு வேத புத்தகங்கள் மற்ற மொழியில் வேதாகமங்கள் இருந்ததை அவர்கள் சரியாக பார்த்து எடுத்துவிடாதபடி தேவன் அவர்கள் கண்களைக் குருடாக்கினார். ஏனெனில் அரபி மொழியில் வேதங்கள், புத்தகங்கள், இயேசுவைப் பற்றிய வீடியோ டேப்புகள் அவர்களிடம் கிடைத்திருந்தால் நான் சவுதி முஸ்லீம்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுகிறேன் என்ற குற்றச்சாட்டு 100 சதவிகிதம் உறுதி செய்யப்பட்டிருக்கும். பின்பு கடுமையான தண்டனை கொடுத்திருப்பார்கள். கர்த்தர் நல்லவராய் இருந்து எதிரிகளின் கண்களை மூடி என்னை இந்த பெரிய குற்றச்சாட்டி லிருந்து தப்புவித்தார்.

சகோ. ஆண்ரூ என்பவர் ரஷ்யா நாடு கடுமையான கம்யூனிஸ்ட் நாடாக இருக்கையில் வேதாகமங்களை கடத்தி செல்வாராம். எல்லையில் பாதுகாப்பு படையினர் கடுமையான சோதனை செய்வார்களாம். அப்போதெல்லாம் ஆண்டவரின் தயவுக்காக ஜெபிப்பாராம். ''ஆண்டவரே, இந்த போலீஸ்காரர்களின் கண்களை மறையும், வேதாகமங்கள் அடங்கிய இந்தப் பெட்டியை பார்க்கவோ,

அதைப் பற்றி கேட்கவோ கூடாதபடி நடத்தும்" என்று அப்படியே பலமுறை ஆண்டவர் அந்த காவலர்கள் கண்களை மறைப்பாராம். அவர்கள் அதைப்பற்றி கேட்காதபடி பார்த்துக் கொள்வாராம். ஆம், அப்படியே மற்ற முக்கிய வீடியோ கேசட்டை பார்த்து கைப்பற்றாதபடி அவர்கள் கண்களை மறைத்து ஆண்டவர் எங்களை தப்புவித்தார். இது ஆண்டவரின் அற்புதம் அல்லவா? ஒரு காரில் என்னையும் நான் சுமந்துவந்த பெட்டியையும் ஏற்றிக்கொண்டார்கள்.

தனிஅறை சிறையில் அடைப்பு

(SOLITARY CONFINEMENT)

பிறகு நேரே உள்துறை அமைச்சக சிறைக்குக்(Interior Ministry Prison) கொண்டு சென்றார்கள். அங்குள்ள அதிகாரியின் அறையில் உட்கார வைத்தார்கள். என்னுடன் கொண்டுவந்த அட்டைப் பெட்டியில் வீடியோ கேசட், வேதாகமங்கள் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அந்தப் பெட்டியில் ரிச்சர்ட் உம்பிராண்ட் எழுதிய "கிறிஸ்துவுக்காக சித்திரவதை" (TORTURED FOR CHRIST) என்ற தலைப்பிலான புத்தகம் முதலில் என் கண்களில் பட்டது. கிறிஸ்துவுக்காக சித்திரவதைகளை ஏற்றுக் கொள்வதும் அவசியம்தான் என்பதை எண்ணிப்பார்த்தேன். பிறகு ஒரு போலீஸ் வந்து இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் இரும்பு விலங்குகள் போட்டார். அங்கிருந்து ஒரு ஜீப்பில் ஏற்றிக் கொண்டு அதே காம்பவுண்டிலிருந்த சிறைச்சாலைக்கு கொண்டு சென்றார்கள். ஜீப்பை விட்டு இறங்கி கை, கால்களில் விலங்குகளுடன் சிறைச்சாலையிலுள்ள தனி அறைக்கு கூட்டிச் சென்றார்கள். கை கால்களில் விலங்குகள்! அவமானம், வெட்கம்! அடைந்தேன். "இந்த நிலையை அடையும்படி நான் என்ன குற்றம் செய்தேன், ஆண்டவரே!" என்று மனதிலேயே ஆண்டவரிடம் கேட்டேன். அப்போது ஆண்டவர் "நான் பட்ட சிலுவை பாடுகளை நீ அறியாயோ? கொல்கொதா மலையின் மேட்டிலே கல்வாரியை நோக்கி நான் சிலுவையைச் சுமந்து சென்ற போது பட்ட அவமானங்களை விடவா நீ படுகிறாய்" என்று ஆண்டவர் என்னை கேட்டது எனக்கு புரிந்தது. "ஆம்! ஆண்டவரே! உம் சிலுவை பாதை அவமானங்களை நோக்கும் போது, என் பாடுகள் ஒன்றுமில்லை" என உணர்ந்தேன்.

அந்த தனிஅறை சிறைச்சாலையில் மொத்தம் 16 தனி அறைகள் இருந்தன. நள்இரவு 3.30 மணி 8 ஆம் நம்பர் தனி அறையில் பிடித்து தள்ளினார்கள். இரும்பு கதவை "டமார்!" என்று மூடினார்கள். தனி அறை சிறைவாசம் என்றால் 4 நட்சத்திர ஹோட்டல் தனி அறை என்று நினைத்து விடாதீர்கள். அதன் நீளம் 7 அடி, அகலம் 3 அடி, உயரம் 8

அடி. ஒரு சவப்பெட்டியை புதைக்க கல்லறைக் குழியை தோண்டுவோம் அல்லவா? அந்த அளவிற்கு அந்த அறை இருந்தது. ஆனால் படுக்க ஒரு படுக்கை, ஒரு தலையணை, ஒரு போர்வை கொடுத்தார்கள். "கர்த்தாவே! இந்த வசதிக்கு உமக்கு ஸ்தோத்திரம்" என்றேன். நான்கு பக்கமும் இரும்பு சுவர்கள், வெளிக்காற்று உட்புக ஜன்னல் இல்லை. ஈ, கொசுக்கூட நுழைய முடியாது. வெளிச்சமே இல்லை. பொதுவான குளிர்சாதனம் இருந்தது. மூன்று வேளை சாப்பாடு, சரியான நேரத்தில் கொடுத்தார்கள். திகில், பயம், திடீர் அதிர்ச்சி, அவமானம், தனிமையின் வேதனை இவற்றின் மத்தியில் "ஆண்டவர் இயேசு இந்த வசதிகளை செய்ய உதவியாய் இருக்கிறாரே" என்று மனதிற்குள் ஆண்டவருக்கு நன்றி, ஸ்தோத்திரம் செலுத்தினேன். **"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும்"**(சங். 34:1) என்ற சங்கீதக்காரனாகிய தாவீதும் **"கர்த்தரை எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்"**(1 தெச. 5:18) என்று பரி. பவுலும் கூறியவண்ணமாகவே, இந்த இக்கட்டு நேரத்திலும், தனிமை சிறையில் இருக்கிற வசதிகளுக்காக நன்றி செலுத்தினேன்.

ஆனாலும் படுக்கவோ, தூங்கவோ என்னால் முடியவில்லை. மனதிலே பல கேள்விகள், குழப்பங்கள் எழவே, உடனே முழங்காலிட்டு அதே இடத்தில் ஜெபிக்க ஆரம்பித்தேன். "ஆண்டவரே, ஏன் இந்த சோதனையை அனுமதித்தீர்? அதுவும் இந்தியா திரும்ப 10 நாட்களே உள்ளது. எங்கள் இருவரது பாஸ்போர்ட்டும் நாடு திரும்ப ஒழுங்குசெய்யப்பட்டு ஜூலை 29ம் தேதி பயணம் செய்வதற்கு விமான பயணச் சீட்டு தயாராகவும் இருந்த வேளையிலே, ஏன் இதை அனுமதித்தீர்? எங்கள் பதினேழு வருட சவுதி வாழ்க்கையில் பன்னிரெண்டு வருட காலமாக ஜெபக்கூட்டங்கள், ஊழியங்கள் செய்த வேளையிலெல்லாம் அற்புதமாக பலமுறை சாத்தானுடைய பிடியிலிருந்து என்னையும் என் மனைவியையும் காப்பாற்றி இருக்கிறீரே! போலீசின் பிடியிலிருந்து தப்புவித்திருக்கிறீரே! இப்போது ஊருக்கு போகும் வேளை ஏன் இந்த பாடுகள்? ஆண்டவரே" என்று பல கேள்விகளை ஆண்டவரிடம் கேட்டேன். உடனே ஆண்டவர் வெளி. 2:10 வசனத்தைக் காட்டினார். **"நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே! இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான். பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்போது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்"** என்பதே அவ்வசனம். உடனே எனக்குள் ஒரு பெரிய தைரியமும், ஆண்டவருக்காய் பாடுகளை ஏற்போம், பிசாசின் சோதனையை மேற்கொள்வோம்!

மரணமே நேரிட்டாலும் கடைசிவரை, இறுதி மூச்சுவரை உண்மையாயிருப்போம் என்ற ஒரு வைராக்கியமும் எழுந்தது. பிறகு என்னையுமறியாமல் தூங்கிவிட்டேன்.

மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு கதவு தட்டப்பட்டது. அந்த இரும்புக் கதவில் ஒரு கைவிடும் அளவிற்கு ஒரு சதுர துவாரம் இருக்கும். அந்த துவாரத்தின் வழியாக பொட்டலம் (Packet) காலை சாப்பாடு நுழைத்து கொடுத்தார்கள். 'சாப்பிடு' என்றார்கள். "5.30 மணிக்கேவா? பல் துலக்க வேண்டும்" என்றேன். "எங்களுக்கு வேலை 6.30 மணிக்கு முடிகிறது. மற்ற போலீஸ் வருவதற்குள் எங்கள் வேலை நேரம் முடியும் முன்பே நீ சாப்பிட்டு முடித்திருக்க வேண்டும். ஆகவே பல் துலக்க யாவருக்கும் நேரம் கொடுக்க முடியாது" என்று பணியில் இருக்கும் போலீஸ் கடுமையான குரலில் சொன்னார். ஆனாலும் சிறிது கொப்பளித்துவிடுகிறேன் என்று வற்புறுத்தி கேட்ட பிறகே கதவைத் திறந்து குளியல் அறைக்கு அனுப்பினார்கள். எனவே வேகமாக வாய் கொப்பளித்துவிட்டு அறைக்குள் திரும்பிவந்தேன். காலை உணவு பரவாயில்லை. வேண்டா வெறுப்பாக சாப்பிட்டேன். இவ்விதமாக சாப்பாடு இந்த ஜெயிலில் தனி பொட்டலமாக வரும். கழிவறைக்கு போக வேண்டுமென்றால் கதவைத் தட்ட வேண்டும். அப்பொழுது போலீஸ் இரும்புக்கதவின் துவாரத்தின் மூடியைத் திறந்து என்ன வேண்டும்?" என்று கடுமையான குரலில் கேட்பார். கழிவறை போக வேண்டும் என்று சொன்னால், "சற்று காத்திரு" என்பார். ஏனெனில் வேறே கைதி கழிவறை யிலிருந்தால், முடித்து போனபிறகு என் கதவை திறக்க நான் போக முடியும். எனக்கு மட்டும் இந்த சட்டம் இல்லை அங்குள்ள மற்ற 15 கைதிகளுக்கும் அதே சட்டம்தான். ஏனெனில் அந்த ஜெயில் மிகவும் கடுமையான குற்றங்கள் (அரசாங்கத்திற்கும், மதத்திற்கும் எதிராக) செய்தவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள சிறை. ஆகவே அந்த 16 அறைக்கைதிகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூடாது. ஒருவரோடொருவர் பேசக்கூடாது. ஆகவே ஒரு கைதி கழிவறைக்கு சென்றிருந்தால், அவன் மறுபடியும் அறைக்கு திரும்பி, அவனுடைய அறைக்கதவு மூடப்பட்டப் பிறகே அடுத்து கதவைத் தட்டியவருக்கு கதவை திறப்பார்கள். அப்படி மற்ற கைதி கழிவறையில் இருக்கும் போது மற்றவர்களுக்கு அவசரமாக போகவேண்டும் என்றால் கூட கதவைத் திறக்க அனுமதிக்க மாட்டார்கள். 15 முதல் 30 நிமிடங்கள் ஆனாலும் அதுவரை நாம் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும். பின்னர் இந்த மாதிரி சில நாட்கள் நான் கழிவறைக்கு கதவைத் திறக்க சொன்னபோது இந்த மாதிரி கடுமையான சோதனைகள் எனக்கு ஏற்பட்டது. ஆண்டவர் என் ஜெபத்தை கேட்டார், சமாளிக்க பெலனையும் கட்டுப்படுத்தும் திறனையும் கொடுத்தார்.

பிறகு காலை 9.30 மணிக்குக் கதவைத் தட்டினார்கள். வெளியே வரசொல்லி கை, கால்களில் விலங்கிட்டார்கள். விசாரணைத் துறை அதிகாரியிடம் அழைத்துச் சென்றார்கள். அந்த அதிகாரி 50 வயது மதிக்கத்தக்கவர். சவுதி உடையிலிருந்தார். நல்ல ஆங்கிலத்தில் பேசினார். இருக்கையில் உட்காரச் சொன்னார். "நாங்கள் உங்கள் மதத்திற்கு எதிரியல்ல. ஆனால் நீங்கள் ஏன் எங்கள் மதத்திற்கு எதிராக செயல்படுகிறீர்கள்? மேலும் ஏன் அந்த பெரிய கூட்டங்களை ஒழுங்கு செய்தீர்கள்? உங்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட இரண்டு சவுதிகளின் பெயர்கள் அவர்கள் விலாசம் அவர்கள் யார் மூலமாக உங்கள் கூட்டங்களுக்கு வந்தார்கள்? இந்த கூட்டத்தை ஒழுங்கு செய்த மற்ற கிறிஸ்தவத் தலைவர்கள் யார்? இந்த விவரங்களை உடனே சொல்லிவிட்டால், இரண்டு நாட்களில் உன்னை அனுப்பிவிடுவேன். உன் மனைவியை இன்றே பார்க்க அனுமதிப்போம் என்று விசாரணையை ஆரம்பித்தார். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலத் தந்திரமாக, இதமாக பேசி உண்மையை வரவழைக்க நினைத்தார். எனக்குத் திகில், பயம் ஏற்பட்டது. என்னை வீட்டில் வைத்து கைது செய்த போதே "நான் என் பெயரைத் தவிர மற்ற யார் பெயரையும், குறிப்பாக அந்த இரண்டு சவுதிகளைப் பற்றி எந்த நிலையிலும் கூறக்கூடாது என்று தீர்மானித்து வந்தேன். ஆகவே மிரட்டல்களுக்கு மத்தியிலும், "எனக்கு இரண்டு சவுதிகளைப் பற்றி தெரியாது" என்றேன். பிறகு அங்கிருந்த மற்ற அதிகாரியிடம் "நீ தான் இந்த விசாரணைக்குப் பொறுப்பு, நீதான் இவனை முழுமையாக விசாரித்து உண்மையைக் கண்டுபிடித்து சீக்கிரம் அறிக்கை எனக்கு தரவேண்டும்" என்று கட்டளையிட்டார். பிறகு என்னை மறுபடியும் தனி சிறைக்கு கொண்டு வந்துவிட்டார்கள்.

அடுத்த நாள் வெள்ளிக் கிழமை. அது அவர்களுக்கு ஓய்வுநாள். சனிக்கிழமை விசாரணை துவங்கும் என்று அந்த அதிகாரி சொன்னதை அறையில் உட்கார்ந்து யோசித்து கொண்டிருந்தேன். மற்ற கிறிஸ்தவத் தலைவர்களை எப்படி சொல்வது? யாரை சொல்லலாம்? சொல்லலாமா? வேண்டாமா? இவர்களைப் பற்றி சொன்னால் இவர்களையும் கைது செய்வார்களே! ஐயோ! இந்த இரண்டு சவுதிகளும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதை அறிந்தால் அவர்களுடைய தலைகள் நிச்சயம் வெட்டப்படும். ஏனென்றால் அவர்களுடைய மதம் மற்றும் அரசாங்க சட்டங்கள் ஒரு முஸ்லீம், மதம் மாறினால் தலை வெட்டப்பட வேண்டுமென்று கூறுகின்றன. இப்படிப் பயங்கரமான சிந்தனைகள் தோன்றி என்னை தூங்க விடாமல் அலைக்கழித்தன.

விசாரணை துவங்கியது

சனிக்கிழமை (ஜூலை 21ஆம் தேதி) வந்தது. எதிர்பார்த்தவாறு காலை 10 மணிக்கு என்னை விசாரிக்க பக்கத்தில் உள்ள கட்டிடத்திற்கு கொண்டு சென்றார்கள். என் அறையை திறந்தவுடன் எனக்கு கால்களிலும், கைகளிலும் விலங்கிட்டு கொண்டு சென்றார்கள். கால் விலங்குகளின் உட்பாகம் மிகவும் கூர்மையான இரும்பாக இருப்பதால், நடக்கும்போது பின்னங்கால்களின் தோலையும் சதையையும் அறுக்கும். இரத்தம் கசிய ஆரம்பிக்கும். அணிந்திருக்கும் பேண்ட் துணியின் மேல் அந்தக் கால் விலங்குகளை போடச் சொன்னால் அப்படிப் போட மாட்டார்கள். வேண்டுமென்றே கால்களின் அடிபாகத்தை சுற்றிப் போடுவார்கள். மேலும் அந்த வலியுடன் "வேகமாக நட" என்று மிரட்டி, துரிதப்படுத்துவார்கள். தினசரி 4,5 முறைகள் இவ்விதமாக விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டேன். ஒவ்வொரு முறையும் கால்விலங்குகள் என் தோலை அறுக்கும். விசாரணையாளர் ஒரு இளைய அதிகாரி, கர்த்தர் கிருபையினால் கொஞ்சம் மென்மையாக பேசுபவராக இருந்தார். என்னைப் பற்றிய விவரங்களையும் எங்களுடைய வீட்டில் நடக்கும் ஜெபக்கூட்டம் மற்றும் இந்தப் பெரிய சுவிசேஷக் கூட்டங்களைப் பற்றிய விவரங்களையும் குறித்துப் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். எனக்கு மிகவும் பயம், படபடப்பு, 'யாரையும் காட்டிக் கொடுக்கக்கூடாது' என்ற முடிவுடன் மனதில் எனக்கு நானே பேசிக் கொண்டிருந்தேன். மேலும் "அவர்கள் உங்களை ஒப்புக் கொடுக்கும்போது நீங்கள் எப்படிப் பேசுவோமென்றும் என்னத்தைப் பேசுவோமென்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டியது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்"(மத்.10:18–20) என்றும் ராஜாக்களுக்கும், அதிகாரிகளுக்கும் முன்பதாக 'சாட்சியாக' நிறுத்தப்படுவீர்கள்" என்ற ஆண்டவரின் வார்த்தையின்படி நீர் எனக்காக பேசும் என்று ஜெபித்துக் கொண்டு இருந்தேன்.

ஆகவே முற்றிலும் ஆவியானவரிடம் என்னை ஒப்புக்கொடுத்தேன். ஆகவே விசாரணை அதிகாரிகள் எங்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சாட்டி பலவிதமான கேள்விகள் கேட்டு மிரட்டினாலும், நாம் இந்த தருணத்தை ஆண்டவர் நாம மகிமைக்காக 'சாட்சியாக பதில்களைக் கூறுவோம்' என்று உறுதியுடனும் திடத்துடனும் இருந்தேன்.

எனவே என் பதிலில் நான் 1984ல் சவுதி அரேபியாவுக்கு எக்ஸ்ரே டெக்னிஷியனாக (Xray Technician) சேர்ந்ததையும் 1985ல் என் மனைவி என்னிடம் வந்து சேர்ந்ததையும், 1984–1987 வரை

சாதாரணக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து அதன் பின்னர் 1990-2001 வரையான 11 வருடங்கள் இரட்சிக்கப்பட்ட, 'மறுபடியும் பிறந்த' கிறிஸ்தவர்களாக மாறினதையும் கூறினேன். மேலும் அவர் கேட்டார்: "இந்த நாட்டு சட்டத்தின்படி வீட்டிலோ, வேறு எங்கோ ஜெபக் கூட்டங்கள், ஆராதனை செய்யக்கூடாது என்பதை அறிந்திருந்தும் நீ ஏன் இப்படி செய்தாய்" என்று சற்று கோபமான குரலில் கேட்டார். அதற்கு நான் அமைதியாக பதிலளித்தேன், "இங்கு அநேக ஆயிரம் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். முக்கியமான துறைகளில் பணியாற்றி இந்த நாட்டு மக்களுக்கு தொண்டும் செய்கிறார்கள். இங்கு உங்களுடைய கடுமையான சட்டத்தினால் தொழுகைக் கூட்டங்களோ, தேவாலயங்களோ இல்லை, பல கிறிஸ்தவர்கள் இதற்கு பயந்தும் மற்றும் பலர் இதை சாக்காக கொண்டும் நமது ஆண்டவரைத் தேடுவதில்லை, ஆராதிப்பதில்லை. தேவபயம், பக்தி குறைந்து உலக காரியங்களில் பாவங்களில் உல்லாசமாக ஈடுபட்டு நேரத்தை வீணாய் கழிக்கின் றார்கள். எனவே தான் நாங்கள் எங்கள் வீடுகளில் ஒலி தடுப்பு ஏற்பாடுடன் அயலகத்தாருக்கு தொந்தரவு செய்யாமல் மற்ற கிறிஸ்தவர்களை உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தில் ஈடுபடுத்த ஜெப கூட்டங்களை நடத்தினோம். மேலும் எங்களுக்கு சுதந்தரமான ஆராதனை இங்கு தர நீங்கள் மறுப்பதால் நாங்கள் பயந்து, பயந்து இவ்விதமாக கூடி எங்கள் ஆண்டவரை தொழுகின்றோம்" என்று சிறு பிரசங்கமே செய்து முடித்தேன். அந்த இளம் அதிகாரியின் உள்ளத்தில் என் பதில் கிரியை செய்திருக்க வேண்டும். அவர், "நீ சொல்வது சரிதான். ஆனால் எங்கள் நாட்டு சட்டம் இதுதான். உங்கள் ஊரில் நீங்கள் போய் செய்து கொள்ளுங்கள்" என்றார். ஆம் இந்த விசாரணை நேரத்தில் ஆவியானவர் என்னை சாட்சி கூறும்படியாகவும், அவர்களுடைய சட்டத்தின் குறைகளையும் சுட்டிக்காட்டவும் வாய்ப்பளித்தார். ஆம் மாற்கு 13:9 பிரகாரமே **"என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும், ராஜாக்களுக்கும், சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்"** என்பது அன்று என் வாழ்வில் நிறைவேறியது.

இவ்விதமாக அந்த அதிகாரியிடம் தினமும் 3 அல்லது 4 வேளைகள் என்னை கை, கால்களில் சங்கிலியிட்டு விசாரணைக்கு கொண்டு செல்வார்கள். நான் சொல்லும் பதில்கள் ஆங்கில மொழியில் என் குற்றப்பத்திரிக்கையில் எழுதச் சொல்வார்கள். எழுதின பதிலுக்கு நேராக பத்தியில் என் கையெழுத்து, பெருவிரல் ரேகையையும் பதியச் செய்வார்கள். என் வீட்டில் கைப்பற்றின வீடியோ கேசட்டுகளை போட்டு அதில் வருகிற இவர் யார்? என்ன ஜெபிக்கிறார்? என்ன பிரசங்கம் அது? எவ்வளவு நேரம் ஆராதிப்பீர்கள்? எத்தனை பேர் வாராவாரம்

வருவார்கள்? இப்படி ஜெபக்கூட்டம் ஆராதனைகளைப் பற்றிக் கேட்பார். நானும் சாட்சியாக **இயேசு கிறிஸ்துவே, உலக இரட்சகர், பாவத்தை வெறுத்து, பாவமன்னிப்பைப் பெற்று, மறுபடியும் பிறந்த, இரட்சிக்கப்பட்டவர்களாக இந்த உலகில் ஒவ்வொருவரும் ஆகவேண்டும்! அவரே வழி, சத்தியம், ஜீவன்** என்பதன் அடிப்படையில் எங்கள் பிரசங்கங்கள் இருக்கும். எங்கள் சத்தியத்தை நாங்கள் கூறுவோம். மற்றபடி உங்கள் மதத்திற்கு எதிராக பேசுவதில்லை என்று சுவிசேஷத்தின் மையக் கருத்தையும் ஒருமுறை பதிலாக விசாரணையின் போது சொன்னேன். அது அவருக்கு சுவிசேஷம் கூறினது போல் அமைந்தது. அந்த அரிய வாய்ப்பை ஆண்டவர் இந்தப் பாடுகளின் மத்தியில் கொடுத்ததற்காக தேவனை நான் துதிக்கிறேன். அந்த அதிகாரி நம் உண்மை கிறிஸ்தவத்தை புரிந்து கொண்டதை உணர முடிந்தது. ஆனால் மறுபடியும் தொடர்ந்து மற்ற கிறிஸ்தவத் தலைவர்களையும், அந்த 2 சவுதிகளைப் பற்றியும் வற்புறுத்திக் கேட்டார். நான் மறுத்தேன்.

ஆனால் இம்முறை ஆதாரத்தோடு கேட்டார், "உங்கள் வீட்டில் 20 கிறிஸ்தவ தலைவர்கள் கூடி பேசி இருக்கிறீர்கள்". அதில் எத்தியோப்பியர், பிலிப்பைன்ஸ், மற்றும் இந்தியர்களும் மற்ற நாட்டினரும் உண்டு. இந்த 2 சவுதிகள் சுவிசேஷ கூட்டத்திற்கு வந்ததும் தெரியும்". ஆகவே அவர்களைப் பற்றி உண்மையான விவரங்களை கூறிவிட்டால் இந்த வாரத்திலேயே அனுப்பி விடுவோம். இது எங்களுடைய தகவல்கள் சேகரிப்புக்குத்தான். இல்லையெனில் நாங்கள் மற்ற கிறிஸ்தவர்கள் யாவரையும் பிடிப்போம். உன் மனைவியை பார்க்கவே முடியாது என்று மிரட்டினார். அப்போதும் "நான்தான் பொறுப்பு". அந்த பெரிய கூட்டம் பிரிவு உபசாரக் கூட்டம்தான்". இரண்டாவது கூட்டம் நோயாளிகள் அற்புத சுகம் பெற ஒழுங்குசெய்யப்படவில்லை. மற்றபடி உங்கள் மதத்திற்கு எதிரானதோ அரபியர்களை கிறிஸ்தவ மதமாற்றம் செய்வதற்கோ ஒழுங்கு செய்யவில்லை" என்றும் கூறினேன். அவர் திருப்தி அடையவில்லை. சரி உன் அறைக்கு போ" என்று அனுப்பிவிட்டார்.

முதல் அதிர்ச்சி

இதுவரைக்குமான கேள்வி பதில்கள் அடங்கிய கோப்பைத் தயாரித்து அடுத்த நாள் என்னையும் அழைத்துக் கொண்டு விசாரணைக் குழுவின் மேலதிகாரியிடம் சமர்ப்பித்தார். அது 4 பக்கங்கள் அடங்கிய அறிக்கையாக இருந்தது. மேலதிகாரி 4 பக்கங்களை மேல்வாரியாக படித்துப் பார்த்தார். எனக்கு மனதுக்குள்ளே ஒரு நம்பிக்கை 'எதிர்பார்ப்பு' நாம் விடுதலையாகப்

போகிறோம், மனைவி, பிள்ளைகள் யாவரையும் பார்க்கப் போகிறோம்'' என்று. ஆனால் அவர் கடுமையாக அந்த இளம் அதிகாரியிடமும் என்னிடமும் பேசினது அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் எனக்கு அளித்தது. அவர் சொன்னார் "முக்கியமான கிறிஸ்தவ அதிகாரிகள் பெயர்கள் 2 சவுதிநபர்களின் விவரங்கள், கூட்டம் எப்படி நடத்தப்பட்டது, எப்படி எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது, எங்கிருந்து யாரெல்லாம் வந்தார்கள்? என்ன சாப்பிட்டார்கள்? நிகழ்ச்சி நடந்த காரியங்களில் வரிசையாக என்ன பேசப்பட்டது? யாரெல்லாம் பேசினார்கள்? என்பவைகளுக்கெல்லாம் விவரமாக பதில் அளிக்கப்பட வேண்டும். நீ பதில் சரியாக சொல்லாவிட்டால் முக்கியமானவர்களை நாங்கள் எப்படியாவது பிடித்துவிடுவோம். அப்போது அவர்கள் உண்மைகளைக் கூறிவிட்டால் நீ இன்னும் கூடுதல் கடும் தண்டனை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும் என்று எச்சரித்தார். ஆனாலும் நான் "எனக்கு அந்த சவுதிகளைப் பற்றி தெரியாது '' என்று சொன்னேன். பிறகு அவர் அந்த இளம் அதிகாரியிடம், "எல்லா விவரங்களையும் இன்னும் தெளிவாக, மறுபடியும் விரிவாக விசாரித்தப்பிறகு அறிக்கையை சமர்ப்பி'' என்று சொல்லிக் கொண்டே அறிக்கையை தூக்கி எறிந்தார். இந்த இளம் அதிகாரி கூட கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தார். ஆனால் தன் மூத்த அதிகாரிக்குக் கட்டுப்பட்டு "சரி நான் விரிவாக விசாரிக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார். நான் மறுபடியும் தனி அறை சிறைக்கு கொண்டு வரப்பட்டேன். மனதிலே மிகவும் வேதனை, குழப்பம், துக்கம் துயரம் என்னை வதைத்தது. அப்படியே அறையின் மூலையில் உட்கார்ந்தேன். என்ன சொல்வது? எப்போது விடுதலை கிடைக்கும்? எப்போது அன்பானவர்களைக் காண்போம்? கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

போலீஸ் செய்த அவமானம்

அந்த நேரம் பகல் 12.30 மணி மதிய உணவு பொட்டலமாக வந்தது. வழக்கமாக போலீஸ் அதிகாரி அறைக்கதவை திறந்து என்னை எழுப்பி பெற்றுக்கொள்ளச் செய்வார் அல்லது கதவு துவாரத்தின் வழியாக கொடுப்பார். ஆனால் அன்று பணியில் இருந்த அதிகாரி அந்த மதிய உணவுப் பொட்டலத்தைத் தன் பூட்ஸ் காலால் உதைத்து என்னை நோக்கித் தள்ளினார். எனக்கு கோபம் வந்தது. "இப்படித்தான் உங்கள் மதம் போதிக்கிறதா? இப்படி செய்வது பாவமில்லையா? என்று கேட்டேன். அவர் உள்ளத்தில் அந்த கேள்வி குத்தினதால் "மன்னித்துவிடு'' என்று அரபி மொழியில் என்னிடம் சொல்லி அந்த உணவுப் பொட்டலத்தை கைகளில் எடுத்து என் கைகளில் கொடுத்துவிட்டுச் சென்றார். என் கோபம் அடங்கினாலும், அவருடைய செயல் அவமானத்தைத் தந்தது. நான் 'மெஸ்ஸிஹி' (Messieh -

கிறிஸ்தவர்களை சவுதி அரேபியர்கள் அற்பமாகச் சொல்லுகிற வார்த்தை) என்பதால் இந்த அவமானம். நாய்க்குக் கூட கரிசனையோடு பிஸ்கட்டுகள் தருகிற காலம் இது. ஏன் ஆண்டவரே, இந்த அவமானம் என்று வேதனையோடு ஆண்டவரிடம் கேட்டேன். அப்போது ஆண்டவரின் சிலுவைப்பாடுகள் ஞாபகத்தில் வந்தது. பிரதான ஆசாரியன் முன்பு அவரை அழைத்துச் சென்றபோது அங்கிருந்த சிலர் அவருடைய முகத்தில் துப்பினர், அவர் தலையை குட்டினார்கள். சிலர் அவரை கன்னத்தில் அறைந்தார்கள். கேலி, கிண்டல், பரியாசம் செய்தார்கள். ஆண்டவர் இயேசு நமக்காக நம் இரட்சிப்புக்காக இத்தனை அவமானங்களை அடைந்தபோது அவர் நாமத்தினிமித்தம் நான் பட்ட அவமானம் ஒன்றும் பெரிதல்ல! என்று ஆவியானவர் மூலம் உணர்த்தப்பட்டேன். ஆண்டவரே அந்தப் போலீசை மன்னிக்கிறேன்! அவரைக் கூட ஆசீர்வதியும்! உமக்காய் எந்த அவமானத்தையும் சந்திக்க தயார்!" என்று ஜெபித்தேன். கோபம் நீங்கி உள்ளத்தில் ஒரு 'தெய்வீக சமாதானம்' வந்தது. இதற்கிடையில் என் தனிஅறை அனுபவங்கள் இன்னும் சிலவற்றை கூற விரும்புகிறேன்.

முதல் விசுவாச சோதனை

போலீஸார் தனி அறைகளில் இருந்த 16 முஸ்லீம்களை 5 முறை தொழுகைகளுக்கு முன்பு வரிசையாக ஒருவர் பின் ஒருவராக பணியில் இருந்த போலீஸார் குழாய்களைத் திறந்து தண்ணீரில் சுத்திகரிப்பு (அவர்கள் மதவழக்கம்) செய்யச் சொல்வார்கள். அப்படியாக என் அறையையும் திறந்து, தொழுகை (Salah) செய்ய வா! என்று அழைப்பார்கள். நான் முஸ்லீம் அல்ல பெஸ்ஸீஹி என்று சொல்வேன். 'பரவாயில்லை வா' இஸ்லாம்– "கொயீஸ்"(நல்லது) கண்டிப்பாக நீ முஸ்லீம் ஆக வேண்டும் – வந்து எங்களுடன் தொழுகை செய்ய வா! என்று வற்புறுத்தினார்கள். நான் சொன்னேன் "என்னுடைய விசுவாசம் என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மீதுதான்". நான் என் அறைக்குள்ளேயே எங்கள் பிதாவினிடம் இயேசுகிறிஸ்து மூலமாய் 5 முறை மட்டுமல்ல 24 மணிநேரமும் ஜெபித்துக் கொள்வேன்" என்று! சில போலீஸ்காரர் வற்புறுத்தி அழைக்கும் போது தைரியத்தோடே இப்படி சொல்லிவிடுவேன். ஆனால் தொடர்ந்து அவர்கள் "முஸ்லீம் ஆகாவிட்டால் முடிவில் நரகத்திற்கு அக்கினியில் போடப்படுவாய்" என்று கலபமாக, கோபமாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். ஓரிரு போலீஸார் மட்டுமே நான் கிறிஸ்தவன் என்று தெரிந்து சிறிதளவான மரியாதை கொடுப்பார்கள். பெரும்பாலும் கிறிஸ்தவன் என்பதால் கோபத்துடனும், எரிச்சலுடனும் பேசுவார்கள். கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவர்களைக் குறித்து அவர்கள் மொழியில் கேவலமான வார்த்தைகளால் பேசுவார்கள். இம்மாதிரியான தொந்தரவு பல

வேளைகளில் எனக்கு மனச் சோர்வைத் தந்தது. ஆனால் அதே நேரம் கிறிஸ்தவம் என்பது என்ன? நம் பிராத்தனை எப்படி? என்பதை அவர்களுக்கு சொல்லவும் நல்ல சந்தர்ப்பத்தை ஆண்டவர் ஏற்படுத்தி தந்தார். இப்படி தேவன் தீமைகளை நன்மைகளாகவும் மாற்றிக் கொடுத்தார்..

ஒரே உடையை 2 வாரங்களாக போடவேண்டிய நிலையிலிருந்தேன். ஏனெனில் மாற்றுகிற துணிகளை என் மனைவி மூலம் தான் பெற வேண்டும்! ஆனால் அவளைப் பார்க்க அனுமதிக்கவில்லை. மேலும், நண்பர்களைப் பார்க்கவோ, தொடர்பு கொள்ளவோ அனுமதி மறுக்கப்பட்டதால் எனக்கு துணியை மாற்ற இயலவில்லை. அப்படியானால் இரண்டு வாரங்கள் வியர்வை, துர்வாசனை கொண்டு அதே துணிகளை அணிந்தீர்களா? என்று நினைக்கிறீர்கள் அல்லவா? ஆம்! அதே துணிகளை நான் 2 வாரம் அணிய நேரிட்டாலும், தினமும் 10 அல்லது 15 நிமிடம் கழிவறைக்கு காலை அல்லது மாலையில் அனுமதி கேட்டு குளித்துவிடுவேன். குளித்துவிட்ட பிறகு உடல் ஈரத்தை துடைக்க துண்டு இல்லாமல் கஷ்டப்பட்டேன். துண்டு இல்லாமல் உடலின் ஈரத்தை எப்படித் துடைப்பது? ஆனாலும் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்ற தமிழ் பழமொழிக்கேற்ப ஒரு யோசனை தோன்றியது. நம் பனியன் பருத்தி(COTTON) தானே? ஈரத்தை பருத்தி நன்றாக உறிந்து கொள்ளும் அல்லவா? ஆகவே என் பனியன் துணியையே துண்டாக உபயோகித்தேன். எல்லா காரியங்களிலும் எனக்குத் தீமை செய்ய நினைத்தாலும், ஆண்டவர் வழிவகைகளை எனக்குச் சொல்லிக் கொடுத்து உதவி செய்தார். இரண்டு வாரங்களுக்கு பிறகு தான் தெரிந்தது, அங்கு வாரத்திற்கு ஒருமுறை அரசு சலவைக்காரர் வந்து, அழுக்கு துணிகள் சலவைக்கு கொடுக்கிறீர்களா? என்று கேட்டு செல்வார் என்று! போலீஸ்காரர் தவிர, எப்போதும் இரண்டு பேர் சவுதி நாட்டு உடையில், அரபு மொழியில் ஒவ்வொரு தனி அறை, துவார மூடியைத் திறந்து என்னவோ கேட்பார்கள். எனக்கு அது சரியாக புரியாததால், 'Mafi' (இல்லை), 'Ma-ibga' (விரும்பவில்லை) என்று பதில் சொல்லி அனுப்பிவிட்டேன். ஆனால் ஒருநாள், ஒரு போலீஸ்காரரை அழைத்து, வேறு துணிகள் மாற்ற கொடுப்பீர்களா என்று கேட்டேன். அப்போது அவர் 'வாரா வாரம்', சலவைக்காரரும், தினமும், மார்க்கெட்டில் பற்பசை, பிரஷ், சோப்பு, டீ, போன்றவைகளை கேட்பவர்களுக்கு வாங்கிக் கொடுக்க (மகாதி) உதவியாளர்கள் வருகிறார்களே; நீ ஏன் அவர்களிடம் காசு கொடுத்து உன் தேவைகளை சொல்வதில்லை' என்று கேட்டார். ஆனால் என்னிடம் பணமோ, மாற்று துணியோ இல்லை. அதன் பிறகு, 15 நாட்களுக்கு பிறகு அங்கு வந்த சலவைக்காரரிடம், ஒரு சவுதி

'தோபை' (போதகர் அங்கி போல்) எனக்கு புதிதாகக் கொண்டு வா! என்றேன். அவனும் அடுத்த நாள் கொண்டு வந்து கொடுத்தான். பழைய துணிகளை 20வது நாள்தான் மாற்றி, அந்த புதிய சவுதி உடையை அணிந்தேன். அப்பாடா, இன்றாவது மாற்ற முடிந்ததே! ஸ்தோத்திரம் ஆண்டவரே! என்று ஆண்டவரை நன்றியோடு துதித்தேன். 24 மணிநேரமும், தலைக்கு மேலே மங்கலான பல்பு எரிந்து கொண்டேயிருக்கும். சாதாரணமாக என் வீட்டில் படுக்கைக்கு நான் தூங்க செல்லும்போது வெளிச்சம் இருந்தால் எனக்குத் தூங்க முடியாது. ஆனால் இங்கோ எல்லா நாட்களும், 24 மணி நேரமும் மின் விளக்கு வெளிச்சம். ஆரம்பநாட்களில் தூங்க முடியாமல் அவதிப் பட்டேன். புத்தகங்களையோ, செய்தித்தாள்களையோ, படித்தால் கண் அசதி ஏற்பட்டு உறக்கம் வரும் என்பார்கள். அதற்காக செய்திதாள் கிடைக்குமா என்று கேட்டேன். ஆனால் அது 'மம்னு' (தடை) என்றார்கள். சரி ஏதாவது எழுத பேப்பர். பென்சில் தருவீர்களா என்று கேட்டதற்கு அதுவும் தடை செய்யப்பட்ட காரியங்களில் ஒன்று என்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி 24 மணி நேரத்தைக் கழிப்பது? தனிமை உணர்வு, மிகவும் என்னை பாதித்தது. ஆறுதல் வார்த்தை பேசக்கூட ஒருவருமில்லை. ஒவ்வொரு இரவும் படுக்குமுன் நாளைக்கு விசாரணையில் என்ன என்ன புதிதான கேள்விகள் கேட்கப் போகிறார்களோ? புதிதான குற்றச்சாட்டு என்ன வருமோ? 11 வருடங்களாக பல உள்நாட்டு கிறிஸ்தவத் தலைவர்கள், வெளிநாட்டு சுவிசேஷகர்கள் பலர் என் ஊழியத்திலும் என்னோடும், தொடர்பும், ஈடுபாடும் கொண்டிருந்தனர். எல்லா விவரங்களையும் சொன்னால் அநேகம் பேர் பிடிபடுவார்களோ, என்கின்ற சிந்தனைகள் என்னை திகிலுக்குள்ளாக்கியது. "ஏன் ஆண்டவரே, இப்படிப்பட்ட இக்கட்டையும் சோதனையையும் கொடுத்தீர்?" என்றேன். அப்படிப்பட்ட நேரங்களில் ஆண்டவர் தம்முடைய வாக்குத்தத்தங்களால் என்னை திடப்படுத் தினார். "நீ பயப்படாதே, திகையாதே நான் உன் தேவன்! உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா. 41:10). மேலும் "பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன். உன்னை பேர்ச்சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்! அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது (ஏசா. 43:1,2).

மற்றும் கர்த்தர் "பயப்படாதே. நான் உன்னோடு இருக்கிறேன்" இவ்விதமாக அவரது ஜீவனுள்ள வாக்குத்தத்தங்கள், உடலிலும், உள்ளத்திலும் புது பெலனையும், புது உற்சாகத்தையும் கொடுத்தது. மட்டுமல்ல என்னை வெகுவாய் திடப்படுத்தியது.

எத்தியோப்பிய மூப்பர் கைது

இந்தக் காலகட்டத்தில் அதாவது, நான் கைது செய்யப்பட்ட பிறகு ஒருவாரம் கழித்து சகோ. இஸ்கந்தர் என்ற எத்தியோப்பிய சபை மூப்பரையும் கைது செய்துவிட்டார்கள். பெரிய கூட்டங்கள் நடத்தப்பட்ட திருமண மண்டபத்தை ஒழுங்கு செய்தவர் அவர் தான். என்னுடைய விசாரணையின்போது ஒரு வார கால வற்புறுத்தலுக்குப் பிறகு கூட்டங்களை ஒழுங்கு செய்த கிறிஸ்தவ தலைவர்களில் நான்கு பேர்களை மட்டுமே சொல்லியிருந்தேன். ஏனெனில் இவர்கள் ஆண்டவருக்காய் பாடுகளை உறுதியாய் தாங்கக்கூடியவர்கள் என்பதை ஆவியானவர் உணர்த்தினார். அநேகர் "சகோ. பிரபு ஏன் மற்றவர்களைக் காட்டிக் கொடுத்தார்?" என்று கடுமையாக விமர்சித்ததை அறிந்து மனம் வருந்தினேன். நான் ஒருவனே 1000 பேர், 700 பேர் இருந்த கூட்டங்களை ஒழுங்கு பண்ணினேன் என்று சொன்னாலும் விசாரணையாளர்கள் நம்பமாட்டார்கள் என்ற காரணத்தினால்தான் நான் அந்த நான்கு பெயர்களை சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மேற்கொண்ட காரணத்தினால் இந்த கூட்டங்களில் சம்பந்தப்படாத வேறு சபைகளைச் சார்ந்த தலைவர்கள், ஒருவருக்கும் சொல்லாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, போய்விட்டதை பின்னர் அறிந்தேன், அவர்கள் விசுவாசம், அவர்களது வைராக்கியம் இவ்வளவுதானா என்று எண்ணும் போது வருத்தமாக இருந்தது. சில கிறிஸ்தவ பிள்ளைகள், நான் பிடிபட்ட பிறகு என் மனைவியைச் சென்று பார்க்கக்கூட இல்லை. ஏன் என்றால் அவர்களையும் பிடித்துவிடுவார்கள் என்ற பயம். அதே சமயம் பல கிறிஸ்தவப் பிள்ளைகள் என் மனைவியைப் பார்த்து ஆறுதல் சொல்லித் தேற்றிச் சென்றவர்கள் அநேகர் என்று அறிந்து சந்தோஷம் அடைந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும். எங்கள் கஷ்டங்களைப் பகிர்ந்துகொண்ட அவர்களை கர்த்தர் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக!

மேலும் சகோ. இஸ்கந்தர் விசாரணையின்போது இவ்விதமாக சொன்னார் என்று சொல்லி சவுதி இளைஞன் ஒருவன் முதல் கூட்டத்தில் சாட்சி சொன்னதை குறித்து கேட்டார்கள். அதன்பிறகு நான் மறைக்கமுடியாது என்ற காரணத்தினால் அவன் இயேசுவை ஏற்றுக் கொண்ட சாட்சியை உறுதிப்படுத்தினேன். ஆனால் அவன் பெயர், யார் அழைத்து வந்தது என்பது எனக்கு உண்மையில் தெரியாது என்றேன். (அது தான் உண்மை).

மேலும் ஒருநாள் என் நண்பர் 'அபா' எனும் நகரத்தில் இருந்து பம்பாய்க்கு ஃபேக்ஸ்(Fax) மூலம் அவர் மனைவி விசா விஷயமாய்

அனுப்பின செய்தியை, மெதினாவுக்கு வீடியோ கேசட்ஸ் அனுப்பி சப்ளை செய்கிறேன்' என்று தவறாகச் சொன்னபோது தூக்கி வாரிப் போட்டது. நான் ஜெத்தாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே செய்திகளை அனுப்புவதுண்டு. ஆனால் மெதினா மற்றும் சவுதி பட்டணங்களுக்கு அனுப்புவதில்லை என்றேன். ஆனால் விசாரணை அதிகாரியோ, 'நீ பெரிய பாபா(Pastor) போலத் தெரிகிறது. நீ வீடியோ நாடாக்கள், ஆடியோ நாடாக்கள், பத்திரிக்கைகள், E-mail இவற்றைக் கொண்டு K.S.A. வில் தீவிர கிறிஸ்தவ பிரச்சாரம் செய்திருக்கிறாய். எல்லா விவரங்களையும் சொல். இல்லாவிட்டால் - 10 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்க நேரிடும் என்று மிரட்டினார். "கர்த்தாவே! என்ன இது! இந்த ஃபேக்ஸ் செய்தியை ஆங்கிலத்தில் சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாமல் பெரிய கற்பனை பண்ணி, பொய்க் குற்றச்சாட்டைக் கூறுகிறாரே! பதிலாக "ஜெத்தா கிறிஸ்தவ சமுதாயத்திற்கு மட்டும் நான் சேவை செய்தேன்" என்று கூறினேன். பிறகு 'நீ போகலாம்' என்று அனுப்பிவிட்டார். விசாரணை முடிந்ததுபோல எனக்குத் தோன்றியது. அதுவரை அமைதியாக இருந்தவர் கடுமையாக பேசினது எனக்கு அதிர்ச்சியும் பயமும் உண்டாக்கினது. 20 வது நாள்! எப்போது விடுதலை? என் மனைவியை இப்போது பார்க்க அனுமதிப்பீர்களா? என்று அவரைக் கேட்டேன். விடுதலை 'கரீப், கரீப்(சீக்கிரம்) வரும் என்றார். அதே வேளையில், மனைவியை பார்க்க தற்போது அனுமதி கிடையாது! அறிக்கை 2,3 நாட்களில் தயாராகி விடும்! நீ சீக்கிரமாய் விடுதலை ஆவாய்' என்றார். கொஞ்சம் நிம்மதி வந்தது! தனி அறைக்கு சென்றேன். அப்பாடா! விசாரணைகள் முடிந்தது. இன்னும் ஒரு வாரத்திற்குள் விடுதலையாகிவிடுவேன்' என்று நினைத்தேன். இந்த 20 நாட்களுக்குள் வெளியே பல காரியங்கள், முயற்சிகள் என் விடுதலைக்காக நடந்துள்ளன. அமெரிக்க நண்பர்கள், சர்வதேச ஊழிய நிறுவனங்கள் (ICC), U.S செனேட்டர்கள், காங்கிரஸ் மற்றும் ஆஸ்திரேலியா, ஜெர்மன் போன்ற நாட்டு அரசுகள் - KSA அரசுக்கு E-MAIL சர்வதேச ஊழியத்துக்கு கடிதம், ஃபேக்ஸ்(FAX), மற்றும் அஞ்சல் அனுப்பி என்னை விடுதலை செய்ய கட்டாயப்படுத்தியுள்ளனர். சர்வதேச பொதுமன்னிப்பு (International Amnesty) நிறுவனத்திற்கும், இந்திய உள்துறை அமைச்சகத்திற்கும் (Home Ministry of India), அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கும் Dr. ஜான் சாலோமோன்(அற்புத ஊழியம்) அவர்களும், Dr. P.P. Job (TORTURED FOR CHRIST) அவர்களும் Fax, E-Mail, TelePhone மூலமும் தொடர்பு கொண்டு என்னை விடுதலை செய்யக் கேட்டுள்ளார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் என்னை "ஆராதனை நடத்தியதற்காக அல்ல, சவுதி முஸ்லீம்களை மதம் மாற்றிய குற்றத்திற்காக விசாரித்து

வருகிறோம். விரைவில் விடுதலை செய்வோம்'' என்று மட்டும் சவுதி அதிகாரிகள் பதில் அளித்திருக்கிறார்கள்.

மனைவியின் ஏமாற்றம்

என் மனைவி, நான் கைது செய்யப்பட்டபிறகு, 2வது நாள், சிறையில் என்னை பார்க்க அனுமதி கேட்டபோதெல்லாம், 'பிரபு ஐசக்' என்று அப்படி யாரும் இல்லை, வெளியே போ(GET OUT) என்று அப்பட்டமான பொய் சொல்லி விரட்டியிருக்கிறார்கள். பலமுறை பார்க்க அனுமதி அவளுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இந்தியத் தூதரக அலுவலர்களுக்குக் கூட என்னை பார்க்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. "எந்த நேரமும் விடுதலை செய்துவிடுவோம்'' என்று மட்டும் சொல்லி ஏமாற்றியிருக்கிறார்கள். இப்படி பொய், திட்டமிட்டு ஏமாற்றுதலை, சாத்தானின் ஏவுதலால் எங்களுக்கு எதிராக செய்தார்கள். பிறகு ஜூலை 21ஆம் தேதியிலிருந்து 3 நாட்களில் விடுதலை வரும் என்று மிகவும் எதிர்ப்பார்த்தேன். இப்படியே 20 நாட்கள் முடிந்தன. ஆனால் அடுத்த 10 நாட்கள்.....

அந்த பத்து நாட்கள்

அடுத்த 10 நாட்கள், விசாரணையும் இல்லை, விடுதலையின் வாசனையும் இல்லை, வெளி உலகத் தொடர்பும் இல்லை, மனைவியைப் பார்க்க, பிள்ளைகள், பெற்றோர், நண்பர்கள் பற்றி அறிய தொடர்பும் இல்லை. விசாரணைக்காய் அறையை விட்டு வெளியே – சங்கிலிகளுடன் அந்த கட்டடத்திற்கு அழைத்து செல்லும்போது, தென்றல் காற்றை அனுபவிப்பேன்! சூரிய வெளிச்சமும் காண்பேன். சில ஆட்கள் நடமாட்டத்தைப் பார்ப்பேன். சற்று சந்தோஷமாக இருக்கும். ஆனால் இந்த பத்து நாட்களில் எந்தக் காரணத்திற்கும் வெளியே கூட்டி செல்லவில்லை. ஒரு நாளில்(24 மணி நேரத்தில்) உள்ளே இருக்கும் குளியலறை 5 நிமிடம், 10 நிமிடம் என இருமுறை சென்றது தவிர மற்ற நேரமெல்லாம் அந்த நான்கு சுவர்களுக்குள் அந்த தனியறையில் அடைந்து கிடந்தேன். மிருகக்காட்சிசாலையில் கூண்டில் அடைக்கப்பட்ட ஒரு மிருகத்தை போல் கிடந்தேன். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடம் போல் தோன்றியது. தனிமை! தனிமை! தனிமை! எப்போதும் நண்பர்களைச் சந்திப்பதும் போன் தொடர்புகள், எப்பொழுதும் ஊழியங்கள் என்று 'ஜெத்தா' நகரம் முழுதும் சுற்றி ஓடிக் கொண்டிருந்த எனக்கு இந்த 10 நாட்கள் முழு அடைப்பின் தனிமை மிகவும் மனச் சோர்வை கொடுத்தது. கதவை தட்டுவார்களா? அந்த அதிகாரி கூப்பிட்டு பேசமாட்டாரா? நண்பர்கள் யாரும் பார்க்க வந்திருக்கமாட்டார்களா? குறைந்தது, விசாரணைக் காவது வெளியே அழைத்து செல்லமாட்டார்களா? என்று ஆவலுடன்

எதிர்பார்ப்பேன்! ஆனால் எதிர்பார்த்தது ஒன்றுமே நடக்காமல் நாட்கள் கடந்து கொண்டிருந்தன.

சிறையில் ஜெப வாழ்வு

இந்த நாட்களில் அதிக நேரம் தனிப்பட்ட குடும்பத்திற்காக உறவினர்களுக்காக, நண்பர்கள், ஊழியம், சுவிசேஷ மிஷனரிகள், புற மதத்தினர், குறிப்பாக சவுதி நாட்டுக்காக மன்றாடி ஜெபிக்க ஆண்டவர் வாய்ப்பு கொடுத்தார். பரிசுத்த வேதத்தை வாசிக்கத்தான் முடியவில்லை. அது எனக்கு மிகவும் ஜீவனற்ற நிலையை கொடுத்தது. பரிசுத்த வேதம்! தாவீது 119ஆம் சங்கீதத்திலும், 19ம் சங்கீதத்திலும் வேதத்தின் மேன்மையை, நன்மையை, ஆசீர்வாதத்தை உயிர்ப்பிக்கும் ஆற்றலைக் குறித்தும் மிக அழகாக விளக்குகின்றார். அப்படிப்பட்ட ஜீவ வேதத்தை வாசிக்க என் மனம் துடித்தது. ஆனால் ஆண்டவர் ஒரு பாடத்தை கற்றுக்கொடுத்தார், **"நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்திடுவேன்"** என்பதே (ஓசியா 4:6). ஆம், கைதாவதற்கு முன் 2 வார காலமாக பெரிய கூட்டங்கள் நடத்திய பிறகு தாய் நாட்டிற்குத் திரும்புவதில், பயணச் சீட்டிற்கு ஏற்பாடு செய்வதும், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பாஸ்போர்ட்டில் முத்திரை பெறவும்(EXIT STAMP) பொருட்கள் வாங்குவதும் அவற்றை அனுப்புவதற்கான ஏற்பாடு செய்வதுமான காரியங்களில் ஈடுபட்டதின் விளைவாக வேதத்தை அதிக நேரம் தியானிக்கவில்லை. ஜெப நேரம் குறைவு! ஆண்டவரோடு தனிப்பட்ட உறவு குறைந்துவிட்டது. சத்துரு மேற்கொண்டு என்னைத் தாக்கவும் என் அசட்டை ஒரு காரணம்தான் என்பதை உணர்த்தினார். வாசிக்கும் நீங்களும் – எதை யாரை மறந்தாலும், பரிசுத்த வேதத்தை, ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்து தியானிக்க மறந்து விடாதீர்கள்! வேத வாசிப்புக்கு முக்கிய நேரம் முக்கியத்துவம் கொடுங்கள். உலக காரியங்கள் எவ்வளவு முக்கியமானாலும், அவைகளுக்கு இரண்டாவது இடத்தை கொடுங்கள்.

காலை எழுந்தவுடன் ஞாயிறு பள்ளி வகுப்பில் சிறுவயதிலிருந்து மனப்பாடம் செய்து வைத்திருந்த 23,121, 46 மற்றும் 91 ஆம் சங்கீதங்களை தினமும் காலை வாயை விரிவாய் திறந்து, எனக்குக் கேட்கும்படியாக சொல்லிக் கொள்வேன். அதுவே எனது முதல் காலை உணவு. அந்த அருமையான சங்கீதங்கள் தாவீது தன் எதிரிகளால் நெருக்கப்பட்ட நேரங்களில் எழுதப்பட்டவை. சங்கீதம் 23:4 ஆம் வசனத்தில், **"நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்"** என்ற வசனமும், 91ஆம் சங்கீதத்தில், "அவன் என்னை

நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளி செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனை தப்புவித்து, அவனை கனப்படுத்துவேன் (வசனம் 15) மற்றும் 121 ஆம் சங்கீதத்தில் "கர்த்தர் உன்னை எல்லா தீங்குக்கும் விலக்கி காப்பார்" (வசனம் 7) என்ற வசனம், 46ஆம் சங்கீதத்தில் முதல் வசனம், "தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்" போன்ற வசனங்கள் என்னை திடப்படுத்தி, பலப்படுத்தி, ஜீவனுள்ள ஆண்டவர் விடுவிப்பார், தப்புவிப்பார், காப்பார் வழிநடத்துவார் என்று என் விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நம்பிக்கையை அதிகப்படுத்தியது. அதோடு, நாள் முழுதும் – மற்றும் பல வேதவாக்குத்தத்தங்களை அந்த அறைக்குள் எனக்கு கேட்கும்படியாக எனக்குள் சொல்லி கொண்டு என்னையே நான் உற்சாகப்படுத்திக் கொள்வேன். உதாரணமாக, "பலங்கொண்டு, திடமனதாயிரு. நான் உன்னோடு இருக்கிறேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை" என்று யோசுவாவை தேவன் பலப்படுத்தியது போல (யோசு. 1:4,5,9) என்னையும் தேவன் இவ்விதமாக திடப்படுத்தி பலப்படுத்தினார்.

மேலும் என் உள்ளம் – பலவித சிந்தனைகள் குழப்பங்கள் நிறைந்து காணப்படும் வேளைகளில் – ஆறுதலான பாடல்களை தேவமனிதர்களே நேரிலே தங்கள் குரலில் – என் படுக்கையருகே – என்னிடம் வந்து பாடுவது போல இருக்கும். உதாரணங்களாக "எந்த நிலையில் நான் இருந்தாலும் என்னை வெறுக்காதவர் இயேசு ஒருவரே!" என்று சகோதரி சாந்தி சாலமோன் பாடிய பாடலும், "கலங்காதே மகனே! கலங்காதே மகளே! கன்மலையாம் கிறிஸ்து கைவிடவே மாட்டார்" என்று தந்தை பெர்க்மென்ஸ் பாடலும் D.G.S தினகரன் தம் குரலில் "சோர்ந்து போகாதே மனமே! சோர்ந்து போகாதே" அவரவர் குரலில் பாடி என்னருகில் வந்து பாடுவது போலவும் உணர்ந்தேன். கூடவே நானும் உதடுகள் அசைத்து, மெல்லிய சத்தத்தில் பாடிக் கொள்வேன். கண்ணீர், கன்னங்களில் வழிந்தோட இப்பாடல்களால் என்னை தேற்றின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்கு நன்றி! உலர்ந்து போன எலும்பு உயிரடைந்தது போல உணர்வேன்! இப்படி தேற்றி, ஆற்றி பரிசுத்த ஆவியானவர் என்னை பெலப்படுத்திக் கொண்டிருந்தார்.

அசுத்த ஆவிகளின் அட்டகாசம்

திடீரென்று – பொல்லாத ஆவிகள் (TORMENTING SPIRITS) அமைதியாக இருக்கும் இரவு வேளையில் என்னிடம் வந்து பேசும் "நீ இரண்டு சவுதி–முஸ்லீம்களை–கிறிஸ்துவத்திற்கு மாற்றியிருக்கிறாய்,

ஆகவே உன் தலை வெட்டப்படப் போகிறது", உன் மனைவி, பிள்ளைகள் – அனாதைகளாகப் போகிறார்கள்", உன் 77வயது தகப்பனார் இச்செய்தியைக் கேட்டு மாரடைப்பினால் செத்து விடுவார்" என்று கேலியாக சிரித்துக்கொண்டே இவைகளை எனக்கு சொல்வது போல இருக்கும். அந்நேரத்தில் மறுபடியும் என் மனதில் திகில், பயம், துக்கம் ஏற்படும். துயரம், வேதனை, என் நெஞ்சைப் பிழியும்! இப்படித் தனிமை உணர்வு, வீண்பயம், திகில், குழப்பம் – கூடும்போது – என் தலையே வெடிக்கும் அளவுக்கு தலைவலி வரும்! உறக்கம் வராது; இருதய துடிப்பு அதிகமாகும்; இருதயம் வலிக்கும்! இப்படியாக 'மன சித்திரவதை! பயங்கரமாக ஏற்பட செய்தார்கள். உடல் சித்திர வதையைக் கூட தாங்கிக் கொள்ளலாம். மனம் குழம்பி, பைத்தியம் பிடிப்பது – எவ்வளவு பெரிய சித்திரவதை! (MENTAL TORTURE) – அந்த நிலைக்கு ஆளானவர்களே அறிய முடியும். ஆனால் இப்படிப்பட்ட நேரங்களில் சத்துருவாகிய சாத்தான் தரும் பயம், திகில், குழப்பங்களை முறியடிக்க மூன்று ஆவிக்குரிய ஆயுதங்களை பயன்படுத்துவேன்.

1. அசுத்த ஆவிகளை **இயேசுவின் நாமத்தினால்** – கட்டி அப்புறப்படுத்துவது

2. **இயேசுவின் இரத்தத்தால்** என் உடல் முழுவதும் அந்த அறை முழுதும் தெளித்து என்னையும் அந்த அறையையும் அவர் இரத்தத்தால் மூடும்படி ஜெபிப்பேன்.

3. **துதி ஸ்தோத்திரங்கள்** திரியேக தேவனுக்கு ஏறெடுத்துக் கொண்டிருப்பேன்! "நல்லவரே', 'வல்லவரே', 'அதிசயமானவரே!" "அற்புதமானவரே", "எல்ஷடாய்", "எபிநேசரே", "யெகோவாயீரே", "ஜீவனுள்ள தேவனே", "மரணத்தை வென்றவரே", "சத்தியமே", "நித்தியமே", "ஜீவபலியே", "தயாபரரே" என்று எத்தனை துதிகளை ஆண்டவருக்கு செலுத்த முடியுமோ.... அத்தனை ஸ்தோத்திரங்களையும் ஏறெடுப்பேன். அப்போதெல்லாம் சாத்தானும் அவன் ஆவிகளும் ஓடிப்போவார்கள். இப்படியாக 30வது நாள் வந்தது. ஒரு விடுதலையும் இல்லை. இப்படியே தனியறையில் மாதக்கணக்கில் அடைத்து விடுவார்களோ? என்று பயம் ஏற்பட்டது. மிக மிக சோர்வு – கலக்கம்! உண்மையிலே ஆண்டவரின் வல்லமையின் ஐயம்! இயேசு – ஜீவனுள்ளவர் என்பது உண்மைதானா? ஏன் விடுதலையில்லை? ஏன் ஜெபத்திற்கு பதில் இல்லை? இனி ஜெபித்து, விசுவாசிக்க "அவர் கரிசனையுள்ள கர்த்தர்தானா?" என்று அவிசுவாசமான நிலை ஏற்பட்டது. பகல் 12.30 மணி முஸ்லீம் தொழுகை நடக்கப்போகிறது. அவர்களோடே போய் அவர்கள் கடவுளையாவது வணங்கிப் பார்க்கலாமா? ஆவிக்குரிய வாழ்க்கையின் மிக மோசமான கட்டத்திற்கு

வந்துவிட்டேன். பிசாசும், அவன் ஆவிகளும் அப்படி அந்த நாளில் செயல்படத் தூண்டி, ஆண்டவர் இயேசுவையும் கிறிஸ்தவத்தையும் மறுதலிக்கும் நிலைக்குத் தள்ளினார்கள். ஒரே குழப்பம்! மனதில்! – பிசாசு, "போ, முஸ்லீம் தொழுகைக்குப் போ. கிறிஸ்து கடவுள் இல்லை. உன் நம்பிக்கை வீண்!" என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். நானும் கதவைத் திறந்து இஸ்லாம் தொழுகைக்கு எழுந்து செல்ல கூட நினைத்துவிட்டேன். உடனே ஆண்டவர் காயப்பட்ட இரத்தம் வழியும் கரங்களோடு என் மனக் கண்முன் தோன்றினார்! "உன் விசுவாசம் அவ்வளவுதானா? "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப் படுவான்" என்ற தலைப்பில் நீ (கைதாவதற்கு முன்) ஒரு சபையில் தேவசெய்தி அளிக்கும்போது "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவைப் போலவும், தானியேலைப் போலவும், யோபுவைப் போலவும் கர்த்தருக்கென்று வைராக்கியமான கிறிஸ்தவர்களாக என்ன பாடுகள் நேர்ந்தாலும் முடிவுவரை ஆண்டவருக்காய் நிற்க வேண்டும்! பின்வாங்கவோ, மறுதலிக்கவோ கூடாது" என்று பேசினாயே! எல்லாம் வீண் பேச்சுதானா? பேதுருவைப் போல என்னை மறுதலித்து உனக்காக ஜெபிக்கும் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்களையும் தலைகுனிய வைக்கப்போகிறாயா? என்று கேட்பது என் காதில் விழுந்தது. அப்போது ஆண்டவர், கொடுத்த வசனம் மீண்டும் நினைவிற்கு வந்தது! "படப்போகிற பாடுகளைக் குறித்து பயப்படாதே! உபத்திரவப்படுவாய், ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு" (வெளி. 2:10) என்பதே அந்த வசனம் ஆகும். உடனே ஆண்டவருக்கு விரோதமான இந்த பிசாசின் எண்ணங்கள் என் மனதில் தோன்றியதிற்காக வெட்கப்பட்டேன். என்னை நானே கடிந்து கொண்டேன். ஆண்டவரிடம் இதற்காக மன்னிப்பு கேட்டேன். ஆண்டவருக்காய் அப்போஸ்தலராகிய பவுல், 2 கொரி. 11:23–27வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிகள், உதை, நிர்வாணம், பசி, தாகம், கப்பற்சேதம், கல்லெறி, மோசம்! இவற்றை அனுபவித்தது நினைவுக்கு வந்தது. கர்த்தருக்கென்று பக்தி வைராக்கியத்துடன், அவர்களது பிள்ளைகளாய் உபத்திரவங்களை அனுபவித்த யோசேப்பு, யோபு, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல், அப்போஸ்தலர்கள் மற்றும் திருச்சபை வளர்ச்சிக்காக வேதத்திற்காக, கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளாக மரித்தவர் அநேகரை எனக்கு ஆவியானவர் நினைவுபடுத்தினார். இவர்கள் அனைவரும் தேவனால் உன்னத நிலைக்கும், நித்திய வாழ்வுக்கும், தேவ மகிமைக்கும் அழைக்கப்பட்டவர்கள் என்பதை ஆவியானவர் எனக்கு உணர்த்தினார். மட்டுமல்ல, சர்வதேச ஜெப ஐக்கியம்(International Prayer Assembly) என்கிற உன் முக்கிய ஊழியம் கிறிஸ்துவுக்காய் இரத்தசாட்சிகளாய் மரிப்பவர்களுக்கும், சித்ரவதைக்குட்படுத்தப்படுபவர்களுக்காகவும்

ஜெபிப்பதல்லவா? ஆகவே நீ அவர்களுடைய வேதனை, கண்ணீரை நடைமுறையில் அனுபவிக்கும்போது இன்னும் நன்றாக உணர முடியும்! என்று இந்த சிறைவாசத்தை அனுமதித்தேன் என்றும் ஆண்டவர் சொன்னார், மேலும், "உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு; ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்றும், "சரீரத்தையும், ஆத்துமாவையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கு மட்டுமே பயப்படுங்கள், ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு பயப்பட வேண்டாம்". (மத். 10:28) என்றும் ஆண்டவர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அது எனக்கிருந்த பயத்தை போக்கியது.

உண்மையான வேதாகம தேவமனிதர்கள், அப்போஸ்தலர்கள் அதன் பிறகு அநேக தேவபக்தர்கள் கூறியுள்ளது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. உடனே என் பயம், திகில், குழப்பம் நீங்கியது, "இனி என்ன வந்தாலும், எதுநடந்தாலும் அப்பாவை ஸ்தோத்தரிப்பேன், இயேசப்பா ஸ்தோத்திரம்! உமக்காய் இரத்தம் சிந்தி மரிக்கவும் தயார்!" என்று வைராக்கியத்தோடு, ஆண்டவரிடம் "உம்முடைய சித்தம் என் வாழ்வில் ஆகட்டும்! என்று என்னை ஒப்புக் கொடுத்தேன். மேலும் உலகிலே எத்தனையோ பேர் இளம்வயதிலும், நடுத்தர வயதிலும் விபத்திலும் உயிரை இழந்துவிடுகிறார்கள். பெரும்பாலோர் இரட்சிக்கப் படாதவர்கள்! ஆனால் நீயோ இரட்சிக்கப்பட்டவன்! இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டவன்! இந்த உலகம் நம் நிலையான நகரம் இல்லை பரலோகமே நம் குடியிருப்பு (பிலி.3:20). ஆகவே மரணத்தைக் குறித்து உனக்கு ஏன் கவலை? மனமே! சந்தோஷப்பட்டு களிகூரு! பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதி! நித்திய வாழ்வு உண்டு!" (மத். 5:11,12) என்று ஆண்டவர் இயேசு கூறினதை நினைவு கூர முடிந்தது. முழுவதும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். "அப்பா! நான் களிமண்! நீர் குயவன்! உம் விருப்பம் போல் என்னை பிசைந்து, வனைந்து உருவாக்கும்" என்றேன். மேலும் கடந்த பத்து நாட்களில் – 'மனதிலே அநேக சித்திரவதை' துயரங்களை அடைந்திருந்தாலும் அவற்றின் இடையில் 13 ஆவிக்குரிய புத்தகங்களை எழுதிவிட்டேன். ஆ இது எப்படி? பேனா, பென்சில், பேப்பர் தடை அந்த சிறையில் இல்லை என்று கூறினீர்கள்? பிறகு எப்படி எழுத முடிந்தது? 'சும்மா– கதை விடுகிறீர்களா? என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது.

அப். பவுல் – பிலிப்பி பட்டணத்து சிறையிலே இருக்கும்போது நிருபங்களை எழுதி சபைகளுக்கு அனுப்பினார். அப். யோவான் பத்மு தீவிலே சிறைப்பட்டதால் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். ஆனால் நானோ மனதிலேயே பேனா, பேப்பர், இல்லாமல் ஆவியானவர் ஏவுதலின்படியும், அவர் உதவியுடனும் வேதத்தில் நான் படித்து,

உணர்ந்து மனதில் பதியவைத்த வசனங்கள், சம்பவங்கள், எடுத்துக்காட்டுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதி (இருதயத்திலேயே) முடித்தேன்.

'தலைமுறையில் தேவன்', 'உடன்படிக்கையின் தேவன்', 'கைவிடாத தேவன்', 'மறவாத தேவன்', 'வானிலும் பூமியிலும் மேலான தேவன்', 'இயேசுவின் நாமம்', 'இயேசுவின் இரத்தம்' இது போன்ற தலைப்புகளில் என் இருதயப்பலகையில் ஆவிக்குரிய புத்தகங்களாக எழுதி முடிக்க பரிசுத்த ஆவியான தேவன் எனக்கு உதவி செய்தார். (கர்த்தருக்கு சித்தமானால் பின்னர் அவைகளை புத்தகங்களாக – வெளியிட வேண்டுமென்ற வாஞ்சை உண்டு! கர்த்தர் இனி என் விருப்பத்தை சீக்கிரம் நிறைவேற்றுவார்' எனவும் நம்புகிறேன்) ஆம் "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டு, கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது" (ரோமர். 8:28) என்ற வசனத்தின்படி சத்துரு எனக்கு எவ்வளவு விசுவாசத்தை விட்டு வழுவச் செய்யும்படி பல போராட்டங்கள், சோதனையை கொடுத்தாலும் அவையெல்லாம் பிறகு என் விசுவாசத்தை உறுதிபடுத்தி, கர்த்தருக்கு நிலையான, வைராக்கியமான சாட்சியாகவும், மற்றவர்களுக்கு சோர்ந்து போன ஜீவியத்தை உற்சாகப்படுத்தும் சாட்சியாகவும் மாற்றினார். ஆண்டவருக்கு மகிமை உண்டாகட்டும்! ஆகஸ்ட் 10 ஆம் தேதி இரவு அடுத்த நாள் ஒரு மாதம் சிறைவாசம் முடிவடையப் போகிறது.

ஒரு மாதத் தனிஅறை வாசம் முடிவு

இந்த நாளில் கண்டிப்பாக விடுதலை செய்யப்படுவேன்! என்ற நம்பிக்கையான எண்ணம் எனக்கு இருந்தது. ஏனெனில் இதற்கு முன்பு கடந்த காலங்களில் K.S.A.யில் பல முக்கிய நகரங்களில் கிறிஸ்தவ ஜெப கூட்டங்கள் மற்றும் ஊழியங்களுக்காய் கைது செய்யப்பட்டவர் களில் பெரும்பாலானோர் ஒரு மாதம் மட்டுமே காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். அப்படியே, ஒரு மாதம் கடும் சிறைவாசம் நாளையோடு முடியப்போகிறது. கட்டாயம் நல்ல செய்தி கிடைக்கும் என எதிர்பார்த்தேன். இந்நாளில் விசாரணை அதிகாரி கண்டிப்பாக கூப்பிட்டு அறிக்கையை கொடுக்கட்டும் அல்லது கடைசி கேள்வி ஏதும் இருந்தாலும் கேட்க கதவைத் திறக்கட்டும்! 11 நாட்களாகப் பார்க்காத நீலவானத்தை, சூரியனை, மேகங்களை நான் பார்க்கட்டும். ஆள் நடமாட்டத்தைக் காணட்டும். தென்றல் காற்றை நான் உணரட்டும்!" என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, என் மனைவியை பார்க்க அனுமதி கேட்டும் இந்த தனி அறையிலிருந்து எதிர்பார்ப்புகளோடு காத்திருந்தேன். 30வது நாள் இரவு ஜெபித்துவிட்டு

நன்றாகத் தூங்கினேன். காலை 5.30 மணிக்கு எழுந்து ஜெபித்துவிட்டு காலை உணவை முடித்துவிட்டு 6.30 மணியிலிருந்து 9.30 வரை இனி துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க வேண்டும். ஒரு மாத காலமாக தனிமை, தடுமாற்றம், சோர்வு, பயம், திகில்கள், குழப்பங்களை மேற்கொள்ள கர்த்தர் உதவி செய்தார். இந்த நாளிலும் என் ஸ்தோத்திரங்களும், துதிகளும், எரிகோ கோட்டையை யோசுவாவும் இஸ்ரவேலரும் துதியினால் இடிந்து விழச் செய்தது போல என்னை விடுவிக்கவும் என் மனைவியை பார்க்கவும் எனக்கு எதிராக நிற்கும் தடைகளை உடைக்கட்டும்" என்று எண்ணியவாறு, "அப்பா பிதாவே, ஸ்தோத்திரம் அருமை இரட்சகரே! பரிசுத்த ஆவியானவரே ஸ்தோத்திரம்! நல்லவரே...... என்று ஆரம்பித்து குறிப்பாக சாத்தானின் தலையை சிலுவையில் நசுக்கினவரே! ஸ்தோத்திரம். மரணத்தையும் பாதாளத்தையும் வென்றவரே ஸ்தோத்திரம் என்று தொடர்ந்து துதித்துக் கொண்டிருந்தேன். மறைந்த இளம் இந்திய கவி. துதி சங்கர், 'துதி' யின் முக்கியத்துவத்தை பற்றி கூறியதையும் எழுதியதையும் பயிற்சி செய்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! சுமார் 9.30 மணி காலை என் அறைக் கதவு திறக்கப்பட்டது!. விசாரணை செய்யும் அறை உள்ள கட்டிடத்திற்கு கொண்டு சென்றனர்; எப்போதும் போல் கை கால்களில் விலங்குகளிட்டார்கள். அங்கு என்னை விசாரிப்பவர், ஒன்றுமே தெரியாதவர் போல என்னைப் பார்த்து புன்னகைத்து "உட்கார்" என்றார். "இன்னும் ஏதாவது சொல்லவேண்டுமா? சொல்ல விரும்பினால் இப்போதே சொல்லிவிடு பிறகு உண்மை தெரிந்தால் உனக்கு அதிக சிக்கல்" என்றார். நானும் சில நாட்களுக்கு முன்பே அந்த 2 சவுதி அரேபியர்கள் குறித்து எப்படி சொல்ல வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையோடு தீர்மானித்து வைத்திருந்தேன். அதன்படியே என்னவந்தாலும் வரட்டும் என்று "முதல் சவுதி இளைஞரை யார் கொண்டு வந்தது? எப்படி வந்தார்? என்று எனக்கு தெரியாது. ஆனால் சாட்சி சொல்ல மேடைக்கு நான் அனுமதி கொடுத்தது, உண்மை தான்! என்றேன். அந்த இளைஞனைப் பற்றி பல விவரங்கள் தெரியும். ஆனால், ஒரு இளைய புதிய விசுவாசியின் தலைவெட்டப்படுவதை நான் விரும்பவில்லை. சவுதியர் மதம் மாறினால் நிச்சயம் தலைவெட்டப்படும் என்பது அவர்களது சட்டம். ஆகவே அவரைப் பற்றி முழு விவரம் சொல்லவில்லை. இரண்டாவது சவுதி நபர் (50 வயது) சிறுநீரகம் சீர்கெட்ட நோயாளி. சுகம் பெற மட்டுமே சுகமளிக்கும் கூட்டத்திற்கு வந்தார் என்பதால் அவரை அழைத்து வந்தவர்களின் பெயர்களை மட்டும் கூறினேன். (ஏனெனில் அவர் மதம் மாறவில்லை. ஆனால் மனதில் இயேசுவை 'ஆண்டவர்' அற்புதர் ஜீவிக்கிறவர் என்பதை அறிந்து கொண்டார் என்பதை அடுத்த நாள் அவர் சுகம்பெற்ற சாட்சியின் மூலம் தெரிந்து வைத்திருந்தேன்).

ஆகவே அவர் நோயாளி என்று சொல்லி அவரை கைது செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன். 'சரி—சரி அதை இந்த உன் 'பைலில்'(File) எழுது என்றார்'. சில வரிகள் எழுதத் துவங்கினேன். அப்போது விசாரணைத்துறை மேலதிகாரி அங்கு வந்தார். நல்ல ஆங்கிலத்தில் "Very sorry! கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. நாங்கள் துரிதமாக மற்றக் காரியங்களை செய்ய வேண்டியிருந்தது. ஆகவே 10 நாட்கள் உன்னை வெளியே கொண்டு வரவில்லை. இரண்டாவது சவுதி ஆள், நோயாளி! எனவே பரவாயில்லை அவரைப்பற்றி எழுத வேண்டாம். விட்டுவிடு" என்று இளம் அதிகாரியிடம் சொன்னார். கர்த்தருக்கு நன்றி செலுத்தினேன். என்னால் ஒரு வயதான சவுதியை கைது ஆகாமல் காப்பாற்ற முடிந்தது. பிறகு அவரை நோக்கி, ஒரு மாதம் முடிந்துவிட்டது! என் மனைவியை பார்க்க 10 நிமிடங்களாவது அனுமதி கொடுங்கள்" என்றேன். கண்களில் அறியாமல் கண்ணீர் திரண்டு நின்றது. அதைக் கண்டு கொஞ்சம் மனம் இளகியிருக்க வேண்டும், அவருக்கு உடனே நீயே, இப்பொழுதே வீட்டிற்கு தொலைபேசி மூலம் வரச்சொல்" என்றார். "அல்லேலூயா" கர்த்தாவே "உமக்கு ஸ்தோத்திரம்" என்று என் மனதிலேயே கூவிக் கொண்டேன். வீட்டிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன்! சகோதரர் ஒருவர் போனை எடுத்தார். "உங்கள் மனைவி உங்களுடைய விஷயமாக இந்திய தூதரகத்திற்கு சென்றிருக்கிறார்கள். எப்படியாவது அவர்களுக்கு தெரிவித்து அங்கு பார்க்க வர சொல்லுகின்றேன்" என்றார். அதிகாரியின் உத்தரவுப்படி பகல் 11 மணி முதல் 2 மணிக்குள் என் விசாரணை அதிகாரியின் அறைக்கு வரச் சொன்னேன். பிறகு அந்த அதிகாரிக்கு நன்றி கூறினேன். 'அறைக்கு திரும்பிப் போ' என்றார்; பிறகு உன் மனைவி வந்தவுடன், உன்னைக் கூட்டி வரச் சொல்லுகின்றேன் என்றார். 10.30 மணியிலிருந்து பகல் 1.30 மணி வரை என் அறையில் உட்கார்ந்து எப்பொழுது வந்து என் மனைவியைப் பார்க்க அழைப்பார்கள் என்று மிகுந்த ஆவலுடனும், துடிப்புடனும் காத்து கிடந்தேன். ஒரு மாதப் பிரிவு என்பது என்னைப் பொருத்த வரையில் ஒரு வருடப் பிரிவு போல் இருந்தது. பகல் 1.20 வரை யாரும் வராததால் ஒருவேளை தகவல் என் மனைவிக்கு போய் சேரவில்லையோ! ஆக மறுபடியும் ஏமாற்றம், சந்தேகம், சோர்வு! ஆனால் பகல் 1.30 மணிக்கு காவலர் ஒருவர் வந்து என் அறை கதவைத் தட்டி "உன்னை விசாரணை அறைக்கு வரச் சொன்னார்கள் என்று கூறினார். அப்பாடா! உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க விசாரணை அறைக்குச் சென்றேன். ஏற்கெனவே என் மனைவி வந்து அமர்ந்திருப்பாள் என்று மிகுந்த ஆவலோடு சென்றேன். ஆனால் அந்த அறையிலே ஒருவரையும் காணாமல் மிகுந்த ஏமாற்றம் அடைந்தேன். ஆனால் விசாரணையாளர் "உன் மனைவியும், அவளுடைய

சகோதரரின் குடும்பமும் வந்து வெளியே நிற்கிறார்கள். இப்பொழுது வருவார்கள்" "நீ இங்கேயே உட்கார்" என்று சொன்னார். ஐந்து நிமிடங்கள் கழித்து விசாரணை அறைக் கதவு திறந்தது.

மனைவியுடன் சந்திப்பு

முதலில் சகோ. அருண், இம்மானுவேல் அவர் மனைவி அதன் பிறகு என் அருமை மனைவி சுசிலா ஆகியோர் வந்தார்கள். ஒரு மாத காலமாக பிரிவு! முடி வெட்டாமல், தாடியும் வளர்ந்த நிலை, முகத்தில் களைப்பு இந்த கோலத்தை நேரில் கண்ட அவர்கள் அனைவருமே அழ ஆரம்பித்து விட்டார்கள். ஒவ்வொருவராக வந்து கட்டித் தழுவி ஆனந்த கண்ணீர் விட்டோம்.

பிறகு இருபது நிமிடங்கள் பேச எங்களுக்கு அனுமதி கிடைத்தது. பல குடும்பக் காரியங்களைப் பற்றி பேசிக் கொண்டோம். என் மனைவி அந்த அதிகாரியிடம் என் விடுதலையை குறித்து கேட்டபொழுது இன்னும் ஒரு வாரம் அல்லது இரு வாரங்களில் அனுப்பி விடுவோம் என்று கூறினார். முதலில் ஏமாற்றமாக எங்களுக்கு இருந்தாலும் "இவ்வளவு நாட்கள் பொறுத்தது பொறுத்தோம். இன்னும் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் தானே!" என்று சொல்லி என் மனைவியையும் வந்த மற்ற நண்பர்களையும் உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்து விட்டேன். இனி என் மனைவி வாரத்திற்கு இரண்டு முறை 15 நிமிடம் பார்க்க சிறைக்கு வரலாம் என்று அறிந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன்! மேலும் என்னை தனிமைச் சிறையை (Solitary Cell) விட்டு எடுத்து பொதுவான சிறையில் போடும்படிக் கேட்டேன். சரி என்று ஒத்துக் கொண்டார்கள். இதுவும் ஒரு அதிசயம் (Miracle) தான்! இல்லை என்றால் இன்னும் சில மாதங்கள் தனிமை சிறையில் வைத்து இருந்திருப்பார்கள்.

2

பொதுவான சிறை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் அன்று மாலை 3 மணிக்கு (ஆகஸ்டு – 19) தனிமை சிறையை விட்டு பொதுவான சிறைக்கு மாற்றப்பட்டேன். என்னுடைய படுக்கை, தலையணை, படுக்கை விரிப்பு ஆகியவற்றை சுருட்டி ஒரு கையிலும், மறு கையில் ஒரு பிளாஸ்டிக் பையில், என்னுடைய துணிமணிகள் ஆகியவற்றை எடுத்து கொண்டு 300 மீட்டர் தொலையில் உள்ள பொது சிறைக்கு கொண்டு போகப்பட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அந்த சிறை எட்டு பெரிய அறைகளைக் கொண்டது. ஒவ்வொரு அறையிலும் ஐந்து அல்லது ஆறு பேர்கள் இருந்தார்கள். இதில் பெரும்பாலும் சவுதி தீவிரவாத முஸ்லீம்கள், ஒசாமா பின்லேடனின் அல் கொய்தா உறுப்பினர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் இருந்தார்கள்!. பெரிய அறை! ஆனால் சோமாலி நாட்டைச் சேர்ந்த ஒரே ஒருவர் மட்டுமே அங்கு இருந்தார். அவரோடு என்னைப் போட்டார்கள். அவரோ ஒருவருடனும் பேசாமல் மன நோயாளி போல் பார்ப்பதற்கு ஷயரோக நோயாளி போல் மெலிந்த உடலும், தாடியும், பயங்கரமான கண்களும் கொண்டவராய் இருந்தார். அவரது தோற்றம் எனக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. பொதுவான சிறையில் பேசுவதற்கு ஆள் கிடைத்ததே என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் இவரோ எப்போதும் ஒரே மூலையில் படுத்து தூங்கிக் கொண்டே இருப்பார். முதலில் நீ யார்? எந்த நாடு? என்று மட்டும் கேட்டார். அதோடு சரி. பின்பு ஒருமுறை "என்னோடு முஸ்லீம் தொழுகை செய்ய வா" என்றார். "இல்லை, நான் கிறிஸ்தவன்" என்றேன். அடுத்த நாள் என்னுடன் எதுவுமே பேசுவதில்லை. சாப்பாடு பொட்டலத்தை அவரிடம் எடுத்து கொண்டு போய் அவர் படுக்கையருகே வைத்தேன். 'சாப்பிடு! ஏன் எப்போதுமே படுத்துக் கொண்டே இருக்கிறாய்?' என்று கேட்டேன்! உடனே அவன், கோபமாக, "இதுதான் கடைசி எச்சரிக்கை. நீ என் சாப்பாட்டைக் கூட தொடக்கூடாது!" என்றான். திடுக்கிட்டு, "ஏன்" என்றேன்! "நீ

கிறிஸ்தவன்! இதற்குமேல் என்னிடம் பேசாதே!" என்று கடுமையான குரலில் பேசிவிட்டு திரும்பி படுத்துக் கொண்டான். அன்றிரவு கொஞ்சம் பயமாக இருந்தது. தூக்கமே வரவில்லை! மனநோயாளியான இவன் தூங்கும்போது கழுத்தை நெறித்து விடுவானோ? என்று கூட நினைத்தேன். ஆனால் 'இயேசுவின் இரத்தம் ஜெயம்" என என் மீதும், அறை முழுவதும் தண்ணீரை ஜெபித்துத் தெளித்துக் கொண்டேன். பிறகு உறங்க நினைத்தேன். உறக்கம் வரவில்லை. இந்த அறையில் ஒரு பழைய (AC) குளிர்சாதனப்பெட்டிபயங்கர சத்தம்! என் தலை 'பம்பரம்' போல் சுற்றுவது போல் இருக்கும். மேலும் திடீரென்று இட மாற்றம் செய்ததின் விளைவாக எப்போதும் போல உறக்கம் வரவில்லை. என்ன செய்வது என்று தெரியவில்லை! ஆனால் "எண்ணி எண்ணி துதி செய்வாய்" Thank you Jesus", "God is Good" என்ற பாடல்களையும் கொஞ்சம் வாயைத் திறந்து மெல்லிய சத்தத்துடன் பாடிக் கொண்டிருந்தேன். என்னையும் அறியாமல் கண்ணீர் வழிந்தோடியது. இப்படி பொதுச் சிறையின் அறைக்கு வந்ததிலிருந்து இரண்டு நாட்களாக, முற்றிலுமாக தூக்கமே வரவில்லை. எவ்வளவோ முயன்றும் தூக்கம் வரவில்லை. பகல், இரவு, என 48 மணி நேரமும் தூங்க முயற்சி செய்தேன். தூக்கம் வரவில்லை! தூக்க மாத்திரையாவது டாக்டரிடம் வாங்கலாமா! என்று கூட நினைத்தேன். 3வது நாள் கடும் தலைவலி, ஜுரம் வந்துவிட்டது.

3-வது நாள் சுசிலாவும் அருணும் வருவோம் என்று சொன்னார்கள். பார்வையாளர் நேரம் காலை 10 மணி முதல் பிற்பகல் 2.30மணி வரை அந்த நேரத்தில் எதிர்பார்த்து காத்து கொண்டு இருந்தேன். என் மனைவியின் இரண்டாவது சந்திப்பு! ஆகையால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கிடந்தேன். மணி 2.10 ஆகிவிட்டது. போலீஸ் வந்து கூப்பிட வரவில்லை. மிகவும் ஏமாற்றம். சோர்வு அடைந்தேன்! ஏன் வரவில்லை! மறுபடியும் பார்க்க தடை செய்து விட்டார்களா? சந்தேகம், குழப்பம் தோன்றியது. மணி 2.15 இருக்கும் ஒரு போலீஸ் வந்து "உனக்கு பார்வையாளர்கள் வந்து இருக்கிறார்கள் என்று சொல்லி உடனே வா என்றார். மனதில் மகிழ்ச்சி பொங்க சந்திப்பு அறை சென்றேன். சந்திப்பு அறை போகும்வரை கூட என் கால் கைகளில் விலங்கு போட்டு அழைத்து கொண்டு போவார்கள். ஆனால் சந்திப்பு அறை அருகே சென்றவுடன் பார்வையாளர் பார்க்கக் கூடாது என்று விலங்குகளை கழற்றி விடுவார்கள். "சிறையில் நல்ல சாப்பாடு, நன்றாக நடத்துகிறார்கள் என்று உன் மனைவியிடம் சொல்" என்று அந்த பார்வையாளர் அறை பணியாளர் முன்னதாக சொல்லி விடுவார். ஆனால் தமிழில் நாங்கள் பேசும்போது எல்லா விவரங்களையும் மனைவியிடம் நான் கூறி விடுவேன்! அது அவர்களுக்குத் தெரியாது.

15 நிமிடங்கள் தான் கொடுப்பார்கள். எப்படி எல்லா விஷயங்களையும் அதற்குள் பேச முடியும்? எப்படியோ இந்த கொஞ்ச நேரமாவது கொடுத்தார்களே! என்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவேன்..

உடன் ஊழியர்கள் கைது

அந்த நாளில் என் மனைவி கூறிய செய்தி, எனக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சகோதரர்கள் பகாரு(Bro. Baharu), டின்சாய்(Bro. Tinsai), பென்ஜமின் (Bro. Benjamin), பெபர்டு(Bro. Befardu), கிப்ரோன்(Bro. Kibron) ஆகிய 5 பேர்கள் ஆகஸ்ட் 21ம் தேதி கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னாள். வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன். என்னோடு மட்டுமே விசாரணை முடித்து அனுப்பி விடுவார்கள் என்று எதிர்பார்த்து இருந்த எனக்கு இது மிகவும் கவலையைக் கொடுத்தது. சரி ஆண்டவர் சித்தம் நடப்பது நடக்கட்டும் என்று ஆண்டவரிடம் எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்து விட்டேன். அறைக்கு வந்தேன். "ஒரு வாரத்தில் விட்டுவிடுவோம்" என்று சொன்னார்கள். இப்போது தொடர்ந்து மற்றவர்களைப் பிடிக்கிறார்களே பிடிபட்ட இவர்கள் பெயர்களை நான் குறிப்பிட்டது உண்மையே! அவர்கள் பெயரை சொன்ன காரணம் அவர்கள் நேரடியாக கூட்டங்களை ஒழுங்கு செய்வதில் ஈடுபாடு கொண்டவர்கள். மேலும் அவர்கள் "கர்த்தருக்குள் பாடுகளை அனுபவிக்கத் தயாராக நிற்கக் கூடியவர்கள்". ஆனால் கைது செய்யப்படுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆண்டவரே! அவர்களுக்கு இவற்றைத் தாங்கும் பெலனைக் கொடும்" என்று ஜெபித்துக் கொண்டேன். அன்றிரவு 10 மணிக்கு நானும் அந்த மனநோயாளியும் இருந்த அந்த பெரிய அறைக்கு 22 வயது மதிக்கத்தக்க ஒரு முஸ்லீம் தீவிரவாதியை தனிமைச் சிறையிலிருந்து மாற்றப்பட்டு அங்கு கொண்டு வந்தார்கள். இளம் வயதிலேயே பெரிய தாடி. அந்தச் சூழ்நிலையும் அவனது தோற்றமும் எனக்கு அச்சத்தையளித்தது. வந்து 5 நிமிடத்தில் அவர் என்னை கேட்ட கேள்வி, "நீ கிறிஸ்தவன் தானே?" என்பது! "உனக்கு எப்படித் தெரியும்? என்றேன். "நான் உன் பக்கத்து அறையான 7-ஆம் எண் கொண்ட அறையில் நான் இருந்தேன் அப்போதே 'நீ கிறிஸ்தவன்' என்று பேசிக் கொள்வார்கள். அதனால் தான் தெரியும் என்று சொல்லி விட்டு மேலும் கேட்டான், "உங்களுக்கு 3 கடவுள்களா?" என்று. இல்லை! "ஒரே கடவுள் 3 பெயர்களில் அழைக்கப்படுகின்றார்" என்றுச் சொன்னேன். அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஒருவராக உள்ளனர் என்று விளக்கி கூறினேன். அவன் கிண்டலாக சிரித்து கொண்டே, நீ இங்கிருந்து போகும்போது, உன்னை ஒரு முஸ்லீமாக மாற்றி அனுப்புகிறேன் பார்! என்று சவால் விட்டார். எனக்கு கொஞ்சம்

கோபம், வைராக்கியம் எழுந்தது. நான் 'அது மட்டும் நடக்காது' என்று சொல்லிவிட்டு விட்டேன். ஆனால் அவர் மேலும் போதித்தால், "நாம் அவருக்கு நம் சத்தியத்தை போதிப்போம்" என்ற முடிவுடன் இருந்தேன். கர்த்தரிடத்தில் "என்ன ஆண்டவரே" இப்படிப்பட்ட ஒரு மனிதனை என்னுடன் இருக்க செய்து விட்டீரே" என்று ஜெபித்தேன். அதற்கு ஆண்டவர் "நீ இப்படிப்பட்ட பலரையும் சந்திக்க வேண்டும். அவர்களுக்கு முடிந்த அளவிற்கு சுவிசேஷம் கூற வேண்டும்" என்று உணர்த்தினார். அதன்பிறகு அமைதியுடன் உறங்கச் சென்றேன்.

ஆனால் இரண்டு நாட்கள் கழித்து அந்த சோமாலியை (மன நோயாளி) போலீசார் வேறு அறைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். அதன் பிறகு இரண்டு நாட்கள் கழித்து, இந்த சவால் விட்ட இளம் தீவிரவாதியையும் மற்ற முஸ்லீம் தீவிரவாதிகள் நிறைந்த அறைக்கு மாற்றிவிட்டார்கள். இப்போது அந்த தனிப் பெரிய அறையில் நான் ஒருவன் மட்டுமே! தனிமையாக இருந்தபோதும் வெளியே உள்ள கதவில் இரும்பு கம்பிகள் பொருத்தப்பட்டு இருந்ததால், அதனூடே வெளியே போவோர், வருவோர் முகங்களையாவது பார்க்க முடிந்தது. அதனால் அந்த தனிமைச் சிறையில் இருந்த 'பயம்', 'தனிமை உணர்வு' அவ்வளவாக இருக்கவில்லை. ஆனால் தனியாக இருந்ததால் ஒவ்வொரு நாளும் 5 முறை முஸ்லீம்கள் தொழுகைக்காக ஒவ்வொரு 'ஷிப்டு' முறை போலீசார் என்னையும் வற்புறுத்தி அழைப்பார்கள். ஒருசில போலீசார் 'கிறிஸ்தவன் – பரவாயில்லை' என்று விட்டு விடுவார்கள். மற்றவர்களோ, "ஏன் நீ தொழுகைக்கு வரவில்லை" என்றுச் சொல்லி திட்டிக் கொண்டே என்னை முறைத்துப் பார்ப்பார்கள்.

ஒருநாள் ஒரு போலீஸ், நான் முஸ்லீம் தொழுகைக்கு வரவில்லை என்றவுடன், என்னை நோக்கி "சரி, கிறிஸ்தவம் என்றால் என்ன? "கிறிஸ்தவ போதனை தான் என்ன? என்று அவராகவே கேட்க ஆரம்பித்தார். இதுதான் தக்க சமயம் என்று – அவருக்கு, "இயேசு கிறிஸ்து தான் "உலக இரட்சகர்" அவர் வழியாகத் தான் பரலோக இராஜ்ஜியத்தை அடைய முடியும், அவர் மூலமே, பிதாவான கடவுளை காண முடியும்" அவர் இரத்தத்தினாலே கழுவப்பட்டால்தான் பாவமன்னிப்பை, இரட்சிப்பை இம்மையிலேயே அடைய முடியும் என்றேன். முதலில் வாதாடினார். பிறகு "நீ சொல்வதும் சரிதான்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். ஆண்டவர் இந்த விதமாக மனக்கண்கள் குருடாக்கப்பட்ட இப்படிப்பட்ட மக்களுக்கு ஜெயிலில் சுவிசேஷம் சொல்ல அனுமதித்ததற்காக நன்றி கூறினேன். இதற்காக கூட ஆண்டவர் நமக்கு இந்த பாடுகளை அனுமதித்தார் போலும்" என்று எண்ணி சந்தோஷப்பட்டேன்.

சகோ. இஸ்கந்தரை கண்டேன்

இந்த 3 நாட்களில் ஒருநாள் கழிவறைக்குச் செல்லும்போது எதிர் அறையின் கம்பிகளின் இடைவெளியிலிருந்து "பிரபு" என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. அதிர்ச்சியுடனும் ஆச்சரியத்துடனும் திரும்பிப் பார்த்தேன். அங்கு எத்தியோப்பிய சகோ. இஸ்கந்தர் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் வேதனையுமாக இருந்தது. காரணம், அந்தத் திருமணக் கூடத்தில் எங்களுடைய கூட்டத்தை ஒழுங்கு செய்தது மட்டுமே அவர் செய்த காரியம். மற்றபடி அவர் ஒரு சுவிசேஷம் அறிவிப்பவர் அல்ல. அவரும் இப்போது 30 நாட்களாக சிறையில் இருக்கிறார் என்று அறிந்துகொண்டேன். அவருக்கு வயது ஐம்பது. அவருடைய ஐந்து பிள்ளைகளும் ஜெத்தாவிலேயே படித்து வந்தார்கள். அவருக்கு சர்க்கரை வியாதி வேறு. தினமும் 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொள்பவர். ஜெத்தாவில் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். இப்போதோ ஆண்டவருக்காய் இந்த பாடுகளை அநுபவித்து கொண்டிருந்தார். "எப்போது இங்கு வந்தாய்; எப்போது நம்முடைய விடுதலை என்று கேட்டார். நான் மூன்று நாட்களுக்கு முன்பு தான் இங்கு வந்தேன், இன்னும் ஓரிரு வாரங்களில் விடுவிக்கப்படுவீர்கள்!" என்று வாக்களித்திருக்கிறார்கள் என்று பதிலுரைத்தேன். நான் பேசிக் கொண்டிருந்ததை கண்ட ஒரு போலீஸ்காரர் வந்து "நீ யாரிடமும் பேசக்கூடாது" "உன் அறைக்குப் போ" அடுத்த முறை நீ பேசுவதைப் பார்த்தால் மேல் அதிகாரியிடம் சொல்லிவிடுவேன் என்று சத்தம் போட்டார். இரண்டு பேரும் அவரவர் அறைக்குச் சென்று விட்டோம். கழிவறைக்கு செல்ல அங்கு உள்ள எல்லா அறைகளையும் ஒரே சமயத்தில் தான் திறப்பார்கள். அங்கு அடைப்பட்டுள்ள எல்லா கைதிகளும் ஒரே சமயத்தில் கழிவறைக்கும், குளியல் அறைக்கும் செல்ல வேண்டும். இவைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கும். இதைவிட தனிமை சிறை கழிவறையே மிகவும் சுத்தமாக இருக்கும். எப்படியோ எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு தினமும் குளித்துவிடுவேன். மாற்று துணிகள் என் மனைவி மூலம் கிடைத்தன.

இன்னும் ஓர் அதிர்ச்சி

இதன் பிறகு மறுவாரம் என் மனைவி என்னைப் பார்க்க வந்தாள். அப்போது மறுபடியும் இன்னொரு செய்தியைச் சொன்னாள். இன்னும் 7 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறினாள்! இவர்கள் யார்? எதற்குப் பிடித்தார்கள்! என்றேன். "தெரியவில்லை" என்றாள். பிறகுதான் அறிந்தேன், இவர்கள் முதலில் பிடிபட்ட எத்தியோப்பிய சபை போதகர்களின், சபையின் முன்னணி உறுப்பினர்கள் என்றும், மற்றும்

ஒருவரை பிடிக்கும்போது உடன் இருந்ததினால் அவர்களுடன் சேர்ந்து காரணமின்றி பிடிபட்டவர்கள் என்று! அவர்களை நான் பார்த்தது கூட கிடையாது. மற்றும் இரண்டு பெரிய கூட்டங்களில் அவர்கள் ஒரு பங்கும் கொள்ளாதவர்கள்! சற்று எண்ணிப் பாருங்கள்! அவர்களுடைய அவல நிலையை! சவுதி அரசின் அநீதியை! அடுத்த நாள் பிலிப்பைன்ஸ் நாட்டு சகோ. டென்னிசும் பிடிபட்டுவிட்டார். மொத்தம் 14 பேர்கள் என்னையும் சேர்த்து சிறையில் இப்போது!

'இனி விசாரணை தொடரும், இனி "நாங்கள் எப்போது ஆண்டவரே விடுவிக்கப்படப் போகிறோம்" என்று ஆண்டவரை நோக்கி ஜெபித்தேன். "இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (சங். 34:6) என்கின்ற வாக்கை எனக்கு அன்று காலை தான் ஆண்டவர் கொடுத்திருந்தார். ஆக இந்த ஏழையின் ஜெபத்தைக் கேட்கப்போகிறீர் சீக்கிரம் விடுவிப்பீர் என்றல்லவா நினைத்தேன். இப்போதோ 13 பேர் கைது செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கும் விசாரணை நடந்து முடிந்து அறிக்கை தயார் செய்து எப்போது விடுதலை கிடைக்கும்? எப்போது நல்ல பதில் கிடைக்கும்? என்ற வேதனை தவிப்பு, ஏமாற்றம், சோர்வு என்னை மிகவும் வாட்டியது. ஆனால் தொடர்ந்து அந்த 13 பேர் விசாரணை சீக்கிரம் நடந்து முடிய வேண்டும். என்னைப் போல் அவர்களும் தனிமை சிறையில் அதிக நாட்கள் அடைபடக் கூடாது" என்று ஆண்டவரிடம் ஜெபித்தேன்.

அப்படியே கர்த்தர் 10 நாட்கள் மட்டுமே தனிமை சிறையில் கஷ்டப்பட அனுமதித்து. சகோ. டின்சாய் (எத்தியோப்பியா) என்பவரைத் தவிர மற்ற 12 பேரையும் தனிமை சிறைவாசத்திலிருந்து விடுவித்து பொதுவான சிறையில் கொண்டு வந்து சேர்த்தார். அல்லேலூயா! ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் அல்லவா நம் ஆண்டவர்! அந்த 12 விசுவாசிகளை அங்கிருந்த 6 அறைகளில் 2 பேர், 3 பேர் எனப் பிரித்து மற்ற கைதிகளோடு அடைத்தார்கள். ஒன்றாக ஒரே அறையில் எங்களை அடைக்கவில்லை. விசாரணை முடியும் முன்பு ஒரே அறையில் அனைவரும் இருந்தால் ஒருவருக்கொருவர் விசாரணையின் போது கேட்கப்படும் கேள்விகள், பதில்கள் - பற்றி பேசி இரகசியங்கள் வெளிவராத படி பார்த்து கொள்வோம் என்பதினாலும், கூட்டமாக இருப்பதினாலும் எங்களைப் பிரித்து சிறையிலிட்டார்கள்.

3வது தடவை அறைமாற்றம்

இவர்கள் வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே என்னை வேறு 4 பேர் இருந்த அறைக்கு மாற்றி விட்டிருந்தார்கள். அங்கு அந்த அறையில் 2 சவுதிகள் (ஆப்ரிக்கா - origin) அதில் 2 பேர் ஒசாமா

பின்லேடனின் "அல்கொய்தா" இயக்கத்தின் உறுப்பினர்கள். ஒருவன் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவன். எல்லோரும் 30 அல்லது 35 வயது மதிக்கத்தக்கவர்கள். 2 சவுதிகளும் தீவிரவாத செயலுக்காக பிடிபட்டவர்கள். அதில் ஒருவர் அவர்கள் மதத்தைப் பற்றி பல நாடுகளுக்குச் சென்று போதிப்பவரும் கூட. அதே வேளை மிகவும் மென்மையான இருதயத்தைக் கொண்டவராக இருந்தது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. என்னோடு அன்பாக பேசினார். என்ன வேண்டுமானாலும் கேள்! Feel Free என்று ஆங்கிலத்திலும் பேசினது எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. கடும் நெஞ்சம் கொண்டவர்கள் மத்தியிலே அவர் நூற்றில் ஒருவராக காணப்பட்டார். அவர் பின்னர் மெதுவாக "நீ எந்த மதம்" என்று கேட்டு, நான் கிறிஸ்தவன் என்று அறிந்தவுடன் எனக்கு ஒரு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இஸ்லாம் மத புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். சரி என்று சொல்லி வாங்கி வைத்துக் கொண்டேன். பிறகு நான் உனக்கு "இஸ்லாம்" மதத்தை பற்றி சொல்லித் தருகிறேன். "எங்கள் மதத்தை நீ ஏற்று கொள்ள வேண்டும் என்று சொன்னார். நான் முதலிலேயே அவரிடம் சொல்லிவிட்டேன், "நீங்கள் உங்கள் மதக்கருத்துக்களை, போதனைகளை சொல்லுங்கள் கேட்கின்றேன். அதுபோலவே என்னுடைய சத்தியவழி சுவிசேஷசத்தையும் கூறுவேன். அதை நீங்கள் ஏற்று கொள்ள வேண்டும் அல்லது கேட்கவாவது வேண்டும்' என்றேன். ஆனால் மதம் மாற என்னை வற்புறுத்தக் கூடாது என்றும் சொல்லி விட்டேன். 'சரி' என்று அவரும் ஒப்புகொண்டார். அடுத்த நாளே குரானை விரித்து போதிக்கவும், அவர்கள் மதம் தான் சிறந்த வழி என்றும் இயேசு ஒரு தீர்க்கதரிசி மட்டுமே கடவுள் அல்ல, தேவ குமாரன் அல்ல என்றும் சொன்னார். நான் எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுவிட்டு இதுதான் ஆண்டவர் தந்த வாய்ப்பு என்று எண்ணி "இயேசு கிறிஸ்து யார்? எதற்காக சிலுவையில் அறையப்பட்டார், இரத்தம் சிந்தினார்? பாவமன்னிப்பும், இரட்சிப்பின் அவசியத்தையும் பற்றியும் சுவிசேஷமாக கூறிவிட்டேன். ஓரளவிற்கு புரிந்து கொண்டார். என்றாலும் அவருடைய மதத்தில் வைராக்கியம் உடையவராய் இருந்தார். "கடும் முத்தாவா' அவர் அதாவது தொலைக்காட்சி பார்க்க மாட்டார், சிகரெட் பிடிக்கமாட்டார், செய்தித்தாளில் பெண்கள் – படங்கள் (வயதானவர், இளையவர்) இருந்தால் பேனாவினால் அந்த முகங்களை அழிப்பார் அல்லது அந்த முகங்களை மட்டும் கிழித்து விடுவார். இப்படி முஸ்லீம் அடிப்படைவாதியாக இருந்தார் (Fundamentalist). இவரால் எங்கள் அறையில் தொலைக்காட்சி பெட்டி கிடையாது. மேலும் அவரைப்பற்றி கூற வேண்டுமானால் அது அவருடைய சிறைவாசக் கதைதான். அவருடைய சிறை தண்டனை என்ன தெரியுமா? 15 வருடங்கள்.

முதலில் அவர் சொல்லும்போது அதிர்ச்சியுற்றேன். தற்போது 6 வருடங்கள் கழிந்துவிட்டது. மீதி 1½ வருடங்கள் கழித்து விடுதலை செய்வதாக சொல்லி இருக்கிறார்கள் என்றார். 6 வருடங்கள் எப்படி கழித்தீர்கள். 60 நாட்களுக்கே நாங்கள் இப்படி கலங்குகின்றோமே என்றேன். அதற்கு அவர் "அல்லா" மீதுள்ள விசுவாசம் என்றார். என் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவர் மேலும் கூறினார், "தனிமைச் சிறையில் 3 வருடங்கள் இருந்தேன் (நான் 30 நாட்கள் தான் இருந்தேன்). 15 நாட்கள் நின்று கொண்டே உறங்க வேண்டும். உட்கார, படுக்கக் கூடாது." 1500 சவுக்கடிகள் வாங்கியதாகவும் கூறினார் (6 வருடத்தில்). இத்தனையையும் அவர் சிரித்த முகத்துடனேயே சொல்லிக் கொண்டு இருந்தார். இது எனக்கு ஆச்சரியத்தையும் அவர் மேல் பரிவையும் வர வழைத்தது. 31 நாட்கள் தனிமை சிறையின் வேதனை. இப்போது ஒருமாதம் சேர்ந்து இரண்டு மாத சிறைவாசத்திற்கே ஐயோ ஏன் இந்த வேதனை? ஆண்டவர் என்னை கைவிட்டு விட்டாரா? என்று கோபப்படுகிறோமே, ஒரு முஸ்லீம் இந்த அளவிற்கு பாடுகளை அனுபவித்தும் தன் கடவுள் மீது தீவிர வைராக்கியமான விசுவாசத்தை கொண்டிருப்பதைக் கண்டு, "நாம் ஏன் ஆண்டவருக்காக பாடுபடக்கூடாது" என்று நினைத்துக் கொண்டேன். சாப்பாடு வரும்போது மட்டும் எல்லோரும் ஒன்றாக வட்டமாக அமர்ந்து சாப்பிடுவோம். அதிகமாக ஏதாவது தேவைப்பட்டால், தினமும் அங்கு வருகின்ற உதவியாளரை வாங்கி வரச் செய்து சாப்பிடுவோம். பார்வையாளர் நேரம் அவரவர் உறவினர்கள் கொண்டு வந்து கொடுக்கும், பிஸ்கெட்டுகள், இனிப்புகள், மற்ற தின்பண்டங்களை அனைவரும் பகிர்ந்து உண்ணுவோம். சோதனை, பாடுகள் மத்தியில் "உன்னைப் போல் பிறனையும் நேசி" என்ற ஆண்டவர் இயேசு கூறியதைப் போல அவர்கள் எங்களை கடுமையாக தண்டிக்கிற இனத்தார் என்று தெரிந்தும் அவர்களை நேசிக்கும்படி ஆண்டவர் கிருபை செய்தார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் "நான் தனியாக முழங்காலிட்டு கண்களை மூடி மனதுக்குள் ஜெபிப்பேன். சவுதி முஸ்லீம்கள் தொழுகைக்கு வரும்படி ஆரம்பத்தில் கூப்பிட்டார்கள். உங்கள் முறைப்படி நீங்கள் தொழுங்கள், நான் என் வழக்கப்படி ஜெபிப்பேன் என்றேன்.

ஆம் தானியேல் கூட சிங்கக்கெபியில் போட உத்தரவு வந்தபோதிலும், அவன் எப்போதும் போல யெகோவா தேவனை நோக்கி தினமும் மூன்று வேளை தன் அறையில் ஜெபித்தான். சிங்க கெபியில் போடப்பட்ட பிறகும், சிங்கங்களின் மத்தியில் தானியேல் ஜெபித்துக் கொண்டு இருந்தான் (தானி. 6:10) என்று வேதத்தில் சொல்லப்பட்ட

பிரகாரமே நானும் மூன்று வேளையல்ல, நினைக்கும்போதெல்லாம் அமர்ந்து கொண்டும், முழங்காலிட்டும் படுக்கையிலும் ஜெபிப்பேன். "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச. 5:17) என்று பவுல் சொன்னது நினைவிற்கு வந்தது. அவர்களும் கேட்டார்கள் "நீங்கள் எத்தனை முறை தொழுவீர்கள்? உட்கார்ந்து ஜெபிப்பது தவறு என்று சொல்வார்கள். நான் சொல்வேன், "எங்களுடைய வேதம் கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரியுங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று போதிக்கிறது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான் "கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்". இருதயத்தில் தேவனோடு பேசுவது தான் ஜெபம். வேறு எந்த கண்டிப்பான வரைமுறைகளும் வேதத்தில் கூறப்படவில்லை; அவரவர் விருப்பத்திற்கு ஏற்றபடி ஆனால் பயபக்தியோடு தாழ்மையோடு ஜெபிக்கவே எங்கள் வேதம் கூறுகிறது என்றேன். இப்படியாக அங்குள்ள முஸ்லீம் கைதிகள், போலீஸ்காரர்கள் நம்முடைய வேதத்தைப் பற்றி, இயேசுவைப் பற்றி கேட்கும் போது – அவர்களுக்கு விளக்கி சொல்ல நல்ல வாய்ப்பு கிடைத்தது.

சில சகோதரர்கள் இணைந்தனர்

இச்சமயத்தில் தான் என்னுடைய அறைக்கு பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த சகோ. டென்னிஸ், எத்தியோப்பியாவைச் சேர்ந்த சகோ. அராயா அவர்களை கொண்டு வந்தார்கள். இருவரும் 10 நாட்கள், 15 நாட்கள் என்று "தனிமை சிறையில்" கஷ்டப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் என்னை விட குறைவான நாட்களே அவர்கள் அங்கு இருந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தினேன். ஓடிப்போய் இருவரையும் கட்டித் தழுவினேன். அவர்களுக்கும் சந்தோஷம் என்னைப் பார்த்து! ஆனால் சகோ. அராயாவுக்கு அன்று இரவு ஒரு சோதனை வந்தது. திடீரென மயக்கம் ஏற்பட்டு அப்படியே சரிந்து விழுந்தார். எல்லோரும் ஓடிப்போய் தாங்கி பிடித்தோம். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக நினைத்தோம். ஆனால் "ஆண்டவரே எந்த சேதமும் வராதபடி அவரைக் காப்பாற்றும்" என்று மனதிலேயே ஜெபித்துக் கொண்டிருந்தேன். பதில் கிடைத்தது. உடனே அவர் சமாளித்து எழுந்து "எனக்கு ஒன்றும் இல்லை" "I am alright" என்றார். எல்லோருக்கும் மன அமைதி கிடைத்தது. ரொம்ப "சீரியஸ்" என்றால் மட்டுமே வெளி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவார்கள். இவர்(Bro. Arrayo) தனிமைசிறையில் இருக்கும்போதே வாந்தியும் இருதய வலியும் ஏற்பட்டு வெளியிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு இரண்டு முறை கொண்டு போகப்பட்டுள்ளார். 51 வயது, பெருத்த தொந்தி, திடகாத்திரமான உடல். ஐந்து குழந்தைகளுக்கு தகப்பன். நல்ல வியாபாரம் செய்து கொண்டு இருந்தவர். கர்த்தருடைய பிள்ளைகள

ஆராதிக்க "ஜெபவீட்டை இவர் பெயரில் (எத்தியோப்பியா) எடுத்துக் கொடுத்து உதவியவர்.

சகோ. டென்னிஸ் என்னிடம் கொஞ்சம் வருத்தப்பட்டார். 'நீ ஏன் என் பெயரைச் சொன்னாய்? எத்தனை இந்தியர், பிலிப்பைன்ஸ் விசுவாசிகள் உண்டு. அவர்கள் பெயரை சொல்லி இருக்கலாமே என்றார். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. நான் சொன்னேன் உன்னை குறிப்பாக "ஒரு பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் மிகவும் சுறுசுறுப்பானவர் – உன்னுடைய கூட்டங்களை ஒழுங்கு செய்து, உதவியும் செய்திருக்கிறார் என்று அவர்களாகவே கேட்டதினாலும், இரண்டாவது சவுதி நபரை சுகமளிக்கும் கூட்டத்திற்கு கொண்டு வந்ததில் அவர் பங்கு உண்டாயிருந்ததினாலும் உன் பெயரை நான் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது". கர்த்தர் சித்தம் அவருக்காக பாடுபட வேண்டுமானால் – நாம் தொழுவதும், பாடுவதும், ஜெபிப்பதும் மட்டும் போதாது – பாடுகளையும் அனுபவிக்க வேண்டும்". கர்த்தர் பெரிய நோக்கத்தை நம்மீது வைத்து இருக்கிறார். கவலை வேண்டாம் என்று சொல்லி அவரைத் தேற்றினேன். 'நான் உன்னை நேசிக்கிறேன்', என்னை மன்னித்து விடு என்று அவர் என்னிடம் சொல்லி, பிறகு என்னைப் புரிந்து கொண்டார்.

சிறையில் திருவிருந்து

அதன் பிறகு நாங்கள் மூவரும் முஸ்லீம் சக கைதிகளின் எதிரிலேயே அதே அறையில் ஜெபிப்போம். அங்கு சாப்பாட்டின்போது கொடுக்கப்படும் ரொட்டி துண்டையும், திராட்சை ரசத்தையும் ஆசீர்வதித்து தினமும் 'திருவிருந்தை' அநுசரித்து ஜெபத்தோடு படுக்கைக்கு செல்லுவோம்.

தனிமை சிறையிலிருந்து பொது சிறைக்கு அனுப்பிவிட்டதால் விசாரணை எல்லாம் முடிந்து விட்டது. இன்னும் ஒரு வாரத்திற்குள் அனுப்பி விடுவார்கள் என்று எல்லோருமே எதிர்பார்த்திருந்தோம். ஆனால் வந்த பிறகும் எங்கள் யாவரையுமே ஒரு சில நாட்கள் மறுபடியும் குறுக்கு விசாரணைக்கு, தனித்தனியே அழைத்து சென்றார்கள்.

வெளி உலகை கண்டேன்

என்னையும் ஒருநாள் ஏறக்குறைய இரண்டு மாதங்கள் கழித்து ஒருநாள் விசாரணைக்கு அழைத்துச் சென்றார்கள். இரண்டாவதாக சுகம் பெற வந்த அந்த சவுதி நபர் வீட்டை காட்டச் சொல்லி என் கால், கரங்களில் சங்கிலி போட்டு விசாரணையாளர் காரில் ஏற்றி கொண்டு சென்றார்கள். கூட ஒரு போலீஸ் பாதுகாப்பாக வந்தார். நான் கைது செய்யப்படும் முன்பு ஒருநாள் நானும் என் மனைவியும், சுவிசேஷகர் ஜான் சாலொமோனும் அந்த சவுதி நபர் வீட்டிற்கு சென்று

ஜெபித்துவிட்டு வந்தோம். அவர் வற்புறுத்தி அழைத்ததின் பேரிலேயே ஜூலை 10ஆம் தேதி இரவு 1.30 மணிக்கு சென்று இருந்தோம். ஆகவே நான் போன் நம்பரையும், பெயரையும் கொடுத்து, "நீங்களே கண்டு பிடித்துக் கொள்ளுங்கள்", என்று சொல்லி இருந்தும் கூட "நீ நேரில் வந்து அந்த சவுதி நபர் வீட்டைக் காட்டி கொடுக்காவிட்டால் உங்கள் யாவருடைய சிறை வாசத்தையும் நீடிக்க செய்வோம்" என்றார்கள். நாங்கள் நள்ளிரவில் அந்த வீட்டிற்கு சென்றதால் சரியாக அந்த வீட்டையும் ஏரியாவையும் காட்டிக் கொடுக்க என்னால் முடியாது" என்று பலமுறை சொல்லியும்' கூட என்னை வற்புறுத்தி, பயமுறுத்தி அழைத்துச் சென்றார்கள். எப்படியோ அந்த வீடு இருந்த ஏரியா, தெரு வரைக்கும் சரியாக காட்ட முடிந்தது. வீட்டு எண்ணை சரியாக காட்ட முடியவில்லை. மனதில் பயம், திகில்! சரியான ஏரியா தெருவைக் காண்பிக்கவில்லையெனில் நான் வேண்டுமென்றே "பொய் சொல்லுகின்றேன்", 'தவறான இடத்தை காண்பிக்கின்றேன்' என நினைத்து சித்திரவதை செய்வார்களோ என்ற ஒருபக்கம் மனப் போராட்டமாக இருந்தது. அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டு என்னை அப்படியே மறுபடியும் ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள். அன்று 55வது சிறைவாசநாளாக இருக்கும் என நினைக்கிறேன். சிறையில் அடைக்கப்பட்ட பிறகு முதன் முதலாக வெளி உலகை 'ஜெத்தா' நகரின் மெயின் ரோடுகளை மக்களை, கார்களை பார்க்கவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த் வாய்ப்பிற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தினேன்.

அறைக்கு வந்தவுடன் எல்லோரும் பயந்து கேட்டார்கள். "என்ன ஆயிற்று?". இரண்டு மணி நேரமாக நீ திரும்பி வராததால் பயந்து விட்டோம் என்றார்கள். ஆனாலும் எல்லா விபரங்களையும் சொல்லாமல் விசாரணை நடத்தினார்கள் என்று மட்டும் சொன்னேன். சவுதி வீட்டைக் காட்டினேன்' என்று சொன்னால் அந்த இரண்டு சவுதி தீவிரவாதிகளுக்கு கோபம் வரலாம். ஆதலால் எல்லா விவரங்களையும் கூற விரும்பவில்லை.

நான் மனஉறுதியுடன் ஆண்டவர் இயேசுவின் மீது முழு விசுவாசத்தோடு இருப்பதை அறிந்து கொண்ட அந்த 'முத்தாவா – நண்பர் சகோ. டென்னிஸ், சகோ. அரயாவிற்கும் இஸ்லாம் பற்றி போதிக்க தொடங்கினார். இதில் சகோ. அரயா 'ஆர்த்தோடாக்ஸ்' (ORTHODOX) சபைக் கிறிஸ்தவர். இரட்சிப்பின் அனுபவம் இல்லாத கிறிஸ்தவராகவும் இருந்தார். அதனால் அவர் இஸ்லாம் பற்றி அறிய அதிக ஆவல் கொண்டு அந்த போதனைகளைக் கேட்டார். ஆனால் சகோ. டென்னிஸ் கேட்டும் கேட்காத மாதிரி இருந்து சமாளித்து விடுவார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில போலீஸார் எங்கள் மூவரையும் முஸ்லீம்களாக மாற்ற நன்றாக போதிக்கச் சொல்லி அந்த 'முத்தவாவிடம்' சொல்வார்கள். ஆனால் ஒரு நல்ல பண்பை அந்த 'முத்தாவா' கடைபிடிப்பார். "இஸ்லாமை வற்புறுத்தி நுழைக்கக் கூடாது. அவர்களுக்கு எடுத்துரைப்பேன் அதை ஏற்று கொள்வதும், ஏற்று கொள்ளாததும் அவர்கள் பொறுப்பு" என்று அவர்கட்கு பதில் சொல்லுவார். மறுபடியும் சில நாட்கள் கழித்து அதே போலீஸ்காரர்கள் "என்ன! அவர்கள் இன்னும் மாறவில்லையா நம் மதத்திற்கு? என்று கேட்டார்கள். இல்லை என்று அவர்கள் சொன்னபோது, ஒரு போலீஸ்காரர் இளைஞர், மீசை கூட சரியாக முளைக்காதவர், அவர்! "கேட்கவில்லை என்றால் நன்றாக உதை கொடுத்து, குரானை சொல்லி கொடு, நம் மதத்திற்கு மாற்று" என்றார். வயதில் நாங்கள் அவரைவிட பல வருடங்கள் பெரியவர்கள். அதனால் அவர் பேசியது எங்களுக்கு அவமானமாக இருந்தது. என்ன செய்வது பதிலுக்கு பதில் பேசலாம். ஆனால் ஆண்டவர் நாமத்திற்காக இதை ஏற்று கொண்டோம். "என் நாமத்தினிமித்தம் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள்" என்று ஆண்டவர் சொன்னது (மத். 24:9) நிறைவேற வேண்டுமே!

4–வது தடவை அறை மாற்றம்

சில நாட்கள் கழித்து ஒருநாள் இரவு கண்காணிக்கும் போலீஸ் அதிகாரி ஒருவர் என்னை வேறு அறைக்கு மாற்றுவதாக சொன்னார். அந்த அறையில் 60 வயதான ஒரு மொராக்கோ நாட்டு கைதியும், 35 வயதான பாகிஸ்தான் கைதியும், அவர்களோடு சகோ. மிஸ்பின் என்கின்ற எத்தியோப்பிய விசுவாசியும் ஆக 3 பேர் மட்டுமே இருந்தார்கள். எனக்கு அதிர்ச்சியும் வருத்தமுமாக இருந்தது. இப்போது தான் பழைய அறைக்கு, அந்த இரண்டு சகோதரர்கள் (டென்னிஸ், அராயா) வந்தார்கள். அவர்களோடு ஜெபிக்கவும், திருவிருந்து அனுசரிக்கவும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருந்தது. அதற்குள் வேறு அறை மாற்றம் ஏன்? என்று கேள்வி என் மனதை உறுத்தியது. பிறகு தான் தெரிந்தது, இந்த அறையில் இருந்த சில முஸ்லீம் கைதிகள் என்னோடு தங்கி இருந்த இரண்டு கிறிஸ்தவ சகோதரர்கள் மதம் மாறுவதற்கு நான் தடையாக இருந்து, அவர்களுக்கு அறிவுறுத்துகிறேன் என்பதை அறிந்து அந்த கண்காணிக்கும் அதிகாரியிடம் சொல்லி என்னை மாற்றினார்கள் என்று!

சரி! என்று அவர்கள் சொன்ன அறைக்கு மாறினேன். 'மிஸ்பின்' என்ற எத்தியோப்பிய கிறிஸ்தவ இளைஞர் அவ்வளவாக படிக்காதவர் கூலி வேலை செய்து கொண்டிருந்தவர். பாஸ்டர் டின்சாய் கடையில் உதவி வேலை பார்த்துக் கொண்டிருந்தவர். பாஸ்டர் டின்சாயை

(எத்தியோப்பியன்) பிடிக்க இரகசிய போலீஸார் அவர் கடைக்குச் சென்றபோது இவர் அங்கு அவருடன் இருந்ததால், அடையாள அட்டை இல்லாததினால் அவரும் கைது செய்து கொண்டு வரப்பட்டிருக்கிறார். அவர் சபைக்குக் கூட ஒழுங்காக செல்லாதவர். அவருக்கும் இந்த இரண்டு பெரிய கூட்டங்களுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு குற்றமும் இல்லாதவரையும் பிடித்து வந்திருக்கின்றனர். இதில் கொடுமை என்னவெனில் அவரை, விசாரணையின்போது தடித்த பிரம்பினால் அடித்திருக்கிறார்கள். காலால் உதைத்திருக்கிறார்கள். ஒரு நீள சங்கிலியினால் இரண்டு கைகளையும், கால்களையும் இணைத்து கட்டி ஒரு மூலையில் ஒரு மணிநேரம் உட்கார வைத்திருக்கிறார்கள். அவர் கேட்ட கேள்விகள் பெரும்பாலானவைகளுக்கு "எனக்குத் தெரியாது" என்று பதில் சொன்ன ஒரே காரணத்திற்காக அவ்வாறு செய்துள்ளனர். மேலும் அவருக்கு ஓரிரு வார்த்தைகளைத் தவிர ஆங்கிலமும் தெரியாது. அரபிக் மொழியும் தெரியாது. அதனால் இவர் எல்லாவற்றையும் மறைக்கிறார் என்று நினைத்து, அடித்து, துன்புறுத்தியிருக்கிறார்கள். இந்த சம்பவத்தை அந்த அறைக்கு என்னை மாற்றியபோது அவர் எனக்கு விவரித்துச் சொன்னார். கண்களில் கண்ணீர் பொங்க அவரை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டேன். "கிறிஸ்துவிற்காக நீங்கள் பட்ட அடிகளுக்கு ஏற்ற ஆசீர்வாதத்தை கர்த்தர் நிச்சயம் தருவார். மனவேதனை அடையவேண்டாம்" என்று ஆற்றி தேற்றினேன். 'அவர் நான் அங்கு செல்லும்வரை, அந்த அறையில் 'பாகிஸ்தான்', 'மொராக்கோ' கைதிகள் மத்தியில் இருந்தார். அவர்களும் முடிந்த அளவு அவரோடு அரபிக் மொழியில் பேசியிருக்கிறார்கள். ஆனால் நான் அங்கு சென்றது அவருக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. ஆண்டவர் நன்மைக்காகவே இந்த அறைக்கு அனுப்பியிருக்கிறார். சாத்தான் தீமை செய்ய நினைத்தான். ஆனால் ஆண்டவரோ, அதை நன்மையாக மாற்றி கொடுத்தார். பிறகு அதே இரவு சில மணி நேரங்கள் கழித்து சகோ. அராயா எங்கள் அறைக்கு வந்து விட்டார். நானே கேட்டு கொண்டு வந்து விட்டேன் என்றார். டென்னிஸ் வரவில்லை. அடுத்த நாள் இரவு சகோ. டென்னிசும் அங்கு வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொன்னோம். இங்கு இருந்த மற்ற இரண்டு கைதிகள் அவர்களுண்டு என்று இருப்பார்கள். இஸ்லாம் மதப் பிரசாரமோ மற்ற தொந்திரவோ செய்வதில்லை. "கர்த்தர் எல்லாம் நன்மைக்காகவே இந்த அறைக்கு மாற்றியிருக்கிறார் என்றறிந்து கொண்டோம். சகோ. மிஸ்பினுக்கு, சகோ. அராயா வந்தது அவர்கள் நாட்டு மொழியில் (எத்தியோப்பியா) பேசி கொள்ள நல்ல வசதியாக அமைந்தது.

பிறகு ஒவ்வொரு நாளும், காலையும், மாலையும் 4 பேரும் கூட்டுப் பிரார்த்தனை செய்வோம். பாடல்களைப் பாடினோம். மனதில் ஆவியானவர் உணர்த்தியபடி நானும் பாஸ்டர் டென்னிசும் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்து கொண்டு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொள்வோம். ஒருமுறை, ஒருவாரமாக தொடர்ந்து உபவாசம் இருந்தோம். துன்பத்திலும் இந்தவிதமான ஆராதனை ஜெபம், செய்தி இன்பமாக ஆறுதலாக இருந்தது. தினமும் காணும் சொப்பனங்களை, வெளிப்பாடுகளைப் பரிமாறிக் கொள்வோம். சில நேரங்களில் திடீரென்று சகோ. அராயா தன் மனைவி, பிள்ளைகளை நினைத்து தலையை அறையின் சுவரில் முட்டி கொண்டு அழுவார். பார்க்க பரிதாபமாகவும், வேதனையாகவும் இருக்கும். சகோ. டென்னிஸ்சும் நானும் பெரும்பாலும் மனைவி, பிள்ளைகளுக்காய் ஜெபிக்கும்போது அழுதுவிடுவோம். இப்படியாக நாட்கள் ஓடின. ஜெயில் கண்காணிப்பாளரிடம் எங்கள் விடுதலையைப் பற்றி கேட்கும்போது "உங்கள் அறிக்கை எல்லாம் தயார் பண்ணி விட்டோம். இரண்டு வாரங்களில் உங்கள் எல்லோரையும் அனுப்பி விடுவோம்" என்று சொல்லுவார். கேட்பதற்கு உற்சாகமாக இருக்கும். பார்க்க வரும் என் மனைவியிடமும் இதை சொல்லுவேன். அவளும் சந்தோஷமாக இரண்டு வாரம் எப்போது முடியும் என்று காத்திருப்பாள்.

என் திருமண நாள் வந்தது

இடையில் செப்டம்பர் 7 வந்தது. எனது திருமண நாள்!. ஆகஸ்டு முடிவில் விடுவிக்கப்படுவேன்! திருமண நாளை கொண்டாடலாம்! என்றிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. ஆனால் செப்டம்பர் 11 ஆம் தேதி நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மையம் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது என்றறிந்து மிகவும் வேதனை அடைந்தோம். ஆனால் அங்கிருந்த சீரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சவுதியை சேர்ந்த முஸ்லீம் கைதிகள் அனைவருமே "அல்லா ஓ அக்பர்" என்று கைகளைத் தட்டி ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்கும், கேட்பதற்கும் மிகவும் வேதனையாக இருந்தது. 6000 பேர் ஒரு நிமிடத்தில் அழிந்து போனது அவர்களுக்கு கொண்டாட்டமாக இருந்தது. ஏன் இப்படி கொண்டாடுகிறார்கள்? இது நியாயமா? என்று கேட்டதற்கு அவர்கள் பாலஸ்தீனம் மற்றும் பல நாடுகளில் எங்கள் ஜனங்களின் அழிவிற்கு அமெரிக்கா தான் காரணம். ஆகவே இது இறைவனின் தண்டனை! என்றார்கள். அவர்களோடு விவாதிக்க விரும்பவில்லை! இப்படியாக இரண்டு மாதங்கள் முடிந்தது. செப்டம்பர் 14 ஆம் தேதி எப்போதும் போல என் மனைவி என்னை பார்க்க வந்தபோது – செப்டம்பர் 17 ஆம்

தேதி என் மகனுக்கு பிறந்த நாள். அதற்கு நானும் "ஜெபம் செய்வோம்" ஆண்டவர் சித்தப்படி நடக்கட்டும் என்றேன். செப்டம்பர் 17 ஆம் தேதியும் வந்தது. இரண்டு மாதங்கள் முழுமையானது. என்னை எப்படியாவது இரண்டாவது மாத இறுதிக்குள் அனுப்பி விடுவார்கள் என எதிர்பார்த்தேன். செப்டம்பர் 17 ஆம் தேதி காலை 11 மணி! "விசாரணை யாளர் அழைக்கிறார், தயாராக இரு என்று ஒரு போலீஸ்காரர் வந்து சொன்னார். என்னுடைய விடுதலையைப் பற்றி கூறுவார் என்று எதிர்பார்த்தேன். எனவே என்னுடைய துணிமணிகளை எல்லாம் இரண்டு பிளாஸ்டிக் பைகளில் போட்டு விடுதலை பத்திரத்தில் கையெழுத்து போட்டு விட்டு வந்து எடுத்துப் போகலாம் என்று நினைத்து தயாராக வைத்துவிட்டேன். ஆனால் யாரும் என்னை அழைத்து போக வரவேயில்லை. மறுபடியும் போலீஸ்காரரை கேட்டேன். அவர் "உன்னை தயாராக இருக்கச் சொன்னார், அவர் மறுபடியும் கூப்பிடுவதாக சொல்லியிருக்கிறார். அவர் மறுபடியும் கூப்பிட்டு அழைக்காமல், நாங்கள் உன்னை அவரிடம் கொண்டு போக முடியாது" என்றார்.

இரண்டு மாதங்கள் முடிந்தது விடுதலை?

"இன்று செப்டம்பர் 19! இரண்டு மாதங்கள் முழுமையாக ஆகிவிட்டது விடுதலை உண்டு" என்று எதிர்பார்ப்போடும், நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் காத்திருந்தேன். ஆனால் அவர் என்னை அழைக்கவே யில்லை! அன்று மிகவும் எதிர்பார்த்த 'விடுதலை' இல்லை! அன்று ஞாயிற்றுக் கிழமை! சென்னை விமானம் மாலை 9.00 மணிக்கு உண்டு. என் மனைவியும் கூட "டிக்கெட்டு பதிவு செய்து அதனை உறுதி செய்து வைக்கிறேன், நாம் 19, செப்டம்பர் மாலை விமானத்தில் போய்விடலாம்" என்று சொல்லியிருந்தாள். ஆனால் எதிர்பார்த்ததிற்கு மாறாக ஏமாற்றமும் வேதனையும், சோர்வுமே ஏற்பட்டன. எனக்கும் என் மனைவிக்கும்! கர்த்தர் ஏன் இந்த தாமதத்தை செய்கிறார்? என் ஜெபத்திற்கு பதில் இல்லையா? என்று சோர்வுடன் ஆண்டவரைக் கேட்டேன். ஆனால் அவரோ "என் கிருபை உனக்குப் போதும், உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாக விளங்கும்" (2 கொரி. 12:9) என்று சொல்லிவிட்டார்! ஆகவே பவுலுக்கு சொன்னது போல் இதை எல்லாம் தாங்கக் கூடிய போதுமான கிருபை, உமது பெலனை மட்டும் அன்றன்று தாரும். இனி எத்தனை நாட்கள், மாதமாயினும் தாங்கக்கூடிய பெலனைத் தாரும். இயேசு போதுமே! என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்.

மூன்றாவது பொது சிறைக்கு மாற்றம்

இந்த வேளையில் பக்கத்தில் உள்ள இன்னொரு ஜெயில் அறைக்கு மாற்றினார்கள். அங்கு அந்த அறையில் கம்பிவைத்த, இடைவெளி

யுள்ள கதவுகள் இல்லை. முற்றிலும் இரும்பு கதவால் மூடப்பட்ட, அறைகளாக அவைகள் இருந்தன. ஒரு அறைக்கு 5 பேர்கள். ஆனால் இரும்பு கதவு முழுவதும் அடைக்கப்பட்டிருந்தது. வெளியே நடமாட்டத்தைப் பார்க்க முடியாது. பழைய ஜெயிலை விட மோசமாக இருந்தது. ஆனால் கழிப்பு அறை எல்லாம் சுத்தமாக இருந்தது. குளியலறை வசதிகள் கூட இருந்தது. இந்நிலையில் சகோ. டின்சாய் (எத்தியோப்பியா பாஸ்டர்) ஆகஸ்டு 20ஆம் தேதி பிடிக்கப்பட்டார். ஆனால் செப்டம்பர் 22 ஆம் தேதி ஆனது! அவர் மட்டும் தனிமை சிறையிலிருந்து(Solitary Cell) வெளியே வரவேயில்லை. என்ன ஆனது அவருக்கு? ஏற்கெனவே மிகவும் மெலிந்து காணப்படுவார். அவர் உடலில் எலும்புகளை எல்லாம் எண்ணிப் பார்க்கலாம். ஆனால் விசுவாசம், மனஉறுதி வாய்ந்தவர். சில பேர் அவர் நோய் வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பார் என்றார்கள். ஆனால் ஆண்டவரிடம், தொடர்ந்து அவர் எங்கள் பொது அறைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்று ஜெபித்தோம். என் மனைவிக்கு சொல்லி சபைகளில் ஜெபிக்க சொன்னேன். அவருக்காக உபவாச ஜெபம் செய்திருக்கிறார்கள். அதன்படி 48 நாட்கள் தனிச் சிறையிலிருந்த பிறகு அவரை ஒரு நாள் எங்கள் "பொது சிறைக்கு" கொண்டு வந்தார்கள். அவரை தூரத்திலிருந்து பார்த்தவுடனேயே மிகவும் சந்தோஷமாக இருந்தது. எங்கே அவர் உடல் சுகவீனத்தால் அல்லது அடிக்கப்பட்டு இறந்து போயிருப்பாரோ என்ற சந்தேகம், பயம், எங்களுக்கு இருந்தது. ஆனால் அற்புதவிதமாக கர்த்தர் உயிரோடு கொண்டு வந்தார். எங்கள் மத்தியில் அவர் 3 விசுவாசிகள் இருந்த அறையில் சேர்ந்து கொண்டார். 48 நாட்களுக்குப் பிறகு நாங்கள் ஒருவரையொருவர் காண்பது எவ்வளவு பெரிய சந்தோஷம். கர்த்தர் நல்லவர் எங்கள் கண்ணீர் ஜெபத்தைக் கேட்டார்.

மூன்றாவது மாதமும் முடிந்தது

மூன்று மாதங்கள் ஆனது. அக்டோபர் 18ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு அதிகாரி அழைத்தார். மூன்று மாதம் முடியப் போகிறது என்னை விடுதலை செய்வார்கள் என்று நான் மறுபடியும் எதிர்பார்த்தேன். ஆனால் அந்த அதிகாரி, அங்கு வந்து பாகிஸ்தான் நண்பரை சந்திக்க கூப்பிட்டிருக்கிறார். அவரிடம் "எங்கள் விவரம் அடங்கின அறிக்கை வெளியிடுவது என்ன ஆனது? என்று கேட்டேன். அவர் "உங்கள் 'பேப்பர்ஸ்'(Papers) 'ரீயாத்' போயிருக்கிறது. 'விடுதலை உத்தரவு' சீக்கிரம் வரும்!" என்று மட்டும் சொன்னார். ரீயாத் தலைநகரம் போனால், அது வர சாதாரணமாக ஒரு மாதம் ஆகுமாம். மிகவும் சோர்ந்து இதயம் நொறுங்கியவனாக அறைக்கு வந்தேன்! ஆனால் விசுவாசிகள் சகோ. டென்னிஸ், சகோ. அராயாவும், சகோ,

மிஸ்பின் மற்றும் கூட இருந்த ஒரு சவுதி முத்தவா, பாகிஸ்தான், மொராக்கோ கைதிகளும் என்னைத் தேற்றினார்கள்.

ஆண்டவரே! மூன்று மாத முடிவிலாவது என்னை அனுப்புவீர் என நினைத்தேனே! ஏன் ஆண்டவரே! என்றேன். "இப்போது நீ அறியாய், இனிமேல் நீ அறிவாய்"(யோவான் 13:7) என்றார். ஆனால் தொடர்ந்து நாங்கள் நால்வரும் ஜெபித்து கொண்டு இருந்தோம். ஒருமுறை, ஒரு வாரம் (பகல்) முழுவதும் உபவாசம் இருந்தோம். மற்றும் சில நாட்கள் வாரத்திற்கு ஒரு நாள், இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என நாலும் சகோ. டென்னிஸ், சகோ. அராயா அவரவர் மனதில் தீர்மானித்தபடி உபவாசித்தோம்.

பின்லாடனின் தளபதி

அப்பொதெல்லாம் அந்த சவுதி 'முத்தாவா', "நீங்களும் (மதகுரு) உபவாசிக்கிறீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். இந்த 'முத்தவா' சவுதியைச் சேர்ந்தவர். 35 வயதிருக்கும். ஒசாமா பின்லேடனின் மிகவும் நெருங்கிய முஜாஹிதின் தளபதி (Leuftinent) அவர் ஆப்கானில் இருந்திருக்கிறார். தொலைக்காட்சி இருக்கும் அறையில் அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ், பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயர், பாகிஸ்தான் அதிபர் முஷாரப் போன்றவர்கள் தொலைக்காட்சியில் தோன்றி பேசினாலேயே அவர்களை நாய்கள், துரோகிகள், சைத்தான்கள் என்று திட்டுவார். அமெரிக்கா என்றாலே அவருக்கு அவ்வளவு கோபம் வரும். 'இப்போ என்னை விட்டால் நேரே ஆப்கான் சென்று அமெரிக்காவிற்கு எதிராக போர் செய்வேன்' என்பார். நான் "அப்பாவி மக்களை கொலை செய்வதும், கடத்தி சென்று பணம் கேட்பதும், கொடுக்காவிட்டால் தலைவெட்டுவதும் உங்கள் மதபோதனைக்கு ஏற்றதா?" என்று கேட்டேன். அவர் உடனே அவரின் மத புத்தகத்தை எடுத்து வந்து அது முஸ்லீம் அல்லாதோரிடம் பணம் பறிக்கவும், இல்லாவிட்டால் கொலை செய்யவும் கூட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. துரோகிகள் முஸ்லீம் நாட்டில் இருக்கக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லீம் அல்லாதோர் சவுதி தேசத்தில் இருக்கக்கூடாது. உன்னை இங்கேயே கொலை செய்யக் கூட எங்கள் சட்டப்படி எனக்கு உரிமை உண்டு என்று வேகமாக அலட்சியமாக சிரித்துக் கொண்டே பேசினார். நான் அதிர்ந்து போனேன். அவருடைய விளக்கத்தைக் கேட்டு! 'உன்னையும் ஆசீர்வதிப்பேன், ஆனாலும் இவன் கை மற்றவர்க்கு விரோதமாக இருக்கும்" என்று வேதம் சொல்வது எத்தனை உண்மை என்பதை அவர் நிரூபித்து விட்டார்.

சிறையில் சாட்சி

ஆனால் அவர் மூலம் எங்களுக்கு ஒரு சாட்சியின் அனுபவம் கிடைத்தது. ஒரு இரவு அவரை மட்டும் அழைத்து விசாரணைக் கூடத்தில் விசாரணை அதிகாரி மெதுவாக கேட்டாராம், "உன்னோடு இருக்கும் இந்த நான்கு கிறிஸ்தவர்கள் என்ன பேசி கொள்கிறார்கள்? எப்படி நடந்து கொள்ளுகிறார்கள்? என்று கேட்டிருக்கிறார். உடனே அவர் சொன்னாராம், "உங்களை விட இங்கிருக்கும் போலீசை விட அவர்கள் உண்மையான, பரிசுத்தமான கிறிஸ்தவர்கள். இந்நிலையிலும் அவர்கள் ஜெபிக்கிறார்கள், உபவாசிக்கிறார்கள். யாருடனும் சண்டை செய்வது கிடையாது. போலீஸ்காரருடன் நன்றாக அநுசரித்து போகிறார்கள் என்று! அவர் இப்படி பேசினதை திரும்பி வந்து எங்களிடம் இரகசியமாக சொல்லிவிட்டார். கர்த்தர் எங்களை முஸ்லீம் கைதிகள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் சாட்சிகளாக வைத்ததற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தினோம்.

இப்படியான சூழ்நிலையில் ஒருநாள் என் விசாரணையாளர் கூப்பிட்டார். ஏதாவது விசாரணை அல்லது விடுதலைப் பற்றிய செய்தி சொல்லப்போகிறார் என்று எதிர்பார்ப்புடன் சென்றேன். ஆனால் எங்கள் வீட்டிலுள்ள பெரிய 'போட்டோ காப்பி மெஷினை'(PHOTO COPY MACHINE) உன் வீட்டிலிருந்து கொண்டு வரச் சொல் என்றார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இந்த கருவியை ஒரு மேற்கத்திய விசுவாசி என் ஊழியத்திற்காகக் கொடுத்தார். அதை 'கார்கோ'(CARGO)வில் அனுப்பிவிட்டேன் என்று பொய் சொல்லி விடலாமா? அப்படி சொன்னால் வீட்டில் தனியாக இருக்கும் மனைவியிடம் போய் உண்மைதானா என்று விசாரிக்கப் போனால்? இருப்பதை கண்டு பிடித்துவிட்டால்! பிறகு தண்டனை கூடலாமே! இப்படி சிந்தித்துக் கொண்டே, "சரி! நான் அதை கொண்டுவரச் சொல்லு கிறேன், ஆனால் நான் அதை இரண்டாம் தர வகையில் வாங்கினது! அதனால் நான் விடுதலை ஆகும்போது என்னிடம் திருப்பி ஒப்படைத்துவிடவேண்டும் என்றேன். "கண்டிப்பாக திருப்பித் தந்து விடுவோம். விசாரணையில் சான்றுகளை மேலதிகாரியிடம் காண்பிக்க வேண்டும்! அதற்காகத்தான்" என்று அவர் மேலும் கூறினார். சரி உன் நண்பர் அருண் மூலம் கொண்டு வரச் சொல் என்றார். சரி! அந்த நண்பரின் பேஜர்(PAGER) எண் "போட்டு நீயே கூப்பிடு" என்றார். அவரும் பதில் கொடுத்தார். பிறகு விஷயத்தை சொல்லவே, அவரும் மதியம் 2 மணிக்கு அந்த பெரிய போட்டோ காப்பி மிஷனை (Panasonic -2 லட்சம் மதிப்புடையது) கஷ்டப்பட்டு நான்கு ஆட்களை வைத்து என் வீட்டு முதல் மாடியிலிருந்து இறக்கி எடுத்து வரும் வண்டியில் ஏற்றி இந்த விசாரணைக் கூடத்திற்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்.

எங்களுக்காய் உண்மையாய் உதவி செய்தவர்களில் இந்த சகோதரன் முதலாமவர் ஆவார். இந்து சமயத்திலிருந்து ஆண்டவர் இயேசுவை ஏற்று கொண்டவர். எங்கள் உடன்பிறவா சகோதரர். பன்னிரெண்டு ஆண்டுகளாக எங்களுடன் மிக நெருங்கிய நண்பராய், குடும்பத்தில் ஒரு உறுப்பினராய் உள்ளவர். சரி எப்படியும் இந்த மிஷனை விடுதலை செய்யப்படும்போது கொடுத்து விடுவார்கள் அல்லது நாமே கேட்டு எடுத்து செல்வோம்" என எண்ணிக் கொண்டேன்.

நாட்கள் சென்று கொண்டேயிருந்தது. என் மனைவியை தொடர்ந்து பாஸ்டர் டென்னிஸ், பாஸ்டர் பென்யமீன் (நைஜீரியா) ஆகியோரின் மனைவிகளுக்கும் பார்வை நேர உரிமை சீட்டு கொடுத்தார்கள். மற்ற எத்தியோப்பியா, எரித்திரியா சபை விசுவாசிகள் 10 பேர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் மனைவியோ, பிள்ளைகளோ, நண்பர்களோ பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது. எங்களுக்கு மிகவும் மனச்சாட்சி வாதித்தது. நமக்கு மட்டும் மனைவி, நண்பர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு யாருமே வராதது மனதிற்கு கஷ்டமாக இருந்தது. "கவலைப்படாதீர்கள் சீக்கிரமாக ஆண்டவர் அதிகாரிகளோடு பேசி உங்களைப் பார்க்க மனைவி, பிள்ளைகள், நண்பர்களை கொண்டு வருவார்" என்று நான் உற்சாகப்படுத்துவேன்.

எத்தியோப்பிய விசுவாசிகளின் மன உறுதி

அதிலும் சகோ. இஸ்கந்தர் மூன்று மாதமாக தன் மனைவி, பிள்ளைகளை பார்க்க அனுமதி கேட்டும் தொடர்ந்து மறுக்கப்பட்டது. மிகவும் வேதனையாயிருந்தது. மேலும் அவர் தினமும் இன்சுலின் ஊசி எடுப்பார். மிகவும் மெலிந்து, முகம் வாடிப்போய் அவர் காணப்பட்டார். அது என்னை வெகுவாக பாதித்தது, "என்னாலேதானே இந்த பாடு சகோதரனே! உங்களுக்காக மிகவும் வருந்துகிறேன்!" என்று சொன்னேன். "அப்படி சொல்லாதீர்கள். இது கர்த்தருடைய சித்தம்". 'இயேசுவே ஆண்டவர்' நான் எதற்கும் கவலைப்படவில்லை, கர்த்தர் என் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வார்" என்பார். அவர் அப்படி கூறியது எனக்கே மிகவும் உற்சாகமாக இருந்தது. அது போல அனைத்து எத்தியோப்பிய சகோதரர்களும் "நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்டபோது என்னை திடப்படுத்தினார்கள். பாஸ்டர் பஹாரு: "இதற்கு நீங்கள் காரணமல்ல. உங்கள் மனைவி கூட நான் கைது செய்யப்படும் முன்பு பார்க்கச் சென்றபோது, என்னிடம் மன்னிப்பு கேட்டார்கள். ஆனால் அப்போதே, உங்கள் மனைவியிடம் அப்படி மன்னிப்பு கேட்காதீர்கள். இது கர்த்தருடைய சித்தமானால் பாடுகளை ஆண்டவருக்காய் ஏற்றுகொள்ளுவேன் என்றுதான் சொல்லியிருந்தேன். ஆகவே இனிமேல் உங்களுக்கு குற்றஉணர்வு வேண்டாம் என்று

சொன்னார்" மேலும் அவர் "என் சபையினருக்கு நான் எப்போதுமே கூறுவேன், சந்தோஷமான நேரத்தில் மட்டுமே கைதட்டி பாடுவதும், குதிப்பதும் போதாது, எந்த நிலையிலும் பாடு, கஷ்டங்கள், ஆபத்திலும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, சந்தோஷமாக இருக்க வேண்டும்! . ஆகவே நான் சந்தோஷமாக இருக்கிறேன். என்னைப் பற்றியும் என்னோடு பிடிபட்ட எங்கள் எத்தியோப்பிய சகோதரர்களைப் பற்றியும் கவலைப்படவேண்டாம்" என்று கூறினார். மத். 5:11–12 இல் ஆண்டவர் சொன்னது நினைவிற்கு வந்தது "சந்தோஷப்பட்டு களிகூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்பது.

நிந்தனைகள்

இதே நேரத்தில் ஜெயிலுக்கு வெளியே பலர் குறிப்பாக விசுவாசிகள், ஊழியர்கள் இவர்களே என்னையும் என் மனைவியையும் பலவாறு நிந்தித்து பேசியிருக்கிறார்கள், என்றறிந்து வேதனைப்பட்டேன். ஒரு நாள் பார்வையாளர் நேரத்தில் என் மனைவி கண்ணீர் மல்க வேதனையோடு "நீங்கள் உள்ளே ஜெயிலில், நம் பிள்ளைகள் இந்தியாவில் நான் வெளியே, இன்னொரு தோழி வீட்டில்! இரண்டிற்கும் இடையில் இப்படி தனிமையை, வேதனையோடு தாங்கி வருகிறேன். ஆனால் இந்த வேளையில் சில விசுவாசிகள் நீங்கள் ஏதோ பாவம் செய்திருக்கிறீர்கள் என்றும் உங்கள் கணவர் ஏதோ பண விஷயத்தில் மோசடி செய்திருக்கிறார் என்றும், இவர்களுக்கென்ன இந்தியாவிற்கு வெளியேறிச் செல்ல ஆயத்தத்தோடு செல்கிறார்கள். பணம், பொருள்களுடன்! மற்ற 13 பேரை காட்டி கொடுத்து விட்டார்கள்!" என்று குற்றசாட்டுகளை கூறுகிறார்கள், என்று என்னிடத்தில் சொன்னாள். எல்லாவற்றிற்கும் மேலாக நான் மிகவும் நேசித்த ஒரு விசுவாசி சொன்னாராம், 'இவர்கள் வீட்டிலிருந்த "பெரிய போட்டோ காப்பி மிஷினை விற்று ஊருக்கு பணம் அனுப்பி விட்டிருக்கிறார்கள்! என்று, மொத்தம் 45 லட்சம் ரூபாய் பணத்தை இந்திய வங்கிக்கு அனுப்பியிருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார். இந்தியா வந்து சேர்ந்த போது ரூ.4.5 லட்சம் தான் எங்கள் வங்கியில் இருந்தது. இவையெல்லாம் என் மனைவி சொல்லி கண்ணீர் விட்டாள். "இந்த நிந்தனைகளையும், உங்கள் பிரிவையும், பிள்ளைகளின் பிரிவையும் இனி என்னால் தாங்க முடியாது, நான் சாகப்போகிறேன்" என்று விரக்தியாக பேசினது என் இதயத்தை யாரோ ஈட்டியால் குத்துவது போலிருந்தது.

நான் என் மனைவியிடம், "இதெல்லாம் நாம் ஏற்கெனவே 11 வருட ஊழிய பாதையில் எதிர் கொண்டவைகள் தான். இப்போதும் இப்படி

பலர் பேசுவது புதிதல்ல! யோபுவின் பாடுகள் நேரத்தில் அவர் நண்பர்கள் அவரைத் தேற்றி ஆற்றி உதவுவதற்கு பதிலாக அவரை நீ ஏதோ பாவம் செய்திருக்க வேண்டும்! கர்த்தருடைய தண்டனை இது! என்று பலவாறு குற்றசாட்டுகளைக் கூறி அவரை சோர்ந்து போகச் செய்ததை வாசித்திருக்கிறாய் அல்லவா? அதே நிலைதான் நமக்கும்! கர்த்தர் நிந்தனைகள் மத்தியில் நம்முடைய விசுவாசமான வார்த்தைகளை நம்மிடம் எதிர்பார்க்கிறார். அவமானம், நிந்தை எது வந்தாலும் "உமக்காக வாழ்வேன் இயேசுவே" என்று நாம் கூறவேண்டுமே தவிர தற்கொலை செய்து சாகப்போகிறேன் என்று நீ சொல்லவோ, நினைக்கவோ கூடாது தைரியமாக இரு! யார் என்ன சொன்னாலும், "ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்!" என்று சொல்லித் தேற்றி அவளை அனுப்பினேன்.

ஜெயில் அறைக்கு திரும்பி வந்தேன். அவளுக்கு ஆறுதல் சொல்லி திடப்படுத்தி அனுப்பினாலும், என் மனதும் இவைகளையெல்லாம் மனைவி மூலம் கேள்விப்பட்டவுடன் வேதனைப்படத்துவங்கியது. சங். 71:19–21 வசனங்களை நினைத்து கொண்டேன். அதைப்போலவே, என் மனைவியை தேற்றுவார் இல்லையே என்று சொல்லிக் கண்ணீர் விட்டேன். ஏற்கெனவே 3½ மாதங்களாக இங்கு போலீஸ்காரர்களால், விசாரணைக்காரர்களால் அவமானப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதில் மற்றவர்கள் அதுவும் நம்மோடு இருந்தவர்களே, நாம் மதித்த விசுவாசிகளே இப்படியெல்லாம் நாகூசாமல் பேசுகிறார்களே ஆண்டவரே என்று வேதனையுடன் கேட்டேன். பெரும்பாலும் 99% என் சொந்த பணத்தினாலே என் வீட்டு ஆலய பொருட்கள் வாங்கி வைத்திருந்தேன். ஆண்டவர் உடனே "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்.....உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத். 5:44) என்ற வசனத்தை நினைவுபடுத்தி தொடர்ந்து ஒரு ஆறுதலான வாக்குத்தத்தத்தையும் கொடுத்து தேற்றினார். அது ஏசாயா 25:8 இல் **"கர்த்தராகிய தேவன் உங்கள் முகங்களிலிருந்து கண்ணீரைத் துடைத்து தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார்"** என்பதே. இந்த வாக்குத்தத்தம் என்னை மிகவும் பெலப்படுத்தி என் கண்ணீரைத் துடைத்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் அனைவருமே சோர்ந்து போயிருந்தோம். மூன்று மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. எங்கள் நிலை பற்றி ஒரு தகவலும் இல்லை. என் மனைவி பாஸ்டர் டென்னிஸ் மனைவி, பாஸ்டர் பென்யமீன் மனைவி ஆகியோர் எங்களைப் பார்க்க வருவார்கள். அவர்கள் மூலமாக மற்ற எத்தியோப்பிய விசுவாசிகளின் குடும்பங்களிலிருந்து செய்திகளைப் பெற்று அவர்களுக்கு தெரிவித்து

உற்சாகப்படுத்துவோம். அந்த செய்திகளை அடுத்த அறை, எதிர்ப்புற அறைகளில் இருக்கிற அவர்களுக்கு நேரடியாக கதவுத் தட்டி சொல்ல முடியாது. உதாரணமாக எங்கள் அறைக் கதவை திறந்து எங்கள் 7 பேரை குளியலறைக்கு விடும்போது, அடுத்த அறை கைதிகளையும் எப்போதாவது போலீஸ் திறந்து விடுவார். அந்த நேரத்தில் குளியலறை 'வாஷ்பேசின்' அருகில் எப்படியாவது அவர்களிடம் 'கிசுகிசு' என்று செய்திகளை சொல்லி விடுவோம். அவர்களிடமிருந்து செய்திகளைப் பெற்று எங்கள் மனைவிகள் மூலம் அவர்கள் குடும்பங்களுக்குத் தெரிவிப்போம்.

5 எத்தியோப்பியரின் இரட்சிப்பின் அனுபவம்

இந்த நிலையில் என் ரூமில் இருந்த எத்தியோப்பிய சகோ. அராயா கிரீக் ஆர்த்தோடாக்ஸ் திருச்சபையைச் சேர்ந்தவர் (GREEK ORTHODOX CHURCH) இரட்சிப்புக்குள் அவர் வரவில்லை. சபை ஆராதனை ஜெபக்கூட்டத்திற்கு சென்றது கிடையாது. அவர் மகனும் மகளும் மட்டுமே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் (Born-Again Christians). நாங்கள் நால்வரும் (சகோ. மிஸ்பின், சகோ. டென்னிஸ், சகோ. அராயா, நான்) ஜெபிக்கக் கூடினபோது **"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்"** என்று சொல்லி, "நாம் ஆண்டவரிடம் இரக்கம், விடுதலை கேட்டு ஜெபிக்கும் முன்பு நம் கடந்தகால பாவங்களை ஒவ்வொன்றாகவும் அறிக்கையிட வேண்டும். அவர் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும்" என்றும் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டியதின் அவசியத்தையும் சொன்னோம். பிறகு ஜெபம் செய்து முடித்தோம். அதன் பிறகு சகோ. அராயா தன் கடந்தகால பாவ பழக்கங்களை தேவனுக்கும் மற்றவர்களுக்கும் விரோதமாக செய்த பாவங்களையும் என்னிடமும் சகோ. டென்னிஸ் இடமும் கூற ஆரம்பித்தார். "கைதான அன்றுவரை பல வருடங்களாக சிகரெட் பிடிக்கும் பழக்கமுடையவனாயிருந்தேன். சிறைக்கு வந்த பிறகு உங்கள் இரட்சிப்பின் சாட்சியைப் பார்த்து நிறுத்திவிட்டேன்" என்றார். இனி பழைய பாவ வாழ்வை விட்டு விடுவேன். ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகின்றேன். என்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்" என்று "மறுபடியும் பிறந்த அனுபவத்தைப்" பெற்றார். அல்லேலூயா! ஒவ்வொருவருக்கும் பாடுகளை கர்த்தர் அனுமதித்தது நன்மைக்குத் தான்! இன்று இரட்சிப்பையும், நித்திய ஜீவனுக்கு உரிமையையும் அவர் பெற்றுவிட்டதை அவருக்கு விளக்கி சொன்னோம்! அதன் பிறகு அவருக்கு மிக்க சந்தோஷம். பரலோகத்திலும், ஒரு பாவி மனந்திரும்பினால் மிகவும் சந்தோஷம் உண்டாகும் அல்லவா! பிறகு இதுபோல சாதாரண கிறிஸ்தவனாகவும்

மறைமுக பாவங்களையும் செய்து ஆண்டவரை ஏற்று இரட்சிக்கப்படாத எத்தியோப்பிய சகோதரர்கள் அந்த சிறையின் பாடுகள் மத்தியில் ஆண்டவராகிய இயேசுவிற்கு தங்கள் இருதயத்தை, வாழ்க்கையை ஒப்புக்கொடுத் தார்கள். எத்தியோப்பியர், எரித்திரியர் 11 பேரில் 5 பேர் இப்படியாக இந்த சிறைவாச நாட்களில் மனம்திரும்பி ஆண்டவரை ஏற்றுக் கொண்டு இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அல்லேலூயா! மற்றும் விசுவாசிகள் மறுபடியும் தங்களை கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுக்கவும், தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்த்து, பல பாடங்களைக் கற்றுக்கொண்டு இன்னும் ஆண்டவரிடம் நெருங்கி ஜீவிக்கவும் இந்த சிறையின் பாடுகள், சோதனைகள் வழி வகுத்தன. பரி. பேதுரு கூறுகிறார் **"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலை நிறுத்துவாராக!** (1 பேதுரு 5:10) என்று கூறுகிறார். இப்படியாக எங்களை நாங்களே ஆராய்ந்து சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்திக் கொள்ள சிறைவாசம் இன்னொரு வகையில் உதவியாக இருந்தது.

ஆம் ரோமர் 8:28 இல் "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்பது போல கர்த்தர், சாத்தான் எங்களுக்கு கொண்டு வந்த சோதனைகள், ஏமாற்றங்கள், சோர்வுகள், போராட்டங்கள், வேதனைகள் யாவற்றையும் நன்மைகளாக மாறும்படி செய்தார். தொடர்ந்து உபவாச ஜெபங்களை ஒவ்வொரு வாரமும் யாவரும் மாற்றி மாற்றி செய்வோம். ஆகவே விசுவாசத்தில் உறுதிபடவும், வளரவும், ஆண்டவர் இந்தப் பாடுகளை அனுமதித்தார் என்றே சொல்ல வேண்டும்.

இப்படி எங்கள் கவலைகள், பாரங்கள், துக்கங்களை எல்லாம் ஆண்டவர் மேல் வைத்துவிட்டு நம் விடுதலையை இனி அவர் பார்த்துக் கொள்ளட்டும் என்று தீர்மானித்தோம். **"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார்"** (சங். 55:22). என்றபடி விசுவாசத்தில் உறுதிப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு நாள் 12 மணிக்கு திடீரென்று சகோதரர் 'அராயா' தனக்கு இடது தோளிலிருந்து வலி ஆரம்பித்து அந்த பக்கம் முழுவதும் பரவுகிறது. நெஞ்சு வலிக்கிறது என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விட்டார். அதற்கு 2 மணி நேரம் முன்பு தான் அவர் தன் மனைவி, பிள்ளைகளை பார்க்க அனுமதி தர வேண்டும் என்று விசாரணை அதிகாரியை கேட்டிருந்தார். அவர் மனைவியும் மகனும் அதற்கு சில

நாட்கள் முன்பு தான் அவரைக் காண பார்வையாளர்களை அனுமதிக்கும் பிரிவிலிருக்கும் குமாஸ்தாவை (Clerk) எவ்வளவோ கெஞ்சி கேட்டும், அவர் மேலதிகாரி இன்னும் உங்கள் கணவரைப் பார்க்க எங்களுக்கு உத்தரவு கொடுக்கவில்லை'' என்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டிருக்கின்றார்.

சகோ. அராயாவுக்கு மாரடைப்பு

இப்படி ஒரு மாதமாக அவர் மட்டும் அல்ல, மற்ற எத்தியோப்பிய விசுவாசிகளின் குடும்பங்கள் கூட அவர்களைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே இப்படி மனைவி பிள்ளைகளைப் பார்க்க முடியவில்லையே! மறுக்கிறார்களே! என்ற ஏக்கம், கவலை வேதனை சகோ. அராயாவை மிகவும் பாதித்திருந்ததால் ஒருநாள் இந்த இருதய வலி ஏற்பட்டது. முகமெல்லாம் வியர்த்தது. நாடித்துடிப்பு குறைந்தது. நானும், சகோ. டென்னிசும் அவர் நெஞ்சு மீது கைவைத்து ''இயேசுவின் நாமத்தில் இருதய வலியிலிருந்து விடுதலை பெற, இயேசுவின் இரத்தம் ஜெயம்'' என்று சொல்லி விசுவாசத்துடன் உரத்த குரலில் முஸ்லீம் முத்தவா மற்றும் மற்ற தேசத்து கைதிகள் முன்னிலையில் ஜெபித்தோம். அந்த முத்தவா கூட ஓடி வந்து சகோ. அராயா தலை மீது கை வைத்து, அரபு மொழியில் அவர்கள் கடவுளிடம் ஜெபித்தார். ஆண்டவர் நம்மெல்லாரையும் அவருடைய சாயலில் படைத்தார். இந்துவோ, கிறிஸ்தவனோ, முஸ்லீமோ – இந்த மாதிரி நேரங்களிலும் பொதுவான வாழ்க்கையிலும் ஒருவரை ஒருவர் நேசிக்க முந்திக் கொள்ள வேண்டும். அந்தக் காட்சி ஒருபுறம், என் இருதயத்தை உடைத்து வேதனையை, பயத்தை, கண்ணீரை வரவழைத்தது. மறுபுறம் எல்லாருமே (முஸ்லீம், கிறிஸ்தவர்களாக) சேர்ந்து ஜெபித்து மனதிலே ஒரு ஆனந்தக் கற்பனையையும் உண்டு பண்ணியது. ஆம் அந்த முஸ்லிம்கள் கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்தவர்களாக மாறி அவருடைய நாமத்தில் ஜெபிக்கும் கிறிஸ்தவர்களாக மாறினால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'' என்றும் எண்ணினேன். ஆனால் இன்றோ மனிதர்கள் ஒருவரையொருவர் வெட்டி கொலை செய்து பதக்கலவரம், கொடுமை, சித்திரவதை செய்கிறவர்களாக காணப்படுகின்றனர். எல்லா நாடுகளிலும் குறிப்பாக நம் வட இந்தியாவிலும் கூட இப்படிப்பட்ட மக்கள் கூட்டம் உண்டு.

இப்படி நாங்கள் ஜெபித்த பின்பு ஓரளவிற்கு அவர் முன்பிருந்த நிலைக்குத் திரும்பினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். எதும் உயிருக்கு ஆபத்து வந்து விடக்கூடாது? அப்படி துக்கமான முடிவு நடந்துவிட்டால் வாழ்நாளெல்லாம் நான் தான் காரணம் என்று

எனக்கும் ஒருவிதமான குற்ற உணர்வு இருக்கும். அவருடைய மனைவி, பிள்ளைகளுக்கும் என் மீது மாறாத கோபம் இருக்குமே" என்று "ஆண்டவரிடம் முழு சுகத்தையும் அவருக்கும் தாரும். ஆபத்து நாளில் துணையானவர் நீர் அல்லவா என்று" கதறினேன். ஆண்டவர் மறுபடியும் அவருக்கு சாதாரண இருதய துடிப்பையும், கொஞ்சம் முகத் தெளிவையும் கொடுத்தார். அதே சமயம் எதற்கும் முழுவதுமாக பரிசோதனை செய்து விட வேண்டும் என்று சொல்லி போலீஸ்காரரிடம் உடனே பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல செய்தோம் இப்படிப்பட்ட அவசர நிலை ஏற்பட்டால் மாத்திரம் தான் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்புவார்கள். மூன்று மணிநேரம் கழித்து சகோதரன் கின்னத் அராயா மறுபடியும் அறைக்கு வந்தார். டாக்டர்கள் பரிசோதனைச் செய்து 'லேசான இருதய மாரடைப்பு' பயப்பட ஒன்றும் இல்லை என்று சொல்லி மாத்திரைகளை எழுதிக் கொடுத்து அனுப்பி விட்டிருந்தார்கள். கர்த்தாவே ஸ்தோத்திரம்! பெரிய ஒரு சோதனை, ஆபத்திலே அவரையும், எங்களையும் காப்பாற்றினீரே! என்று ஜெபித்தேன். அதன் பிறகு சில நாட்கள் கழித்து இந்த அவருடைய இருதய மாரடைப்பு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி மேற்பார்வையாளர் வந்த சிறை அதிகாரியிடம் அவருடைய மனைவி, பிள்ளைகளைப் பார்க்க அனுமதி கேட்டோம். அவரும் சரி என்று ஒத்துக் கொண்டார். அடுத்த நாள் அந்த அதிகாரியே சகோ. அராயா வீட்டிற்கு போன் செய்து அவர் மனைவி, பிள்ளைகளை பார்க்க வரும்படி அனுமதி கொடுத்தார். **"அந்த ஆபத்தும் அவருக்கு நன்மையாகவே முடிந்தது"**. அடுத்த நாள் தன் மனைவி, பிள்ளைகளை சந்தித்து ஆனந்தமடைந்தார். அல்லேலூயா! அதன் பிறகு கர்த்தர் மேல் நம்பிக்கை, விசுவாசம் அவருக்குக் கூடியது.

இவ்வாறு எங்கள் இடைவிடாத ஜெபங்களினால் அவருக்கு மட்டுமல்ல தொடர்ந்து சகோ. ஸ்கந்தர், சகோ. பஹாரு, சகோ. கிப்ரோன் இவர்களுடைய மனைவியும், பிள்ளைகளும் வந்து பார்க்க கர்த்தர் வழி செய்தார். சகோ. ஸ்கந்தர் ஏறக்குறைய 3½ மாதங்கள் கழித்து தான் மனைவி, பிள்ளைகளைப் பார்க்க நேர்ந்தது. எங்களுக்கு சந்தோஷமாக இருந்தது. இந்த நாட்களில் இந்த எத்தியோப்பிய சகோதரர்கள் தங்கள் மனைவிகளையும் நண்பர்களையும் பார்க்க ஆரம்பித்ததால், அவர்கள் மூலமும், என் மனைவி மூலமும் அநேக வெளியுலகச் செய்திகள் எங்களுக்கு கிடைத்தன. எங்களுடைய தூதரக அதிகாரிகள் இந்திய மிஷனரிக்கு போன் செய்து எங்களைக் குறித்து அடிக்கடி கேட்பதையும், அமெரிக்க உள்துறை செனேட்டர் (U.S. State Dept Senator) மற்றும் ஆஸ்திரேலியா, ஜெர்மனி, இங்கிலாந்து அரசுகள் மற்றும் (I.C.C, V.O.H), Campus direct Tortured for Christ போன்ற கிறிஸ்தவ இயக்கங்கள் எங்களை உடனே விடுதலை செய்ய

பேக்ஸ், ஈ மெயில், கடிதம் அனுப்பி சவுதி அரசை வற்புறுத்தி வருவதைச் சொல்லுவார்கள். இன்டர்நெட் மூலமும், யு.எஸ், ஆஸ்திரேலியா முக்கிய செய்தித்தாள்களிலும் CBN,TBN தொலைக்காட்சிகளிலும் கிறிஸ்தவ தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள்" என்று தலைப்பிட்டு எங்களின் கைது, 'காவல்' இவற்றைப் பற்றி செய்திகள் வெளியிட்டிருப்பதையும், எங்களுக்காக K.S.A. சபைகளும், உலக கிறிஸ்தவ ஜெபக் குழுக்களிலும், இந்திய ஆலயங் களிலும் விசேஷ ஜெபங்களை ஏறெடுத்துக் கொண்டிருப்பதையும் அறிந்து பெரிதும் உற்சாகமும் பெலனும், மனதிடனும், ஆறுதலும், மகிழ்ச்சியும் அடைந்தோம். சவுதி அரேபியா கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்யும் இக்காரியங்களை உலக மக்கள் அறிந்து கொள்ள செய்ததால், சவுதியின் உள்துறை அமைச்சகத்திற்கு பயம் ஒருபுறமும், எங்கள் மீது எரிச்சல், கோபம் மறுபுறமும் தோன்றி இருக்க வேண்டும். ஒருநாள் என் மனைவியும், என் நண்பரும் என்னைப் பார்க்க, பார்வையாளர் நாளில் அன்று வந்தபோது என் விசாரணையாளர் அவர்களிடம் "யார் இன்டர்நெட்டில் இங்கு நடப்பதையெல்லாம் குறித்து செய்தி அனுப்புவது? அனுப்ப வேண்டாம் என்று சொல்! நாங்கள் சீக்கிரம் ஒரு வாரத்தில் அனுப்பிவிடுவோம். ஆனால் இப்படி தொடர்ந்து செய்து வந்தால் நீண்ட நாட்கள் விடுதலைக்கு தாமத மாகும்" என்று எச்சரிப்பு கலந்த தொனியில் சொல்லியிருக்கிறார்.

ஒரு அமெரிக்க செனேட்டர் எங்களை விடுதலை செய்ய கோரி K.S.A - உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பின கடிதத்திற்கு, இவர்கள் "எங்கள் நாட்டு முஸ்லீம்களை மதம் மாற்றுகிறதை ஆராய்ந்து கண்டுபிடிக்கவே இன்னும் விசாரணை நடத்தி வருகிறோம். வெகு விரைவில் விடுதலை செய்து விடுவோம்" என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள். வெகு விரைவில் அனுப்பி விடுவார்களாம் என்ற இவர்களுடைய வாக்குறுதி எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்படியே 6 மாதங்கள் ஆகிவிட்டது. ஒவ்வொரு முறையும் ஜெயில் அதிகாரி, உதவி அதிகாரி கண்காணிக்க வருவார்கள். அப்போது நாங்கள் அவர்களை எங்கள் விடுதலை என்ன ஆனது? என்ன நிலையில் இருக்கிறது? என்று கேட்டால் "ஒரிரு வாரங்கள் அல்லது 10 நாட்களில் விடுதலை என்பார்கள். ஆனால் இப்படி அவர்கள் சொன்னது நடக்கவே நடக்காது. எப்போதும் பொய்தான், அவர்கள் வாயில். அதனால் எங்களுக்கு பெருத்த ஏமாற்றம், சோர்வு வரும்.

எதிர்பார்ப்பும், ஏமாற்றமும்!

ஒருநாள் சகோ.பஹாரு, சகோ. கிப்ரோன், "நாம் எல்லோரும் நாளைக்கு உபவாசம் இருப்போம் என்று சொன்னதற்கு, "நாளை

இந்நேரம் நாம் அவரவர் வீட்டில் இருக்கப் போகிறோம், ஸ்தோத்திர கூட்டம் அவரவர் வீட்டில் கொண்டாடப் போகிறோம் என்றார்கள். எப்படி? சொல்லுகிறீர்கள் என்று வியப்புடன் கேட்டதற்கு அந்த சகோதரர் சொன்னார் எங்கள் பாஸ்(boss - Supervisor) உள்துறை அமைச்சகத்திலுள்ள பெரிய அதிகாரிக்கு நண்பர். அவர் என் மனைவியிடம்" ஆர்டர் மேலிடத்திலிருந்து வந்து விட்டது. நாளை வியாழன் அல்லது சனிக்கிழமை விட்டு விடுவார்கள் என்று சொன்னார்களாம் என்று சொன்னார். எங்களுக்கு மறுபடியும் புதிய உற்சாகம், சந்தோஷம், நம்பிக்கை ஏற்பட்டது. ஏனெனில் சகோ. பஹாருவுக்கு உதவுகிற பெரிய பணக்காரர், செல்வாக்கு உடையவர். நாட்டின் அரச குமாரனுக்கு (PRINCE) நெருக்கமானவர். ஆகவே மிகவும் நம்பி விடுதலையாவோம் என்று குதூகலம் அடைந்தோம். ஆனால் மறுபடியும் ஏமாற்றம், சோர்வு, வேதனை கூடும் என்று முஸ்லீம் சகோதரர்கள் சொன்னார்கள், "வழக்கமாக ஒவ்வொரு வருடமும் ரம்ஜான் மாதம் பலரை விடுதலை செய்வார்கள். ராஜாவின் கருணையில் விடப்படுவார்கள். அப்போது நீங்களும் கூட சேர்த்து விடுவிக்கப்படுவீர்கள்" என்று உற்சாகப்படுத்துவார்கள். "ராஜாவை விட எங்கள் இராஜாதி ராஜா இயேசு எங்களை விடுவிக்கட்டும்" என்று நாங்கள் பேசிக் கொள்வோம். அதே சமயம் சவுதி ராஜாவுக்காகவும் நாங்கள் ஜெபிப்பதுண்டு. ஏனெனில் "இராஜாக்களுடைய இருதயம் கர்த்தருடைய கரத்தில் நீர்க்கால்கள் போல் உள்ளது. அதை அவர் தமது சித்தத்தின்படி திருப்புவார்" (நீதி. 21:1) என்று வேதம் கூறுவதால் – அந்த வசனத்தை ஆதாரமாக வைத்து ஆண்டவரிடம் ஜெபிப்பதுண்டு, "ஆண்டவரே! எத்தனையோ அந்நிய ஜாதி ராஜாக்களை – நேபுகாத்நேச்சாரைக் கூட தானியேல் மீது இரக்கம் கொள்ள செய்தீர், அர்தசஷ்டா ராஜா மூலம் – நெகேமியாவிற்கு உதவி செய்து எருசலேம் நகர ஆலய அலங்கத்தைக் கட்ட உபயோகப் படுத்தினீர். எஸ்றாவிற்கும், அந்நியராஜா – எருசலேம் ஆலயத்தை கட்ட அனுமதி தந்து அனுப்பினீர். இப்படி பல புறஜாதி இராஜாக்களின் இருதயங்களை திருப்பின நீர் எங்களுக்கும் உதவி செய்யவும், விடுதலை செய்யவும் இந்த இராஜாவின் இருதயத்தையும் திருப்பும் என்று!"

இந்த நேரத்தில் சில நல்ல காரியம் அந்த அறையில் நடந்தது. இந்த 3வது சிறையில் இருந்த போது 2வது சிறையின் அறைகள் (Carpet, TV, AC) எல்லாம் புதுப்பிக்கப்பட்டு விட்டன. கர்த்தர் தம் பிள்ளைகளாகிய எங்களுக்கு வசதி குறைவுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே ஒழுங்கு பண்ணினது போல இருந்தது. இங்கு இருக்கும் சிறை, சாப்பாடு, சாப்பிட்டு மிகவும் 'சலிப்பு' ஏற்பட்டு விட்டதாலும், அங்கு எல்லோராலும் விரும்பப்படும் பிசா(PIZZA), 'அல்–பெய்க், சிக்கன் ரோஸ்ட்' வாங்க ஆபிஸரிடம் அனுமதி பெற்று என் மனைவி, சகோ.

அருண் கொண்டு வந்தனர், நீண்ட நாட்களுக்கு பிறகு இவற்றை எங்கள் அறையிலுள்ள 7 பேரும் சாப்பிட்டோம். ஆனால் வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வர அனுமதிப்பதில்லை.

மூன்றாவது சிறையில் மிகப்பெரிய உபத்திரவம்

சிறைவாசம் ஆறாவது மாதத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. இந்த நாட்களில், மூன்றாவது சிறையில் இருக்கையில் 2வது ஜெயில் பகுதியில் துளையிடும் சத்தம் பகல் முழுவதும் எங்கள் தலையில் துளை போடுவது போல இருக்கும். 'பெயிண்ட்'(PAINT) வாசனை எங்கள் ஜன்னல் வழியாக எங்கள் அறைக்கு வரும் மூச்சுத் திணறும். மூடிக்கிடக்கும் ஜெயில் கதவுகளைத் திறக்கும்படி போலீசாரிடம் கேட்போம். ஓரிரு போலீசார் மட்டுமே, இரங்கி பாதி கதவை கொஞ்சம் திறந்து பெயிண்ட் வாசனை வெளியே செல்லவும், வெளிக்காற்று உள்ளே வரவும் திறந்து வைப்பார்கள். பிறகு ரம்ஜான் மாதம் என்கிற அவர்களுடைய புனித மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது.

மறுபடியும் சிறை மாற்றம்

இந்த வேளையில் மறுபடியும் 2 வது பகுதியுள்ள சிறை அறைகளுக்கே மாற்றினார்கள். அங்கு எங்களுடைய படுக்கை, தலையணை, பழைய துணிகள் யாவற்றையும் தூக்கிக் கொண்டு சென்றோம். இப்போது அந்த 2வது சிறை நன்றாக புதுப்பிக்கப் பட்டிருந்தது. எல்லா அறைகளுக்கும் தொலைகாட்சி, தரைவிரிப்பு, செய்தித்தாள் படிக்க வசதி செய்யப்பட்டு இருந்தது. நமக்கு உணவு பண்டங்கள், பற்பசை, சோப்பு, பிரஷ் வேண்டுமென்றால் அங்கு வரும் 'மகாதி' எனும் உதவியாளர் மூலம் வாங்கி வரச் சொல்லலாம். சவூதிகள் அதிகமாக இங்கு கைதிகளாக இருந்ததாலும் இந்த வசதிகள் இருந்தன. எனினும் எழுதவோ, கடிதங்களை மனைவி அல்லது நண்பர்கள் மூலம் பெற்று உள்ளே கொண்டு செல்ல முடியாது. எல்லா அறைகளிலும் முஸ்லீம்கள் படிக்க அவர்களுடைய வேதமாகிய 'குரான்' இருந்தது. எங்களுக்கோ பரி. வேதாகமம் படிக்க அனுமதி கிடையாது. எங்கள் 14 பேரையும் 5 அறைகளில் மற்ற முஸ்லீம்களோடு அடைந்தார்கள். அவர்கள் 5 முறை தொழுகைகளை அனுசரிப்பார்கள். எங்களுக்கோ அங்கேயே ஆராதிக்க, அதிகார பூர்வமான அனுமதி கிடையாது. ஆறு மாதங்கள் ஆகப் போகிறது. வேதாகமத்தை படிக்க முடியாமலும், வாய் திறந்து துதித்து, ஆடிப்பாட முடியாத சூழ்நிலை! சபையில் விசுவாசிகளோடு சேர்ந்து ஆராதிக்க ஏக்கமும் ஆவலும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. அந்த சுதந்திரமான ஆராதிக்கும், ஜெபிக்கும் வேதம் வாசிக்கும் நாள் என்று

வரும் ஆண்டவரே? என்று ஆண்டவரிடம் கண்ணீருடன் கேட்பேன்! ஆம் “சேனைகளின் கர்த்தாவே! உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்! என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங் களின் மேல் வாஞ்சையும் தவனமாயிருக்கிறது” (சங். 84:1,2) என்றும் “கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம்! வாருங்கள்! என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் (சங். 122:1) என்றும் தாவீது கூறிய வசனங்கள் என் நினைவிற்கு வந்தது. ஜீவனுள்ள தேவனை துதிக்கவும், ஆராதிக்கவும், தேவ சமூகத்தில் மகிழவும் ஆர்வம், துடிப்பு என்னுள்ளத்தில் எழுந்தது. ஆனாலும் காலையிலும், மாலையிலும் முழங்காற்படியிட்டு ஜெபிக்கவும், திருவிருந்து அனுசரிக்கவும் நாங்கள் தவறுவதில்லை. கர்த்தர் எங்களை பெலப்படுத்தி கொண்டே இருந்தார்.

உடன் சகோதரரின் பாடுகள்

இப்படி பெலப்பட்டு வரும்போதுதான் சத்துரு மறுபடியும் சோதனைகளைக் கொண்டு வந்தான். சகோ. டென்னிஸ் ஒருநாள் தன் மனைவியை பார்வையாளரின் நேரத்தில் பார்த்துவிட்டு வந்தபோது சொன்னார், “என் வீட்டு பங்காளிகள் குடும்பம், வீட்டை காலி செய்து விட்டார்கள். பள்ளிக்குப் போகிற இரண்டு பிள்ளைகள் (10 & 12 வயது) பள்ளிக்கு அனுப்புவதில் போக்குவரத்து பிரச்சனை. அவருடைய மனைவி ஒரு தாதி வேலைக்கு போக, வர போக்குவரத்து ஊர்தியின் சிக்கல். இந்த நிலையில் அவருடைய 3வது சிறுகுழந்தை 3 மாதங்கள் ஆகின்றது. அதை கவனிக்கும் வேலைக்காரியும் போய்விட்டாளாம். ஒரு சம்பளத்தில் குடும்பத்தின் இத்தனை செலவுகளையும் சமாளிக்க வேண்டும். என்ன செய்வது? என்று மனைவி அழுகிறாள்” என்று எங்களோடு தம் கவலையை பகிர்ந்து கொண்டார். அதே போல ஒவ்வொருவருக்கும் குடும்பப் பிரச்சனைகள். பாஸ்டர் பென்யமீன் (நைஜீரியா) ஒரு சம்பளம் வாங்குபவர். அவருக்கு இரண்டு குழந்தைகள். அவர் கைது செய்யப்படும்போது அவருடைய இரண்டாவது குழந்தைக்கு இரண்டு மாதம். வீட்டு வாடகை கொடுக்க வேண்டும், சிறு குழந்தைக்கு வேண்டிய உணவு செலவுகளை சந்திக்க வேண்டும். எத்தியோப்பிய சகோதரர்கள், சகோ. அராயா, சகோ. இஸ்கந்தர், சகோ. பெபர்டு, சகோ. யூசுப், சகோ. பஹாரு, சகோ. கிப்ரோன் இவர்களுக்கெல்லாம் மனைவி, பிள்ளைகள் உண்டு. சகோ. கிப்ரோன் கைது செய்யப்படும்போது அவரது மனைவி, 6 மாத கர்ப்பிணி! இந்த நேரத்தில் சகோ. கிப்ரோன் மனைவியோடு இருந்திருக்க வேண்டும். சகோ. பஹாருவின் மனைவியை அவளுடைய வேலையிலிருந்து (Receptionist in a private Hospital) என்ன காரணத்தினாலோ அவளின் அதிகாரி வேலையிலிருந்து நீக்கி விட்டிருக்கிறார். அவர்களும் 3-மாத

கர்ப்பம் இந்த இரண்டு சகோதரிகளும் கணவன் இல்லாமல் அவர்களுடைய வீட்டில் தனிமையில் இருக்க முடியாது. அந்த நாட்டு சட்டம் அது. ஆகவே அவர்களுடைய(எத்தியோப்பிய) சபை விசுவாசிகளுடைய குடும்பங்களோடு மாறி, மாறி தங்கி சமாளித்துக் கொண்டிருந்திருக்கிறார். எத்தனை நாட்கள், மாதங்கள் இப்படி சமாளிக்க முடியும்? அவர்களும் இளையவர்கள் (25 வயது). இந்த சூழ்நிலையில் அவர்கள் மற்றவர்களோடு இருக்கும்போது மாம்சிக தாக்குதல் சாத்தான் உருவாக்கலாம் அல்லவா? என்று பாஸ்டர். பஹாரு சில வேளைகளில் கவலையோடு சொல்லி ஜெபிக்க சொல்வார். சகோ. அராயாவுக்கு 3 பிள்ளைகள், சகோ. இஸ்கந்தர்க்கு 5 பிள்ளைகள்! வீட்டு வாடகை, பிள்ளைகளின் படிப்பு செலவு, மற்ற செலவுகள் சந்திக்கப்பட வேண்டும். 6 மாதங்கள் ஆகிவிட்டது. மற்ற சகோதரர்களுக்கும் குடும்ப பொருளாதார பிரச்சனை. கஷ்டம், திருமணமாகாதவர்கட்கு அவர்களுடைய வேலை, வருமானம் போனது. நாட்டிற்கு பெற்றோருக்கு அனுப்ப வேண்டிய பொருளாதார உதவி தடைப்பட்டு விட்டது.

பணம், பொருள் கஷ்டம்

எனக்கும், என்மனைவி சுசிலாவுக்கும் ஏற்பட்ட பொருளா தார நஷ்டம் எல்லோரையும் விட அதிகம் என்பது நிறைய பேருக்கு தெரியாது. பலர் நினைத்துக் கொண்டிருந்ததும், சிலர் எரிச்சலோடு கூறியது என்னவெனில், "இவர்களுக்கென்ன? இரண்டு பேர் சம்பளம் வாங்கினார்கள், பணி முடிப்பு தொகை(GRADUITY) பணம் எல்லாம் கிடைத்து, ஊருக்குப் போகிறார்கள்!" என்பதாகும். ஆனால் எனக்கு மட்டுமே கைது செய்யப்படும் முன்பு, எனக்குத் தர வேண்டிய பணி முடிப்பு தொகை பணம் கிடைத்தது. என் மனைவிக்கு நான் கைதான பிறகு 3 மாதங்கள் கழித்து அந்தப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், கிடைக்க வேண்டிய சரியான தொகையில் 3 லட்சம் எடுத்துக் கொண்டு ரு. 1 லட்சம் தொகை மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். காரணம் என்ன? என்று கேட்டதற்கு, " உன் கணவனுக்கு அதிகமாக பணம் கொடுத்து விட்டிருக்கிறோம். அதனால் உன்னுடைய பணத்தி லிருந்து எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றனர். மனைவி அவர் களிடம் வாதாட முடியவில்லை. நானும் ஜெயிலில் உள்ளே. அவற்றை யெல்லாம் சரி செய்ய குறைந்தது 6 மாதங்கள் ஆகலாம். உள்துறை அமைச்சக தலைமையகம், ரியாத் தலைமையகம் ஆகிய இடங்களுக்குப் பேப்பர் போய் வர நாட்கள் ஆகிவிடும். ஆகவே நாங்கள் அந்த இழந்த பணத்தை பெறுவதில் அதிகமான கவனத்தைச் செலுத்தாமல் "ஜீவனோடு உடனே விடுதலை செய்து ஆண்டவருக்கு சாட்சியாக விளங்க செய்தால் போதும்" என்று விட்டுவிட்டோம். நம் நாட்டு தூதரகத்துக்கு கடிதம் எழுதி என் மனைவி கொடுத்தும் பயனில்லை.

மேலும் தாய் நாட்டிற்கு முற்றிலும் திரும்பும்போது எங்கள் வீட்டிலுள்ள பொருட்கள், புதிதாக வாங்கின சில பொருட்கள் கார்கோவில் அனுப்ப நான் கைதான பிறகு அநேக விசுவாசிகள், சகோதரர்கள் பல விதங்களில் உதவி செய்திருக்கிறார்கள். அவைகளை நான் விடுதலையாகும் வரை வீட்டிலேயே வைக்க பயமாக இருந்தது. காரணம் உள்துறை அமைச்சக உளவாளிகள் மறுபடியும் சோதனை என்ற பெயரில் மனைவி தனியாக இருக்கையில் சென்று முக்கியமான ஆதாரம் வேண்டும் என்று ஏதாவது எடுத்து வந்து பிரச்சனையை, சிறைவாசத்தை நீடித்து விடலாம் என்பதே! ஆம் அப்படிதான் ஒரு எத்தியோப்பிய (யூசுப்) சகோதரன் வீட்டில் கைதான பிறகு அவர் வீட்டிற்கு சென்று அவர் மனைவி தனியாக இருக்கும்போது தாங்கள் இரகசிய போலீசார் என்று சொல்லி, இரண்டு சவுதி போலீஸ் சிவில் உடையில் போய் அவர்கள் வீட்டிலிருந்த தொலைபேசி, வீடியோ ரெக்கார்டர், வீடியோ கேசட்கள் ஆகியவற்றை எடுத்து(திருடி) வந்திருக்கிறார்கள். நீண்ட நாட்கள் சகோ. யூசுப்பைப் பார்க்க அவர் மனைவியை அனுமதிக்காததால் பல மாதங்களாக அவருக்கு இந்த விஷயம் தெரியாது. இந்தப் பிரச்சனை என் மனைவிக்கும் ஏற்படக்கூடாது என்று என் மனைவியிடம், 'கார்கோவில்' உடனே அனுப்பி விடச் சொன்னேன். "எப்படியும் ஒரிரு வாரங்களில் விடுதலையாகி விடுவோம். ஊருக்கு சென்று கடைசியாக நாட்டை விட்டுச் செல்வதாகச் சொல்லி சலுகைகள் பெற்று சாமான்களை எடுத்து விடலாம் என்றேன். அவளும் என் நண்பரும் உடனே கார்கோவில் அனுப்பியும் விட்டார்கள்! ஆனால் அனுப்பிய பிறகு எங்கள் விடுதலை 4 மாதங்கள் தாமதம் ஆனதால் 4 மாதங்கள் பத்திரப்படுத்தி வைத்திருந்ததற்கான கட்டணமும் சுங்க வரியும் சேர்த்து ரூ.6 லட்சம் என் மனைவியிடம் கேட்டு இருக்கிறார்கள். இது என் மனைவி சென்னை சென்றபோது (ஜனவரி 18,2001). சுங்க அதிகாரிகள் அவளிடம் கேட்டிருக்கிறார்கள். மனந்திறந்து சொல்ல வேண்டுமானால் வங்கி கணக்கில் அந்த அளவு பணம் இல்லை. கொண்டு வந்த பணமும் அவ்வளவு தொகை இல்லை. 'கார்கோவில்'(CARGO) உள்ள எங்கள் பொருட்களின் மதிப்பும் அவ்வளவு இல்லை. மிகவும் அதிர்ச்சி என் மனைவிக்கும், எனக்கும்! 'புரைமான்' நாடுகடத்தப்படுவோரின் ஜெயிலில் நான் இருக்கும்போது போன் செய்து அவளிடம் ஒருநாள் பேசினபோது இந்த செய்தியை நான் கேள்விபட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். ஆனால் தொடர்ந்து ஆண்டவரிடம் தளராமல் ஜெபித்தோம். "எப்படியாவது யார் மூலமாவது பேசி உதவி செய்யும் ஆண்டவரே!" என்று. இந்த ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் அநேக தேவப் பிள்ளைகள் மூலமும் குறிப்பாக தேவ ஊழியர் ஜான் சாலமன் மூலமும் இந்திய தூதரகப் பரிந்துரை கடிதம் மூலமும் அந்த 6 லட்சம்

ரூபாய் கட்ட வேண்டியதிலிருந்து குறைந்து ரூ. 50,000/– கட்டும்படி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! நாங்கள் இருவரும் சேர்ந்து (கைது செய்யப்படாமல்) இரண்டு மாதத்திற்குள் வந்து இருந்தால் இந்த அளவிற்குக் கூட சுங்க வரிப்பணம் கட்டியிருக்க மாட்டோம். எவ்வளவோ பணம் நஷ்டம் ஆனதை தடுத்திருக்கலாம். இதை விளக்கக் காரணம் என்னவெனில் அநேகர் நினைத்தற்கு மாறாக, மற்றவர்களைக் காட்டிலும் அதிக பண நஷ்டம், கஷ்டம் எங்களுக்கு இருந்தது. இப்படி நாங்கள் யாவருமே கடுமையான பொருளாதாதார நெருக்கடிக்கு வந்து விட்ட நிலை! கர்த்தர் மனநிலைச் சித்திரவதையையும், பலருக்கு உடல் சித்திரவதையையும், ஆவிக்குரிய சோதனையையும் அனுமதித்து கடைசியாக பொருளாதார பிரச்சனையையும் நெருக்கும்படி விட்டுவிட்டாரே! என்று எல்லோருமே சோர்ந்து போய்விட்டோம். ஆனால் ஆண்டவருடைய நாமங்களில் 'யெகோவாயீரே' என்பதும் ஒன்றல்லவா? அதனுடைய பொருள் "கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்" ஆம் அந்த பெயருக்குள்ள அர்த்தத்தின்படியே எங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான பண உதவிகளை கர்த்தர் அற்புதவிதமாக பார்த்துக் கொண்டார். எப்படியெனில் 14 விசுவாசிகள் சிறையில் அடைக்கப்பட்ட செய்தியை அறிந்த ஜெத்தா மற்றும் முக்கிய நகரங்களில் இருந்த அருமையான கர்த்தருடைய ஊழியக்காரர்கள், விசுவாசிகள் தங்களுக்கு கர்த்தர் ஏவினபடி பணஉதவியை என் மனைவி மூலமாக செய்தார்கள். ஆம்! 'கர்த்தர் யெகோவாயீரே'வாக இருந்து எங்கள் 5 மாத சிறைவாசத்தின் மத்தியிலும் அவரவர் குடும்ப செலவுகள் பராமரிப்புக்கு போதுமான அளவிற்கு உதவி செய்து தேவைகளை சந்தித்து இருக்கிறார். அல்லேலூயா! கர்த்தர் நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

சத்துருவின் கிரியைகள்

அதே வேளையில் பலருடைய நிந்தனைகள், குறைகள் என்னுடைய நெஞ்சை பிளந்தது. எங்களிடம், "நீங்கள் இந்தியாவிற்கு போய்விட்டால் யார் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்வார்கள்?" என்று இரண்டு பெரிய சுவிசேஷக் கூட்டங்களில் நடந்த அற்புதங்கள், ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்ற அநேகர் கைது ஆவதற்கு முன்பு இவற்றை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடத்தினதற்கு எங்களை வாழ்த்தி, புகழ்ந்து பேசினார்கள். ஆனால் அவர்களோ, "இவர்களுக்கு ஏன் இந்த வேலை? ஒரு அளவிற்கு மேல் போகலாமா? பெருமைக்காக, பெயருக்காக செய்து, எங்கள் பெயரைச் சொல்லி காட்டி கொடுத்து விட்டாரே! இவருக்கு "இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்". இப்படி பலவிதமாக பேசுவதை கேள்விப்பட்டு, வேதனையும், துக்கமும் அடைந்தோம். ஆனால் ஆண்டவர் இயேசுவையும் கூட பாராட்டி

பேசினவர்கள் கூட கடைசியாக "இவனை சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டது நினைவிற்கு வந்தது. அவருக்கே இந்த நிலை என்றால் நமக்கு! பல நெருங்கிய விசுவாசிகள் கூட என் மனைவியைப் பார்க்க என் வீட்டிற்கு வருவது கிடையாது. ஆவிக்குரிய சில சபைகளின் தலைவர்கள் "என் வீட்டிற்கு தங்கள் உறுப்பினர்கள் போகக்கூடாது" என்று கட்டளை இட்டிருக்கின்றார்கள். கட்டளையை மறுத்து என் மனைவியைப் பார்க்க வந்தவர்கள் சபையிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றனர். என் ஊழியங்களில் சம்பந்தப்படாத ஒரு சிறு சபையை நடத்தி வந்த ஒரு விசுவாசி யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலேயே இந்தியா வந்துவிட்டிருக்கிறார். இவைகளை எழுதுவதின் நோக்கம் என்னவென்றால் – யார் யார் எப்படிப்பட்டவர்கள், இது தான் உலகம் என்று அறிய கர்த்தர் ஒரு சந்தர்ப்பம் தந்தார். அதாவது யார் கர்த்தருடைய உண்மையான அன்பை எந்நிலைமையிலும் மற்றவர்களுக்கு காட்டுபவர்கள், யார் எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்காய் சகலத்தையும் தாங்கி நிற்பவர்கள் என்று இந்த சம்பவங்கள் மூலம் உணர்ந்தறியச் செய்தார். எப்படியோ கர்த்தர் இத்தனை சோதனைகள், போராட்டங்கள், கஷ்டங்கள், நஷ்டங்கள் மத்தியிலும் எங்களோடு இருந்து இப்படிப்பட்ட சாத்தானின் தாக்குதல்களை தாங்கும்படி போதுமான பெலனைத் தந்து உதவினார்.

மீண்டும் சிறைமாற்றம்

ரம்ஜான் மாதம் நெருங்கிவிட்டது. எங்களைப் புதுப்பிக்கப்பட்ட இரண்டாவது சிறைப் பகுதிக்கு மறுபடியும் மாற்றம் செய்தார்கள். எங்களை மற்ற முஸ்லீம்களோடு சேர்த்து போட்டிருந்ததால் அவர்கள் எதிரில் டீ, தண்ணீர் குடிக்கவோ, சாப்பிடவோ முடியாது. ஒருநாள் சிறை மேலாளர் சுற்றுப்பார்வை புரிய வந்தபோது நாங்களும் மற்ற முஸ்லீம் அறை நண்பர்களும், அவரிடம், "எங்கள் 14 பேரை ஒரு பெரிய அறையில் அல்லது இரண்டு அறைகளில் ஒருமித்து இருக்கும்படி கேட்டோம். ஏனெனில் அவர்கள் மத்தியில் அவர்களுக்கு இடையூராக இருக்கக்கூடாது என்பதற்காக! அவர்களிடமிருந்து முதலில் 'பார்க்கலாம்' 'முடியாது' என்கின்ற பதில்கள் வந்தது. ஆனால் மூன்றாவது முறையாக எங்களுடைய வேண்டுகோளை ஏற்று எங்கள் 14 பேரையும் இரண்டு அறைகளில் பிரித்து போட்டார்கள். அநேக மாதங்கள் கழித்து ஒருவரையொருவர் நேரில் பார்த்து இணைந்தது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டோம். ஆனந்தக் கண்ணீர் விட்டோம்.

ஆக என்னுடன் சகோ. டென்னிஸ் சகோ. அராயா, சகோ. கிப்ரோன், சகோ. பஹாரு, சகோ. கவாயு, சகோ. யூசுப், சகோ.

இஸ்கந்தர் ஆகியோர் இருந்தார்கள். மற்ற அறையில் சகோ. பென்யமின், சகோ. டின்சாய், சகோ. மிஸ்பின், சகோ. வொர்க்கு, சகோ. கலாகில், சகோ. பெபர்து ஆகியோர் இருந்தார்கள். இப்போது ஒன்றாக இருந்து நாங்கள் ஒருவரையொருவர் ஆற்றி, தேற்றிக் கொள்ளவும், திடப்படுத்திக் கொள்ளவும் வசதியாக அமைந்தது. ஆண்டவர் இயேசு செய்த நன்மைக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம்.

சிறையில் அனைத்து நாட்டு ஜெபக்குழு (I.P.A)

இதற்கு முன்பு பயந்து, பயந்து சத்தமில்லாமல் ஜெபித்து வந்த நாங்கள் ரம்ஜான் மாதத்திலேயே எங்கள் அறைகளில் காலை, மாலை ஆராதனை செய்யத் தொடங்கினோம். 4 மாதம் ஆகிவிட்டது, இனி என்ன பயம்? ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க! எங்கள் அறையில் இருந்த 8 பேரும் காலை 10 மணிக்கு எழுந்து நின்று கைகளை உயர்த்தியும், நடனமாடியும் துதிப்பாடல்களைப் பாடுவோம். எத்தியோப்பிய பாடல்கள், ஆங்கிலப் பாடல்கள் (தமிழ் மொழியில் சில பாடல்களை கற்றுக் கொடுத்தேன்). இவற்றை முப்பது நிமிடங்கள் பாடித் துதித்து பிறகு தேவசெய்தியை நானும், பாஸ்டர் டென்னிஸ், பாஸ்டர் பஹாரு, பிரதர் கிப்ரோன் ஆகியோர் பகிர்ந்து கொள்வோம். இப்படிக் காலையும், மாலையும் முறையே இரண்டு மணி நேரம் சபை ஆராதனை மாதிரியே நடக்கும். இப்படி நாங்கள் துதித்து, முழங்கால்படியிட்டு ஜெபிப்பதை, ஆராதிப்பதை பக்கத்து அறைகளிலுள்ள முஸ்லீம்கள் "கம்பிக் கதவுகள்" வழியே பார்ப்பார்கள். இதுதான் உண்மையான கிறிஸ்தவ ஆராதனை, ஜெபிக்கும் முறை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள செய்தோம். ஒருநாள் இப்படி எழுந்து நின்று 8 பேரும் வட்டமாக நடனமாடி கைகளைத் தட்டியும், உயர்த்தியும், அந்நிய பாஷையிலும் துதித்துப் பாடி ஆராதித்து கொண்டிருந்தபோது ஜெயில் அதிகாரி சுற்றுப்பார்வை செய்ய வந்திருக்கிறார். அப்போது எங்கள் அறை அருகில் வந்தபோது நாங்களும் அவர் வந்ததையும் உணராமல் ஆவியில் நிறைந்து ஆராதித்துக் கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறார். ஆனால் ஒன்றும் கேட்காமல் தொந்திரவு செய்யாமல் போய்விட்டிருக் கிறார். அடுத்த நாள் வந்தபோது, எங்களைப் பார்த்து "கோயிஸ்!" (நல்லது) என்றார். "உங்கள் ஜெப ஆராதனை நன்றாக இருந்தது". "சீக்கிரம் உங்கள் விடுதலைக்காகவும், எங்களுக்காகவும் கூட ஜெபியுங்கள்" என்று சொன்னார். தரியு–தானியேலை நோக்கி 'ஜீவனுள்ள தேவனுடைய தாசனே" "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிக்க வல்லவராக இருந்தாரா?" என்று கேட்டதற்கு ஒப்பாயிருந்தது. எங்கள் ஆராதனைகளை, ஜெபங்களை ஒவ்வொரு அறைகளிலும் பொருத்தப்பட்ட வீடியோ காமிரா மூலம் சிறைக்

காவலர்கள், மேலதிகாரிகள் அவரவர் அறைகளிலிருந்து பார்த்திருக்கிறார்கள். ரசித்திருக்கிறார்கள். சிலர் ஆச்சரியமும், சந்தோஷமும் பட்டிருக்கிறார்கள். கர்த்தர் எங்களை அந்த ரம்ஜான் மாதத்திலேயே அவர்கள் எதிரிலேயே, எதிரிகளின் சிறையிலேயே பவுலும் சீலாவும் போலத் துதித்துப்பாடி சாட்சியாக வைத்தார். கிறிஸ்தவர்கள் என்றால் கிறிஸ்மஸ், புது வருஷம் (New Year) போன்ற பண்டிகைகளில் குடித்துவிட்டு ஆடுபவர்கள், தேவபயம், பக்தி, ஒழுக்கம் கிடையாது என்று மேற்கத்திய நாட்டு கிறிஸ்தவர்களைப் போல கிறிஸ்தவர்களைக் குறித்து மட்டமாக மதிப்பிட்டு வைத்திருந் தவர்களுக்கு முன்பாக உண்மையான ஆவிக்குரிய கிறிஸ்தவ தொழுகை, துதி, ஆராதனை என்றால் என்ன? என்பதை செயல் மூலம் அவர்களுக்கு காட்டும்படி கர்த்தர் கிருபை செய்தார். இவைகளை யெல்லாம் நினைக்கும் பொழுது கர்த்தர் எங்களை இந்த சிறையின் பாடுகளுக்கு அனுமதித்ததின் உள்ளான நோக்கம் இப்பேர்பட்ட சாட்சியான செயல்களுக்காகத் தான்! என்பதை நன்கு உணர்ந்து கொண்டோம். இந்த ரம்ஜான் நாட்களில் நிச்சயமாக, ஈத் (முஸ்லீம் பண்டிகை) பண்டிகைக்கு முன்பதாகவாவது விடுதலை செய்வார்கள் என்று பலர் வெளியிலும், சிறையிலும் கூட அதிகாரிகள் போலீஸ்காரர்கள், உடன் கைதிகள் சொல்லி எங்களை உற்சாகப்படுத்தியிருந்தனர்.

மீண்டும் ஏமாற்றமும் சோர்வும்

முஸ்லீம் பண்டிகை நாளும் வந்தது. ரம்ஜானும் முடிந்தது. ஒரு விடுதலைச் செய்தியும் இல்லை. மறுபடியும் அதிகாரிகளின் பொய்! ஏமாற்றுப் பேச்சுகள்! எதிர்பார்த்து, ஏமாந்து சோர்ந்து போனோம். இருப்பினும் ஒன்றாக ஒரே அறையில் ஆராதித்து, ஜெபித்து, தேவ வார்த்தைகளை பகிர்ந்து கொண்டும், திருவிருந்து அனுசரித்தும் வந்ததால் வேதனைகள் சோர்வுகளை மேற்கொள்ள முடிந்தது. இந்த நிலையில் என் மனைவி மற்றும் சகோதர்களின் மனைவிமார்கள், நண்பர்கள் மூலம் வெளிநாடுகளிலிருந்து அவரவர் அரசாங்கம், மற்றும் தூதரகத்திலிருந்து குறிப்பாக அமெரிக்க உள்துறையகம், அமெரிக்க செனேட்டர், சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனம் ஆகியோரிடமிருந்து ஏதாவது கடிதம் சவுதி அரசாங்கத்திற்கு வந்ததா? அழுத்தம் (PRESSURE) கொடுக்கிறார்களா? என்ன சமீபத்திய முன்னேற்றம் என்று ஆவலுடன் கேட்டோம். அவர்களும் கிடைத்த செய்திகளை சொல்லுவார்கள். ஆனாலும் ஒரு முன்னேற்றமும் காண முடியவில்லை. இன்டர்நெட்டில் பல செய்திகள், கிறிஸ்தவ நிறுவனங்கள், ICC, VOH, Campus Direct போன்ற நிறுவனங்கள் எவ்வளவோ செய்திகள், ஜெப விண்ணப்பம் கணினியில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்த

சவுதி அதிகாரிகள், இளவரசர்கள் தங்கள் மனதைக் கடினப்படுத்தி வைத்திருந்தார்கள். பார்வோனிடம் மோசே பலமுறை தன் ஜனங்களை விடுமாறு விண்ணப்பித்தபோது, 'பார்வோனின் மனதை கர்த்தர் ஒவ்வொரு முறையும் கடினப்படுத்தினார்' என்பதைப் போலவே நடந்து கொண்டிருந்தது.

ஒருநாள் நாங்கள் பேசிமுடிவிற்கு வந்தோம். இனி, மேல் நாட்டிலிருந்து அழுத்தம் வந்ததா? செய்திகள் வந்ததா? உதவி வந்ததா? என்று கேட்டு எதிர்பார்த்து ஏமாந்தது போதும். **"பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல தேவனுடைய ஆவியினால் ஆகும்"** (சக. 4:6) என்ற வாக்கின்படி முற்றிலும் ஆவியான தேவனின் கரங்களில் நம்முடைய நிலையை ஒப்புக் கொடுப்போம். "மனுஷனால் கூடாததுதான். ஆனால் கர்த்தரால் எல்லாம் கூடும். கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை; அவர் மாறாதவர்; அவர் அற்புதமானவர்" அற்புதமாக ஆப்கானிஸ்தானில் அக்-2001ல், 6 மாதங்களாக சிறைபிடிக்கப்பட்டிருந்த மேல்நாட்டு கிறிஸ்தவர்களை ஆண்டவர் விடுவித்தது போல நம்மையும் விடுவிப்பார். ஆகவே அவர் நமக்காக யுத்தம் செய்யட்டும்! இனி விடுதலைக்காக கூட ஜெபிக்கக் கூடாது, வெறும் துதி, ஆராதனைப் பாடல்களை மட்டும் பாடுவோம் என்று முடிவெடுத்து ஒருவாரமாக துதி ஸ்தோத்திர பாடல்களை ஆராதனை வாயிலாக ஆண்டவருக்கு ஏறெடுத்தோம். கர்த்தருடைய சித்தம், நோக்கம் நிறைவேற வேண்டி நம் சிறைவாச நாட்களை நீடிக்குமானால், இனி அவர் சித்தப்படியே ஆகட்டும்! என்று முடிவு செய்து கொண்டோம். ஆகவே முன்பு போல் எதைக் குறித்தும் கவலைப்படுவதை நிறுத்திவிட்டு சந்தோஷமாக இருந்தோம். தொலைக்காட்சி செய்திகள் பார்த்தோம், ரம்ஜான் நேரத்தில் 'பில்காஸ்பி'(BILLCOSBY) என்பவரின் தொலைக்காட்சியில் நடத்திய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை கண்டு களித்தோம். மற்றும் ரொட்டி, 'ட்யூனாமீன்'(TUNAFISH) ஆகியவற்றை தனியே வாங்கி சாண்ட்விட்ச் (SANDWICH) போட்டு சகோ. கிப்ரோன் அருமையாக தருவார். சாப்பிட்ட பிறகு, அவரவர் ஆண்டவரால் தொடப்பட்ட விதம் மறுபடியும் பிறந்த அனுபவங்களை எல்லாம் பகிர்ந்து கொண்டு எங்களை நாங்களே பெலப்படுத்திக் கொண்டோம். இப்படி ரம்ஜான் நாட்களில் ஒன்றாக நாங்கள் இருந்ததால் நாட்கள் ஒருவாறு வேகமாக, சந்தோஷமாக கடந்தது.

மீண்டும் அதிர்ச்சியான செய்தி

ஆனால் சாத்தான் திருடன் அல்லவா? எங்கள் சந்தோஷத்தை திருடத்தக்கதாக ஒருநாள் ஒரு அதிர்ச்சியான செய்தியை சகோ. பஹாருவின் மனைவி மூலம் கொண்டு வந்தாள். சகோ. பஹாருவின்

சபையினர் ஆராதனை முடித்து வெளியே வரும்போது ஒரு கூட்ட எத்தியோப்பியர்களை (6 பேர்கள்) போலீஸார் மடக்கிப் பிடித்து கைது செய்திருக்கிறார்கள் என்ற செய்தியே அது. இது எங்களுக்கு பயத்தையும், திகிலையும், அதிர்ச்சியையும், சோர்வையும் மறுபடியும் உண்டாக்கிவிட்டது. இச்சமயத்தில் நம்முடைய வழக்கு சம்பந்தமாக இவர்கள் பிடிக்கப்பட்டிருந்தால் பிறகு விசாரணை, பின்னர் தெரியக்கூடாத விஷயங்கள் வெளிவரலாமே! என்ன செய்வது? என்று அனைவரும் குறிப்பாக எத்தியோப்பிய சகோதரர்கள் கவலைப்பட்டனர். ஆனால் நான் அவர்களிடம் "ஆண்டவரிடம் ஜெபிப்போம் சத்துருவின் கிரியைகளை இயேசுவின் நாமத்தில் கட்டி அப்புறப்படுத்துவோம்" என்று தைரியமும், அறிவுரையையும் கூறினேன். அப்படியே ஜெபித்தோம். 3 நாட்கள் கழித்து பார்வையாளர் நேரத்தில் வந்த ஒரு எத்தியோப்பிய சகோதரி மூலம் "அவர்கள் யாவரையும் அடுத்த நாளே ஒன்றும் விசாரிக்காமல் விட்டு விட்டார்கள்" என்ற நல்ல செய்தியை அறிந்து கொண்டோம்!" எதற்காக? ஏன்? அவர்களை கைது செய்தார்கள் என்றால் ஆராதனைக்கு வீட்டை தன் பெயரில் ஒழுங்கு செய்த ஒருவரை பிடிக்க தேடிக் கொண்டிருக்கிற சமயத்தில், அவர் அந்த கூட்டத்தில் இல்லை என்று தெரிந்தவுடன் உடனே யாவரையும் விட்டு விட்டிருக்கிறார்கள். அற்புதர் இயேசுவிற்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம். நம் ஆண்டவர் எளியவர்களின் கூக்குரலைக் கேட்டு, அவர்கள் "ஜெபங்களுக்கு பதிலளிக்கும் தேவன் அல்லவா?". தொடர்ந்து இன்னொரு சோதனையும் வந்தது. நன்றாக நாங்கள் யாவரும் ஆராதித்து ஜெபித்துக் கொண்டிருந்ததை கண்ட சத்துருவிற்கு பொறுக்க முடியவில்லை.

மீண்டும் சிறைமாற்றம்

ஆகவே எதிர் அறையிலிருந்த ஒருசில முஸ்லீம் அடிப்படைவாதிகள் (Fundamentalists) ரம்ஜான் மாதத்தில் இப்படி நாங்கள் ஆராதித்தது, ஜெபிப்பது, தங்களுக்கு இடையூறாக இருக்கிறது என்று மூத்த சிறை அதிகாரியிடம் சொல்லி மறுபடியும் அந்த சிறை வளாகத்தில் உள்ள 3 வது பகுதி ஜெயில் அறைகளுக்கு மாற்றிவிட்டார்கள். அதாவது முழுமையான இரும்புக் கதவு கொண்ட ஜெயில் அறைக்கு மாற்றிவிட்டார்கள். மீண்டும் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தோம். ஏனெனில் அது ஏறக்குறைய தனிமைச் சிறைதான்! வெளி உலகைக் காணமுடியாது. பயத்தைக் கொடுக்கக் கூடிய சிறைப்பகுதி அது. மறுபடியும் எங்களுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு நாங்கள் 14 பேர்கள் மாத்திரம் அந்த சிறையின் அறைகளுக்கு மாற்றப்பட்டோம்! ஆனால் அங்கு வேறு எந்த சிறைகைதியும் இல்லை 'எட்டு ரூம்களும் காலியாக இருந்தன'. எங்கள் அனைவரையும் முன்பு போலவே இரண்டு

அறைகளில் அடைப்பார்கள் என்று நினைத்தோம். ஆனால் நாங்கள் ஒன்று கூடி கூட்டமாக ஆராதிக்கிறோம் என்பதால் எங்கள் 14 பேர்களை அறைக்கு 2 அல்லது 3 பேராக என்ற கணக்கில் பிரித்து 4 அறைகளிலும், என்னையும் பாஸ்டர் டென்னிஸ் இருவரையும் ஒரு சிறிய அறையிலும் அடைத்தார்கள். மிகவும் சோர்ந்து போனோம். ஒன்றாக சந்தோஷமாக, ஒரே குடும்பம் போல் கடந்த மாதம் இருந்த எங்களை இப்படி வேண்டுமென்றே சத்துரு பிரித்து வைத்தது மிகவும் எங்கள் சமாதானத்தைப் பாதித்தது.

சகோ. டென்னிஸின் கலக்கம்

அதுவும் நானும் சகோ. டென்னிசும் இருந்த அறை, முதல் மாதத்தில் தனி சிறையில் பாடுபட்டோமே அது போலவே சிறிய அறையாக இருந்தது. எங்களோடிருந்த 6 பேர்கள் திடீரென்று வேறு அறைகளில் போடப்பட்டது எங்கள் இருவருக்கும் ஒருவித பயம், திகில், கலக்கத்தை கொடுத்தது. அதிலும் சகோ. டென்னிஸ் என்னதான் வேதாகம போதகராக இருந்தாலும் பயந்த சுபாவம் உள்ளவர். அவரால் திடீரென்று அதிக நாட்களுக்குப் பிறகு அந்த இரும்புக் கதவினால் முழுவதும் மூடப்பட்ட அந்த சிறிய அறையில் இருக்க முடியவில்லை. மேலும் சகோ. அராயா எங்கள் இருவரோடு 4 மாதங்களாக ஒன்றாக இருந்தபோது அவரோடு சகோ. டென்னிஸ் நெருங்கிய நண்பராகி விட்டார். இருவரும் இரவிலும், பகலிலும் அடிக்கடி பல கதைகளை எத்தியோப்பிய நாட்டு, சரித்திர, வேதாகம, மற்றும் மந்திர தந்திர கதைகள் ஆகியவற்றை சகோ. டென்னிஸ்க்கு சகோ. அராயா சொல்லுவார். பரிமாறிக் கொள்வார்கள். இப்படி ஒருவித நெருக்கமான நட்பு ஏற்பட்ட சூழ்நிலையில் சகோ. அராயாவை அவரிடமிருந்து பிரித்து வேறு அறையில் போட்டது, சகோ. டென்னிஸ்லை மிகவும் பாதித்தது. அவரால் தாங்க முடியவில்லை. 'ஐயோ! தலை வெடிக்கிறது; இதயம் வலிக்கிறது; ஒருவித பயம், திகில் என்னை அலைக்கழிக்கிறது' என்று துடித்து கொண்டிருந்தார். நான், "நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சாத்தானுக்குப் பயப்படக்கூடாது" யார் நம்மோடு இல்லாவிட்டாலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்று சொல்லி அவரை தைரியப்படுத்துவேன். சிறிது நேரம் தைரியமாக இருப்பார். மறுபடியும் ஒருவிதமாக தலையைப் பிடித்துக்கொண்டு, அறையின் இரும்புக் கதவருகே துடித்துக் கொண்டிருப்பார். எனக்கு என்ன செய்வது? யாரை குறைகூறுவது? ஏன் இப்படி திடீரென்று கைவிட்டீர்? ஆண்டவரே! என்னுடைய பாவம் இருந்தால் மன்னியும் ஆண்டவரே! "டென்னிசுக்கு ஏதும் மூளை கலங்கிடக்கூடாது ஆண்டவரே!" என்று கண்ணீருடன் ஜெபித்தேன். பிறகு நாங்கள் ஜெபத்துடன் அதிகாரியைக் கேட்டோம். "சகோ. அராயா, சகோ. இஸ்கந்தர், சகோ. கிப்ரோன்

இருந்த அந்த அறைக்கு மாற்றச் சொல்லுங்கள்" என ஜெயில் அதிகாரிக்கு சொல்லி அனுப்பினோம். முதல் இரண்டு நாட்கள் சரியான பதில் இல்லை. சத்துருவின் சதியை ஜெபத்தில் கடிந்து கொண்டு ஆண்டவரிடம் "ஆண்டவரே இடமாற்றத்திற்கு உதவிச் செய்யும்" என்று ஜெபித்தோம்.

பிறகு 3–வது நாள் ஜெயில் அதிகாரி "சரி" என்று எங்கள் இரண்டு பேரையும் சகோ. அராயா இருந்த அறைக்கு மாற்ற ஒத்துக் கொண்டு கட்டளை இட்டார். "ஸ்தோத்திரம் ஆண்டவரே!" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் எங்கள் பொருட்களை கையிலே வாரிக்கொண்டு வந்து 5வது எண்ணுள்ள சகோ. அராயா அறைக்கு வந்து சேர்ந்தோம். எல்லாரும் சந்தோஷம் அடைந்தோம். சகோ. டென்னிஸ் முகத்தில் அதிக சந்தோஷம்! பிறகு நானும் சகோ. டென்னிஸ், சகோ. இஸ்கந்தர், சகோ. அராயா அந்த அறையில் மீண்டும் சுதந்திரமாக ஆராதிக்க, சத்தமாக ஜெபிக்க முடிந்தது. ஆம் இதில் விசேஷம் என்னவெனில் முன்பு இருந்த சிறையில் 8 பேர், 6 பேராக இருந்து மற்ற முஸ்லீம்கள் மத்தியில் ஜெபித்து ஆராதித்தபோது இருந்த தயக்கம், பயம் இப்போது இல்லை. நாங்கள் 14 பேர்கள் மட்டுமே – 5 அறைகளில்! இரும்புக் கதவு மூடப்பட்டு ஒருவரும் வெளியிலிருந்து காண முடியாத நிலையில் இருந்தோம். இன்னும் தைரியமாக சத்தமாக பாடவும், ஜெபிக்கவும், துதிக்கவும் அதிக சுதந்திரம் கிடைத்தது. கர்த்தர், சாத்தான் கொண்டு வந்த தீங்கை எங்களுக்கு நன்மையாக மாற்றிக் கொடுத்தார். சகோ. டென்னிஸ் வேதப் பாடங்களை அந்த எத்தியோப்பிய சகோதரர்களுக்கு கற்று கொடுப்பார். அவ்வப்போது, தேவ செய்திகளை ஆவிக்குரிய கேள்வி, பதில்கள், சந்தேகங்கள் ஆராய்வோம். சொப்பனங்களை, தரிசனங்களை பகிர்ந்து கொள்வோம். நானும் தேவ செய்திகளை "கைவிடாத தேவன், மறவாத தேவன், காண்கின்ற தேவன், யெகோவாயீரே" என்கிற தலைப்புகளில் ஆவியானவரின் ஏவுதலின்படி செய்தி கொடுத்து அவருடைய விசுவாசத்தை உறுதிபடுத்திக் கொண்டோம் 4½ மாதங்கள் நெருங்கி விட்டது. ரம்ஜானும் போய்விட்டது. ரம்ஜானில் ராஜா நிறைய பேரை எங்களையும், விடுதலைச் செய்ய கட்டளையிடுவார் 'என்ற எதிர்பார்ப்பும்' மறைந்து போய்விட்டது. குடும்பப் பிரிவு, பணப்–பிரச்சனை மறுபடியும் எங்களை அழுத்தியது. அமெரிக்க வெள்ளை மாளிகை மற்றும் எங்கள் நாட்டு தூதரகங்கள் தொடர்ந்து முயற்சி எடுத்தும் எதுவும் தெரியவில்லை.

என் மனைவியைப் பற்றி...

நான் என் மனைவியிடம் சொல்ல ஆரம்பித்தேன். "நீ ஊருக்கு போய்விடு எனக்காக காத்திருக்க வேண்டாம். பிள்ளைகள் அங்கு

இந்தியாவில் - நீ இரண்டு பேருக்கும் நடுவில் எத்தனை நாட்கள் கஷ்டப்படுவாய்? நீ ஊருக்குப் போனால் பிள்ளைகளுக்காவது தாய் கூட இருக்கிறாள் என்ற தைரியம் இருக்கும். இல்லையேல் அவர்களுடைய மனநிலை பாதிக்கப்படும். அதனால் அவர்கள் படிப்பும் கெட்டுப் போய்விடும். இந்தியாவிற்கு போய் விடுகிறாயா? என்று கேட்டேன். நான் நினைத்த மாதிரி முதலில் அவளும் நினைத்திருக்கிறாள். "பிள்ளைகள் முகம் வாடிப்போய் ஏதோ முற்றிலும் நொந்து போனவர்களாக காணப்படுகிறார்கள்" சீக்கிரமாக வந்து பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்வது நல்லது" என்பதாக உறவினர்கள் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதாகக் கூறினாள். அதைக் கேட்டவுடன் அவளும் அப்படித்தான் முடிவு எடுத்திருக்கிறாள். ஆனாலும் அவள், "குறுகிய கால சிறைத் தண்டனைதான் உங்களுக்கு இருக்கும் என்று பேசிக் கொள்ளுகிறார்கள், ஆகவே ஜனவரி முதல் வாரத்தில் நீங்கள் விடுதலையாகிவிடலாம். எனவே நான் அதுவரை உங்களைப் பார்க்கவும், காத்திருந்து உங்களோடு சேர்ந்து போகவும் முடிவு செய்துவிட்டேன். அதற்கு என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு விட்டேன்" என்று அவள் சொன்னாள். அப்படி கூறியது எனக்கு மிகப்பெரிய உற்சாகத்தை தந்தது. என் மனைவியின் மன உறுதிக்காக, அவள் விசுவாசத்திற்காக, அன்புக்காக, என் ஆண்டவரை ஸ்தோத்தரித்தேன். அவள் சற்று, 'முன் கோபக்காரி', 'சட்' என்று கோபம் வரும். நேராக, யாராக இருந்தாலும் வெளிப்படையாக பேசி விடுவாள் என்று பலர் சொல்லியிருந்தாலும் அவள் அங்கு தங்கியிருந்த நாட்களில் அநேக பணவுதவிகளைப் பெற்று சிறையிலிருந்த குடும்பங்களுக்கு அவரவர் தேவைக்கேற்றபடி கொடுத்திருக்கின்றாள். சிறையில் பார்க்கக்கூடாது என்ற நிலை. எத்தியோப்பிய சகோதரிகளுக்கும் சகோ. டென்னிஸ், சகோ. பென்யமீன் மனைவிகளுக்கு இடையில் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் கர்த்தர் கிருபையால் என் மனைவிக்கு மட்டும் ஒரே ஒருநாள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆகவே அவர்களிடமிருந்து என் மனைவி தகவல்களை பெற்றும், கொடுத்தும் உதவும் ஒரு வாய்க்காலாக விளங்கினாள். கர்த்தருடைய சித்தம், அவள் ஊருக்கு போகாமல் அங்கு எங்கள் யாவருக்கும் செய்தியாளராக தூதுவராக உதவியாளாராக, ஆன்மீக ஆதரவாளராக அவள் இருக்க வேண்டும் என்பதே!

இப்படிப்பட்ட நிலைமையில் ஒருநாள் என் மனைவி பார்வையாளர் நேரத்தில் சிறை அதிகாரியிடம் "எப்போது என் கணவரை விடுதலை செய்வீர்கள்?" என்று கேட்டிருக்கிறாள். அதற்கு அவர் "அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஆப்கானிஸ்தானில் போரை நிறுத்தினால் உங்கள்

கணவரையும், மற்ற கிறிஸ்தவர்களையும் விட்டு விடுகிறோம்" என்று கிண்டலாக சிரித்துக் கொண்டே சொன்னாராம். இருதயத்தில் இருப்பது தான் நாவில் வரும் அல்லவா? அந்த அதிகாரிகள் அப்படி தங்களுக்குள் பேசவில்லையாயின் இவர் எப்படி இதை வெளியே சொல்லியிருக்க முடியும்? என்னுடைய சிறை வாழ்க்கை 5-வது மாதத்தை நெருங்கி கொண்டிருந்தது. மற்றவர்களும் தங்கள் 4வது மாத சிறைவாசத்தை நெருங்கியிருந்தனர்.

சகோ. கிப்ரோனுக்கு பெண் குழந்தை

இதற்கிடையில் எங்களுடன் இருந்த சகோ. கிப்ரோனுக்கு பெண் குழந்தை சுகப்பிரசவமாகப் பிறந்த செய்தியை சகோ. அராயாவின் மனைவி மூலம் அறிந்து ஆனந்தம் கொண்டோம். சகோ. கிப்ரோனை வாழ்த்தினோம். இந்த அருமையான வேளையில் தன் மனைவி குழந்தை அருகில் ஆஸ்பத்திரியில் பக்கத்தில் பார்த்து ஆனந்தப்பட வேண்டிய அவர் இங்கு சிறையில் அவர்களைப் பிரிந்து இருந்தது மனதிற்கு வேதனையாக இருந்தது. ஆனால் அவரோ அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் "கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்" என்று தைரியமாக, மிக மன உறுதியுடனும், விசுவாசத்துடனும் இருந்தார். உண்மையிலேயே கர்த்தர் "யெகோவாயீரே" யாக இருந்து அவருடைய மனைவியை 4 மாதங்களாக பராமரிக்க அவர்கள் நாட்டைச் சேர்ந்த ஒரு எத்தியோப்பிய சகோதரர் குடும்பத்தை நியமித்திருந்தார். மேலும் அநேக இந்தியக் குடும்பங்கள் – சகோதரர்கள் – அன்புடன், பண உதவியை அந்த சகோதரியின் பிரசவ செலவிற்கு கொடுத்திருந்தனர். பாருங்கள்! கர்த்தருடைய செயலை! ஆண்டவர் கிப்ரோன் மனைவி, பிள்ளைகளின் எல்லாத் தேவைகளையும் இப்படி அற்புதமாக சந்தித்தார். அல்லேலூயா!

"தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" என்ற ஆண்டவர் அல்லவா! ஆம் தந்தை தன் குழந்தையை காண முடியாவிட்டாலும் கர்த்தர் கிப்ரோனின் குழந்தைகளையும் மனைவியையும் பார்த்துக் கொண்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

சிறையில் எழுப்புதல் கூட்டம்

மேலும் ஒரு நல்ல காரியம் நடந்தது. அந்த சிறையில் நாங்கள் 14 பேர்கள் மட்டுமே இருந்தோம் அல்லவா! ஆனால் 3 பேர், ஒரு அறைக்கு என்று 3 அறைகளிலும் என் அறையில் மட்டும் 5 பேராகவும் இருந்தோம். அப்போது ஒரு சிறை அதிகாரியிடம் "எங்கள் விசாரணை எல்லாம் முடிந்து 5 மாதங்கள் ஆகப் போகின்றன. இனியும் எங்களை

ஒருவரையொருவர் பார்க்ககூடாது, பேசக்கூடாது எனத் தடைசெய்வதில் என்ன நியாயம்? என்று கேட்டோம் (ஏனெனில் கழிவறைக்காக திறந்து விடும்போது கூட ஒரு அறையில் உள்ளவர்கள் அடுத்த அறையில் உள்ள சகோதரர்களைப் பார்த்துப் பேசிவிடக் கூடாது! ஒரு சில நாட்கள் மட்டும் சில போலீஸார் இரண்டு அறைகளிலும் உள்ளவர்களை திறந்து விடுவார்கள். அப்போது பேச வாஞ்சையாயிருக்கும். ஒரிரு வார்த்தைகள் பேசுவதற்குள் 'உஷ்' பேசாதே! என்று போலீஸ் சத்தம் போடுவதுண்டு. மேலதிகாரிக்கு சொல்லி விடுவோம் என்று பயமுறுத்துவதுண்டு. ஆனால் ஒருநாள் ஒரு காவலதிகாரியிடம் கீழ்க்கண்டவாறு கொஞ்சம் "சுதந்திரம் கொடுங்கள்" பேசவும், ஒன்றாக சில நேரங்களில் சாப்பிடவும்!" என்று கேட்டோம். அவரும் 'சரி' என்று பணிக் காவலதிகாரிகளிடம் அவர்களை ஒரிரு நாட்கள் சுதந்திரமாக பேச, உலாவ விடுங்கள் என்றார். ஆகவே ஒருநாள் சகோ. அராயாவின் மனைவி வீட்டிலிருந்து விசேஷ எத்தியோப்பிய கேக் கொண்டு வந்திருந்தார்கள். அதனால் எங்கள் அறைக்கு மற்ற 9 பேரையும் விடச் சொன்னோம். அவர்களும் எங்களுடன் அனுமதிக்கப்பட்டார்கள்.

சுமார் 4½ மாதத்திற்கு பிறகு சந்தோஷமாக 14 பேரும் உட்கார்ந்து ஒரே அறையில் சாப்பிட்டோம். அப்படியே ஆராதனை, ஜெபம், செய்திகளைப் பகிர்ந்து கொண்டோம். விஷேசமாக 14 பேரும் அவரவர் சிறையின் அனுபவங்களை, சாட்சிகளைத் தனித்தனியாக பகிர்ந்து கொண்டோம். 5 எத்தியோப்பியர் சிறையில் தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக ஒப்புக் கொடுத்த விதத்தைச் சொன்னார்கள். மற்றவர்கள் தங்கள் பழைய வாழ்விலிருந்து எப்படி ஆண்டவருக்குள் மறுபடியும் பிறந்த இரட்சிப்பின் அனுபவத்தை கூறினார்கள். இன்னொரு விஷேசம் என்னவெனில், நான் அவர்களிடம் "என்னால்தானே, அந்த இரண்டு பெரிய கூட்டத்தை நான் கூட்டினதினால் தானே, நீங்கள் அனைவருமே பிடிக்கப்பட்டீர்கள். ஆகவே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொனனபோது உடனே அனைவருமே "இது உன்னால் அல்ல, 'கர்த்தருடைய சித்தம் இது! பல நன்மைகளை ஆண்டவர் இந்த சிறை அனுபவத்தின் மூலம் எங்கள் வாழ்வில் குறிப்பாக விசுவாச ஜீவியத்தில் செய்திருக்கிறார். ஆகவே தயவு செய்து நீங்கள் "மன்னிப்பு கேட்க வேண்டாம்" குற்றமனப்பான்மை (Guilty Feeling) கொள்ள வேண்டாம்" என்றார்கள். எனக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது. என் வேதனையின் உணர்வு அன்றோடு அழிந்தது. கர்த்தர் பரிசுத்த ஆவி நிரம்பிய, கர்த்தருக்காய் பாடுகளை ஏற்றுக் கொள்ள கூடிய சகோதரர்களையே தெரிந்து கொண்டு இந்தப் பாடுகளுக்கு அனுமதித்திருக்கிறார் "நன்றி ஆண்டவரே" என்று கூறினேன்.

ஏனெனில் எங்கள் கைது விஷயத்தை கேட்ட பிறகும், எங்கள் சிறைவாச நீடிப்பு தொடர்வதை அறிந்தும், விடுமுறை எடுத்துக் கொண்டு நாட்டிற்கு ஓடியவர்கள், ஜெபக் கூட்டங்களை நிறுத்தி விட்டவர்கள், ஜெபக் குழுக்களை பல பிரிவுகளாக பிரித்து விட்ட விசுவாசிகள், ஊழியர்கள் என்போரைக் குறித்து அறிந்து கொண்டேன். கர்த்தருடைய தெரிந்து கொள்ளுதல் அவருக்கு மட்டுமே தெரியும். ஏற்றவர்களை ஏற்ற நோக்கத்திற்காக, ஏற்ற காலங்களில் உபயோகிக்க தெரிந்து கொள்ளுகிற தேவன் அவர்! ஆம், வேதாகம தேவ மனிதர்களைக் கூட அவர் தம்முடைய நாமத்திற்காகவும், தேவ நோக்கம் நிறைவேறவும், பாடுகள் அனுபவித்து அவற்றை மேற்கொள்ளக் கூடியவர்களையே (உதாரணமாக யோசேப்பு, மோசே, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, யோபு, அப்போஸ்தலர்கள்) தெரிந்து கொண்டார். 20 ஆம் நூற்றாண்டில் 'ரிச்சாட் உம்பிராண்ட்' டேவிட் லிவிங்ஸ்டன், போன்றோரை ஆண்டவர் தெரிந்து கொண்டார். ஆகவே இந்த பாடுகள் கர்த்தருடைய பாக்கியமே" என்று நாங்கள் அறிந்து கொண்டோம். **"இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானதல்ல"** என்று பவுல் கூறியதை நினைவுகூர்ந்து பாடுகளின் பலனை அறிந்து சந்தோஷப்பட்டோம்.

நாட்கள் நகர்ந்தன. டிசம்பர் 19 ஆம் தேதியை நெருங்கிக் கொண்டிருந்தோம். உள்ளத்தில் ஒரு நம்பிக்கை எனக்கு இந்த தேதியோடு என்னுடைய சிறைவாசம் 5 மாதங்களாகிறது. ஆகவே நிச்சயம் எங்களை வெளியே விட்டுவிடுவார்கள் என்று மனதில் ஆவலுடன் எதிர்ப்பார்த்து அதற்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்.

5 மாதங்கள் முடிந்தன

அதேபோல டிசம்பர் 19ஆம் தேதி காலை 10 மணிக்கு "எல்லாரும் வெளியே வாருங்கள்; உங்கள் படுக்கை, மற்ற பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வாருங்கள்" என்று போலீஸ்காரர்கள் வந்து அழைத்தார்கள். "அல்லேலூயா" என்று ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டோம். விடுதலை நாள் இன்று என்று அறிந்து கொண்டோம். அவரவர் அறைகளிலிருந்து எல்லா பொருட்களையும் எடுத்துக் கொண்டு வெளியே அனுப்பப்படும் அறைக்கு கொண்டு செல்லப்பட்டோம். அங்கு எங்களை கைது செய்து அடைப்பதற்கு முன்பு எங்களிடமிருந்த கைப்பற்றப்பட்ட பர்ஸ், மோதிரங்கள், கிரிடிட் கார்டு, ரூபாய் நோட்டுகள் மற்ற பொருட்களை எடுத்து வைத்திருந்தார்கள். அவற்றை வெளியே போகும்போது தான் கொடுப்பார்கள். ஆகவே அங்கு எங்களுடைய உடைமைகளை எல்லோருக்கும் கொடுத்து விட்டு, கையொப்பமிடச் சொன்னார்கள்.

நாடுகடத்த உத்தரவு

பிறகு மறுபடியும் ஒவ்வொருவருடைய கால்கள், கைகளில் விலங்கிட்டார்கள். அதுவும் ஒருவருடைய இடது காலை மற்ற சகோதரின் வலது காலோடு சேர்த்து இணைத்து போட்டார்கள். “விலங்குகள் 14 பேருக்கு ஒரு நேரத்தில் கிடைக்க வில்லையாம்” என் மனம் திடுக்கிட்டது! மறுபடியும் ஏன் விலங்கு! போடுகிறீர்கள்? விடுதலை என்றீர்களே! எனக் கேட்டோம். அப்போதுதான் தெரிய வந்தது. “நாங்கள் வீட்டிற்கு போகிறோம் என்று எதிர்பார்த்தப்படி அல்லாமல் நாடு கடத்தப்படுவதற்காக – தங்க வைக்கப்படும். (“Deportation Camp”) இடத்திற்கு மாற்றப்படுகிறோம் என்பது! நாடுகடத்தலா? யாவருக்கும் அதிர்ச்சியும் வேதனையும்? காரணம், ஆரம்பத்தில் விசாரணையின் போது எங்களை “ஜெத்தாவிலேயே அவரவர் வீட்டிற்கு அனுப்பி விடுவோம்” என்று சொல்லியிருந்தார்கள். ஆகவே இந்த ‘நாடுகடத்தப்படும்’ செய்தி யாவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. எப்படியோ என்னிமித்தம் பெற்றோரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலத்தையாவது விட்டவன் எவனோ......(மத்.19:29) என்ற வேத வசனங்கள் ஒருவருக்கொருவர் சொல்லி ஆற்றி தேற்றி பெலப்படுத்திக் கொண்டோம். கர்த்தருக்காக இந்த இழப்பை யாவரும் ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டனர். ஆனால் இதில் 4 பேரைத் தவிர மற்றவர்கள் 5 மாதம் சிறைவாசம் அனுபவிக்கவும், நாடு கடத்தப்படவும் தேவையே இல்லை. அந்த அளவிற்கு ஊழியத்தில் தீவிர பங்கு கிடையாது. சவுதி அரசாங்கம் இந்த அளவிற்கு தண்டனை கொடுத்து நாடு கடத்துவது மனித உரிமைகளுக்கு மிகவும் எதிரானது பிறகு நாங்கள் எங்கள் பொருட் களைத் திருப்பித்தர கேட்டோம். முதலில் “அதெல்லாம் கொடுக்க முடியாது”. ‘ஆபிஸர் இன்று இல்லை, ‘கொடுக்கக்கூடாது’ என மேலிடத்து உத்தரவு’ என்றெல்லாம் அந்தப் போலீஸ்காரர்கள் சொல்லிப் பார்த்தனர். நாங்களோ விடாமல் கேட்டுக் கொண்டிருந்தோம். பிறகு தான் அவரவர் வேதப் புத்தகங்கள், பாடல் புத்தகங்கள், போட்டோ ஆல்பம், வீடியோ கேமிரா போன்றவற்றைக் கொடுத்தார்கள். நான் என்னுடைய கணிபொறியையும், போட்டோ காப்பி மிஷன் மற்றும் வீடியோ, ஆடியோ, பாடல்கள், வேதாகமங்களை திருப்பி கொடுக்கும்படி கேட்டேன். அவர்களோ சில புத்தகங்கள், வேதாகமங்கள் மட்டும் கொடுத்தனர். என்னுடைய கணிப்பொறியை பலமுறை வற்புறுத்தின பிறகு “சரி கொண்டு வருகிறேன்” என சொல்லி ஒரு குமாஸ்தா ஸ்டோர் ரூமி லிருந்து ½ மணி நேரம் கழித்து, வேறு யாருடைய கணிபொறியை தூக்கிக் கொண்டு வந்துவிட்டார். நான், “இது என்னுடையதல்ல” என்று கூறியபோது நீயே வந்து உனது

கணிப்பொறியை ஸ்டோர் ரூமில் பார்த்து எடுத்துக்கொள்" என்று அழைத்துச் சென்றார். எப்படி தெரியுமா? கால் விலங்குகளோடு அவர்கள் கொண்டுவந்த கணிப்பொறியுடன் 'கண்ட்ரோல் பேனலை' தோளில் சுமந்து கொண்டு அந்த ஸ்டோர் ரூமிலுள்ள 200 மீட்டர் தூரம் நடக்க வைத்துக் கொண்டு போனார். அங்கு கர்த்தர் கிருபையால் என்னுடைய கணிப்பொறியை கண்டுபிடித்தேன். மறுபடியும் கணிப்பொறி மானிட்டரை தோளில் சுமந்துகொண்டு கால் விலங்குடன், சுமந்து கொண்டு திரும்பவும் நடந்து வந்து வெளி அறைக்கு அருகே வந்தேன்.

சொந்தமான பொருட்கள் திரும்பதரப்படவில்லை

என் வீடியோ கேசட்கள், ஆடியோக்கள், போட்டோ ஆல்பம் மற்றும் பெரிய போட்டோ காப்பி மிஷன் (ரூ. 2 லட்சம்) என்னிடம் திருப்பிக் கொடுக்கும்படி எவ்வளவோ முறை கெஞ்சினேன். "கவர்னர் உத்தரவு ஆகவே இவற்றைக் கொடுக்கக் கூடாது" என்றும், தர முடியாது" என்றும் சொல்லிவிட்டார்கள். மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். எவ்வளவு பெரிய நஷ்டம், பாடுகள். அவர்களுடைய ஏமாற்றுதல் பொய், அநியாயம், கடின மனம் இவற்றை எண்ணியபோது அவர்கள் சொல்லுகிற பொறுமை, சகிப்பு, அன்பு, சமாதானம் ஆகிய இவற்றிற்கும் அவர்களுக்கும் கொஞ்சமும் சம்பந்தமே இல்லை என்று அறிந்து மிகவும் வருத்தமுற்றேன். எப்படியோ கணிப்பொறியையும் சில வேதபுத்தகங்கள், மற்ற பாடல் புத்தகங்களையாவது கொடுத்தார்களே என்று ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். சகோ. டென்னிஸ் (பிலி) வீட்டிலிருந்து எடுத்த ஸ்டீரியோ ஸ்பீக்கர், கிட்டார், கீ போர்டு (Yamaha) ஆகியவற்றையும் கொடுத்துவிட்டனர். பாஸ்டர் பஹாரு ஆலயத்திலிருந்து எடுத்த வீடியோ நாடாக்களை கொடுக்கவில்லை. பிறகு, இவற்றை எடுத்துக் கொண்டு நாடு கடத்தப்படுவோரை வைக்கும் முகாமுக்கு கொண்டு செல்ல ஆயத்தமானோம். மணி பகல் 12.30 ஆனது. திடீரென்று ஒரு போலீஸ் வந்து எங்களிடம், "இன்றைக்கு உங்களை நாடு கடத்தப்படுவோரை வைக்கும் முகாமுக்கு கொண்டு போகவில்லை". ஆகவே உங்கள் அறைகளுக்கு திரும்பிச் செல்லுங்கள்" என்று சொன்னார். நாங்கள் திகைப்புடன் ஏன்? இன்று விடுதலை இல்லையா? நாடு கடத்தப்படுவோரை வைக்கும் முகாமுக்கு ஏன் கொண்டு செல்லவில்லை? என்று கேட்டோம். ஒரு போலீஸ் கூட சரியான பதில் சொல்லவில்லை. மேலிடத்திலிருந்து, கட்டளை வந்துள்ளது. "உங்களை இன்று விடுவிக்க வேண்டாம்" என்று மட்டும் சொல்லியவாறு பழைய சிறைஅறைகளுக்கே திரும்பவும் கொண்டு வந்து அடைந்துவிட்டார்கள்.

மறுபடியும் மிகப் பெரிய அதிர்ச்சியும் கடும் ஏமாற்றமும், பெரும் குழப்பமும் அடைந்தோம். அன்று இந்த "சூழ்நிலை எப்படி எங்களுக்கு இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இன்று உங்களுக்கு விடுதலை என்றும், நாடு கடத்தப்படுவோரை வைக்கும் முகாமுக்கு மாற்றப்பட்டு உடனடியாக உங்கள் நாட்டிற்கு அனுப்பப்படுவீர்கள்" என்று கூறியவர்கள் அன்று (டிசம்பர் 19) காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை வெயிலில் இரண்டிரண்டு பேருடைய கால்களை ஒரே சங்கிலியால் பிணைக்கப்பட்டு நின்று கொண்டிருந்த பிறகு, "மறுபடியும் ஜெயிலுக்குள் செல்லுங்கள் என்றுமட்டும் சொன்னால் எப்படி இருக்கும்? மிகவும் ஏமாற்றம், சோர்வு, அவமானமும் அடைந்தோம். ஆனால் "கர்த்தர் எல்லாம் நன்மைக்கே செய்கிறார்" என்று ஸ்தோத்திரம் செலுத்தினோம். அமைதியும் சமாதானமும் வந்தது. "நாடு கடத்த வேண்டாம், ஜெத்தாவிலேயே, குடும்பத்துடன் சேரும் படி விடுதலை செய்யுங்கள்" என்ற கட்டளை மூலம் வந்து சேரும். ஆகவே இரண்டு தினங்களில் விட்டு விடுவார்கள் என்று! சிலர் பேசிக் கொண்டார்கள். நாட்கள் ஆனது. ஒரு செய்தியும் இல்லை. ஆனால் இந்த 4 நாட்களில், 6 எத்தியோப்பிய சகோதரர்களை மூன்று மூன்று பேர்களாக விசாரணை அறைக்கு வரச் சொன்னார்கள். அவர்கள் கை, கால்களில் விலங்கிட்டு ஒருநாள் பகலில் விசாரணையாளர் அவர்களை கொண்டு வரும்படி சொன்னார் என்று போலீஸ் வந்து அழைத்துப் போனார். எங்களுக்கு கலக்கம், திகில், ஒருவித பயம் ஏற்படத் துவங்கியது. இரண்டு மாதத்திற்குப் பிறகு அதுவும் டிசம்பர் 19–ஆம் தேதி யன்று நடந்த விடுதலை நாடகச் சம்பவங்களுக்கு பிறகு எதற்காக விசாரிக்க கொண்டு போகிறார்கள். மீண்டும் ஏதாவது முக்கிய ஆதாரம் ஏதாவது கண்டு பிடித்துவிட்டார்களா? அல்லது அந்த சவுதி வாலிபனைக் கண்டு பிடித்து விட்டார்களா? விசாரணை நீண்டு விடுமா? ஜெயில் காலம் இன்னும் நீடித்து விடுமா? விடுதலை என்பதே கிடையாதா? ஆண்டவரே! ஏன் இப்படி சோதனை? ஆண்டவரே! இரக்கம் காட்டமாட்டீரா? என்று ஒவ்வொருவரும் இந்த எண்ணங்களுடன் கலங்கினோம். ஆண்டவர், "பார்வோனின் கடினமான மனதை நினைவுப்படுத்தினார், அவன் 10 முறை இஸ்ரவேலரையும் மோசேயையும் எகிப்திலிருந்து வெளியேற கடைசி நேரத்தில் தடைகளை விதித்தப்படி, 'விடுவிக்கிறோம்' என்று சொல்லி கடைசியில் தடை செய்து விட்டார்களே! என்று கலங்கினோம். ஆனால் கர்த்தர் பார்வோனை கடைசியில் இஸ்ரவேல் மக்களை விடும்படி செய்தார். அதுபோலவே நிச்சயம் சீக்கிரமாக விடுவிப்பார்! மறக்கவே மாட்டார் என்று நான் மற்றவர்களை திடப்படுத்தினேன்.

3

ஷரபியாவிலுள்ள சிறை

டிசம்பர் 24! காலை 9 மணி! போலீஸாரும், ஒரு குமஸ்தாவும் ஒரு பேப்பரில் உள்ள பெயர்களை வாசித்து அவர்களை மட்டும் வெளியே வரும்படி கூப்பிட்டார்கள். அதாவது 7 பேரை மட்டும் அழைத்து நாடுகடத்தப்படும் சிறைக்கு கொண்டு செல்ல தயார்படுத்தினார்கள். அந்த 7 பேரில் என் பெயர் வாசிக்கப்படவில்லை. அதிர்ச்சியும், திகைப்பும் அடைந்தேன். மற்ற 7 பேரை ஏன் விடுவிக்கவில்லை? மீண்டும் குழப்பமும் வினாவும் எங்கள் உள்ளத்தில் எழும்பியது. நமக்கு மட்டும் கடுமையான குற்றசாட்டு தண்டனையா? பலவாறு சிந்தனைகள் சாத்தான் கொண்டு வந்தான். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 7 பெயர்களை வாசித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த போலீஸ் அதிகாரி, வாசித்தவரை நோக்கி "ஈசாக் பிரபு" பெயர் இருக்குமே இந்த பட்டியலில்? ஏன் அவரை அழைக்கவில்லை? என்று கேட்டார். உடனே அந்த குமஸ்தா மறுபடியும் அந்த பட்டியலை சரியாகப் பார்த்துவிட்டு ஆமாம். சாரி! ஈசாக் பிரபு பெயர் இருக்கிறது. எனவே ஈசாக் வெளியே வா என்று ரூமில் வந்து அழைத்தான். 'அப்பாடா நன்றி இயேசுவே' என்று இரண்டு கைகளையும் பரலோகத்திற்கு நேராக விரித்து நன்றி செலுத்தினேன். பிறகு ஸ்டோர் ரூமில் 5 நாட்களாக வைக்கப்பட்டிருந்த என்னிடம் திருப்பிதரப்பட்ட பொருட்களை எடுத்து பிளாஸ்டிக் பைகளில் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே அனுப்பும் அறைக்குச் சென்றோம். ஆனால் எங்கள் 14 பேரில் மீதி 6 பேர்களை அன்று ஏன் வெளியே விட வில்லை? என்று மறுபடியும் அவர்களைக் குறித்து வேதனையும், கலக்கமும் அடைந்தோம். "ஆண்டவரே அவர்களையும் சீக்கிரம் வெளியே அனுப்பும் என்று ஜெபித்தேன்.

வெளியே அனுப்பும் அறையில் எங்கள் பர்ஸ்(Purse), கிரிடிட் கார்டுகள்(Credit card) போன்றவற்றைக் கொடுத்தார்கள். கால்களிலும், கைகளிலும் சங்கிலிகள் போட்டு, "ஒரு குண்டு துளைக்காத வேனில் 8 பேரையும் ஏற்றிக் கொண்டு 'ஷரபியா தர்ஹில்' என்று சொல்லப்படும் நாடு கடத்தப்படும் சிறைக்கு கொண்டு சென்றார்கள். "God is good! all the time" என்ற பாடலை கைதட்டி, பாடிக் கொண்டு சென்றோம். முதலில் எஸ்கார்ட் போலீஸ், எங்களிடம் பாடக்கூடாது

சத்தம் போடக் கூடாது என்று தடுத்தார். நாங்கள் பயப்படாமல், இனி என்ன நாம் தான் நாடு கடத்தப்பட போகிறோமே! இவர்களுக்கு இன்னும் ஏன் பயப்பட வேண்டும்? சத்துரு முகம் வெட்கப்படும்படியாக பாடியும், துதித்தும் கொண்டு 20 நிமிடங்களுக்கு பிறகு அந்த சிறையை அடைந்தோம். அங்கு எங்களை ஒப்படைக்க ஒரு மணி நேரம் ஆனது. பிறகு எங்கள் 8 பேரை ஷெட் நம்பர் 1 க்கு கொண்டு சென்றார்கள். 'ஷெட்' உள்ளே நுழைந்தபோது 300 பேர் பல நாட்டு சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அங்கு படுத்தும், உட்கார்ந்தும் இருந்தார்கள். வெறும் 'சிமெண்ட் தரை' மட்டுமே! படுக்க பாய்கூட இல்லை. குளிருக்கு போர்த்துக் கொள்ள 'போர்வை' இல்லை. டிசம்பர் மாதம் கடும் குளிர். ஏர் கண்டிஷன் வேறு குளிரைக் கூட்டியது. என்ன செய்வது? நாங்கள் அங்கு வந்ததிலிருந்து மனைவிமார்கள், மற்ற நண்பர்களை பார்க்க மீண்டும் தடை! ஆகவே போர்வை, படுக்கை விரிப்பு இவைகளை மனைவியிடமிருந்து பெற 7 நாட்கள் ஆகிவிட்டது. அதுவரை "சிமெண்டு தரையில்" படுத்தோம். சில அட்டை பெட்டிகளை அங்கு வரும் 'கிளினர்ஸ்'(CLEANERS) மூலம் பெற்று அதை பாயாக விரித்துபடுத்தோம். அப்போதும், 'தரையின் ஈரம்', குளிர்காற்று எங்களை பாதித்தது. அதனால் சகோ. கிபிரோனுக்கும், அதன் பிறகு எனக்கும் கடுமையான இருமல், கடும் காய்ச்சல் ஏற்பட்டது. அதன் பிறகு சகோ. பஹாரு, சகோ. பென்யமீன், சகோ. டின்சாய், சகோ. டென்னிஸ், சகோ. பெப்பர்கு ஆகிய அனைவருக்கும் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டது. உணவு மிகவும் மோசம். தரக் குறைவான அரிசி, மட்டன், கோழி. ஆனால் சாப்பாடு 3 வேளையும் கொண்டு வரப்பட்டது. கடந்த மாத பொதுவான சிறை வாசத்தில் சாப்பாடு தனித்தனி பொட்டலங்களில் வரும். நல்ல தரம் வாய்ந்தவையாக இருக்கும். சரியான நேரத்திற்குக் கிடைக்கும். முக்கியமான காரணம் என்னவென்றால், அந்த சிறையிலே சவுதி நாட்டவர்கள் பெரும்பாலோர் கைதிகளாக இருந்ததே ஆகும். ஏனெனில் அவர்களுக்கு நல்ல வசதி, சாப்பாடு கொடுக்கப்பட்டால் தான் அவர்கள் சிறையிலே புரட்சி செய்யாமல் இருப்பார்கள்.

ஆனால் இந்த சிறையில் நாங்கள் எல்லோரும் வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே தான் இந்த 'மட்டரகமான சாப்பாடு' பெரிய வட்டமான ஸ்டீல் தட்டு 4 பேர் சேர்ந்து சாப்பிடலாம். அந்த தட்டை ஒருபுறம் 50 பேரும் மறுபுறம் 50 பேரும் வரிசையாக நின்று கொண்டு தட்டை கையிலோ, அல்லது தரையிலோ வைத்து காத்திருக்க வேண்டும். சாப்பாடு பரிமாறுகிறவன் அந்தத் தட்டிலே சாப்பாட்டைக் கொட்டி கொண்டே வருவான். சாப்பாடு சுவையே இருக்காது. மதியம் சாப்பாடு நேரத்திற்கே வராது. சில நாட்கள் மதியம் 2 மணிக்கு அல்லது

3 மணிக்கு அல்லது 4 மணிக்குக் கூட கொண்டு வந்து போடுவார்கள். அதுவரை யாவரும் பசியோடு காத்திருக்க வேண்டியதுதான். பெரிய அலுமினிய பாத்திரத்தில் சாப்பாடு கொண்டு வருவார்கள். சாப்பாடு பரிமாறிய பிறகு அதே காலி பாத்திரங்களை ஓரமாக வைத்திருப்பார்கள். சாப்பிட்டு மீதியானவற்றை எல்லா கைதிகளும் அதே பாத்திரத்தில் கொண்டு வந்து கொட்டுவார்கள். பிறகு அதை கொண்டு போய் எப்படிக் கழுவுவார்களோ தெரியாது. அப்படி அருவருப்பான 'ஈக்கள்' மொய்த்துக் கொண்டிருக்கும். மூன்றாவது நாளிலிருந்து எனக்கு கடுமையான வயிற்றுப் போக்கு' ஆரம்பித்தது. இப்படி மூன்று நாட்கள் தொடர்ந்து இருந்தது. மிகவும் உடல் பெலனற்று போனது. 5 நாட்கள் கழித்து தான் என் மனைவி மூலம் எல்லா மருந்துகளையும் பெற்று கொண்டு யாவரும் உபயோகித்தோம். ஆனால் 5 நாட்களும் சரி மீதி நாட்களிலும் சரி ஆண்டவர் இயேசு தாமே இந்த நோய்களின், பெலவீனங்களின் மத்தியிலும் கூடவே இருந்து "என் கிருபை உனக்குப் போதும். உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாக விளங்கும்" என்று எங்களைத் தாங்கி சுகப்படுத்தினார். இந்த சிறையிலிருந்து எங்களை ஒரு வாரக் காலத்திற்குள் நாடு கடத்தியிருக்க வேண்டும். ஆனால் வேண்டுமென்றே காலத்தை கடத்தி கொண்டிருந்தார்கள். இரண்டு வாரங்கள் ஆனது. எங்கள் 8 பேரையும் அனுப்ப ஒரு வழியும் செய்யவில்லை. ஆனால் இங்கு நாங்கள் சேர்ந்து ஜெபிக்கவும், மற்றவர்க்கு "இயேசுவைக் குறித்து பேசவும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

இலங்கை சகோதரனுக்கு அற்புதம்

ஒரு கத்தோலிக்க இலங்கை சகோதரன் ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டார். அவருடைய சிறைபிடிக்கப்பட்ட கதை மிகவும் பரிதாபகரமானது. தன்னுடைய 18 வருட வேலையை முடித்துவிட்டு இலங்கைக்குச் சென்று குடும்பத்துடன் வாழ திட்டமிட்டிருந்தாராம். அதனால் அவர் "நகைக்கடை உரிமையாளரிடம் தன்னுடைய 18 வருட பணி முடிப்பு தொகை மற்றும் சம்பளபாக்கி பணத்தை (30,000 SR) கொடுக்கச் சொன்னாராம். ஆனால் அவர்களோ பணமெல்லாம் தர முடியாது, நகைகளைத் தருகிறோம்; அதை விற்று, பணத்தை எடுத்துக் கொள் என்று சொன்னார்களாம். அவர் தருகிற 18 காரட் பொன் நகைகளை யாரும் வாங்க மாட்டார்கள். வாங்கினாலும் அவருக்கு வரவேண்டிய பணத்தின் அளவிற்கு பெற முடியாது. ஆகவே தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டாராம். 'ஜெத்தா' தொழிலாளர் நீதிமன்றத்தை ரியாத் உயர் நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றியிருக்கிறார்கள். ரியாத் உயர்நீதிமன்றம் இவரை

ஜனவரி 1 ஆம் தேதிக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் டிசம்பர் 27 ஆம் தேதி இவர் தம் அடையாள பர்மிட் கார்டை எடுத்துக்கொண்டு அது 'காலக்கெடு முடிவு நிலை' ஆனதை கவனிக்காமல் சிட்டி சென்டருக்கு(City Center) சென்றதால் போலீஸ் சோதனையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த சிறையில் கொண்டு வந்து அடைத்து விட்டார்கள். ஒரே கண்ணீரும், சோகமுமாய் காணப்பட்டார். சிங்களம், ஓரளவு அரபியும் தவிர ஆங்கிலம், தமிழ் தெரியாதவர் ஆவார். தனியாக உலகமே வெறுத்தது போல அமர்ந்திருந்தார். மாற்று துணியோ, படுக்க பெட்ஷீட்டோ இல்லை. நான் அவரை அணுகி பேச்சுக் கொடுத்தேன். அவரை ஆற்றினேன். ஆண்டவர் இயேசு கைவிடார்; விலகிடார். அவரைப் பற்றிக் கொண்டு ஜெபியுங்கள். கர்த்தர் வழி செய்வார். டிசம்பர் 31 ஆம் தேதி 'ரீயாத்' கோர்ட்க்கு நீங்கள் செல்லும்படி யாரையாவது கர்த்தர் அனுப்பி உங்களை இங்கிருந்து ஓரிரு நாட்களில் விடுவிப்பார்" என்று தைரியப்படுத்தினேன். ஆனாலும் அவருக்கு முதலில் நம்பிக்கை இல்லை, தன் முதலாளி வந்து விடுவிப்பார் என்று! காரணம் 30,000ரியால் கொடுக்க வேண்டிய தன் முதலாளி தன் மீது இவர் வழக்கு போட்டு இருப்பதால், இது தான் நல்ல சமயம் என்று எப்படியாவது இவர் நாடு கடத்தப்பட்டு விடட்டும் என்று நினைப்பார். ஏமாற்றுவார்கள். இப்படி நிறைய பேர் அப்படி பாதிக்கப்பட்டவர்கள் இங்கு உண்டு. "ஒன்றுமே இல்லாமல் நான் இந்த கந்தைத் துணியுடன் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவேனே" என்று வேதனையுடன் காணப்பட்டார். ஆண்டவர் இயேசுவை இருதயத்தில் முழு மனதுடன் ஏற்று வாழ்வை ஒப்புக்கொடுங்கள். அவரைப் பற்றிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். நிச்சயம் விடுதலைத் தருவார். சோர்ந்து போக வேண்டாம். சிகரெட் பிடிப்பதை விட்டு விடுங்கள். "மேரி மாதாவை தெய்வமாக வணங்குவது தவறு" ஒரு புனிதவதியாக மட்டும் மதியுங்கள்! என்று எடுத்துக் கூறினேன். அற்புதமாக 3–வது நாளில் (டிசம்பர் 30) ஒரு இலங்கைத் தூதரக அலுவர் ஒருவர், முதலாளியைக் கண்டுபிடித்து அவர் உதவியுடன் வந்து அவரை வெளியே எடுத்துக் கொண்டு போனார். அவரால் நம்ப முடியவில்லை, 3 நாட்களில் விடுதலையாவோம் என்று! இப்போது ஜனவரி 1 தேதிக்கு ரீயாத் நீதிமன்றத்துக்கு போக முடியும்" என்று கண்ணீருடன் நன்றி சொல்லிவிட்டுப் போனார். அன்று இரவு செல் போனில் நான் இருக்கிற சிறைக்கு எனக்கு போன் செய்து பேசினார், "சகோதரா எனக்கு மிகவும் சந்தோஷம்! நான் விடுதலையாவேனோ, யார் வந்து என்னை முயற்சி செய்து என்னை விடுவிப்பார்கள்? எப்படி ரீயாத் நீதிமன்றத்திற்குப் போவேன். என் பணவிஷயமாக ஜனவரி முதல் தேதிக்கு போக முடியுமா? என்று சோர்வுடன் இருந்தேன். ஆனால்

நீங்கள் சொன்ன மாதிரியே 3 நாட்களில் என் தூதரக அலுவலர் வந்து என்னை விடுவித்தார்கள். நாளை ரீயாத் நீதிமன்றத்துக்குப் போகிறேன். நிச்சயம் வெற்றி பெறுவேன் என நம்பிக்கை இருக்கிறது. நான் இயேசுவை முழுமையாக ஏற்றுக்கொள்ளுகிறேன். என் வாழ்வில் அற்புதம் செய்த அவரை நம்புவேன். சிகரெட் பிடிப்பதை விட்டுவிட்டேன்" என்றார். பாருங்கள்! எவ்வளவு பெரிய சாட்சி! ஆண்டவர் நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! இதை இவ்வளவு விவரமாக எழுதுவதின் காரணம். கர்த்தர் எங்கள் ஒவ்வொருவரையும் சாட்சியாக அந்த ஜெயிலில் உபயோகித்தார் என்பதற்காகவே ஆகும்.

3வது சிறையில் சுவிசேஷப் பணி

மேலும் சில பாகிஸ்தான், சோமாலி, சூடான் முஸ்லீம் கைதிகளோடு சத்தியத்தையும் இயேசுவைப் பற்றியும் புரிந்து கொள்ளும் விதத்தில் பல மணி நேரங்கள், குறிப்பாக சகோ. பஹாரு, டின்சாய் போன்றோர் கர்த்தருடைய சுவிசேஷத்தை இவர்களுடன் (எத்தியோப்பிய சகோதரர்கள்) பகிர்ந்து கொண்டார்கள். கர்த்தருடைய நோக்கத்தை எங்கள் சிறைவாச பாடுகள் மத்தியில் புரிந்து கொண்டோம்.

ஆனால் 4–வது நாள் நம் எதிரியின் தாக்குதல் நடந்தது. நாங்கள் சேர்ந்து ஜெபிக்கிறோம், வேதம் வாசிக்கிறோம். அப்போது அங்குள்ள முஸ்லீம்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கிறோம், இஸ்லாமுக்கு எதிராக அங்கு செயல்படுகிறோம் என்று அங்குள்ள கைதிகளில் ஒருவன் போய் அந்த சிறை மூத்த காவலாளியிடம் சொல்லிவிட்டிருக்கிறான். நாங்கள் பகல் 12–மணிக்கு சேர்ந்து ஜெபித்துவிட்டு அமர்ந்திருந்த வேளையில் திடீரென்று ஒரு சவுதி போலீஸ் கையில் தடியும், இரும்பு கம்பியுடன் ஷெட்டில் நுழைந்து எங்கள் 8 பேரையும் "எழுந்து வெளியே வாருங்கள்!" என்று வெளியே தள்ளிக் கொண்டு போனார். இன்று சரியான 'விளாசல்' தான் என்று பயந்து நடுங்கினோம்! ஆனால் நடப்பது நடக்கட்டும்! தேவனுக்கு ஸ்தோத்திரம்! என்று நின்றோம். பிறகு ஒரு இளைய போலீஸ் "சத்தமிட்டு கொண்டே கையில் தடியுடன் என்னையும், பாஸ்டர். பஹாருவையும் நெருங்கி வந்தான். எங்கள் சட்டைக் காலரைப் பிடித்து 'தரதர' வென்று இழுத்துக் கொண்டு உங்களிடம் உள்ள வேதாகம புத்தகங்களை எடுங்கள்! வெளியே கொண்டு வாருங்கள்! என்று எங்கள் இருவரையும் தள்ளிக் கொண்டே என்னை வயிற்றில் கிள்ளிக் கொண்டே நாங்கள் படுத்திருந்த இடத்திற்கு கொண்டு சென்றார்கள். எங்களுடைய வேத புத்தகங்களை எடுத்து கொண்டோம். மறுபடியும் வெளியே கொண்டு வந்து 8 பேரையும் மிரட்டினார்கள். இப்போதே மறுபடியும் முதலில் 5– மாதங்கள் இருந்த பொதுசிறைக்கு உங்களை அனுப்பப்போகிறோம். இங்கும்

எங்களை மதம் மாற்றுகிறீர்களா? என்று கோபத்துடன் கேட்டார்கள். பிறகு நன்றாக அரபிக் பேசும் சகோ. டின்சாய் அந்தப் போலீசாரிடம் நாங்கள் யாரையும் மதம் மாற வற்புறுத்தவில்லை. நாங்கள் எங்களுக்குள் ஜெபித்து எங்கள் ஆண்டவரைத் தொழுதோம். சந்தேகம் கேட்ட மற்ற முஸ்லீம்களுக்கு விளக்கினோமே தவிர யாரையும் வற்புறுத்தவில்லை. உங்கள் மதத்தை இழித்துப் பேசவில்லை என்று விளக்கி சொன்ன பிறகே 'சரி சரி' இனிமேல் இந்த குற்றச்சாட்டு வரக்கூடாது. நீங்கள் மட்டும் உங்கள் தொழுகை செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! பெரிய ஒரு தண்டனை, அடி, சித்திரவதையிலிருந்து சாத்தானின் இன்னொரு பெரிய தாக்குதலிலிருந்து கர்த்தர் எங்களை தப்புவித்தார். அதன் பிறகு அங்கிருந்த பெரும்பாலான முஸ்லீம்கள் வந்து, "நாங்கள் யாரும் சொல்லவில்லை ஒரே ஒரு ஆள் சொல்லியிருக்கிறான். பயப்பட வேண்டாம்!" என்று தேற்றினது, ஆறுதலாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. அதன் பிறகும் நாங்கள் குழுவாக ஜெபித்து துதித்து கொண்டிருந்தோம். 14 நாட்கள் அந்த ஜெயிலில் கஷ்டப்பட்டோம். ஈ, கொசுக்கள், கழிவறை 300 பேருக்கு மூன்றுதான். அவை சரியாக கழுவப்படுவதில்லை. பயங்கர நாற்றம்! ஒருநாள் இரவு சரியான மழை. சாரல் அடித்தது. பக்கவாட்டிலிருந்த திறப்புகள் வழியாக மழைத் தண்ணீர் உள்ளே வர ஹால் நடுவே தண்ணீர் வாய்க்கால் மாதிரி ஓடி வந்தது. அங்கிருந்த சிறைக்கைதிகளே அந்த மழைத் தண்ணீரை பெருக்கித் தள்ளினார்கள்.

மீண்டும் சத்துருவின் தாக்குதல், சகோதர ஐக்கியம் குலைவு

இதற்கிடையில் சத்துருவாகிய சாத்தான் எங்கள் சகோதரருக்குள்ளே சில சந்தேகங்கள், மனக்கசப்புகளை விதைக்கத் துவங்கிவிட்டான். இந்த சம்பவத்தையும் மனம் திறந்து எழுதுவது, பிற்கால ஊழியத்திற்கும், மற்ற ஊழியருக்கும் உதவியாக இருக்கும் என்று நம்பி இதை வெளிப்படையாக எழுதுகிறேன். ஆம், நாங்கள் இவ்விதமாக 5 மாதங்கள் சிறையில் இருந்தபொழுது, குடும்பம், பிள்ளைகளின் படிப்பு, வீட்டு வாடகை, பிற செலவுகளுக்கு சிரமப்படுவதை அறிந்து, ரீயாத் மற்றும் ஜெத்தா விசுவாசிகள், மற்றும் பல நாட்டு சகோதரர்கள் 13 குடும்பங்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பார்கள். பெரும்பாலும் இந்தப் பணத்தொகையை என் மனைவியும், மற்றும் ஒரு கேரள சகோதரர் அமெரிக்க நண்பர் மூலமும் அவரவர் குடும்பத்திற்கு சேரும்படியாக செய்து வந்திருக்கிறார்கள். நானும் என் மனைவியின் மூலம் மற்ற எத்தியோப்பிய, நைஜீரியா,

பிலிப்பினோ சகோதர குடும்பங்களுக்கு கொடுக்கப்படும் பணத் தொகைகளை பார்வையாளர் நேரத்தில் அறிந்து வந்து அதை அந்த சகோதரர்களுக்கும் அறிவிப்பேன். முதலில் யாவரும் சந்தோஷப் பட்டார்கள். என் மனைவியையும், மற்ற சகோதரர்களையும் புகழ்வார்கள். இதில் என்ன குழப்பமோ சந்தேகமோ தெரியவில்லை! சாத்தான் அவர்கள் உள்ளத்தில் திடீரென்று சந்தேகத்தை எப்படி விதைத்தானோ, தெரியவில்லை? இந்தப் பணம் யார் கொடுத்தது? எவ்வளவு? சில குடும்பத்திற்கு அதிகம் ஏன்? மற்றவர்க்கு குறைவு ஏன்? எங்களுக்கு கணக்குக் காட்ட வேண்டும் என்று என்னிடம் சண்டை போடவும், கோபமாக பேசவும், ஆப்ரிக்க சகோதரர்கள் முற்பட்டார்கள். என் மனம் உடைந்து போனது! ஏற்கெனவே 5½ மாதங்கள் சிறைச்சாலையில் சித்திரவதைப் பட்டு ஊருக்குப் போகும் வேளை நெருங்கி வந்து விட்ட நிலை! சகோதரர்கள் இவ்வளவு நாட்கள் என்னையும், என் மனைவியையும் பாராட்டினவர்கள் திடீரென சந்தேகம், கோபம், மனக்கசப்பு அடைய ஆரம்பித்தது எனக்கு மிகவும் வேதனை அளித்தது. என் மனைவி கொஞ்சம் முன் கோபக்காரி. ஆயினும் தன் பணியில், குடும்பம், வேலைஸ்தலம், பண விஷயம் மற்றும் ஊழியக்காரியங்களிலும் நேர்மையாக ஒழுங்காக, கண்டிப்புடன் நடந்து கொள்வாள். அவள் ஒரளவிற்கு, தன் அறிவுக்கு தெரிந்தவரை கணக்கு எழுதி, விநியோகம் செய்துள்ளாள். ஆனால் சிறு, சிறு தொகைகள், தனி நபர், குழுக்கள் என்று கொடுத்ததை முழுவதும் எழுதி வைக்கவில்லை. ஆனால் உடனுக்குடன் எந்த தொகையானாலும் சேர வேண்டிய குடும்பங்களுக்கு அனுப்பி கொடுத்திருக்கிறாள். இப்படி எல்லா பாடுகள், வேதனை, துக்கம், ஏமாற்றம், பயம், திகில் மத்தியில் இந்த ஆப்ரிக்க சகோதரர்கள் குடும்பங்களுக்கு உதவி செய்யப் போய், கடைசியில் இப்படி கணக்கு காட்டச் சொன்னது வேதனையாக, அவமானமாயிருந்தது. ஏன் ஆண்டவரே, போற்றியவர்களே தூற்றுகிறார்களே! என்று கண்ணீர் விட்டேன். மனைவிக்கு உடனே போன் செய்து எப்படியாவது நினைவுபடுத்தி ஒவ்வொருவர் கொடுத்ததையும் விவரமாக எழுதி கொடுத்தனுப்பு என்றேன். அவளுக்கு வேதனை! அதிர்ச்சி! முதலில் "எனக்கு நேரமில்லை", என்று கோபப்பட்டாலும் பிறகு ஒரு இரவு முழுவதும் உட்கார்ந்து எழுதி அனுப்பினாள். "கர்த்தர் யெகோவாயீரேவாக இருந்து, உங்கள் குடும்பங்களுக்கு இந்த நிலையில் உதவியதே, மிகப் பெரிய கிருபை! நானும் யாவரையும் கேட்டு வாங்கிக் கொடுத்தனுப்பினேன். இருந்தும் இப்படி பணத்திற்காக சகோதர ஐக்கியத்துள்ள சாட்சியை கெடுத்துவிடாதீர்கள்! தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடாதிருங்கள்" என்று சொல்லி எல்லா பண விவரங்களையும் முடிந்த அளவு எழுதி அனுப்பியிருந்தாள். அந்த கடிதம் வந்து சேரும்வரை

இப்பிரச்சனை சுமூகமாக தீர உபவாசித்து ஜெபித்தேன். அதை அந்த எத்தியோப்பிய சகோதரர்களிடம் காட்டினேன். அவர்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு அதில் கண்ட விவரங்களை சரியெனக் கண்டு தங்களுடைய தவறான, சந்தேகமான எண்ணங்களுக்காகவும், கோபமான வாக்குவாதங்களுக்காகவும் வருத்தப்பட்டு என்னிடமும் என் மனைவியிடமும் மன்னிப்புக் கேட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எங்களுக்குள் அவரவர் நாட்டிற்கு சமாதானமாய் செல்வதற்கு முன்பு, சாத்தான் சண்டை மூட்டி பிரிவினை உண்டாக்க போட்ட திட்டம் தோற்றுப் போனது. அல்லேலூயா! மறுபடியும் சகோதர ஐக்கியம் உறுதிப்பட்டது. இந்த சம்பவத்திலிருந்து இனி ஊழியத்தில் அதுவும் பண விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. ஒரு பைசாவானாலும் கணக்கு எழுதிக்காட்ட வேண்டும். யார் எப்படி மாறுவார்கள் என்று தெரியாது. நம் வரையில், நம் பொறுப்பில் இன்றும் நேர்மையாக ஒழுங்காக நடந்து கொள்வோம் என்று முடிவு எடுத்தேன். படிக்கிற உங்களுக்கு இதை ஒரு ஆலோசனையாக எழுதுகிறேன்.

சத்துருவின் கொலைத் திட்டம்

மறுபடியும் தொடர்ந்து சாத்தானின் மறைமுக கொலைத் திட்டம் என்னை எதிர்கொண்டது! ஆம். ஓர் இரவு 10 மணிக்கு கழிவறைக்கு சென்றேன். பல்புகள் எரிவதில்லை. வெளிச்சம் கிடையாது. அப்படி சென்றுவிட்டு திரும்புகையில் ஒரு மிக ஆழமான கழிவு நீர் தொட்டி(DRAINAGE) சரியாக மூடி போடாததால், தெரியாமல் என் கால்களை அதன் உள்ளே விட்டுவிட்டேன். அப்படியே தோள் பட்டைவரை உள்ளே ஆழத்தில் சென்றுவிட்டது. என்ன செய்வது! உடனே என் இரண்டு கைகளையும் மேலே உள்ள தரையை பிடித்து மேலே எழும்ப முயன்றேன். முடியவில்லை. ஆனால் அந்த நேரம் பார்த்து இரண்டு வெளிநாட்டார்(Bangladesh) அந்த வழியாக வந்தவர்கள் என்னுடைய இந்த நிலைமையைக் கண்டு திடுக்கிட்டு, உடனே ஓடி வந்து என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்து மேலே தூக்கி எடுத்தனர். இடது கால் பெருவிரல் நகம் பெயர்ந்து அப்படியே வெளியே வந்து விட்டிருந்தது. ஆகவே காலில் இரத்தம் கொட்டியது. சிராய்ப்பு, உடலில், உடையில் சேறு வேறு. இரண்டு கைகயையும் மேலே உள்ள தரையை பிடித்து ஊன்றி இராவிட்டால் நான் முழுவதுமாக அந்த கழிவுநீர் சாக்கடையில் அமிழ்ந்து போயிருப்பேன். அப்படி ஒருவேளை நடந்து இருந்தால் இந்த காரியம் ஒருவருக்கும் தெரியாமலேயே போயிருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அற்புதமாக என்னை சரியான நேரத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் மட்டுமின்றி சரீரப்பிரகாரமாகவும் என்னைத் தப்புவித்தார் அல்லேலூயா! பிறகு அருமையான எத்தியோப்பிய சகோதரர் டின்சாய்,

பிலிப்பினோ சகோதரர் டென்னிஸ் ஓடிவந்து என் காலில் வடியும் இரத்தத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தினார்கள். உடலில் பூசி இருந்த சேற்றை கழுவி அகற்றினார்கள். ஆண்டவர் இயேசு தம் சீடர்களுடைய பாதங்களை திருவிருந்திற்கு முன்பு கழுவின அந்தக் காட்சி என் மனக்கண் முன் தோன்றியது. இந்த அருமை சகோதரர்களும் கூட என் இரண்டு கால்களை தங்களுடைய கைகளால் கழுவி சுத்தப் படுத்தினார்கள். என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது! என்னை ஆபத்திலிருந்து தப்புவித்த ஆண்டவருக்கு நன்றி ஏறெடுத்தேன். **"என் ஆத்துமாவை மரணத்திற்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும் என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்"** (சங்.116:8) என்று நன்றி உணர்வோடு கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

இந்த நாட்களில் இந்த சிறையில் கிடைத்த நன்மை என்னவென்றால் இங்கு சில கைதிகள் தங்களுடைய கைப்பைகளை உள்ளே கொண்டு வரும்போது "செல்போன்களை கொண்டு வந்து விடுவார்கள். அதன் மூலம் மறைவாக வைத்துக் கொண்டு வெளியிலுள்ள மனைவி, நண்பர்களிடம் பேச முடியும். வெளியில் ரூ. 2/– ஒரு நிமிடத்திற்கு என்றால் உள்ளே ரூ. 5 அல்லது 10/– என்று வசூலித்து விடுவார்கள். முதல் 3 நாட்கள் அப்படி செலவு செய்து மனைவி மற்றும் நண்பர்களோடு பேசினோம். மிகவும் ஆறுதலாக இருந்தது. அமெரிக்க, ஆஸ்திரேலிய நண்பர்களுக்கு எங்கள் செல்போன் நம்பர் கொடுத்து, அவர்கள் எங்களோடு தொடர்பு கொண்டு மணிக்கணக்கில் எங்கள் ஒவ்வொருவரிடமும் பேசியது மிகவும் சமாதானம் சந்தோஷத்தைக் கொடுத்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களை அவரவர் நாட்டிற்கு அனுப்ப செய்ய வேண்டிய விதிமுறைகளை அந்த பாஸ்போர்ட் ஆபீசில் துரிதமாக செய்யாமல் வேண்டுமென்றே தாமதம் செய்தார்கள். இதற்கிடையில் அந்த ஜெயிலில் அருமை நண்பர்கள் சகோ. கென்ரிக்(USA), சகோ. சாங்(KOREAN), சகோ. பர்வீஸ், சகோ. பஷீர்(PAKISTHAN), சகோ. ஆஷிர்(PAKISTHAN) எங்களை வந்து பார்த்தார்கள். சகோ. சாங்கும், சகோ. பர்வீஸ் எங்களைக் கண்டவுடன் அவர்கள் கண்ணீர் கன்னத்தில் வழிந்தோடியது, என் இருதயத்தை நெகிழ வைத்தது. சகோ. சாங் பழகி ஒரு மாதம் கூட இல்லை. எவ்வளவு தூய கிறிஸ்தவ அன்பு அது! ஆனால் ஒரு சில இந்திய விசுவாசிகளுக்கோ அவ்வளவு பயம். ஒரிரு விசுவாசிகள் மட்டுமே எங்களைப் பார்க்க முயற்சித்திருக்கிறார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் சகோதரன் மோகனும், சகோ.பியூசும் மேலும் சகோ. சிவாஜி – மராட்டிய சகோதரர்கள் (தங்களுக்கு தெரிந்த அங்கு வேலை செய்கிற கிளீனர் (இந்தியர்)) மூலம் போர்வை, படுக்கை

விரிப்பு, சாப்பிட ரொட்டி எல்லாம் வாங்கி கொடுத்தனுப்புவார்கள். சகோ. அருண் அடிக்கடி இந்திய தூதரக ஆட்களுடன் வந்து தகவல்களை, மருந்துகளை, உணவு பண்டங்களை கொடுத்துவிட்டு என்னிடம் இருந்து, என் மனைவிக்கும், மற்றவர்களுக்கும் தகவல்களை சேகரித்துச் செல்வார். இப்படியாக ஒரு வாரத்திற்கு மேல் அந்த 'ஷரபியா' என்ற வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் சிறையில் நாட்கள் கடந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் என்னுடைய பாஸ்போர்ட் ஆபிஸர் ஒருநாள் என்னை அழைத்து "உன் மனைவி எங்கே? அழைத்து வா! என்றார். நான், "அவள் என் சகோதரன் வீட்டில் தங்கி இருக்கிறாள், அவளை ஆஸ்பத்திரி கிளார்க்கும், இந்திய தூதரக ஆட்களும் பொறுப்பெடுத்து இந்திய நாட்டிற்கு அனுப்புவார்கள்" என்றேன். எங்களை ஒரே நாளில் விமான நிலையத்திற்கு கொண்டு சென்று இருவருக்கும் ஒரே விமானத்தில் புக் செய்து அனுப்புங்கள் என்றேன். அந்த ஆபிஸருக்கு திடீரென்று கோபம் வந்து என் வயிற்றை கிள்ளியவாறு, வயிற்றில் ஓங்கி ஒரு குத்துவிட்டார்.வலியை சகித்துக் கொண்டேன், ஆனாலும் இது மற்றவர்கள் மத்தியில் செய்த போது அவமானமாக இருந்தது. மனைவியோடு சேர்ந்து போக வேண்டும் என்று சொன்னதற்கு இந்த அவமானமா! கேட்டதில் என்ன தவறு? என்று கேட்டேன். அவர் சொன்னார், "உடனே உன் மனைவியை ஊருக்கு அனுப்பு! பிறகு உன்னை அனுப்புகிறோம் என்று கனத்த குரலில் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். வேதனையோடு எங்கள் அறைக்கு திரும்பினேன். என் மனைவியும், இந்திய தூதரகத்தின் மூலம் இரண்டுபேருமாக ஏர்போர்டிற்கு எடுத்து செல்லப்பட்டு ஒரே விமானத்தில் அனுப்ப பலமுறை முயற்சித்திருக்கிறது, தூதரக அதிகாரிகளிடமும் இதே வார்த்தைகளைக் கூறியிருக்கிறார்கள். இதை அறிந்த நானும் "என் மனைவியிடம் நீ ஊருக்குப் புறப்படு" என்னைப் பற்றி கவலைப்படாதே! கர்த்தர் என்னைக் கொண்டு வருவார். "நீ போய் பிள்ளைகளுக்குத் துணையாக இரு" என்று கூறினேன். முதலில் மறுத்த அவள் பிறகு தன்னால் என்னுடைய 'விடுதலை'; 'நாடு கடத்தப்படுதல்' தாமதம் ஆகலாம், ஆகவே முதலில் நான் போகிறேன் என்று ஒத்துக்கொண்டாள்.

"மனைவிக்கு வந்த சோதனை"

அவளுடைய ஆஸ்பத்திரி எழுத்தர்க்கும், பாஸ்போர்ட்டை, பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு அனுப்பி வெளியேற்ற முத்திரை போட அனுப்பியுள்ளார். ஜனவரி 2 ஆம் தேதி விமானடிக்கெட் பதிவு செய்தாகிவிட்டது. என் மனைவி ஜனவரி 2 ஆம் தேதி காலை ஆஸ்பத்திரி எழுத்தருக்கு போன் செய்து, பாஸ்போர்ட் தயாராகி விட்டதா? மாலை நான் விமான நிலையத்திற்கு செல்லலாமா? என்று

வினவியிருக்கிறாள். அப்போது அவன், "உன்னுடைய பாஸ்போர்ட் இன்னும் தயாராகவில்லை. "நீ காணவில்லை" என்று பாஸ்போர்ட் இமிகிரேஷன் (IMMIGRATION) அலுவலகத்தில் உள்ள கம்பியூட்டர் தெரிவிக்கிறது. ஆகவே உன்னைத் தேடுகிறார்கள். நீ ஆஸ்பத்திரி கட்டுப்பாட்டு அறையில் இருக்க வேண்டியவள். வெளியே தங்கி இருந்ததால் ஆஸ்பத்திரி அதிகாரிகள் "நீ காணவில்லை" என்று பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நீ ஆஸ்பத்திரி அதிகாரியிடம் சரண் ஆகிவிடு! இல்லையேல் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அப்படியானால் இமிகிரேஷன் போலீஸ் அவளை கைது செய்து "பெண்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் ஜெயிலில் அடைத்து பின்பு நாட்டிற்கு அனுப்பப்படலாம் என்பதே அதன் விளக்கமாகும். இந்த செய்தியை, அவள் செல்போனில் தெரிவித்து விட்டு 'ஒ' என்று போனிலேயே அழ ஆரம்பித்தாள். முதலில் எனக்கு எப்படி அவளைத் தேற்றி பெலப்படுத்துவது என்றே தெரியாமல் திகைத்தேன். ஆனாலும் உடனே, " பயப்படாதே, தைரியமாக இரு" இது சாத்தானுடைய மற்றொரு தாக்குதல்; கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார் என்று அவளைத் தேற்றினேன். அதன் பிறகு அவள் இந்திய தூதரக அதிகாரி மருத்துவமனை நிர்வாகியை சந்தித்து, தாங்களே அவளை இந்தியாவிற்கு அனுப்ப பொறுப்பெடுத்துக் கொண்டார்கள் என்ற செய்தி கொஞ்சம் நிம்மதி அளித்தது. ஆண்டவருக்குத் ஸ்தோத்திரமும், நன்றியும் ஏறெடுத்தேன். இந்த ஒழுங்கு செய்யப்படும்வரை என் மனம் நிம்மதியற்று கலங்கியிருந்தது. ஆனால் கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு, என் மனைவியைப் பெண்கள் நாடு கடத்தப்படும் ஜெயிலில் வைக்கப்படாமல் தப்புவித்து வழி நடத்தினார். அல்லேலூயா!

இரண்டு வாரங்கள் இந்த "ஷரபியா" ஜெயிலில் நாட்கள் கடந்து விட்டது. நாங்கள் நாடு கடத்தப்படுவதற்கு செய்யப்படவேண்டிய வழி முறைகளை இந்த பாஸ்போர்ட் அலுவலகம் அதிகாரிகள் ஒன்றும் செய்யவில்லை வேண்டுமென்றே தாமதித்துக் கொண்டிருந்தார்கள்.

4

புரைமான் சிறை

ஒருநாள் திடீரென்று ஒரு வேனை (VAN) கொண்டு வந்து எங்கள் 14 பேரையும் அதில் ஏற சொன்னார்கள். எங்கு? என்று கேட்டதற்கு சரியான பதில் இல்லை. ஆனால் நாங்கள் சந்தோஷத்தோடே நினைத்தோம், "நேராக விமான நிலையத்திற்கு தான் கொண்டு செல்கிறார்கள் என்று நினைத்தோம். ஆனால் பெரும் ஏமாற்றம் எங்களுக்கு காத்திருந்தது. வேன் நேராக "புரைமான்" என்ற வேறொரு சிறைக்குச் சென்றது. அந்த சிறையும் நாடு கடத்தப்படவேண்டிய கைதிகளைக் கொண்டது. அங்கு அந்த சிறைக்குள் எங்கள் 14 பேரையும் உள்ளே தள்ளினார்கள். உள்ளே நுழைந்தவுடன் அந்த ஷெட்டைப் பார்த்தபோது அதிர்ச்சியுற்றோம். சுமார் 400 பேர்கள் இருக்கவேண்டிய அந்த ஷெட்டில் ஏறக்குறைய 1200 பேர்கள். சாதாரணமாக இருப்பதை விட மூன்று மடங்கு கைதிகள் அங்கிருந்தனர். அவரவர் நாட்டிற்கு அனுப்பப்படுவதற்கு பற்பல ஜெயில்களிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். தேன்கூட்டிலே ஒட்டிக் கொண்டிருக்கும் தேனீக்களைப் போல தரையில் நெருக்கிப் படுத்துக் கொண்டிருந்தார்கள். எங்களுடைய பழைய துணிகள் கொண்ட தோள் பைகளை சுமந்தவாறு நாங்கள் உள்ளே போய் நின்றோம். உட்காரச் சொல்லக் கூட ஒருவரும் முன்வரவில்லை. காரணம் நிற்க, உட்கார இடமே இல்லை. பிறகு எப்படி படுக்க இடம் கொடுப்பார்கள்? ஆச்சரியமாக எத்தியோப்பிய சகோதரர்களுடைய பழைய நண்பர்கள் ஒரு பகுதியில் இருந்தார்கள். அவர்கள் நம் எத்தியோப்பிய சகோதரர்களைப் பார்த்தவுடன் தங்கள் இடத்தில் வந்து, சமாளித்து படுக்க அழைத்தார்கள். சரி கைப்பைகளை மாட்ட இடம் இல்லை. அங்கு இருக்கும் கைதிகள் என்ன செய்வார்கள் என்றால். அந்த ஷெட்டில் வெறும் இரும்புத் தகட்டால் செய்யப்பட்ட சுவர்களில் அங்கிருக்கும் சிறு கம்பிகளை வளைத்து ஆணி போலாக்கி தகடு சுவரின் இடைவெளிகளில் நுழைத்து அதில் பைகளை தொங்க விடுவார்கள். சில நேரங்களில் அந்த தற்காலிக கம்பி ஆணிகளில் மாட்டப்பட்ட கைப்பைகள் "பளு" அதிகமாயிருந்தால் தாங்காமல் கீழே தூங்கிக் கொண்டிருக்கும் நபர்களின் முகத்தின் மீது 'தடால்' என்று விழுவது உண்டு. இதனால் பை மாட்டியவருக்கும் கீழே பாதிக்கப்பட்டவருக்கும்

சண்டை ஏற்படும். மேலும் இந்த கைதிகள் ஏற்கெனவே 2லிருந்து 5 வருடங்கள் வரை பெரிய கிரிமினல் சிறைகளில் அடைக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டு அந்த 'புரையான்' ஜெயிலுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள். போதை மருந்து விற்பவர்கள், சாராயம் காய்ச்சி விற்பவர்கள், கற்பழிப்பு, பாங்க் கொள்ளை, வீட்டில் திருடு போன்ற கடும் குற்றங்களைச் செய்தவர்கள். இப்படிப்பட்ட மோசமான குற்றவாளிகள் மத்தியில் தேவனுடைய பிள்ளைகளாகிய எங்களை சுவிஷேசம் அறிவித்ததற்காக, ஜெபக் கூட்டங்களை நடத்தியதற்காக மட்டுமே கைது செய்யப்பட்டு, இவ்விதமாக வேண்டுமென்றே அவமானப்படுத்தினார்கள். வேதனை யாக இருந்தாலும் உடனே நம் "ஆண்டவர் இயேசுவே வானத்தையும், பூமியையும் படைத்த மகிமை பொருந்தியவர் கள்ளர் மத்தியில் கள்ளனாக நமக்காக கல்வாரியிலே தொங்கிய காட்சி என் கண்கள் முன்பாக வந்தது. என்னை நானே தேற்றிக் கொண்டேன். பற்பல நாடுகளைச் சேர்ந்த கைதிகள் "ஐ.நா. சபையைப் போல அங்கு போடப்பட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலும் தொற்று நோய் உள்ளவர்கள். எய்ட்ஸ் நோயாளி பாதிக்கப்பட்ட கைதிகளும் ஒரு மூலையில், ஆனால் அதே ஷெட்டில் போடப்பட்டிருந்தார்கள். முன்பிருந்த சிறையில் சிமெண்ட் தரையாவது இருந்தது. இங்கு அது கூட இல்லை. வெறும் மண்தரை. பழைய சிறையிலிருந்து வரும்போது எடுத்து வந்த சில "பெட்ஷீட்களை" தரையிலே விரித்து படுத்திருந்தார்கள். மிகவும் கோரமான காட்சியாக இருந்தது. எப்படியோ நெருக்கிக் கொண்டு உட்கார்ந்தோம். இரவு வந்தது. படுக்க வேண்டுமே ஒரு சகோதரன் இரவு 12 முதல் 3.00 மணி வரை படுத்து எழுந்தவுடன் மற்ற சகோதரன் அடுத்தமுறை படுக்கலாம். அதாவது முறைவைத்து படுத்துக் கொள்வோம். கால்களை நீட்டி மல்லாந்து படுக்க முடியாது. கால்களை நீட்டினால் கீழே படுத்திருக்கும் யாருடைய தலையில் நம் கால்கள் இடிக்கும். ஆகவே கால்களை மடித்து தான் உறங்க வேண்டும். ஒரு பக்கமாக தான் பெரும்பாலும் படுக்க முடியும். நான் சகோ. ஆராயா, சகோ. இஸ்கந்தர் மூத்த சகோதரர்கள் என்பதால் எங்களுக்கு இடம் கொடுத்துவிட்டு இளைய எத்தியோப்பிய சகோதரர்கள் சகோ. யூசுப், சகோ. கவாயூ, சகோ. மிஸ்பின் போன்றோர் சில இரவுகள் நின்று கொண்டே தள்ளாடி உறங்கிக் கொண்டிருந்த காட்சியை இப்போது நினைத்தாலும் என் நெஞ்சம் நெகிழ்கிறது. கண்ணீர் திரண்டு நிற்கிறது. அவ்வளவு மரியாதை, தியாக அன்பு என் மீதும் மற்ற மூப்பர்கள் மீதும். கர்த்தர் அவர்களை அபரிமிதமாய் ஆசீர்வதிக்கட்டும்!

அதே ஷெட்டிலுள்ள ஒரு மூலையில் கழிவறைக்குச் செல்ல முற்பட்டேன். 50 அடி தூரம் அந்த கழிவறையை அடைய பல 'சர்க்கஸ்

வித்தைகள்' செய்து கொண்டு தான் சென்றடைய முடியும். காரணம் என்ன என்று கேட்கிறீர்களா? ஆம் வழியெங்கும் இடைவெளியில்லாமல் எல்லோரும் படுத்தும் உட்கார்ந்தும் இருப்பதால் நடக்க பாதையே இருக்காது. எப்படியோ கூட்டத்தினரை விலக்கி குதித்து தாண்டி 50 அடி தூரமுள்ள அந்த கழிவறைக்கு போய் சேருவோம். அங்கு சென்று பார்த்தால் அப்படியே வாந்தி வரும் போல் – வயிற்றில் குமட்டல்! காரணம் தண்ணீர் சப்ளை இல்லாததால் மிகவும் அசுத்தமாக, அருவருப்பாக அந்த கழிவறைகள் காட்சியளித்தது ஆயிரம் பேர்கள் கொண்ட அந்த ஷெட்டில் மூன்று கழிவறைகள் மட்டுமே! அதிர்ச்சியாக இருந்தது. ஆம் அதுவும் பகல் (12–1PM) 1 மணிநேரமும் மாலை 1 மணி நேரமும் (6–7PM) தண்ணீர் சப்ளை என ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே குழாயில் தண்ணீர் வரும். எப்படி குளிப்பது, மற்ற இயற்கை கடன்களை கழிப்பது? ஒரு 2 லிட்டர் தண்ணீர் பாட்டிலை கொண்டு காலையில் பல்துலக்கி, முகம் கழுவி, மற்ற காலைக் கடன்களுக்கும் உபயோகப்படுத்த வேண்டும். பெரும்பாலும் இந்த தண்ணீர் பாட்டில்களை 2 ரியால் கொடுத்து அங்குள்ள சிறிய ஹோட்டலில் வாங்கி உபயோகிப்போம். தண்ணீர் வரும் வேளை 1 மணி நேரம், சில நாட்களில் 2 மணி நேரம் மட்டும். ஆதலால் ஒரு மணி நேரம் முன்பதாகவே அந்தந்த குளியறைக்கு எதிரே – ஒரு குளியலறைக்கு குறைந்தது 20 பேர் வீதம் என்ற வரிசையில் நின்று, குளிக்கவோ அல்லது கழிக்கவோ செல்ல வேண்டும். இடையில் ஒருவர் முந்தி நுழைந்து விட முயற்சித்தால் வாக்குவாதம், சண்டை, அடிதடி கூட நடக்கும். இந்தக் கொடுமையான நிலையின் காரணமாக குளிப்பதற்கு போக முடியவில்லை. வாரத்திற்கு ஒருமுறை கஷ்டப்பட்டு வரிசையில் அரைமணி நேரம் நின்று பின் குளிக்கச் செல்வேன். இதில் வேடிக்கை என்னவென்றால் குளியலறைக்கு ஒரு கதவு கூட கிடையாது. ஆனாலும் பெட்ஷீட்டை திரை போல் தொங்கவிட்டு தங்களை மறைத்து கொள்வார்கள். சாப்பிட்டு விட்டு மீதமுள்ள சாப்பாடு, சிகரெட் துண்டுகள், மற்ற குப்பைகள் போட குப்பைத் தொட்டி ஒன்று அந்த குளியலறை போகும் வழியில் வைத்திருப்பார்கள். அது பெரும்பாலும் அசுத்தங்களால் "நிரம்பி வழிந்து" கொண்டேயிருக்கும். அதனால் ஈ, கொசுக்கள் அதிகமாக அந்த ஷெட் முழுவதும் நிறைந்து காணப்படும். அவைகள் எங்கள் முகத்தின் மீது, உடலின் மீது வந்து உட்கார்ந்து தொந்திரவு செய்யும். ஒரு நாளைக்கு ஒரு முறைதான் அந்த "குப்பைத்தொட்டியை" சுத்தம் செய்வார்கள். சிறிது தாமதமாகவும் சில நாட்கள் அந்த துப்பரவு செய்பவர் வராவிட்டாலோ மிகவும் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். மண் தரையானதால் தூசும், புழுதியும் அங்குள்ளவர்கள் நடக்கும் போது கிளம்பும். 90% கைதிகள் சிகரெட் புகைப்பவர்கள். ஆக புகையும், புழுதியும் எப்போதும் எங்களை

சூழ்ந்திருந்ததாலும் எங்களை பெரிய வியாதிகள் தாக்காதபடி கர்த்தர் பாதுகாத்தார். அல்லேலூயா! இப்படிப்பட்ட 'அருவருப்பான' சூழ்நிலையில் காணப்பட்டோம். கர்த்தர் இப்படிப்பட்ட இடத்தில் கொண்டு வந்து போட்டு விட்டாரே! என்று மிகவும் வேதனைப்பட்டோம். ஆனால் கள்ளன் போல் வானத்தையும், பூமியையும் படைத்த மகிமையின் தேவனாம் கர்த்தர் இயேசுவே இப்படி அவமானப்பட்டிருக்கும்போது நாம் ஏன் அவர் பட்ட அவமானத்தின் சிறு பங்கை அடையக் கூடாது? என்று என்னை நானே திடப்படுத்திக் கொண்டேன். முதல் நாள் இரவு 8 மணிக்கு திடீரென்று கூச்சல், வாக்குவாதம், அடிதடி காட்சி ஆப்ரிக்க சூடானியருக்கும், பாக்கிஸ்தான் கைதிகளுக்கும் இடையில் வந்தது. ஒருவர் படுக்கும் இடத்தை மற்றவர் ஆக்கிரமித்ததால் வாக்குவாதம் வரும். பிறகு இருவர் சண்டை, இரு கோஷ்டிகள் மோதல்களாக உருவாகி விடும். ஒருவருக்கு இரத்தம் ஒழுகியது. போலீஸ் உள்ளே நுழைந்து தடுக்கவோ, அடக்கவோ வரமாட்டார்கள். பெரிய 'கம்பி வலை கூண்டிலே' எங்களை உள்ளே அடைத்து விட்டு வெளியே இந்த போலீஸ்காரர்கள் உட்கார்ந்து சிகரெட், டீ, குடித்து கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். மிகவும் கூக்குரலிட்டு 'சண்டை நடக்கிறது' உடனே உள்ளே வாருங்கள் என்று யாராவது அவர்களை நோக்கி அழைக்கும் போது மட்டுமே அவர்கள், உள்ளே வருவார்கள். இந்த 'அடிதடி காட்சி' எங்களை திடுக்கிட வைத்தது. பிறகு தான் அறிந்தேன், இது இங்கு சர்வ சாதாரணம் என்று! அதுவும் ஒரு நாளைக்கு 4 முறை அல்லது 5 முறை இந்தவிதமான சண்டைகள், மோதல்கள், அடிதடிகள் நடக்கும். இதில் என்ன பயங்கரம் என்றால் கூட்ட நெரிசலில், கோஷ்டி மோதலின் இடையில் சம்பந்தப்படாத நாம் அகப்பட்டுக் கொண்டால் நமக்கும் தர்ம அடி விழும். ஆனால் கர்த்தருடைய பலத்த கரம் எங்களை ஒவ்வொரு நாளும் மூடிப் பாதுகாத்தது. ஆனால் இங்கு நடந்த நல்ல சாட்சியான காரியம் என்னவென்றால் எங்கள் வேதாகமங்கள் 5 மாத சிறைத் தண்டனைக்குப் பிறகு கொடுக்கப்பட்டு விட்டதால் நாங்கள் யாவருமே அவரவர் வேதாகமப் புத்தகங்களை காலையிலும், எவ்வேளையிலும் வாசித்துக் கொண்டிருப்போம். ஆம் **"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்"** (சங். 119: 92) என்று கூறிய தாவீதைப் போல நானும் மற்றவர்களும் இந்த கேவலமான சிறையில் உடல்நலம், மனநலம் கெட்டு அழிந்து போயிருப்போம். ஆம் துக்கம், வேதனை, நிந்தனை, அவமானம் ஏற்பட்ட நேரமெல்லாம் இந்த ஜீவனுள்ள சங்கீதங்கள், ஏசாயா மூலம் ஆண்டவர் பேசிய உற்சாகப்படுத்தும் ஆறுதலான வார்த்தைகள் எங்களை தேற்றியது! ஆற்றியது! பெலப்படுத்தியது!! ஆம் இப்படியாக நாங்கள் வேதம் வாசிக்கும்போது, அங்குள்ள மற்ற முஸ்லீம்

கைதிகள் "உங்கள் வேதம் என்ன சொல்கிறது" என்று கேட்டு அருகே வருவார்கள். 'இது தான் நல்ல வாய்ப்பு' என்று நானும் மற்ற அனைவரும் அவரவர் நாட்டு பெயர்க் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்கள், இந்துக்கள், புத்தமத கைதிகள் (இலங்கை, நேபாளம்) ஆகியவர்களுக்கு "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு" (2 தீமோ:4:2) என்று தீமோத்தேயுவிற்கு பவுல் அறிவுறுத்தியது போல, இந்த கடுமையான சூழ்நிலையிலும், தைரியமாய், ஆதாரத்தோடு ஆண்டவர் இயேசுவைக் குறித்தும், சுவிசேஷத்தையும் அவர்களோடு பகிர்ந்து கொண்டோம். சிறை பாடுகளாகிய சேற்றில் உழன்ற நிலையில் இருந்த எனக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் இது உன்னத அனுபவமும், சவாலாகவும் இருந்தது. இந்த சிறையில் ஒரு மாத காலத்திற்குள் ஏறக்குறைய 100 பேர்களுக்கு மேல் சுவிசேஷத்தை நற்செய்தியாகக் கூறினோம். இவர்களுள் குறைந்தது 50 பேர் ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். குறிப்பாக எத்தியோப்பிய கைதிகளுக்கு எத்தியோப்பிய குருமார்கள் பஹாரு, டின்சாய், பிபார்டு, சகோ. கிப்ரோனும் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டு முஸ்லீம், கத்தோலிக்கர் பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு பாஸ்டர். டென்னிசும், இந்திய பாகிஸ்தான் கைதிகளுக்கு முடிந்த அளவு நானும் 'கிறிஸ்துவே வழி, சத்தியம், ஜீவன்' என்பதை வேத வசனங்கள், எங்களுடைய இரட்சிப்பின் அனுபவம், எங்கள் வாழ்வில் நடந்த மாற்றங்கள், அற்புதங்கள் போன்ற சாட்சிகளை அவர்களோடு பகிர்ந்து கொண்டோம். அநேக போதை மருந்து விற்பவர்கள், கற்பழித்தவர்கள், பாங்க் கொள்ளைக்காரர்கள் கொலையாளிகள் போன்ற பயங்கர கிரிமினல் குற்றவாளிகள் பலர் கண்ணீருடன் "ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொள்கிறேன். இனி நான் இந்த பாவ வாழ்க்கையில் வாழ மாட்டேன்" நாட்டிற்குச் சென்று மனந்திரும்பிய வாழ்க்கையை வாழ்வேன் என்றார்கள். பெயர்க் கிறிஸ்தவர்கள் இனி ஒழுங்காக வேதம் வாசிப்போம், ஜெபிப்போம், ஆலயத்திற்கு செல்வோம், ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம் என்றெல்லாம் தீர்மானம் செய்தது கண்டு எங்கள் உள்ளங்கள் பூரித்தது. ஆம் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் தேவதூதர்கள் மத்தியில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் என்று (லூக். 15:10). ஆண்டவர் இயேசு கூறியிருப்பது போல பரலோகில் மட்டுமல்ல எங்களுக்கும் சிறையின் பாடுகள், வேதனைகள் மத்தியிலே மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. இப்படிப்பட்ட 'நற்செய்தி பரப்பும் வேலையை' ஜாக்கிரதையுடன் செய்து வந்தோம். ஆனால் எத்தியோப்பிய பாஸ்டர் பஹாரு, சகோ. "பிபர்டு" கொஞ்சம் சத்தமான குரலில் தைரியத்துடன் 5 அல்லது 10 பேர்கள் குழுவினருக்கு வேதத்தை விவரித்து

போதிப்பார்கள் இரவு 8 மணி முதல் 12 மணி வரை சில நாட்கள் போதித்து வந்தார்கள். ஆனால் சத்துருவாகிய சாத்தான் சும்மா இருப்பானா? ஆண்டவருக்கும், ஆண்டவருடைய பிள்ளைகளுக்கும் எப்போதுமே அவன் எதிர்த்து நிற்பவன், தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக எப்போதும் இடைவிடாமல் குற்றம் சாட்டுகிறவன் (வெளி.12:12) அல்லவா?

"சிறைக்குள் பயங்கரச் செய்தி"

நைஜீரியப் பாஸ்டர் பென்யமீன் என்னிடம் ஒருநாள் காலை எழுந்தவுடன் சொன்னார். "நேற்றிரவு நாம் எல்லோரும் சுவிசேஷத்தைக் கூறி வேதத்தை போதிப்பதை, கவனித்து கொண்டிருக்கும் நைஜீரிய முஸ்லீம் கைதிகள், எனக்கு பின்புறம் படுத்திருக்கும்போது "இந்த கிறிஸ்தவக் கைதிகள் நம் முஸ்லீம்களை இங்கு இரவெல்லாம் போதித்து மதம் மாற்றுகிறார்கள். நாளை நாம் போலீஸ் அதிகாரியிடம் இவர்களுடைய செயலைக் குறித்துக் கூறி விடுவோம்" அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்களா! என்று பார்ப்போம். இல்லாவிட்டால் நாமே இவர்களை ஒரு வழி செய்வோம்" என்று நைஜீரிய மொழியில் பேசிக் கொண்டிருந்ததை பாஸ்டர் பென்யமீன் (நைஜீரியன்) கேட்டிருக்கிறார். ஆகவே நாமே இப்படி இவர்கள் பேசினதை முன் ஜாக்கிரதையாக போலீஸ் அதிகாரியிடம் சொல்லி பாதுகாப்பு கேட்கலாம் என்று பயத்துடனும், படபடப்புடனும் எங்களிடம் சொன்னார். எப்போதும் தைரியமாக இருக்கும் எத்தியோப்பிய பாஸ்டர் பஹாருவும் அன்று அந்த செய்தியைக் கேட்டு பயந்து போய்விட்டார். காரணம் என்னவெனில் "நைஜீரியாவில் 50% கிறிஸ்தவர்கள் உண்டு. மற்ற 50% முஸ்லீம்கள். இந்த மதத்தின் தீவிரவாதிகள் அங்குள்ள கிறிஸ்தவர்களைத் தாக்கி கொலை செய்து, ஆலயங்களையும் தகர்த்து கொளுத்திய சம்பவங்களை சமீபத்தில் அறிந்தோம். ஆகவே இந்த நைஜீரிய முஸ்லீம் கைதிகள் எதையும் செய்யத் துணிவார்கள். ஆகவே நாம் பக்கத்து அறைக்கு(CELL) மாற்ற சொல்லி கேட்போம், அல்லது இந்த அறைக்கு வேறு பகுதிக்கு நகர்வோம் என்று சொன்னார். எனக்கோ இவர்கள் இருவரும் சொன்ன ஆலோசனைகள் சரியாகப்படவில்லை. போலீஸ் அதிகாரிகளிடம் நாமே போய் சொன்னால் நம் சுவிசேஷம் சொல்லும் விஷயம் விசாரணையில் யாராவது ஒருவர் நிச்சயம் சொல்லுவார். இது உண்மை என அறிந்து நைஜீரியர்களுக்குப் பதிலாக நம்மைத் தான் தண்டனைக்குட் படுத்துவார்கள். மேலும் நம்மிடம் இருக்கிற வேதாகமங்களை சோதனை மூலம் எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். **"தேவன் நமக்கு அடைக்கலமும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்"** (சங். 46:1). மேலும் சர்ப்பங்களையும், தேள்களையும் மிதித்து, சத்துருவின் சகல

வல்லமையையும் மேற்கொள்ளும் அதிகாரத்தையும் நம் தேவன் தந்திருக்கிறார் ஆகவே ஆண்டவர் தந்திருக்கிற அதிகாரத்தினால் இந்த சாத்தானின் அந்தகார ஆவிகளை கடிந்து அப்புறப்படுத்தி வல்லமையோடு ஜெபிக்கலாம். எனவே "பயப்பட வேண்டாம்" நாம் இந்த இடத்தைவிட்டு நகரவும் வேண்டாம். இயேசுவின் இரத்தத்தை சொன்னவர்கள் மீது தெளிப்போம். "இயேசுவின் இரத்தம் ஜெயத்தைத் தரும்" என்று நான் கூறினபோது, முதலில் இரண்டுபேருமே திருப்தி அடையவில்லை. அந்த இரண்டு நாட்களில் அவர்கள்(நைஜீரியா கைதிகள்) போலீஸிடம் சொல்லி விடுவார்களோ? என்ற பயம், திகில் சிறிது தென்பட்டாலும் நான் "இயேசுவின் இரத்தம் ஜெயம்" என்று சொல்லிக் கொண்டேயிருந்தேன். சர்ப்பங்களையும், தேள்களையும் மிதித்து என்ற வசனத்தை முணுமுணுத்து, அசுத்த ஆவியைக் கட்டி அப்புறப்படுத்திக் கொண்டேயிருந்தேன். "அப்பாலே போ சாத்தானே! என்று சொல்லி அந்த நைஜீரிய முஸ்லீம்களின் இருதயத்திலுள்ள அந்தகார எண்ணங்களை முறியடித்துக் கொண்டேயிருந்தேன். அடுத்த நாளே ஆண்டவர் அற்புத பதில் தந்தார். ஆம்! குழு குழுவாக ஒவ்வொரு நாளும் அந்தந்த நாட்டுக் கைதிகள் நாடுகடத்தப்பட விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். அப்படித்தான் இந்த பயங்கர திட்டம் தீட்டின இந்த நைஜீரிய முஸ்லீம்கள் 10 பேர்களை 2வது நாளே அவர்கள் செல்ல வேண்டிய விமானத்தில் அனுப்ப பெயர்பட்டியல்படி அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டு விட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்; உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது புறத்தில் பதினாயிரம் பேர்களும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது**" (சங். 91:3–7) என்ற ஆண்டவரின் வார்த்தைகளின்படியே எங்களை அந்த நைஜீரிய முஸ்லீம்களின் சதி திட்டத்திலிருந்தும், தாக்குதலிலிருந்தும் தப்புவித்தது ஒரு 'பெரிய அற்புதம்' அல்லவா?. கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும்! பாஸ்டர் பென்யமீனும், பாஸ்டர் பஹாருவும் நிம்மதி ஆனார்கள். கர்த்தர் எங்கள் ஜெபத்தைக் கேட்டார். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்கு தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" (வெளி. 12:11) என்ற வசனத்தின்படி அன்று எங்கள் ஜீவனையும் பாராமல் சாத்தானின் சதித்திட்டத்தை முறியடிக்க கர்த்தர் உதவி செய்தார். நாம் கூட நம் ஆவிக்குரிய ஆயுதங்களான ஆவியில் நிறைந்த ஜெபத்தையும், இயேசுவின் இரத்தத்தையும் தெளித்து அசுத்த ஆவிகளையும் முறியடிக்க வேண்டுமே தவிர, பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்று மாம்சீகப்படி வார்த்தைக்கு வார்த்தை, வாக்குவாதம், சண்டை என்றிருக்க வேண்டியதில்லை.

இப்படி ஆவிக்குரிய வாழ்க்கையில் வெற்றி பெற்றிருந்தாலும் எங்கள் உடல் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டே போனது. சுகாதாரமற்ற மட்டரகமான சாப்பாடு கொடுப்பதால் நாங்கள் அந்த சாப்பாட்டிற்காக வரிசையில் நிற்பதில்லை. வரிசையில் ஏறக்குறைய 200 பேர்களாவது நிற்பார்கள். வெளிக் கதவைத் திறந்து சாப்பாட்டை அந்த கதவின் வாசலில் இருந்து இரண்டு பேர்கள் பரிமாறும் வேலை செய்வார்கள். மதியவேளை சாப்பாடு பெரும்பாலும் 3.00 மணிக்கு தான் வரும். வந்தவுடன் அடித்து பிடித்து வரிசையில் நிற்க முண்டியடிப்பார்கள். அதனால் பயங்கரச் சண்டை சில சமயங்களில் ஏற்படும். கட்டுக்கடங்காமல் போகும்போது போலிஸ் உள்ளே நுழைந்து தடியான பிரம்பினால் கண்மண் தெரியாமல் உணவுக்காக வரிசையில் நிற்பவர்களை அடிப்பார்கள். பார்ப்பதற்கே மிகவும் பரிதாபமாகவும், கேவலமாகவும் இருக்கும். இதன் காரணமாக உணவுக்காக வரிசையில் நிற்பதில்லை. மேலும் அப்படியே பகலில் சாப்பிட்டால் அதிகம் தண்ணீர் குடித்தால் கழிவறைக்கு போகணுமே! அங்கு தண்ணீர் இருக்காதே! எப்படி போவது அங்கு? இதனாலேயே முக்கியமாக பகல் வேளைகளில் பெரும்பாலும் உண்பதில்லை, குடிப்பதில்லை. எப்போதாவது மிகவும் பெலவீனம், பசியாக இருக்குமானால் மட்டுமே அங்கிருக்கும் ஒரு சிறிய உணவகத்தில் ஏதேனும் வாங்கிக் குடிப்பதுண்டு. ஆக பெரும்பாலும் பகலில் பட்டினிதான். இதனால் நோயை எதிர்க்கும் சக்தி குறைந்தது. எனக்கும் கடுமையான சளி, இருமல்! எவ்வளவோ மருந்து எடுத்தேன். அப்போதைக்கு நிற்கும், மறுபடியும் வரும். பிறகு முற்றும் ஜெபத்திலேயே விட்டு விட்டேன். பாஸ்டர் டின்சாய் என்பவருக்கு உடல் சூட்டினால் உதடுகளில் புண் வந்து பயங்கரமான வீக்கம் ஏற்பட்டு மிகவும் உபத்திரவப்பட்டார். பாஸ்டர் பெபர்டுக்கு காய்ச்சல். இன்னொரு சகோதரனுக்கு வயிற்றுபோக்கு! இப்படிப் பலவேறு சுகவீனங்கள் அடைந்தோம். இருப்பினும் பைபிள் வாசிக்கவும், ஜெபிக்கவும் இந்த மோசமான சூழ்நிலையிலும் சந்தர்ப்பம் கிடைத்ததால் எங்களை நாங்களே திடப்படுத்திக் கொள்ள முடிந்தது. தொடர்ந்து பல முஸ்லீம்களுக்கு பகிங்கரமாக, ஆனால் விரும்பிக் கேட்டவர்களுக்கு சுவிசேஷத்தை கூறி வந்தோம்.

எங்களில் 5 பேர் குறிப்பாக சகோ. கிப்ரோன், சகோ. அராயா, சகோ. கிலாகில், சகோ. மிஸ்பன், சகோ. பென்யமீன் ஆகியவர்களை முதல் கட்டத்திலேயே அவரவர் நாட்டிற்கு(ஜனவரி) அனுப்ப விமான நிலையத்திற்கு கொண்டு சென்று ஏற்றி அனுப்பிவிட்டனர். அடுத்து மீதியிருந்த எங்கள் 8 பேருக்கு பல விதங்களில் தடைகள், தாமதங்கள்! பாஸ்டர் பஹாருவின் மனைவியை அழைத்து வரச் சொன்னார்கள். ஏனெனில், இப்படிப்பட்டவர்களின் மனைவிகளும் கூட 'பெண்களுக்

கான நாடு கடத்தப்படவேண்டிய சிறை'யிலே அடைக்கப்பட்டு பிறகு கணவனுடன் அனுப்பப்படுவர். என்னுடைய மனைவியையும் கூட இந்தவிதமாகவே பெண்கள் சிறையிலே வைத்து அனுப்பத் திட்டமிட்டார்கள். இதை அறிந்து இந்திய தூதரக ஆட்கள் என் மனைவியிடமும், என்னிடமும் பேசி "சுசிலா முதலில் இந்தியா போய் சேரட்டும், அப்போது தான் பிரபுவையும் விடுவார்கள்" என்று முடிவெடுத்து அவளை உடனே அனுப்ப சென்னை– 'சவுதியா' விமானத்திற்கு டிக்கெட் ஏற்பாடு செய்தார்கள்.

"சிறையிலே என் பிறந்தநாள்!"

ஜனவரி மாதம் 9 ஆம் தேதி அவள் போவதாக ஏற்பாடு. ஜனவரி 8 ஆம் தேதி என்னுடைய பிறந்தநாள். என் பிறந்த நாளுக்காவது இந்தியா போய் குடும்பத்தாருடன் கலந்து கொண்டாடலாம் என்றிருந்தேன். ஆனால் அந்த நாளும் கடந்து போயிற்று! பெரிய ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனால் இந்த புரைமான் ஜெயிலில் ஒரு ஆறுதலான விஷயம் என்னவெனில் 3வது ஜெயிலில் இல்லாத அனுமதி இந்த ஜெயிலில் என் மனைவியைப் பார்க்க கிடைத்தது தான். ஆகவே ஜனவரி 6 ஆம் தேதி அங்கு வந்த பிறகு அடுத்த நாளே என் மனைவி சுசிலாவும், ஒரு சகோதரனும் அங்கு என்னைக் காண வந்து விட்டனர். நாடு கடத்தும் சிறையில் முந்தைய நாள் போய், தேடிவிட்டு பயந்து போயிருக்கின்றனர். (திடீரென்று எங்களை இந்த சிறைக்கு யாருக்கும் தெரிவிக்காமல் கொண்டு வந்து விட்டார்கள் அல்லவா?) அவள் என்னிடம், "ஜனவரி 9ஆம் தேதி சென்னை விமானத்திற்கு டிக்கெட் ஒழுங்காகி இருக்கிறது பாஸ்போட் பிரச்சனை எதுமில்லை. இந்திய தூதரக அதிகாரிகள் திருமதி. ராணி மாலிக், திரு. டில்லனும் என்னை முதலில் சீக்கிரம் போகச் சொல்லுகிறார்கள். ஆகவே நான் 9 ஆம் தேதி புறப்படுகிறேன், நீங்களும் அதே விமானத்தில் வருவீர்கள் என நம்புகிறேன்" என்று சொன்னது மிகவும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அளித்தது. நான் அவளிடம், "கர்த்தருக்கு சித்தமானால் நீ செல்லும் அதே விமானத்தில் என்னை அனுப்பலாம், இல்லையெனில் "நீ சந்தோஷமாகச் செல்" என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம்!". கர்த்தர் என்னைக் கொண்டு வருவார் என்று கண்ணீர் மல்க அவளை அனுப்பினேன். அவள், "நாளை ஜனவரி 8 உங்களின் பிறந்த நாள், கண்டிப்பாகப் பார்க்க வருவேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள். அடுத்த நாள் ஜனவரி 8 வந்தது. ஆவலுடன் காலை 11 மணி வரை "என் மனைவி வருவாள்"எனக் காத்திருந்தேன். ஆனால் சகோ. ஆஷீர் பாகிஸ்தானியர் மட்டுமே வந்திருந்தார். "சுசிலா எங்கே? வரவில்லையா?" என்று ஆவலுடன் கேட்டேன். "இந்திய தூதரகத் துக்கு போகவேண்டியிருப்பதால் இங்கு வர முடியவில்லை, எனவே இந்த

பூக்கொத்தை மட்டும் கொடுத்து பிறந்த நாள் வாழ்த்து சொல்லச் சொன்னார்கள்'' என்றார். முதலில் அவள் வராதது எனக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தாலும், மறக்காமல் வாழ்த்து மடலையும், ரோஜா பூக்கொத்தையும் கொடுத்தனுப்பியது சற்று மகிழ்ச்சியாக இருந்தது.

44 வருடங்கள் முடிந்து 45வது வயது எட்டுகிற அந்த பிறந்த தினம் விசேஷித்த வாழ்வில் மறக்கமுடியாத பிறந்த நாள் (ஜனவரி 8 2002) என்று தான் சொல்ல வேண்டும். ஆம் என் சிறுவயதிலிருந்தே (16 வயதிலிருந்தே) நான் அதிகாலை 5.00 மணிக்கு யாருக்கும் தெரியாமல் எழுந்து, குளித்து, புது உடைகளை அணிந்து என் பெற்றோரை எழுப்பி ஆசீர்வாதம் பெறுவேன். முன்தினமே இனிப்பு வாங்கி(Chocolates) வைத்து அன்று காலையிலேயே யாவருக்கும் கொடுப்பேன். வயதான பிறகும் சவுதி அரபியாவில் 17 வருடங்கள் வாழ்ந்த போதும் தவறாமல் ஒவ்வொரு வருடமும் என் மனைவியும் பிள்ளைகளும் (விடுமுறையில் வரும்போதும்) எதிர்பாராத வகையில் நள்ளிரவில் 'கேக்' வெட்டி என்னை சந்தோஷப்படுத்தி என் பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள். ஆனால் இந்த ஜனவரி 8, 2002 பிறந்த நாள் வித்தியாசமான ஒரு விசேஷமான பிறந்த நாளாக (மறக்க முடியாது!) காணப்பட்டது. என் மனைவி கொடுத்து அனுப்பியிருந்த ரோஜாப் பூக்கொத்து நறுமணம் வீசினது. முகர்ந்து கொண்டே சிறைக்குள் வந்தேன். எல்லா சிறை நண்பர்களும் என்ன விசேஷம்? ரோஜாப் பூங்கொத்து ஏன்? யார் கொடுத்தது? என அதை வாங்கி முகர்ந்து பார்க்கத் துவங்கிவிட்டனர். மனைவி கொடுத்தனுப்பியது எல்லாரும் முகர்ந்து பார்த்தது, முதலில் எனக்குப் பிடிக்கவில்லையாயினும் உலர்ந்து போயிருந்த அவர்களும் இதன் மூலம் சந்தோஷப்படட்டுமே என்று கருதி விட்டு விட்டேன். பிறகு தான் , "இன்று எனக்குப் பிறந்த நாள் என்று கூறினேன். உடனே அங்கேயே எல்லாக் கைதிகளின் மத்தியில் பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்று என் சக விசுவாசிகள் பாடி வாழ்த்த துவங்கிவிட்டனர். மனைவியோ, பிள்ளைகளோ, பெற்றோரோ, நண்பரோ, உடன் பிறந்தோரோ யாரும் என்னுடன் இல்லை, என்ற மனச் சோர்வு அகன்றது. தேவ தூதர்கள் பாடியதைப் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. பரி. பவுல் "எந்த நிலமையிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டேன் (பிலி. 4:11) என்பது போல சுயத்தை இன்னும் வெறுத்து, இன்னும் ஆண்டவர் சித்தப்படி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வந்ததற்காய் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன்.

அந்த நாள் இரவு முழுவதும் நினைத்துக் கொண்டே யிருந்தேன்! நாளை மனைவி ஊருக்குப் போகப் போகிறாள். 6 மாதம்(கிட்டதட்ட) எனக்காக இங்கு பல பாடுகளைப் பட்டவள், எனக்கு ஆறுதலாக

இருந்தவள், பிரிந்து போகிறாள்! கர்த்தாவே நீர் நினைத்தால், நாளை என்னையும் கூட விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவளுடன் சேர்ந்து செல்ல உதவ முடியுமே! என்று விண்ணப்பம் பண்ணினேன். எதிர்பார்த்து காத்திருந்தேன்! ஜனவரி 9 ஆம் தேதி வந்து போனது, என்னை இந்தியா அனுப்ப எந்த முயற்சியும் எடுத்த பாடில்லை! சரி என் மனைவி போய் விட்டிருப்பாள்! 'அவளாவது முதலில் போய் சேரட்டும்' என்று ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். ஆனால் ஆச்சரியம், அதிர்ச்சியான செய்தி அடுத்த நாள் காத்திருந்தது. அடுத்த நாள் ஜனவரி 10 ஆம் தேதி! காலை 11.00 மணிக்கு பார்வையாளர்கள் வந்திருக்கிறார்கள் என்று 'ஈசாக் பிரபு வரவும்' என்று மைக்ரோ போனில் அழைக்கும் சத்தம் ஆவலுடன் அருண் வந்திருப்பார் என எதிர்ப்பார்த்து வெளியே ஓடினேன். வெளியே பார்த்த எனக்கு அதிர்ச்சி. ஆம்! அங்கு அருணுடன் என் மனைவியும் நின்று கொண்டிருந்தாள். நேற்று நீ போகவில்லையா? என்ன நடந்தது? என்று திகைப்புடன் கேட்டேன். அவளை விமான நிலையத்திலுள்ள கம்பியூட்டரில் "உன் பிள்ளைகள் இங்கேயே (சவுதியில்) இருக்கிறார்கள் அழைத்து வா! அல்லது பாஸ்போர்ட் ஆபீஸில் சரி செய்து வா" என்று நேற்று விமான நிலைய 'இமிகிரேஷன்' கவுண்டரில் சொல்லி திருப்பி அனுப்பி விட்டார்கள். "எப்படியோ இன்று இந்திய தூதரக அதிகாரிகள் சரி செய்து விடுவார்கள். நீங்கள் பயப்படாதீர்கள்; என்னைக் குறித்து கவலைப்படவேண்டாம் ஜனவரி 12 ஆம் தேதி மறுபடியும் டிக்கெட் ஒழுங்கு பண்ணியிருக்கிறோம்! துதியும், ஜெபமும் மட்டும் ஏறெடுத்துக் கொள்ளுங்கள்! நீங்களும், நாளை நான் செல்லும் அதே விமானத்தில் வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு என்னை ஆறுதல் படுத்திவிட்டுப் போய் விட்டாள். என்னை அவள் ஆறுதல்படுத்திச் சென்றாலும் என் உள்ளத்தில் நிம்மதி, சமாதானம் இல்லை. ஏன் இவளையும் இப்படி கொடுமைப்படுத்துகிறார்கள்? ஒருவேளை 'பெண்கள் நாடுகடத்தப்படும்' சிறையில் அடைத்துப் பின் அனுப்புவார்களோ? என்றெல்லாம் திகில், கலக்கம் ஏற்பட்டது. ஆனாலும் கர்த்தர் நிச்சயம் சுகத்துடன் பிரச்சனையின்றி அடுத்த நாள் அவளை இந்தியாவிற்கு அனுப்புவார் என்று நம்பி ஜெபித்துக் கொண்டிருந்தேன். கர்த்தருக்கு மகிமை உண்டாகட்டும். 2வது முறையும் பேப்பர் சரியில்லை என திருப்பி அனுப்பிவிட்டார்கள். அடுத்த முறை 3வது முறை ஜனவரி 13 ஆம் தேதி புறப்பட்டு தடையின்றி அவள் சென்னை விமானத்தில் ஜனவரி 14ல் இந்தியா சென்றடைந்து விட்டாள் என்று தூதரக அதிகாரிகள், சகோ. அருண் மூலம் அறிந்து கொண்டேன். அவள் பல பாடுகள் அனுபவித்த பின்பு கடைசியாக வேலூர் அடைந்தது எனக்கு பெரிய நிம்மதியை, சமாதானத்தைக் கொடுத்தது. அதே விமானத்தில் (ஜனவரி 13 ஆம் தேதி) என்னையும்

ஏற்றி அனுப்ப மாட்டார்களா? இந்த பாஸ்போர்ட் போலீஸ் அதிகாரிகள் என்று எதிர்பார்த்தேன். என் மனைவியும் விமானத்தில் ஏறி உள்ளே போனது முதற்கொண்டு என்னைத் தேடிப் பார்த்திருக்கிறாள். விமானம் புறப்படும் சில நிமிடங்கள் முன்பு வரை கூட என் கணவர் இன்றைக்கு இந்த விமானத்தில் ஏற்றி விடப்படமாட்டாரா? வரமாட்டாரா? என்று மிக ஆர்வத்தோடு எதிர்ப்பார்த்திருக்கிறாள். ஆனால் என்னை அன்றைக்கு விமான நிலையத்திற்கு கொண்டு செல்லவில்லை. எனக்கும் ஏமாற்றம். அவளுக்கு பெருத்த ஏமாற்றம். ஆனாலும் கர்த்தர் ஏற்றதை ஏற்ற நேரத்தில் செய்யும் வாக்குமாறாதவர் என்பதை இருவரும் அறிந்ததத்தினால் இந்த ஏமாற்றங்களைத் தாங்கி கொள்ளும் பெலன் கிடைத்தது. எப்படியோ கர்த்தருடைய கிருபையால் அவள் என் பிள்ளைகளோடு போய் இணைந்தாள். அது எனக்கு மிக்க சந்தோஷம்.

அதன் பிறகு மீதி 8 பேரை அவரவர் நாட்டிற்கு அனுப்பும் முறைகள் நடந்து கொண்டிருந்தது. இந்த முறைகளில் முதலாவது அவரவர் பணிபுரிந்த கம்பெனிகளில், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பணித்தொகையும், மற்றும் கார் இருந்தால் அதனை இன்னொருவருக்கு விற்று அவர் பெயரில் மாற்ற வேண்டிய முறை, மனைவி பிள்ளைகளை அவரவர் நாட்டிற்கு அனுப்ப ஆயத்தங்கள் மற்றும் இடம் மாறுதல் இப்படி பல வகையானக் காரியங்களை நாடு கடத்தப்படும் முன்பு வெளிநாட்டு உரிமைகளினால் செய்யப்பட வேண்டியதாகும். இவற்றை முடித்த பிறகே எங்களையும், மற்ற கைதிகளையும் நாடு கடத்துவார்கள். இவற்றில் பெரிய சிக்கல்கள் நம் எத்தியோப்பிய சகோதரர்களுக்கும், நைஜீரிய சகோதரர் பென்யமீன், பிலிப்பைன்ஸ் சகோதரர் டென்னிஸ்க்கும் எற்பட்டது. சில உண்மையான தவறுகள் என்னவெனில் பல எத்தியோப்பிய, எரித்திரியா சகோதரர்களுடைய தங்கும் உரிமை அட்டை (Residential permit) சிலருக்கு காலக்கெடு(Validity) முடிந்திருந்தது. அதைப் புதுப்பிக்க அல்லது வேறொரு சவுதி முதலாளி பெயரில் மாற்ற வேண்டுமானால் அதிகமான பணத் தொகையை அந்த முதலாளிக்கும், பாஸ்போர்ட் அலுவலகத்திற்கும் கட்ட வேண்டியதாயிருக்கும். பெரும்பாலும் குறைந்த சம்பளம் வாங்கும் சகோதரர்கள் இவர்கள். மேலும் சிலர் 'வேலை கிடைக்கும்' என்பதற்காக முஸ்லீம் பெயருள்ள பாஸ்போர்ட்டில் தங்கள் நாட்டிலிருந்து சவுதி அரேபியாவிற்கு (இரட்சிக்கபடாததற்கு முன்பு) வந்திருந்தவர்கள் ஆவர். சிலருடைய 'தங்கும் அட்டையில்' தவறாக முஸ்லீம் என்று இங்கு வந்த பிறகு எழுதப்பட்டவர்கள் (இதை ஆரம்பத்திலே திருத்தாமல் விட்டது தவறானதே). சகோ. டென்னிஸ்க்கு 5 கார்கள், அவர் பெயரில் இருந்தது. மற்ற நண்பர்களுடைய வியாபாரத்திற்காக இவர் பெயரில் கார்களை வாங்கி வாடகைக் கார்களாக பயன்படுத்தியிருந்திருக்கிறார்.

இந்த 5 கார்களையும் இவர் மற்றவருக்கு மாற்றம் செய்தாக வேண்டும். நைஜீரியன் பாஸ்டர் பென்யமீன் மனைவிக்கும் புதிதாகப் பிறந்த குழந்தைக்கும் புதிய பாஸ்போர்ட் எடுக்க வேண்டும்.

சகோ. கிப்ரோனில் தேவ அற்புதம்

அதிலும் குறிப்பாக சகோதரர் கிப்ரோன் என்கிற சகோதரன் மிகவும் நல்ல விசுவாசி, குணத்திலும், நடைமுறை வாழ்விலும் ஆவிக்குரிய வாழ்விலும் மிகவும் எளிமை, அன்பு, தாழ்மை, மற்றவர்க்கு உதவும் மனப்பான்மை, எதைப்பற்றியும் கவலைப்படாத முணுமுணுக்காத பொறுமை, சகிப்புத்தன்மை என்கின்ற ஆவியின் கனிகளை கொண்டவர். அவருக்கு இருந்த சிக்கல் பெரியது. ஆனால் கர்த்தர் அவருக்கு செய்த அற்புதமும் பெரியது! கர்த்தர் நல்லவர் என்பதற்கு சாட்சியாக இதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அது என்னவெனில் அவர் 'எரித்திரியா' என்ற நாட்டைச் சேர்ந்தவர். அதாவது இந்த் எரித்திரியா என்ற சிறிய நாடு சில வருடங்களுக்கு முன்பு 'எத்தியோப்பியா' என்ற நாடோடு இணைந்து பல காலங்களாக ஒரே நாடாக இருந்தது. பிறகு உள்நாட்டுப் போர் ஏற்பட்டு இந்த "எரித்தியர்கள்" தனிநாடாக பிரிந்து 'எரித்திரியா' என்ற தனிநாட்டை உருவாக்கிக் கொண்டார்கள். அதன் பிறகு இரண்டு நாடுகளுக்கும் இன்னும் எல்லைப் பிரச்சனைகள், கடிதம், போன் போன்ற தொடர்பில்லாமல் இரண்டும் எதிரி நாடுகளாகவே உள்ளன. விமானப் போக்குவரத்து கூடக் கிடையாது. ஆனால் சகோதரன் கிப்ரோன் எத்தியோப்பிய பாஸ்போர்டில் பல வருடங்களுக்கு முன்பே இங்கு வந்தவர். அவருடைய முதல் பெண் குழந்தை (7 அல்லது 8 வயது) எரித்திரியாவில் 'அஸ்மாராவில்' உள்ள அவள் பாட்டி-தாத்தாவுடன் இருக்கிறாள். அவருடைய மனைவி ஜெத்தாவில் நண்பர் வீட்டில் புதிதாகப் பிறந்த குழந்தையுடன் இருந்தார்கள். அவரால் புதிய குழந்தையின் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. மேலும் பிரசவம் ஆன பிறகு மனைவியின் முகத்தையும் கூடப் பார்கக முடியவில்லை. காரணம் அவர்கள் கிப்ரோனைப் பார்க்க வந்தால் அவர்களை உடனே பெண்கள் ஜெயிலுக்கு பிடித்து கொண்டு போய் சகோ. கிப்ரோன் நாடு கடத்தப்படும் வரை பெண்கள் ஜெயிலில் அவரும் கஷ்டப்பட நேரிடும். அதினிமித்தமாகவே எங்கள் சகோதரர்களின் துணைவிமார்களை அவர்களுடைய கணவன்மார்கள் இந்த 'புரைமான்' ஜெயிலுக்கு பார்க்க 'வர வேண்டாம்' என்று தகவல் அனுப்பியிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய சகோதரர்கள் நண்பர்கள், தூதரக அதிகாரிகள் அவ்வப்போது வந்து பார்ப்பார்கள். சகோ. கிப்ரோன் சட்டப்படி அவருடைய பாஸ்போர்ட் படி எத்தியோப்பியா நாட்டிற்குத் தான் செல்ல வேண்டும். அப்படி அவர் எத்தியோப்பியா தலைநகர் 'அடிஸ்

அபாபா'வுக்கு ஏற்றப்பட்டு சென்றடைந்த பின்பு அங்கிருந்து உடனே நேரடியாக தன் பக்கத்து நாடாகிய எரித்திரியா நாட்டின் தலைநகர் 'அஸ்மரா'(Asmara) விற்கு செல்லவே முடியாது. மேலும் எத்தியோப்பிய நாட்டின் சட்டப்படி ஒவ்வொரு குடிமகனும் இரண்டு வருடங்கள் இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற வேண்டும். இவர் ஆரம்பத்தில் இந்த இராணுவப் பயிற்சியில் சேர்ந்திருக்கவில்லை. எனவே இப்போது அங்கு சென்றடைந்த பிறகு, உடனே எத்தியோப்பிய அரசாங்கம் இவரை கட்டாய இராணுவப் பயிற்சிக்கு அனுப்பிவிடும். மேலும் எரித்திரியாவில் இருக்கும் தன் பெற்றோரையும், தன் முதல் குழந்தையையும், ஜெத்தாவிலிருந்து எரித்திரியாவிற்கு ஒரு சில வாரங்களில் வந்து தன் குடும்பத்தோடு இணையப் போகும் தன் மனைவியையும், தன் இரண்டாவது பெண் குழந்தையையும் கூட பார்க்கவோ, தொடர்பு கொள்ளவோ முடியாது. எவ்வளவு பெரிய வேதனையான காரியம் சம்பவம் இது என்று நீங்கள் எண்ணிப் பாருங்கள். அவருடைய மனம் எப்படியாக உள்ளே உடைந்து போய் இருக்கும்? ஆனாலும் இந்தப் பெரிய சோதனையின் பிரதிபலிப்பை, சோர்வின் சாயலை, அவர் முகத்தில் துளியும் அவர் வெளியே காட்டவில்லை. நான் ஒருநாள் அவரிடம் எப்படி இதை மேற்கொண்டு செய்யப்போகிறீர்கள்? எப்படி மனைவி, பிள்ளைகளைப் பார்க்காமல், தொடர்பு கொள்ள கூட முடியாமல் இரண்டு வருடங்கள் இருக்கப் போகின்றீர்கள்? என்று கேட்டேன். அவர் கூறிய பதில் என்னைத் திகைக்க வைத்தது மட்டுமல்ல என் விசுவாசத்தை விருத்தியடைய செய்தது. ஆம் அவர் சொன்னார், "கர்த்தருடைய சித்தம் நான் குடும்பத்தைப் விட்டு பிரிந்து அந்நியநாட்டில் இருப்பது என்றால் நடக்கட்டும். மேலும் அங்கேயே ஏதாவது இறையியல் படிப்பில் சேருவேன். "ஆண்டவருக்காய் ஊழியம் செய்வேன்" என் மனைவி, பிள்ளைகளைக் கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார். நான் 'எதற்கும் கவலைப்படவில்லை' என்று இஸ்ரவேலர்களுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை (மத். 8:10) என்று ஆண்டவர் இயேசு நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைப் பாராட்டியது போல சகோ. கிப்ரோனின் விசுவாசத்தைக் கண்டு வியந்தேன். பயங்கரமான, சிக்கலான சூழ்நிலையிலும் அவரின் கலங்காத உள்ளத்தைக் கண்டு என்னையும் திடப்படுத்திக் கொண்டேன். ஆனால் அவரிடம் சொல்வேன் "ஆண்டவர் உங்களுக்கு ஏதாவது அற்புதம் செய்வார்" என்று அப்படியே அங்கே (Addisababa) நீங்கள் கொண்டு செல்லப்பட்டாலும் கர்த்தர் உங்களை அஸ்மரா(Asmara) விற்கு செல்ல வழியைத் திறந்து கொடுப்பார். செங்கடலைப் பிளந்த தேவன், யோர்தானின் வெள்ளத்தைக் கடந்து போகச் செய்த தேவன் நிச்சயம் தடைகளை உடைத்து உங்களையும் எரித்திரியாவுக்கு போக வழி

செய்வார். நான் உங்களுக்காய் ஜெபித்து வருகிறேன். 'பயப்படவோ கலங்கவோ வேண்டாம்' என்று தைரியப்படுத்துவேன். படிப்பு இல்லை, ஆங்கிலம் கொஞ்சம் கஷ்டப்பட்டு தான் பேசுவார். இருப்பினும் அவருடைய தேவபயம் பக்திவைராக்கியம், விசுவாசம், நீடிய பொறுமை, சகிப்புத் தன்மை இவைகள் என் ஆவிக்குரிய வாழ்விற்கு அதிகம் பயனுள்ளதாக, முன்மாதிரியாக இருந்தது.

ஒருநாள் மாலை 7.00 மணி எரித்திரியா தலைநகர் 'அஸ்மரா'விற்கு அனுப்ப வேண்டிய கைதிகளின் பெயர் பட்டியல் வாசிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் சகோ. கிப்ரோன் பெயரும் வாசிக்கப்பட்டது. என்ன ஆச்சரியம், அற்புதம்! எங்கள் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. இவருடைய சிக்கல் எங்கள் அனைவருக்கும் தெரியும். அனைவரும் இவர் சட்டப்படி எத்தியோப்பியாவிற்கு தான் அனுப்பப்படுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவருக்கோ ஆச்சரியம், எதிர்பாராத சந்தோஷம் – தன்னுடைய சொந்த நாடாகிய எரித்திரியாவிற்கு செல்ல போகிறோம். பெற்றோர் முதல் மகளுடன் இணையப் போகிறோம் என்பதை நினைத்தபொழுது! கர்த்தர் எவ்வளவு நல்லவர், வல்லவர், அற்புதர், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர் பாருங்கள்! எப்படி இது நடந்தது! என்று கேட்பது நியாயமான கேள்வியே! அதாவது இந்த 'புரைமான்' நாடுகடத்தப்படும் சிறையில் பல முறைகேடுகள் லஞ்சம் போலீஸ் அதிகாரிகள் மத்தியில் உண்டு. என்ன சவுதி அரேபியா என்னும் முதல் தர இஸ்லாமிய நாட்டிலா? லஞ்சமா? இருக்காது. லஞ்சம் வாங்கினால், திருடினால் கை வெட்டுவார்களாமே? இது எப்படி நடக்கிறது! நம்ப முடியாது என்கிறீர்களா! ஆம் இதெல்லாம் வாய் பேச்சுதான். அப்படியே கண்டு பிடித்தாலும் ஏமாந்த ஏழைகள், அந்நிய நாட்டினரைத் தான் இவ்வித சட்டம் தண்டனைக்கு உட்படுத்தும். பெரிய அதிகாரிகள், இளவரசர்கள் மத்தியில் உள்ளே பலமுறை கேடுகள் கண்ணாரக் கண்டோம்! அறிந்தோம். ஆம் ஒருவர் பாஸ்போர்ட்டை மற்றொருவருக்கு உபயோகித்து அவரை நாட்டிற்கு அனுப்புவார்கள். "உன் பாஸ்போர்ட் தொலைந்துவிட்டது. ஆகவே எமர்ஜென்சி பாஸ்போர்ட் உண்டாக்கி அனுப்புகிறோம். பணம் கொடு" என்று இரகசியமாய் கேட்டு காரியங்களைச் செய்வார்கள். அப்படியாக கிப்ரோனின் எத்தியோப்பிய பாஸ்போர்ட் தொலைத்து விட்டோம். ஆகவே எமர்ஜென்சி பாஸ்போர்ட்டை தயார் செய்த போது எப்படியோ இவர் எரித்திரியா நாட்டைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து 'எரித்திரியா' பாஸ்போர்ட்டை அவசரமாக உண்டாக்கி அதன் தலைநகரான அஸ்மாராவிற்கு அவரை அனுப்பிவிட்டனர். பாருங்கள்! கர்த்தரின் அற்புத செயலை! அவர்களுடைய(எதிரி) ஞானத்தை மயக்கி எப்படியோ தம்முடைய அன்பு

விசுவாசியை அவருடைய நாட்டிற்கே, வீட்டிற்கே சென்றடைய வழி வகுத்தார். அவருடைய அறிவு, ஞானம் அதன் ஆழம், நீளம், உயரம் இவற்றை அளந்து அறியத்தக்கவன் யார்? (ரோம. 11:33,34) என்ற வசனம் போல இந்த காரியம் அற்புதமாக நடந்தது. அவர்தான் எங்கள் 14 பேரில் முதலாவது அனுப்பப்பட்ட நபர்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லி அவரைக் கட்டி அணைத்து, நாங்கள் 13 பேரும் அவர் தலைமீது கைகளை வைத்து ஆசீர்வதித்து ஜெபித்து விமான நிலையத்திற்கு ஆனந்த கண்ணீருடன் அனுப்பினோம். எங்களுக்கும் தைரியம், விசுவாசம் வந்தது. நம்மையும் இனி ஒவ்வொருவராக சீக்கிரம் அனுப்பப் போகிறார்கள் என்று! அதே சமயம் இருக்கிற பிரச்சனைகள், சிக்கல்கள் எப்படி? எப்போது தீரப்போகிறது? என்று நினைக்கும்போது கொஞ்சம் திகில், பயம், குழப்பம் வரும். அடுத்து யார் அனுப்பப்படுவார்கள் என்பதை மிகவும் ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்தோம்.

மீண்டும் பஹாருவுக்கு வந்த சோதனை

இதற்கிடையில் மறுபடியும் சத்துருவின் சோதனை பஹாருவிற்கு வந்தது. அவரை போலீஸ் அதிகாரிகள் அழைக்கிறார்கள் என்று சொல்லி வெளியே அழைத்து சென்றார்கள். அங்கு ஒரு போலீஸ் அதிகாரி அவரிடம் "நீ ஒரு பத்திரிக்கையாளனா? இண்டர்நெட்டில் நீங்கள் சிறைபிடிக்கப்பட்டச் செய்தியை யார் அனுப்பியது? நீ தானே? என்று கேட்டிருக்கிறார். அதாவது மேலிடத்திலிருந்து உத்தரவு வந்து இந்த விஷயத்தை விசாரிக்கச் சொல்லியிருக்கின்றனர். எப்படியோ இவர் பத்திரிக்கையாளன் என்ற சான்றிதழை அவருடைய வீட்டிலிருந்து கைப்பற்றிய பொருட்கள் மத்தியில் கண்டு பிடித்திருக்கிறார்கள். மேலும் எங்கள் சித்திரவதை நிகழ்ச்சிகள் கூட உடனுக்குடன் இன்டர்நெட்டில் உலகம் முழுவதும் தெரிந்து விடுகிறதே? இதை யார் செய்வது? என்று அவர்கள் ஆராய்ந்து பார்த்தப்பொழுது இவருடைய பத்திரிக்கையாளர் (எப்போதோ லண்டனில்) 6 மாத படிப்பு படித்த தகவல் சிக்கியிருக்கிறது. ஆகவே சகோ. பஹாருவும் பயப்படாமல், எதையும் மறைக்காமல், "ஆம் நான் தான் அமெரிக்காவிலுள்ள நண்பர்களுக்கு, பிரபு, சகோ. இஸ்கந்தர் கைதான போதும் தகவல்களை அனுப்பினது" என்று சொல்லியிருக்கிறார். உண்மையில் சகோ. டென்னிஸ் தான் இதற்கு காரணம் என்றாலும் அவரைக் காட்டிக் கொடுக்க அவர் விரும்பவில்லை. மேலும் அந்த போலீஸ் அதிகாரி கால் கைகளில் சங்கிலி போட்டு பஹாருவை அவர் வீட்டிற்கு மறுபடியும் சோதனையிட கொண்டு செல்லத் தயாராகிவிட்டாராம். ஆனால் மேலிடத்திலிருந்து வந்த செல்போன் அழைப்பு வந்து சகோ. பஹாருவை அவர் வீட்டிற்கு கொண்டு செல்வது தடுக்கப்பட்டது இது கர்த்தருடைய சுத்த கிருபை விலங்குகள் அவிழ்க்கப்பட்டன. ஆனால் அவருடைய மனைவியை(7

மாத கர்ப்பிணி) இந்த நாடு கடத்தப்படும் சிறைக்கு அழைத்து வரவேண்டும். அவளுடைய விலாசம் என்ன? என்றெல்லாம் பயமுறுத்தி கேட்டிருக்கிறார்கள். ஆனால் இயற்கையாகவே தைரிய குணத்தையும், மற்றும் பரிசுத்த ஆவியின் நிறைவையும் பெற்றிருந்த இவர் இந்த மிரட்டலுக்கு பயப்படாமல் "என் மனைவியை என்னால் இங்கு வரச் சொல்ல முடியாது" என்னை நீங்கள் ஏற்றி என் நாட்டிற்கு அனுப்பும் நாளில் அவளை வரச் சொல்லுகிறேன். அப்போது நீங்கள் என்னையும், என் மனைவியையும் ஒரே விமானத்தில் எத்தியோப்பிய தலைநகர் ஆடிஸ் அபாபா(Addis Ababa) ஏற்றி அனுப்பலாம். மற்றபடி என்னை வற்புறுத்த வேண்டாம். அவள் 7 மாத கர்ப்பிணி தயவுடன் அவளை பெண்கள் ஜெயிலில் போட வேண்டாம்" என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இவற்றை ஜெயிலின் உள்ளே வந்தவுடன் எங்களுடன் பகிர்ந்து கொண்டார். அவருடைய தைரிய குணம் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. இது போல, "ஆண்டவரே! எனக்கும் தைரியம் வேண்டும்" என்று நான் ஜெபிப்பதுண்டு.

சகோ. அராயா (52 வயது) மூத்தவர் திடீரென்று ஓர் இரவு படுக்கப் போகும் முன்பு தன் மனைவி, 5 பிள்ளைகளை நினைத்து அழத் துவங்கிவிட்டார். அவ்வளவு பெரிய மனிதர் (உயரம், வாட்ட சாட்டம், பெரிய தொந்தி, 25 வருட சவுதி வாழ்க்கை, மிகவும் பணக்காரர்) குழந்தையைப் போல் தேம்பி, தேம்பி அழுதது எங்கள் உள்ளங்களை வேதனைப்படுத்ததக்கதாகவும் உடைக்கத்தக்கதாகவும் இருந்தது. இப்படிபட்ட மற்றவர் படும் கஷ்டங்களை பார்க்கும் போது எனக்கு நான் 'சாக வேண்டும்' 'என்னால் தானே இந்தப் பாடுகள் இவர்களுக்கு! என்று நினைக்கும் போதெல்லாம் சுய வெறுப்பு ஏற்படுவது உண்டு. ஆனால் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது (ரோம. 8:28) என்ற வேத வசனத்தின்படி அவர் வாழ்க்கையும் கூட அந்த சிறைவாசத்திலே தான் மாறியது. ஆம் சிறைவாசத்திற்கு முன்பு சாதாரண ஆர்த்தோடாக்ஸ் கிறிஸ்தவராக பாவ வாழ்க்கை வாழ்ந்த அவ., சிறையின் பாடுகள் மத்தியில் ஆண்டவருக்கு தம் வாழ்வை அர்ப்பணித்து மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர் ஆனார்! அருகே சென்று நாங்கள் யாவரும் அவரை "பயப்பட வேண்டாம், கலங்க வேண்டாம், கர்த்தர் உங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளுவார், சீக்கிரம் நீங்களும் எத்தியோப்பியா சென்று விடுவீர்கள்" என்று சொல்லி ஆறுதல் படுத்தினோம். அடுத்த வாரம் அவ்வாறே ஆடிஸ்அபாபா(Addisababa) செல்லும் அடுத்த கூட்டத்தில் அவருடைய பெயரும் சகோ. மிஸ்பின், சகோ. கலாகில் பெயர்களும் இருந்தன. **"உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்"** (யோவான் 16:20) என்று ஆண்டவராகிய இயேசு சொன்னது போலவே கடந்த சில

தினங்களுக்கு முன்பாக துக்கத்தில் மூழ்கியிருந்த அவருக்கு சந்தோஷமான அறிவிப்பு கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மூன்று பேர்களும் (அராயா, மிஸ்பின், கலாகில்) சென்று விட்டார்கள். மீதமுள்ள எங்களுக்கு ஒருபுறம் நண்பர்கள் அவரவர் வீட்டிற்கு அனுப்பப்படுவது அறிந்து சந்தோஷம் இருந்தாலும், மறுபுறம் அவர்களுடைய பிரிவு ஒருவித துக்கத்தைக் கொடுத்தது. அடுத்து சகோ. இஸ்கந்தர் கடுமையான சர்க்கரை வியாதி உடைய 50 வயது சகோதரன். அவருக்கு 5 குழந்தைகள். அதில் மூத்தவனுக்கு 16 வயது இருக்கும். இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்றவன். எப்படியோ இவர் தம்முடைய காரை மற்றவர் பெயருக்கு மாற்றம் செய்துவிட்டு பிள்ளைகள், மனைவி பாஸ்போர்ட்டிலும் கடைசி வெளியேற்றம் முத்திரையையும் தன்னுடைய நல்ல முதலாளி மூலமாக தயார் செய்து விட்டார். இந்த நாளிலே இந்த விமானத்திலே 'அஸ்மரா' செல்லத் தயாராக இருக்கவும், தன் மனைவி, பிள்ளைகளை இந்த சிறையிலிருந்து இவர் புறப்படுவதற்கு இரண்டு மணி நேரம் முன்பாக சிறைக்கருகே கொண்டு வரவும் கட்டளைப் பெற்றிருந்தார். புறப்படும் இரவு வந்தது. அதிகாலை 2 மணிக்கு விமானத்தில் செல்ல அவரும் ஆயத்தமுடனும், ஆர்வத்துடனும் காணப்பட்டார். இரவு 11 மணிக்கு மனைவி, பிள்ளைகள் இந்த 'புரைமான்' சிறைக்கு கொண்டு வரப்படவேண்டும். ஆக ஏற்கெனவே, தகவல் அவர் குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் யாவரும் குழந்தைகள் மற்றும் பெட்டிகளுடன் இரவு 10.00 மணிக்கே சிறைக்கு வந்துவிட்டார்கள் (ஆனால் அவரின் மூத்த மகனைத் தவிர) ஆம்! இஸ்கந்தரின் மனைவி சொன்னார்கள், "நம் மூத்த மகன் – அவன் நண்பர்களைப் பார்த்து, சொல்லி விட்டு வருகிறேன்" என்று மாலை 5.00 மணிக்கு சென்றவன் இரவு 10.00 மணிவரை வீடு திரும்பவில்லை. ஏற்கெனவே 'ஜெத்தா' பள்ளி நண்பர்களை விட்டு 'எரித்திரியா' – 'அஸ்மராவிற்கு' வர அவனுக்கு துளியும் விருப்பம் இல்லை. ஆகவே அவன் வீட்டைவிட்டு ஓடிவிட்டிருக்க வேண்டும்"என்று. ஆகவே என்ன செய்வது? என்று தெரியவில்லை யாவருக்கும்.

பெட்டியோடு வெளியே விமானநிலையத்திற்கு செல்ல வந்த சகோதரன் இஸ்கந்தரிடம் "திரும்பி உள்ளே போ" உன் மூத்தமகன் இங்கு வராமல் நீங்கள் ஒருவரும் நாடு செல்ல முடியாது" என்று போலீஸார் அவரிடம் சொல்லிவிட்டார்கள். அவன் என்றைக்கு திரும்ப இங்கு வருகிறானோ அன்றைக்கு மட்டுமே நீங்கள் நாட்டிற்கு திரும்பிப் போக முடியும், அதுவரை இந்த பெண்கள் சிறையிலே உன் மனைவியும் நான்கு பிள்ளைகளும் (5 வயது மகளும் கூட) தங்க வேண்டும்" என்றார்கள். சகோ. இஸ்கந்தர் இதைக் கேட்டு அதிர்ச்சியுற்றார்.

அவர் மிகவும் பொறுமைசாலி, சகிப்புத் தன்மை நிறைந்தவர். ஆனால் அன்று மிகவும் கலக்கத்துடன் காணப்பட்டார். எல்லோரும் அவரை பரிதாபத்துடன் பார்த்தனர். எங்களுக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் உடனே நான் அவரைத் தேற்றினேன். "கவலை, பயம் வேண்டாம். கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை. அவர் அற்புதம் செய்வார்" ஜெபம் செய்வோம் என்று ஜெபம் செய்ய ஆரம்பித்தோம். விமான நிலையத்திற்கு போக வேண்டிய கைதிகளை, அவர் குடும்பங்களை ஏற்றி செல்லும் பஸ் புறப்பட ஒரு மணி நேரம்தான் இருந்தது. மேலும் எரித்திரியா நாட்டின் தலைநகரான இந்த அஸ்மாராவிற்கு வாரத்திற்கு ஒரே விமானம் தான். அப்படியானால் உட்கார இடம் கிடைப்பது மிக மிக அரிது! எப்போது அவர் மூத்த மகன் திரும்பி வருவது? இவர்கள் நாட்டிற்குப் போவது எப்போது? சிறு குழந்தைகளும் பெண்கள் ஜெயிலில் எப்படிக் கஷ்டப்படப் போகிறார்கள்? என்றெல்லாம் எங்கள் மனம் வேதனைப்பட்டது. ஆனால் ஒரு ஆச்சரியமான—அற்புதமான செய்தியை ஒருவர் ஓடி வந்து சொன்னார். "இஸ்கந்தர்! உன் மகன் வந்துவிட்டான். போலீஸார் உன்னை வெளியே வரச் சொல்லுகிறார்கள். விமானத்திற்கு பஸ் தயாராக இருக்கிறது. இன்னும் புறப்பட 15 நிமிடங்கள் தான் உள்ளது. வெளியே வா" என்று. நாங்கள் யாவரும் இந்த நல்லச் செய்தியைக் கேட்டோம். கர்த்தருக்கே ஸ்தோத்திரம். அல்லேலூயா! என்று சத்தமாக துதித்தோம். அவர் எங்கள் யாவரையும் கட்டிப்பிடித்து கொண்டார். பிறகு பாஸ்டர் பஹாரு வெளியே சென்று சகோ. இஸ்கந்தருடைய மூத்த மகனை அழைத்து சிறைக்குள்ளே கொண்டு வந்து அங்கிருந்த எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினார். அவன் தன்னுடைய நண்பர்கள் வீட்டிற்கு சென்று திரும்பிவர நேரம் ஆகிவிட்டது. மற்றபடி வேறு எந்த காரணமும் இல்லை. அவன் தாயார் எங்கெல்லாமோ போன் செய்து விட்டு அவன் கிடைக்காததால் அவன் வீட்டை விட்டு ஓடி விட்டான், 'அஸ்மாரா' வர அவனுக்கு விருப்பம் இல்லை என்று முடிவு கட்டிவிட்டார்கள். எப்படியோ நம் ஆண்டவர் எங்கள் ஜெபங்களுக்கு உடனே பதிலளித்து, அற்புதத்தைச் செய்தார். அவன் வராமல் எங்காவது ஓடி ஒளிந்திருந்தால், அந்தக் குடும்பமே – சிறு பிள்ளைகள் உட்பட பல மாதங்கள் அந்த அருவருப்பான சிறையிலே அவதிப்பட்டிருந் திருப்பார்கள். நினைத்துக் கூடப் பார்க்க முடியாத கஷ்டங்களை, வேதனைகளை அனுபவித்திருக்கக் கூடும். இதை ஏன் விளக்கமாக கூறுகிறேன் என்றால் **"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள், அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"** (சங். 34:8) என்கின்ற வசனத்தின்படி சகோ. இஸ்கந்தரின் வாழ்விலும், எங்கள் விசுவாச வாழ்விலும் அற்புதம் நடந்தது. இந்த அனுபவச் சாட்சியின் மூலம் நீங்களும் நன்மை அடைய

வேண்டுமென்பதற்காகத்தான் எழுதுகிறேன். பிறகு சகோ. இஸ்மத்தரும் அவர் குடும்பத்தாரும் இரவு 11 மணிக்கு புறப்பட்டு தங்கள் நாட்டிற்கு செல்ல விமான நிலையத்துக்கு புறப்பட்டுச் சென்றார்கள். ஆனந்த கண்ணீரோடு பிரியா விடையுடன் வழி அனுப்பி வைத்தோம்.

அடுத்த வாரத்தில் சகோ. நூகப் எத்தியோப்பியாவிற்கு (அடிஸ்பாபா) ஏற்றி அனுப்பப்பட்டார். நானும் சகோ. பஷாரு, சகோ. டின்சாய், சகோ. பொர்டு, சகோ. கவாயு, மற்றும் சகோ. டென்னிஸ் (பிலிப்பைன்ஸ்) மட்டுமே எஞ்சியிருந்தோம். என்னுடைய பாஸ்போர்டை "பாஸ்போர்ட் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பிவைத்திருக்கிறோம், அடுத்த வாரத்தில் அனுப்பிவிடுவோம்" என்றார்கள். பொறுமையுடன் காத்திருந்தேன். ஆனால் அங்கிருந்த மற்றக் குற்றவாளிகள் பலர் பல சிறைகளிலிருந்து கொண்டு வரப்பட்டு ஒரே வாரத்தில் அவரவர் நாட்டிற்கு இந்த "புரையான்" சிறையிலிருந்து அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர். இதில் வேடிக்கையும் ஆச்சரியமான காரியம் என்னவென்றால் இவர்களுக்கு பாஸ்போர்ட் கிடையாது, டிக்கெட்டும் வாங்க முடியாது. இப்படிப்பட்ட கைதிகளுக்கு சவுதி அரசாங்கமே அந்தந்த கைதிகளின் நாடுகளின் தூதரகம் மூலம் 'அவசர பாஸ்போர்ட்டுகளை'(Emergency Passport) ஒழுங்கு செய்து, சவுதி அரசாங்க விமான டிக்கெட்டு களையும் இலவசமாக கொடுத்து அனுப்பினார்கள். பயங்கரமான கிரிமினல்கள் இப்படியாக வெகு சீக்கிரம் அனுப்பப்படும் போது ஒரு குற்றமும் (இயேசு கிறிஸ்துவை ஆராதித்து பிரசங்கித்ததற்காக மட்டும்) செய்யாத ஆண்டவரின் பிள்ளைகளாகிய எங்களை இவ்விதமாக உடனே அனுப்பாமல் வேண்டுமென்றே தாமதித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் எனக்கு பாஸ்போர்ட், டிக்கெட் எல்லாம் ரெடியாக இருந்தும், என்னையும் இப்படி தாமதிக்கச் செய்து கொண்டிருந்தனர். இது மிகவும் விநோதமாக இருந்தது. இதில் பல மோசடிகளும், லஞ்சமும், நடந்து கொண்டிருந்தது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சகோதரன் டென்னிஸின் விமான டிக்கெட் காணாமல் போய்விட்டது என்று ஒரு நாள் கூறினார்கள். மிகவும் அதிர்ச்சி யாவருக்கும்! எங்களை 3-வது சிறையிலிருந்து கொண்டு வரும்போதே எங்களுடைய பாஸ்போர்ட், டிக்கெட்டுகள் எல்லாவற்றையும் இந்த சிறையின் போலீஸாரிடம் ஒப்படைத்ததை நாங்களே எங்கள் கண்களால் கண்டோம். ஆனால் இப்போது இவைகள் எப்படி மறைந்து போனது? அவ்வளவு கவனக் குறைவான போலீஸாரா இங்கு? என்ன காரணம் என்றால், இந்த ஒரிஜினல் டிக்கெட்டை வேறு யாருக்காவது விற்று விடுவார்கள். பிறகு அரசாங்கம் தரும் இலவச டிக்கெட்டை இவர்களுக்கு கொடுத்து அனுப்புவார்கள் அல்லது வேறு டிக்கெட்டை புதிதாக வாங்க சொல்லி வற்புறுத்துவார்கள். வசதி உள்ளவர்கள், வேறு

புதிய டிக்கெட் வாங்கலாம்! எந்த நண்பர்களும், பணமும் இல்லாத எத்தனையோ கைதிகள் இப்படிப்பட்ட நிலைமையை சந்திக்க நேர்ந்தால் என்ன ஆகும்? யோசித்துப் பாருங்கள்! பல வாரங்கள் பல மாதங்கள் அந்த சிறையிலேயே கழிக்க நேரிடும். சில கைதிகள் நான்கு மாதங்களாக நாடு கடத்தப்படவேண்டிய சிறையிலே இருந்தார்கள். ஏன் எனில் பலர் வீட்டு டிரைவர்கள் – டாக்ஸி, கார் டிரைவர்கள் இதுவரை கட்டாத போக்குவரத்து அபராதத் தொகையை கட்ட வேண்டும். சிலருக்கு 3000ரியால் வரை இருக்கும். எப்படிக் கட்டுவது! (இரண்டு வருட சிறை தண்டனைக்குப் பிறகு!) மட்டுமல்ல மிகவும் வேடிக்கையும், அதே வேளையில் பரிதாபமான காரியம் என்னவெனில் இவர்களின் முதலாளிகள்(Sponsors) ஏதாவது போக்குவரத்து விதி மீறுதல் கட்டணம் பாக்கி வைத்திருப்பதை கணினியில் கண்டுபிடித்தால், அதையும் இவர்களே கட்டினால் தான் நாட்டிற்கு ஏற்றி அனுப்பி வைக்கப்படுவார்கள். முதலாளிகள் கட்ட வேண்டிய அபராத தொகை SR 10,000 வரை கூட இருக்கும். அப்படியானால் இந்த கைதிகள் 2 அல்லது 3 வருட சிறை தண்டனைக்குப் பிறகு நாடு கடத்தப்பட வேண்டிய கட்டத்தில் எப்படி? எங்கிருந்து கட்ட முடியும்? இந்த விபரீதமும், வினோதமுமான காரியத்தை எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆம் சவுதி அரேபியாவில் 21 – ஆம் நூற்றாண்டில் நடைபெற்று வரும் உண்மை சம்பவத்தை தான் நான் எழுதுகிறேன். இதை தட்டி கேட்க எந்த நாடும் இல்லை. யாரும் இல்லை! இதனால் கட்ட முடியாமல் நாட்டிற்கும் உடனடியாக போக முடியாமல் பல மாதங்களாக காத்திருக்கும் கைதிகள் ஏராளம். அதில் நம் இந்திய மலையாளி கைதிகள் ஏராளம். அவர்களிடம் பேசும்போது இது போன்ற அநேக அநியாயங்களை அறிந்து வேதனை கண்ணீர் வடித்தேன். "உலக மனித உரிமை நிறுவனங்கள்" ஏன் இந்த பணக்கார நாட்டைத் தட்டிக் கேட்பதில்லை? என்று கேட்க தோன்றுகிறதல்லவா? பழிவாங்குதல் கர்த்தருக்குரியது! அவரவர் கிரியைக்குத்தக்க பலனையும், தீர்ப்பையும் அளிக்க 'நீதியுள்ள நியாயாதிபதி' நம் ஆண்டவர் இயேசு சீக்கிரம் வரத்தானே போகிறார்!

"நேபாள நண்பரின் அவலநிலை!"

என் வலது பக்கத்தில் படுத்திருந்தவர் நேபாள புத்தமதத்தைச் சேர்ந்தவர். அவருடைய சோகக் கதை என்னவெனில் அவருடைய கம்பெனியில் சரியாகச் சம்பளம் கொடுப்பதில்லை. எனவே இங்கிருந்து புறப்பட்டு எப்படியாவது தாய்நாடான நேபாளம் தப்பிச் சென்று விடுவோம் என்பதற்காக வேறு கள்ள பாஸ்போர்ட் எடுத்து விமான நிலையத்திற்குச் சென்று விட்டார். இமிகிரேஷன் கவுண்டரில் இவருடைய தவறான பாஸ்போர்ட் கண்டு பிடித்துவிடவே ஒரு வருட

சிறை தண்டனை கொடுத்துவிட்டார்கள். 9 மாதங்கள் கழித்து (3 மாதங்கள் குறைத்து) நாடு கடத்த இந்த சிறைக்கு அனுப்பப்பட்டு விட்டார். அவரிடம் SR50/– தவிர தற்போது ஒன்றுமே இல்லை. விமான நிலையத்தில் பிடிபட்டபோது அவரிடம் இருந்த 1000அமெரிக்க டாலரை போலீஸார் எடுத்து வைத்து கொண்டு நீ விடுதலையாகும்போது திருப்பி தருவோம் என்று கூறினவர்கள். ஆனால் விடுதலையானபோது அவர் பணத்தைக் கேட்டதற்கு 'அதெல்லாம் இல்லை. எங்களுக்கு தெரியாது? எப்போ? யாரிடம் கொடுத்தாய்? என்று கேட்டு இவரையே "அதிக தொந்திரவு செய்தால் இன்னும் ஒருவருடம் சிறை தண்டனை நீ அனுபவிப்பாய்" என்று விரட்டிவிட்டார்களாம். 3 பெண் குழந்தைகளைக் கொண்ட இவர் எப்படியாவது 'நேபாளம்' போய் சேர்ந்தால் சரி! என்று பேசாமல் விட்டு விட்டாராம். மேலும் ஜெத்தா நகரில் 'நேபாள தூதரகம்' கிடையாது இவருக்கு அவசர பயண இசைவு சீட்டு தயாரிக்க இவருடைய தூதரகம் ரியாத்தில் தான் உள்ளது. இந்த போலீஸ் அதிகாரிகள் ரியாத்திலுள்ள நேபாள தூதரகத்தில் (1000கி.மீ தொலைவிலுள்ள) தொடர்பு கொண்டு, அவர்கள் அவசர பாஸ்போர்ட் அனுப்பும்வரை இவர் சில மாதங்கள் காத்திருக்க வேண்டியது தான். நான் அங்கு அவரைச் சந்தித்தபோது ஏற்கெனவே 2½ மாதங்கள் கழித்துவிட்டிருந்தார். மிகவும் சோர்வுற்று மனம் உடைந்த நிலையில் காணப்பட்ட அவரிடம் மெதுவாக பேச்சு கொடுத்து 'இயேசு சகலவிதமான ஆறுதலின் தேவன். அவர் 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத். 11:28) என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே "அவரை நம்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறேன்" என்று ஆறுதல் கூறினேன். தொடர்ந்து அவரோடு ஆண்டவர் இயேசுவின் கல்வாரியின் அன்பினையும், சத்தியத்தையும் பகிர்ந்து கொண்டேன். ஒருநாள் 99% நான் சத்தியத்தையும், இயேசுவையும் ஏற்று கொள்ளுகிறேன் என்று கூறினார். மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் மீதி 1% ஏன் சந்தேகம் உங்களுக்கு? என்று கேட்டேன். அதற்கு அவர் நேபாளம் – இந்து அரசாங்கத்தின் கீழே உள்ளது. இந்து மதத்தைத் தவிர வேறு மதத்தின் வழிபாடுகள் பிரசங்கங்கள் கூடாது. ஆகவே அந்த பயம் மட்டும் (1%) எனக்கு இருக்கிறது என்றார். நான் "இயேசு உங்களோடு இருக்கும்போது, எந்த பயமும் தேவையில்லை". சரீரத்தை அழிக்க நினைப்பவர்களுக்கு பயப்படாமல் சரீரத்தையும், ஆத்துமாவையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்று வேதத்திலே இயேசு சொன்னதை அவருக்கு விளக்கிக் கூறினேன். சரி சரி! நான் இனி 'இயேசுவைப் பின்பற்றுவேன்' என்றார். ஒரு உறுதியான நேபாள பிராமணர் உண்மை தேவன் இயேசுவை அறிய,ஏற்று கொள்ள வைத்ததில் பெரிய திருப்தி, மகிழ்ச்சி

அந்த கடுமையான சிறையில் எனக்கு ஏற்பட்டது ஒரு நல்ல அனுபவமாகும். இப்படி நான் மட்டுமல்ல என்னுடன் இருந்த மற்ற 13 விசுவாசிகளும் அந்த சிறையிலே அநேகருக்கு (குறைந்தது 200 பேருக்கு) ஆண்டவரைப் பற்றி அறிவித்தோம். பரி. வேதாகமத்தில் 1 பேதுரு 3:19 இல் அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்ட நாளிலும்....... காவலிலிருந்த (பாதாளத்திலிருந்த) ஆவிகளுக்கு சுவிஷேசத்தை அறிவித்தார் என்று எழுதப்பட்டுள்ளது போலவே நாங்களும், இந்த இஸ்லாமிய சவுதி அரேபியாவின் நாடுகடத்தப்படும் சிறையிலும் பரி. வேதாகமத்துடன், பயங்கர குற்றவாளிகளும், நாடுகடத்தப்படும் கைதிகளுமாயிருந்த அவர்களுக்கு ஆண்டவரின் சுவிசேஷத்தைக் கூறியது ஓர் உன்னதமான மறக்க முடியாத, ஆவிக்குரிய அனுபவமாக எங்கள் வாழ்க்கையில் இருந்தது. இந்த நபர்களில் குறைந்தது 50 பேர் ஆண்டவரை இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தனர். “மனந்திரும்புகின்ற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷ முண்டாயிருக்கிறது” (லூக். 15:10) என்று ஆண்டவராகிய இயேசு கூறினாரென்றால் 50 பேர் மனம் திரும்பியிருப்பதால் எவ்வளவு பெரிய சந்தோஷம் பரலோகத்தில் உண்டாயிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அல்லேலூயா! தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்! கர்த்தர் எங்கள் சிறைவாசத்தை இத்தகைய தம்முடைய பெரிய நோக்கத்திற்காகவே அனுமதித்திருக்கின்றார் என்று எங்களுக்குப் புரிந்தது. இதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம்.

என் முதல் பயணத்தடை!

இந்த கட்டத்தில் நானும் பாஸ்டர் பஹாரு, பாஸ்டர் டின்சாய், பாஸ்டர் டென்னிஸ், சகோ. கவாயூ மட்டுமே அப்போது எஞ்சியிருந்தோம். ஜனவரி 17ஆம் தேதி வந்தது. சென்னைக்கு ‘சவுதியா’ விமானம் பறக்கும் நாள் அது. முந்தின நாள் இந்திய தூதரக அதிகாரி என்னிடம் சொன்னார். நாளை இரவு 11.55 மணிக்கு விமானம் பறக்கும் நேரம். நாளைய லிஸ்டில் உன் பெயர் உண்டு. இங்கிருந்து மாலை 6.00 மணிக்கு உன்னை அழைத்துக் கொண்டு விமான நிலையம் செல்வார்கள். ‘தயாராயிரு’ என்று, ‘வாழ்த்துக்கள்’ சொல்லிவிட்டுப் போய்விட்டார். ‘கர்த்தாவே ஸ்தோத்திரம்’ என்று மனதிலே துதித்துக் கொண்டே மற்ற நான்கு சகோதரர்களுக்கும் என்னுடைய நாளைய பயணத்தைப் பற்றி கூறினேன். அவர்களும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், வாழ்த்துக்கள் கூறி என்னைக் கட்டித் தழுவி சந்தோஷப்பட்டார்கள். அன்றிரவு தூக்கம் வரவில்லை. அதாவது மனசஞ்சலத்தினால் அல்ல,

மனமகிழ்ச்சியினாலும், அடுத்த நாள் இந்த சிறையின் பாடுகளிலிருந்து முற்றிலும் விடுதலை பிறகு (ஜனவரி 18) பெற்றோர், மனைவி, பிள்ளைகளைப் பார்க்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்த தினாலே..... ஆனந்தம், ஆர்வம், துடிப்பு என்னை உறங்கவிடாமல் செய்தது. எப்படியோ தூங்கிவிட்டேன். அடுத்த நாள் வந்தது. மதியம் 3 மணியிலிருந்து இதயம் படபடக்க ஆரம்பித்தது. "எப்போது என் பெயரை அழைப்பார்கள்? விமான நிலையத்திற்கு எப்போது கொண்டு செல்வார்கள்?'' என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். மாலை 5 மணிக்கு விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் கைதிகளின் பெயர் பட்டியல் வாசிக்கப்பட்டது. 'ஈசாக் பிரபு – இந்தி (இந்தியன்)' என்று என் பெயர் அறிவிக்கப்பட்டது. உடனே என் முகம் மலர்ந்தது. மனதிலே சந்தோஷ நீரூற்று பொங்கி எழுந்தது. 6 மணிக்கு தயாராயிரு என்று சொன்னார்கள். பழைய துணிமணிகளைப் பிளாஸ்டிக் பையில் எடுத்து வைத்துக் கொண்டேன். பக்கத்து, எதிர்புற சக கைதி நண்பர்கள் 'முபாரக்' (வாழ்த்துக்கள்) என்று சொல்லி கை குலுக்கினார்கள். 6 மணி வந்தது. பாஸ்டர் பஹாரு, பாஸ்டர் டென்னிஸ், பாஸ்டர் டின்சாய், சகோ. கவாயூ என் தலை மீது கைகளை வைத்து ஜெபித்து ஆசீர்வதித்தனர். கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீருடன் 'பிரியா விடை' கொடுத்து அனுப்பினர்.

இரவு 11 மணி விமானத்திற்கு, மாலை 5 மணிக்கே என்னை அழைத்து செல்ல போலீஸ்காரர்கள் என்னை ஆயத்தமாக்கிவிட்டனர். ஜனவரி 17 ஆம் தேதி 2002 சரியாக 6 மாதங்கள் சிறைவாசத்திற்குப் பிறகு விமான நிலையத்திற்கு செல்கிறேன். தாய் நாட்டிற்கு, பெற்றோர், மனைவி, பிள்ளைகள் காண்பதற்கு மிகுந்த ஆர்வம், துடிப்புடன் அந்த சிறையை விட்டு வெளியே வந்தேன். வந்தவுடன் கால்களில் இரும்பு சங்கலிகள் இட்டு ஸ்டோர் ரூமில் இருந்த என்னுடைய இரண்டு தோள் பைகளையும், மாட்டிக் கொண்டு விமான நிலையத்திற்கு கொண்டு செல்லும் ஒரு ஜூப்பில் ஏற்றி செல்லப்பட்டேன் (விமான நிலையத்திற்கு செல்லும்போதும் சங்கிலிகளுடன்தான்) விமான நிலைய பொதுவான நுழைவு வாசலில் கொண்டு செல்லப்படாமல் நாடு கடத்தப்படும் வாசலுக்கு வேறு வழியாக இரகசியமாக கொண்டு செல்லப்பட்டேன். எப்படியோ நாடு கடத்தப்படும் விமான இடத்திற்கு மாலை 5.30 மணிக்கு அடைந்தேன். என்னைக் கொண்டு வந்த போலீஸ்காரர் என்னை அங்கிருந்த போலீஸ்காரரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார். இரவு 11.55 மணி சென்னை சவுதியா விமானத்திற்கு மாலை 7 மணிக்குத் தான் 'இமிகிரேஷன்' கவுண்டர் திறப்பார்கள். எனவே நாடு கடத்தப்பட வேண்டிய கைதிகள் தங்குவதற்கு (நிற்பதற்கு) ஒரு கம்பி வலையினால் வேலியமைக்கப்பட்ட மைதானத்திற்குள் உட்கார

வைக்கப்படுவார்கள். அதாவது அந்த மைதானம் வெறும் சிமெண்ட் தரை மட்டுமே கொண்டது. நாற்காலியோ, பெஞ்சோ கிடையாது. அவர்கள் இமிகிரேஷன் கவுண்டர் கூப்பிடும் வரை அந்த கம்பி வேலி சுற்றப்பட்ட மைதானத்திற்குள் அந்த சிமெண்ட தரையில் உட்கார சொல்லி அந்த மைதானத்தின் வாசலையும் பூட்டி விடுவார்கள். அவ்வாறே என்னையும் அந்த மைதானத்தின் உள்ளே விட்டு 7 மணிக்கு கூப்பிடுவோம் என்று கூறி கம்பிக் கதவை மூடிவிட்டார்கள். அதுவும் ஒரு சிறைபோல தான். அங்கு அநேக பலநாட்டு கைதிகள் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கு ஒரே ஒரு வசதி உண்டு. பல நாட்களாக குளிக்க வசதியில்லாத பழைய ஜெயில்களிலிருந்து வருகிற நாங்கள் குளிக்க, துணி மாற்றிக் கொள்ள குளியலறைகள் சுமாரான வசதியுடன் இருந்தது. ஆகவே விமானத்தில் ஏறுவதற்கு முன்பு நானும் குளிக்கவும், சுத்தம் செய்த ஆடைகளை அணியவும் அங்கிருந்த போலீஸ்காரரிடம் அனுமதி கேட்டேன். அவரும் "15 நிமிடத்திற்குள் குளியலறைக்கு சென்று திரும்பி விட வேண்டும்" என்று கட்டளையிட்டார். "அப்பாடா" 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' 10 நாட்களுக்குப் பிறகு இன்று குளிக்கப் போகிறேன். புது ஆடைகளை அணிந்து ஊருக்குப் போகப் போகிறேன் என்று சந்தோஷமாக குளியலறைக்குச் சென்றேன். முகச்சவரம் செய்து கொண்டேன். பல்துலக்கி கொண்டேன். ஷாம்பூ தலைக்குப் போட்டு ஆசைதீர குளித்தேன். 15 நிமிடத்திற்குள் குளித்து, புது உடைகளை அணிந்து (பழைய துணிகளை ஒரு தோள்பையில் போட்டுக் கொண்டு) மறுபடியும் கம்பியிட்ட மைதானத்திற்கு வந்தேன். அங்கு பல நாட்டுக் கைதிகளைக் கண்டேன். அதில் நம் தமிழ் நாட்டுக்காரரை சந்தித்தேன். அவரை விசாரித்ததில் கடைசியில் அவர் கிறிஸ்தவ சகோதரன்! தான் 'அபா'(Abha) என்ற இடத்திற்கு ஊழியத்திற்கு (ஒரு வருடத்திற்கு முன்பு) சென்றிருந்த போது என்னைக் கண்டிருக்கிறார். அவரே வந்து நீங்கள் 'பிரபு' தானே என்று கேட்டார். அவ்விடத்தில் ஒரு தமிழ் குரல் கேட்டவுடன் ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும், ஆறுதலாகவும் இருந்தது. அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது அவரும் ஒரு வகையில் 'அபா' தமிழ் ஜெபக்கூடத்தில் கலந்து கொண்டிருந்த காரணத்தினால் பிடிபட்டு அவருடைய ஸ்பான்சர் மூலமாகவே போலீஸாரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டு சிலநாட்கள் அபா சிறையிலும் பிறகு 3 வாரங்கள் ஜெட்டா சிறை (நாடு கடத்தப்படும்)யிலும் இருந்து விட்டு அன்று தான் அவரும் சென்னைக்கு நாடு கடத்தப்பட வந்திருக்கிறார். "நன்றி ஆண்டவரே! பேச்சுத் துணைக்கு ஆறுதலாக ஒரு சகோதரனை கொடுத்திருக்கிறீரே என்று ஆண்டவரைத் துதித்தேன். பிறகு மாலை 7 மணிக்கு சென்னை விமானத்திற்கு செல்லுபவர்களை இமிகிரேஷன் கவுண்டருக்கு அழைத்தார்கள். அதற்கு

முன்பு எங்களுடைய தோள்பைகளை சோதனை போட்டு விட்டு பிறகு 'லக்கேஜ்ஜை' மிஷின் மூலம் அனுப்பிவிட்டார்கள். என்னையும், அந்த தமிழக சகோதரனையும் சோதனை செய்து விட்டு அடுத்த பக்கத்தில் இருக்கிற கம்பியிட்ட இன்னொரு மைதானத்திற்கு சென்று காத்திருக்கச் சொன்னார்கள். அப்பாடா! தோள்பைகள் லக்கேஜ் பெட்டிக்கு சென்றுவிட்டது. இன்று இந்தியா போகிறோம் என்று முழு நம்பிக்கையுடன் அதே வேளையில் என்னையே நம்ப முடியாத ஒருவித உணர்வில் அந்த சகோதரனுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். மாலை 8 மணி ஆனது 9 மணிக்கு அங்கிருந்து ஒரு பஸ்ஸில் உட்கார வைத்து 9.30 மணி போல் சென்னை விமானத்திற்கு கொண்டு செல்லப்படுவோம் என்று சொல்லப்பட்டது. ஒவ்வொரு நிமிடமும் 'எப்பொழுது சென்னை விமானத்தில் உட்காரப் போகிறோம். பறக்கப் போகிறோம்' என்று துடிப்புடனும், ஆர்வத்துடனும் காத்திருந்தேன். ஆனால் சுமார் இரவு 8.30 மணி இருக்கும் அங்கிருந்த சவுதியா விமான ஆபீஸர் ஓடிவந்து என்னை அவசரமாக அழைத்தார். 'இமிகிரேஷன்' கவுண்டர் அருகே அழைத்துச் சென்றார். அந்த கவுண்டரில் பாஸ்போர்ட் அதிகாரி கம்பியூட்டரில் என் பாஸ்போர்ட் மற்றும் என்னைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு சொன்னார். "உன் மனைவி எங்கே? அழைத்து வா! ஜெத்தாவில் தான் இருக்கிறாள் அவளையும் உன்னுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். அவளை வரச்சொல்" என்று கோபமாக சொன்னார். எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. நான் உடனே அவரிடம் "என் மனைவி ஜனவரி 13 ஆம் தேதி ஏற்கெனவே சென்னை சென்று சேர்ந்துவிட்டாள். பயணிகள் பட்டியலைக் கூட நீங்கள் பாருங்கள்" என்று கூறினேன். அதெல்லாம் இல்லை நீ பொய் சொல்லுகிறாய். எங்களுக்கு எந்தவிதமான விவரமும் (மனைவி சென்றதாக) இந்த கம்பியூட்டரில் இல்லை. எனவே நீ அவளை அழைத்துக் கொண்டுவா. அவளைப் பற்றிய விவரங்கள் கம்பியூட்டரில் இல்லை. ஆகவே அதைச் சரி செய்து கொண்டு வா. இன்றைக்கு நீ பயணம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். அங்கிருந்து போலீஸ்காரரை அழைத்து இவனை மறுபடியும் ஜெயிலுக்கு கொண்டு சென்றுவிடு என்று சொல்லிவிட்டார். எனக்கு தூக்கிவாரி போட்டது. என் உள்ளம் உடைந்தது. இன்றைக்கு (6 மாத சிறைபாடுகளுக்கு பிறகு) ஊருக்கு போக மாட்டேனா? என் ஆண்டவரே! இப்படி நிகழ அனுமதித்தீர் என்று மனதிற்குள் கதற ஆரம்பித்தேன். எவ்வளவு அந்த ஆபீஸரிடம் வாதாடியும் அவர் "எதுவும் செய்ய முடியாது' என்று கைவிரித்து விட்டார். மறுபடியும் அதே ஜெயிலுக்கு கொண்டு செல்ல பஸ் வரும்வரை சாப்பாடு தண்ணீர் இல்லாமல் இரவு 12 மணி வரை அங்கிருந்த ஒரு தனி அறையில் அடைக்கப்பட்டேன். பசி, தாகம் வேறு மனதில் வேதனை கண்களில்

கண்ணீர் வடிய அந்தத் தனியறையில் "என் ஆண்டவரே மறுபடியும் என்னை கைவிட்டு விட்டீரே" என்று மனதிற்குள் கதறினேன். ஆனால் ஆண்டவர் "நான் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை உன்னை கைவிடுவதும் இல்லை" என்று ஆவியானவர் மூலம் கூறிக்கொண்டே இருந்தார். என்னை அந்த ஜீவ வார்த்தைகள் திடப்படுத்தியது! இரவு 12.30 மணிக்கு பஸ் வந்தது (பல சிறைகளிலிருந்து அவ்வப்போது நாடு கடத்தப்படும் கைதிகளை ஏற்றி கொண்டு பஸ்கள் வந்து போய் கொண்டிருக்கும்). மறுபடியும் என்னை அதே 'புரைமான்' ஜெயிலுக்கு கொண்டு போய் தள்ளினார்கள். என்னுடன் இருந்த சகோதரர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். அங்கிருந்த கைதிகளும் ஓடி வந்து "ஏன் திருப்பி அனுப்பிவிட்டார்கள்" என்று கேட்க ஆரம்பித்தார்கள். எதுவும் பதில் சொல்ல முடியாமல் துக்கத்தால் என உள்ளம் நிறைந்திருந்தது. ஆனாலும் சமாளித்து கொண்டு விமான நிலைய கவுண்டரில் நடந்த விவரங்களை சொன்னேன். அருமை சகோதரர்கள் டின்சாய், பஹாரு, இஸ்கந்தர், டென்னிஸ் என்னைக் கர்த்தர் எல்லாம் நன்மைக்காகவே செய்வார் கவலை வேண்டாம் என்று சொல்லித் தேற்றினார்கள். எனக்கு மறுபடியும் திட நம்பிக்கை வந்தது. 'நான் போகவில்லை' என்ற செய்தியை நண்பர் அருணுக்கு தெரியப்படுத்த வேண்டும். அடுத்த நாள் வெள்ளி ஓய்வு நாள். சனிக்கிழமை அருணும், அவர் மூலம் தூதரக அதிகாரி வந்தால் தான் என் தடைக்கு காரணமாக டாக்குமெண்ட்டை (என் மனைவி சென்றதற்காக ஆதாரம்) கொடுக்கச் செய்து சரி செய்ய முடியும். ஆகவே எப்படியாவது அருணுக்கு அல்லது சகோதரர் சாம் இவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்ன செய்வது? திடீரென்று ஒரு ஆலோசனையைக் கர்த்தாராகிய நம் ஆண்டவர் இயேசு கொடுத்தார். சிறைக்கு சாப்பாடு சப்ளை செய்யும் வேனை ஓட்டி வருபவர் ஒரு தமிழ்நாட்டு முஸ்லீம் சகோதரர் என்று இந்திய கைதி நண்பர்கள் சொல்லக் கேட்டிருந்தேன். எனவே அங்கிருந்த மலையாள நண்பரை அணுகி இந்த டிரைவரிடம் ஒரு 'தகவல் சீட்டு' என் நண்பர் சாம் அல்லது அருணுக்கு தெரிவிக்கச் சொன்னேன். அதற்கு அவர் SR20/- (ரூ. 200/-) கொடுத்தால் செய்வேன் என்றார். சரி என்று சொல்லி சகோ. அருணுக்கு, நான் போகமுடியவில்லை, ஆகவே உடனே இந்த தடையை நீக்க இந்திய தூதகரகத்திடம் தெரிவியுங்கள்! என்று சீட்டு எழுதி கொடுத்துவிட்டேன். மலையாள நண்பரும் அந்த டிரைவரிடம் அந்த சீட்டைக் கொடுத்தனுப்பினார். வெள்ளிக் கிழமை யாரும் பார்க்க வரவில்லை. சனிக்கிழமை வந்தது. தகவல் கிடைத்திருக்குமா? அருண் அல்லது இந்திய தூதரக அதிகாரி வருவார்களா? என்று ஆவலுடன் காத்திருந்தேன். யாரும் வரவில்லை. பகல் 12 மணி வரை காத்திருந்தேன். ஏமாற்றமடைந்தேன். ஆனால் பகல் 1 மணிக்கு மதியம் சாப்பாடு சிறைக்கு கொண்டு வந்த டிரைவர் ஒரு பதில் தாளை

கொண்டு வந்தார். அதில் சகோ. சாம் ஒருதாளில் எழுதி அனுப்பியிருந்தார், "நீங்கள் கடந்த வியாழக்கிழமை (ஜனவரி 17) போக முடியாத சூழ்நிலைக்கு மிகவும் வருந்துகின்றோம். ஆனாலும் கவலைப்படவேண்டாம். கர்த்தர் கைவிட மாட்டார். ஏதோ நன்மைக்காகவே ஆண்டவர் இதை அனுமதித்திருக்கிறார். அருணை எப்படியாவது தொடர்பு கொள்வோம். இந்திய தூதரகத்திற்கு தெரிவிப்போம். தைரியமாக இருங்கள். கர்த்தர் உங்களோடிருக்கிறார். பயப்பட வேண்டாம்" என்று இந்த சகோதரன் எழுதிய வார்த்தைகள் மிகவும் என்னை ஆற்றித் தேற்றின. ஜனவரி 19 யாரும் வரமுடியாது என்று உணர்ந்து கொண்டேன். கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தாலும் சகோதரன் பதில் என்னை உற்சாகப்படுத்தியது. அடுத்த நாள் ஞாயிறு காலை 10 மணியளவில் நண்பர் அருணும், இந்திய தூதரக அதிகாரியும் ஓடோடி வந்திருக்கிறார்கள் என்னை அழைத்து "ஏன் போகவில்லை? என்ன ஆனது? என்று அதிர்ச்சியுடன் கேட்டனர். விமான நிலையத்தில் நடந்த விவரங்களை கூறினேன். உடனே இந்திய தூதரக அதிகாரி "உங்கள் மனைவி சென்றதன் ஆதாரம் எங்களிடத்தில் உள்ளது. உங்கள் பிள்ளைகள் கடந்த மார்ச் மாதம் வந்து, ஜின் 9ம் தேதி சென்றதற்காக ஆதாரங்களைக் கூட கொடுக்கிறோம். வரும் புதன் இரவு விமானத்தில் அனுப்ப ஏற்பாடு செய்கிறோம். கவலைப்பட வேண்டாம். பொறுத்துக் கொள்ளுங்கள். செவ்வாய் கிழமை வருகிறோம்" என்று இருவரும் சொல்லிவிட்டு சென்றனர். எனக்கு தைரியம் வந்தது.

மறுபடியும் ஜனவரி 23 ஆம் தேதி சென்னைக்கு கண்டிப்பாக போகலாம் என்ற நம்பிக்கையுடன் அடுத்த இரண்டு நாட்களை பொறுமையுடன் கழித்தேன். இதற்கிடையில் நாங்கள் எங்களிடமிருந்த வேதாகமத்தை வாசித்து கொண்டும், பக்கத்துள்ள கைதிகளுக்கு இயேசுவைக் குறித்தும், சுவிசேஷத்தையும் கூறி வந்தோம். இதற்காக ஆண்டவர் என்னை தாமதப்படுத்துகிறாரோ என்று அதற்காகவும் ஸ்தோத்திரம் கூறினேன். மற்ற சகோதரர்களுக்கும் 'பேப்பர் வேலைகள் தாமதமாக நடந்து கொண்டிருந்தது. இதில் மிகவும் கஷ்டப்பட்டது சகோ. டின்சாய் தான். இந்த எத்தியோப்பிய பாஸ்டர் வயது 35 தான் ஒல்லியான சரீரம் ஆனால் மன உறுதியுடன் ஆண்டவர் மீது வைராக்கியமும் அதிகம் கொண்டவர். அவருடைய சாட்சி வல்லமையானது. ஐந்து வருடங்களுக்கு முன்பு 'ஹீராயின்' என்ற போதைப் பொருளை சவுதியில் விற்று வந்தவர். ஒருமுறை சவுதி போலீஸ் இவரை போதைப் பொருள் வைத்து விற்றுக் கொண்டிருப்பதை அறிந்து கைது செய்து விட்டார்கள். ஜீப்பில் ஏற்றி உட்கார வைத்து கொண்டு இரண்டு கைகளில் இரும்பு சங்கிலிகளை போட்டு

வைத்திருக்கிறார்கள். டிராபிக் சிக்னல் பாயிண்டில் ஜீப் நின்றபோது எப்படியோ ஜீப் கதவைத் திறந்து தாவி குதித்து ரோட்டில் ஓடி (இரவு 11 மணி) சாலையில் உள்ள பாதாளச் சாக்கடை மூடியைத் திறந்து உள்ளே குதித்து தப்பியிருக்கிறார். நல்லகாலம் அந்த பாதாளச் சாக்கடை மிக ஆழம் இல்லாததால் உள்ளே குதித்து விட்டு கால்வாய் மூடியை மறுபடியும் மூடிக் கொண்டு விட்டாராம். சுமார் ½ மணி நேரம் அந்த பாதாளச் சாக்கடையில் மறைந்து இருந்த பிறகு மெதுவாய் கால்வாய் மூடியைத் திறந்து மேலே ஏறி வந்திருக்கிறார். பிறகு நேரே தன் நண்பர் வீட்டிற்கு ஓடி சங்கிலிகளை எப்படியோ கழற்றிவிட்டிருக்கிறார். பிறகு இவரை போலீஸ் கண்டுபிடிக்கவே முடியவில்லையாம். சில ஆண்டுகளுக்கு முன்பு வேறொரு பாஸ்போர்ட்டில் இருந்த போது இதே தொழிலை இவர் ஜெத்தா நகரிலேயே செய்து கொண்டிருந்தபோது மறுபடியும் போலீஸில் பிடிபட்டிருக்கிறார். இந்த முறை போலீஸால்ஸ்டேஷனுக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அதிசயம் பாருங்கள் இவரை, பெயரை பதிவு செய்துவிட்டு, இவரிடம் மிகவும் குறைந்த அளவு போதைப் பொருள் இருந்ததால் என்ன நினைத்தாரோ அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், "சரி ஓடிப்போ" என்று அனுப்பிவிட்டிருக்கிறார். இந்த இரண்டு சம்பவங்களிலும் குறைந்தது 5 வருடம் சிறை தண்டனை அல்லது மற்ற நாட்டிலிருந்து கடத்தி வந்ததாக ஆதாரம் கிடைத்தால் 'தலையும் வெட்டப்படும்' என்ற கடும் தண்டனைகள் இருந்தாலும் ஆண்டவர் இயேசுவின் பிள்ளையாக ஊழியனாக பின்னால் மாறுவதற்காக ஆண்டவர் இயேசு முன்பே இவரைத் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆகவே தான் "இந்த இரண்டு ஆபத்துகளிலிருந்தும் என்னை தப்புவித்தார்" என்று இவர் என்னிடம் சாட்சி பகிர்ந்து கொண்டார். இரண்டாவது பேராபத்திலிருந்து தப்பிய பிறகு ஒருநாள் இரவு தன் படுக்கையில் அயர்ந்த நித்திரையிலிருக்கையில் ஆண்டவர் இயேசு அறை முழுவதும் பரவிய பெரிய வெளிச்சத்தோடு தரிசனம் கொடுத்தாராம். அப்போது ஆண்டவர் "நீ எனக்கு வேண்டும்" என்று சொல்லி மறைந்துவிட்டாராம். உடனே எழுந்து முழங்காலிட்டு, ஆண்டவரே நான் மிகவும் பாவி இத்தனை வருடங்கள் செய்து வந்த இந்தப் பாவச் செயலை, தொழிலை முற்றிலும் விட்டு விடுகிறேன். இனி உம்முடைய மந்தையில் ஆடுகளை சேர்க்கும் ஊழியனாக மாறுவேன் என்று முழுவதும் தன்னையே அர்ப்பணித்திருக்கிறார். அதன் பிறகு கடந்த இரண்டு வருடங்களாக இப்படி சிறைபிடிக்கப்படும்வரை 60 பேர் 70 பேர் கூடுகிற 'எத்தியோப்பிய' சபைக்குப் போதகராக இருந்து அநேகரை இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்தியுள்ளார். எத்தனை பெரிய அற்புத சாட்சி பாருங்கள். அப்படிபட்டவர் செய்த குற்றம் என்ன தெரியுமா? நாங்கள் நடத்திய இரண்டு பெரிய சுவிசேஷக் கூட்டங்களுக்கு

நாற்காலிகள் மற்றும் ஒலி பெருக்கிகள் ஒழுங்கு செய்தது மட்டும்தான்! இந்த சிறைவாசத்தால் நவம்பரில் நடக்க இருந்த அவர் திருமணம் நின்று போனது. அவர் வீட்டு வாசலில் நிற்க வைத்து இருந்த அவருடைய 1996 வருட மாடல் டொயட்டா கரோலா காரை (2 லட்சம் 53000) போலீஸ்காரர்கள் சந்தேகத்தின் பேரில் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் இவர் பொது சிறையை விட்டு 4 மாதங்கள் கழித்து நாடு கடத்தப்படும் சிறைக்கு மாற்றப்படும்போது தான் இதை இவர் நண்பரின் மூலம் அறிந்து கொண்டார். சிறை அதிகாரியிடம் 'தன் கார் தவறாக போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என அதைப் பெற்றுத் தா கேட்டதற்கு அவர் அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார். அவர் மனம் எப்படி இருக்கும். ஆனாலும் அந்தக் காரைத் திரும்பப் பெறும்வரை எத்தனை மாதங்கள் ஆனாலும் நான் இந்த சிறையை விட்டு போகமாட்டேன்' என்ற மனஉறுதியுடன் இருந்தார். நாங்களும் கர்த்தர் நிச்சயம் உங்கள் காரைத் திரும்பத் தருவார்" என்று உற்சாகப்படுத்தி வந்தோம். அந்தக் காரை தன் நாட்டிற்கே (எத்திபோப்பியா) கொண்டு செல்ல ஜெயிலில் இருந்தவாறு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு இருந்தார். எத்தியோப்பிய சகோதரர்கள் பெரும்பாலும் நாடு கடத்தப்பட்டுவிட்டனர். ஆனால் இந்த காரை திரும்ப பெறும் நாட்கள் கடந்து கொண்டு போக இவர் தன் நாட்டிற்கு போவது தாமதமாகி கொண்டே வந்தது. ஆனாலும் மிகவும் பொறுமையுடன், விசுவாசத்துடனும் அவர் மெலிந்த சரீரத்தில் அநேக சுகவீனங்களால் பாதிக்கப்பட்டாலும் எல்லாப் பாடுகளையும் ஆண்டவருக்காக சகித்துக் கொண்டது எனக்கு சில பாடங்களை அவரிடமிருந்து கற்றுக் கொள்ளச் செய்தது.

ஜனவரி 23 ஆம் தேதி வந்தது! அதற்கு முன்பு நண்பர் அருண் மூலமும் இந்திய தூதரக அதிகாரி மூலமும் என் மனைவி சுசிலா என் இரண்டு பிள்ளைகள் வந்து சென்றதற்கு ஆதாரமும், டாக்குமென்டின் நகல்களும் கிடைக்கப் பெற்றேன். அங்கிருந்த போலீஸ் அதிகாரியிடமும் அந்நகல்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நகல்களை விமான நிலையத்துக்கு ஏற்கனவே அனுப்பி விட்டோம். இந்த முறை தடை வராது என்று உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே தைரியமுடன் நீ செல்லலாம் என்று நண்பர் அருணும் இந்திய தூதரக அதிகாரியும் ஊக்கப்படுத்திவிட்டு சென்றிருந்தார்கள். ஜனவரி 23 ஆம் தேதி புதன் கிழமை இரவு 9.00 மணிக்கு சென்னை செல்லும் சவுதியா விமானத்தில் செல்ல மாலை 4.00 மணிக்கு என்னை ஆயத்தப்படுத்தி மறுபடியும் கால்களில் இரும்பு சங்கிலிகளுடன் 2 தோள்களில் என்னுடைய தோள் பையையும் மாட்டிக் கொண்டு போலீஸ் பஸ்ஸில் ஏற்றி கொண்டு

சென்றார்கள். மாலை 4.30 மணிக்கு வெளியே செல்லும் எல்லையை சென்றடைந்தோம். இந்த முறையும் குளித்து விட்டு, புது உடைகளை அணிந்து கொண்டேன். தோள் பைகளை அனுப்பத் தயாராக இருந்தேன். இரவு 8.00 மணி ஆனது என்னை பாதுகாப்பு சோதனைக்கு (Security Check) அழைப்பார்கள் என்று ஆர்வமுடன் காத்திருந்தேன். அப்பொழுது ஒரு போலீஸ்காரர் உன்னை 'இமிகிரேஷன்' கவுண்டரிலுள்ள அலுவலர் கூப்பிடுகிறார் என்று அழைத்தார். நான் அவரிடம் சென்றபோது அவர் சொன்ன காரியம் என்னைத் தூக்கிவாரிப் போட்டது. அவர் கூறினார் "இன்றைக்கு நீ செல்ல முடியாது! உன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்து வந்தால் தான் அனுப்ப முடியும் என்றார். நான் உடனே, "என் பிள்ளைகள் கடந்த மார்ச் மாதத்தில் வந்து மே மாதம் இந்தியா சென்றுவிட்டார்கள். இதோ அவர்கள் சென்றதற்கான ஆதார தாள்கள்!" என்று அவர்கள் பாஸ்போர்ட்டில் வெளியேற்ற முத்திரை (Exit Stamp) இட்ட காப்பியைக் காட்டினேன். அவற்றை அவன் சட்டை செய்யாமல், "எனக்கு அதெல்லாம் தெரியாது. என்னுடைய இந்த கம்பியூட்டரில் உன் பிள்ளைகள் சென்றதற்கான ஆதாரமான விவரம் பதிவாகவில்லை. நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது" என்றார். தொடர்ந்து நான் இப்போது என்னிடம் ஆதாரமான பேப்பர்கள் இருக்கிறது. இப்போது பதிவு செய்து என்னை அனுப்புங்கள் என்றேன். அவரோ கோபமாக நீ மறுபடியும் போய் நாடு வெளியேற்றும் சிறைக்குச் சென்று, பாஸ்போர்ட் ஆபிஸில் சென்று சரி செய்து, பிறகு வா என்று சொல்லி இந்தியா அனுப்ப மறுத்துவிட்டார். "அங்குள்ள போலிஸ் ஆபிசர் தான் இங்கு என்னுடைய ஆதார நகல்களை பேக்ஸ் மூலம் உங்கள் ஆபிசுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அனுப்பியிருக்கிறார். இங்கு உங்கள் பேக்ஸ்யை சேகரிக்கும் காரியதரிசியை தயவுசெய்து கேட்டுப் பாருங்கள்" என்றேன். அவரோ சிரித்து கொண்டே இந்த ஆபிஸில் பேக்ஸ் மிஷனே கிடையாது. ஆகவே எந்த பேக்ஸும் இங்கு வரவில்லை" என்று சிரித்துக் கொண்டே கூறியது எனக்கு வேதனையும், அதிர்ச்சியுமாய் இருந்தது. எவ்வளவாக பொறுப்பற்று ஏமாற்றுகிறார்கள் என்று நீங்களே இந்த சம்பவம் மூலம் அறிய வேண்டும். அன்பு, உண்மை, சமாதானம் பேசும் மதத்தை சார்ந்த முதல் வரிசையில் இருக்கும் இந்த நாட்டின் நிர்வாகம் எவ்விதம் இருக்கிறது என்பதற்காக இதை எழுதுகிறேன். அடிப்படை மனித உரிமை என்பதற்கு அர்த்தம் என்ன? என்று கேட்பார்கள் இவர்கள். எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. துக்கம், வேதனை, ஏமாற்றம் என்னை நிரப்பியது. இருப்பினும் ஸ்தோத்திரம் ஆண்டவரே! என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தேன். மறுபடியும் கால்களில் இரும்பு சங்கிலிகளை மாட்டி இரவு 11 மணிக்கு அதே சிறைக்கு கொண்டு சென்று தள்ளிவிட்டார்கள். மாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை

சாப்பாடு தண்ணீர் கிடையாது. பசி, மனவேதனை, ஏமாற்றம், துக்கம். அந்த புரைமான் ஜெயிலில் நுழைந்தவுடன் எல்லா கைதிகளும் ஆச்சரியமாக என்னைப் பார்த்தார்கள். குறிப்பாக என் மற்ற சகோதரர்கள் (விசுவாசிகள்) பரிவோடு வந்து ஏன்? என்ன ஆனது? ஏன் போகவில்லை என்று ஆச்சரியத்துடன் கேட்க ஆரம்பித்தனர். எனக்கு பதில் சொல்ல முடியவில்லை. கண்களில் கண்ணீர் நிரம்பியதை கட்டுபடுத்திக் கொண்டு இன்றைக்கும் போக தடை ஏற்பட்டு விட்டது. "சத்துரு இன்னும் என்னை சோதிக்க கர்த்தர் அனுமதிக்கிறார். கர்த்தர் சித்தப்படி ஆகட்டும்" என்று சொல்லி நடந்த விவரங்களை கூறினேன். பிறகு அவர்கள் என்னைத் தேற்றி ஆற்றினார்கள். கர்த்தரிடம் அன்றிரவு ஜெபத்தில் "ஏன்? ஆண்டவரே! இப்படி கைவிட்டு விட்டீர்? மறந்து விட்டீர் என்று கேட்டேன். "நான் தேவனை நினைத்தபோது அலறினேன். நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்து போயிற்று"(சங். 77:3). "நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர். நான் பேசமாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன்"(சங். 77:4) என்று சொல்லப்பட்டது போலவே என் உள்ளுணர்வுகளும் அன்று இருந்தது. மேலும் ஆண்டவர் நித்திய காலமாய் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ? என்றும் (சங். 77:7) "தேவன் இரக்கம் செய்ய மறந்தாரோ?" (சங். 77:9) என்றெல்லாம் தாவீது சஞ்சலப்பட்டது போலவே நானும் மனதில் சந்தேகப்பட்டு கொண்டிருந்தேன். அப்போது நான் இது என் பெலவீனம். "கர்த்தருடைய செயல்களை நினைவு கூறுவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவு கூறுவேன்" (சங். 77:11) தாவீது கூறியதைப் போல என்னுடைய கடந்த 17 வருட சவுதி வாழ்விலும் அதிலும் 12 வருட ஆவிக்குரிய வாழ்விலும் ஆண்டவர் இயேசு அற்புதமாக வழி நடத்தின அதிசயமான செயல்களை நினைவு கூர்ந்தேன்.

ஊழியத்தின் தேவன் என்னோடு

அப்படியென்ன? அதிசயமான செயல்களை நினைவு கூர்ந்தேன்? அப்படியென்ன அதிசயமாய் வழி நடத்தப்பட்டேன்? என்று கேட்கிறீர்களா? மூன்று உதாரணங்களை சாட்சியாக கூற விரும்புகின்றேன். அதாவது எங்கள் சவுதி அரேபிய ஆவிக்குரிய வாழ்வில் நடந்த சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன். உங்கள் விசுவாச வாழ்க்கையையும் அது உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையோடே இவைகளை எழுத விரும்புகின்றேன். 1996 ஆம் வருடம் என்று நினைக்கிறேன்.

"தனியார் கம்பெனி விடுதியில் வந்த சோதனை"

சவுதி அரேபியாவில் சில தனியார் கம்பெனிகளில் பணிபுரிய வந்த வெளிநாட்டு தொழிலாளிகளின் விடுதி ஒன்றுண்டு. அந்த விடுதியில் உள்ள இந்திய மற்றும் கிறிஸ்தவர்களை சந்தித்து ஆண்டவரின் நற்செய்தியை கூறி அவர்களோடு ஜெபிக்க வாரத்தில் ஒருமுறை நானும் சில சகோதரர்களும் அங்கு செல்வது வழக்கம். அப்படியாக அநேக தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த வாலிபர்கள், மூத்த சகோதரர்கள் இருக்கும் ஒரு முகாமுக்கு நான் அடிக்கடி சென்று ஜெபித்து என் வீட்டில் வெள்ளிக்கிழமை தோறும் நடக்கும் ஜெபக் கூட்டத்திற்கு வரும்படியாக அழைத்து வருவதும் உண்டு. இதனிடையில் என் வீட்டில் "கன்மலையின் குரல்" மாதப் பத்திரிக்கையை தமிழிலும், ஆங்கிலத்திலும் என்னுடைய கம்பியூட்டரில் டைப் செய்து எங்கள் வீட்டு போட்டோ காப்பி மெஷினிலேயே பல பிரதிகள் எடுத்து அங்கிருக்கும் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் அப்படி வெளியிட்டு வந்தேன். இந்த காரியத்தை அந்த தேசத்தில் செய்யவே கூடாது. வேதாகமத்தையே கொண்டு வரக் கூடாது என்ற சட்டமுள்ள நாட்டில் இவையெல்லாம் எப்படி? ஏன் செய்தாய்? என்று கேள்விகள் மனதில் எழுவதும் எனக்குப் புரிகிறது. எனக்கே எப்படி? ஏன் இதைச் செய்தேன்? என்று விளக்கி சொல்லவும், விளங்கி கொள்ளவும் முடியவில்லை. ஒரே ஒரு வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து இயேசுவினாலே இவை எல்லாவற்றையும் செய்ய அவர் எனக்கு பெலன் கொடுத்தார் (பிலி. 4:13). மேலும் "கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவினதினால், (2 கொரி. 5:10) என்று பரிசுத்த பவுல் சொல்வது போல நானும் சொல்ல முடியும். இந்த பத்திரிக்கை ஊழியத்தை 1995 யிலிருந்து 2000 வரை இடையிடையே சில தாமதங்கள், தடைகள் ஏற்பட்ட போதிலும் அநேகருக்கு இது பிரயோஜனமாயிருந்தது என்று சொல்ல முடியும். இந்த புத்தகங்களை டைப் செய்த பிறகு பைண்டிங் செய்வதற்கு பலர் வீட்டிற்கு வந்து உதவுவதுண்டு. ஒருநாள் இந்த தமிழ்நாட்டு வாலிப சகோதரர்கள் தங்கி இருந்த கேம்ப்பிற்கு 'கன்மலையின் குரல்' பத்திரிக்கையை 'பைண்ட்' செய்து தந்து உதவி செய்ய, இவைகளை ஒரு கைப்பையில் போட்டு எடுத்துக் கொண்டு சென்றேன். சுமார் 200 பேர் உள்ள 'மெயின்டினன்ஸ்' கம்பெனி அது. பல நாட்டு தொழிலாளிகள் அங்குண்டு. ஆனால் பெரும்பாலும் நம் தமிழக சகோதரர்களே இருந்தார்கள். ஆகவே வழக்கமாக நான் செல்லும் அறை 5 பேர்கள் கொண்ட ஒரு சிறிய அறை. அந்த கேம்பின் பாதுகாப்பு வாசல் காவலாளர்(Security gate keeper) ஒரு எகிப்திய முஸ்லீம். அவரையும்

கடந்து, கைப்பையுடன் அந்த சகோதரர்கள் அறையை நோக்கி நடந்தேன். அந்த அறையின் கதவை தட்டியவாறு, திறந்து உள்ளே சென்றேன். கதவை மூடினேன். அதே வேளையில் உடனே மறுபடியும் கதவு திறந்தது. அந்த எகிப்திய முஸ்லிம் காவல்காரன் உள்ளே என் பின்னால் வந்து நின்று "அந்தப் பையில் என்ன இருக்கிறது? காண்பி" எனக் கேட்டான். அந்த அறையிலிருந்த என் நண்பர்களும், நானும் அதிர்ச்சி அடைந்தவர்களாய் என்ன பதில் சொல்வது? என்று தெரியாமல் ஒரு நிமிடம் திகைத்து நின்றோம். நான் எப்படியோ சமாளித்து இவை ஒன்றுமில்லை, இவைகள் சிறுவர்களுக்குரிய சிறுகதைப் புத்தகங்கள், எங்கள் இந்தியா குடும்பத்தின் பிள்ளைகளுக்கு நல்போதனையாக இவைகள் மூலம் கொடுப்பது வழக்கம் என்றேன். அவன் அதை என் ரூமுக்கு கொண்டு வா! பரிசீலிக்க வேண்டும்! என்று கூறிவிட்டான். என் நண்பர்கள் அவனிடம் பேசி அவனை திசை திருப்ப முயன்றனர். ஆனாலும் அவன் என்னை நேராக அவன் பாதுகாப்பு அறைக்கு அழைத்து சென்றுவிட்டான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "உலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் நீர் பெரியவர்" அல்லவா? என்று நினைத்து கொண்டே மனதிலே துதித்துக் கொண்டே சென்றேன். அந்த காவலாளி தன் அறையில் என்னை உட்கார வைத்து என் அடையாள அட்டை காப்பி, வேலை செய்யும் ஆஸ்பத்திரி பெயர், போன் எண் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான். 'சரி போ' மேற்கொண்டு விசாரணைக்கு நீ வர வேண்டியதிருக்கும்" என்றான். ஆனால் என்ன நினைத்தானோ புத்தகங்களை திருப்பி என்னிடமே கொடுத்துவிட்டான். காரில் வீட்டை நோக்கித் திரும்பினேன். மனதிலே பயம், திகில், குழப்பம், வேதனை கர்த்தர் ஏன் என்னை சத்துருவின் கையில் ஒப்புக் கொடுத்துவிட்டார்? என்று சஞ்சலப்பட்டேன். இனி அவன் என் அடையாள அட்டை காப்பி, இவைகளை வைத்து நான் பணியாற்றும் மருத்துவமனை இயக்குனருக்கு போன் செய்து தெரிவிப்பான். தங்கள் மத போலீஸாரிடம் சொல்லி விடுவானோ? மாட்டி விடுவானோ? கைது செய்து நாடு கடத்தப் போகிறார்களோ? என்று பலவிதமாக சிந்திக்கும்படி பிசாசின் ஆவிகள் என்னை அலைக்கழிக்க ஆரம்பித்தன. வீட்டிற்கு வந்தேன் மனைவி சுசிலாவிடம் நடந்த காரியத்தை கூறினேன். "உலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் நம்முடன் இருப்பவர் பெரியவர்" பயப்பட வேண்டாம் நாம் ஜெபிப்போம் என்று என்னை தைரியப்படுத்தினாள். இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு அனுதினமும் ஊக்கமாக எதுவும் நிகழக் கூடாது ஆண்டவரே என்று ஜெபித்து வந்தோம். கொஞ்ச நாட்கள் அங்கு அந்த முகாமுக்கு போகக் கூடாது. அந்த சகோதரர்களுக்கு என்னால் எந்தவிதமான வேளை பாதிப்பும் வந்து விடக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் அடிக்கடி போவதை தவிர்த்து வந்தேன். கர்த்தர் பெரியவராய் இருந்து

"பொல்லாப்பு என் கூடாரத்தை அணுகாமல் காத்துக் கொண்டார். டிசம்பர் 24 ஆம் தேதி வந்தது. அன்று காலை திடீரென்று ஒரு வாஞ்சை உள்ளத்தில் வந்தது. அருமையான அந்த முகாம் கிறிஸ்தவ வாலிபர்களை சந்தித்து 'கிறிஸ்துமஸ் கேக்' வாங்கிசென்று கொடுத்து ஜெபித்து வர வேண்டும் என்பதே அந்த ஆசை. மீண்டும் அந்த எகிப்திய வாட்ச்மேன் பிடித்து இது என்ன? என்று கேட்டு பிடித்துக் கொடுத்துவிடுவானோ மறுபடியும்? ஏனென்றால் கிறிஸ்துமஸ் யாரும் கொண்டாடக் கூடாது வாழ்த்து சொல்லவும் கூடாது என்று சட்டம். அதனால் மனதில் ஒருபுறம் மனுஷீக பயம்! எனினும் ஜெபித்து விட்டு மாலை 4 மணிக்கு சூப்பர் மார்க்கெட் சென்று நல்ல பெரிய சாக்லேட் கேக் வாங்கி எடுத்துக் கொண்டு அந்த முகாமுக்குச் சென்றேன். கேட்டில் அந்த காவல்காரன் இருக்கிறானா இல்லையா? என்று சுற்றும் முற்றும் பார்த்து உறுதிபடுத்திக் கொண்டு 'விடு விடு' என்று நேராக நண்பர்கள் அறையை நோக்கிச் சென்றேன். கதவைத் திறக்க முயன்றபோது, பின்புறமிருந்து ஒரு கரடுமுரடான கை என் தோளின் மீது வைக்கப்பட்டதை உணர்தேன். திரும்பி பார்த்தேன், "ஐயோ! கர்த்தாவே! அதே எகிப்தியன்! போச்சு இன்றைக்கும் நன்றாக மாட்டிக் கொண்டேன்" என்று ஒரு நிமிடம் திகைத்தேன். ஆனால் என்ன ஆச்சரியம்! அவனுடைய முகத்தில் கோபத்திற்கு பதிலாக "புன்சிரிப்பு!" என்னிடம் தனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் "இது என்ன கிறிஸ்மஸ் கேக்கா? எனக்கொரு துண்டு கொடுங்கள்" (What is this? Christmas Cake! Please give me a piece too!) என்று சொல்லிவிட்டு "ஒரு மாதத்திற்கு முன்பு நான் உன்னிடம் நடந்து கொண்ட முறைக்கு வருந்துகிறேன். நீ என் நண்பன்" என்று அவன் என்னை தழுவிக் கொண்டு மன்னிப்புக் கேட்டது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பயம், திகில் பறந்து போனது! 'கர்த்தாவே உண்மையிலேயே நீர் நல்லவர், வல்லவர், பெரியவர், அற்புதர் என ஸ்தோத்தரித்தேன். ஜெபத்திற்கு பதில் கொடுத்து பகைவனையும் அன்று நண்பராக மாற்றிக் கொடுத்தார். அதற்கு தான் ஆண்டவராகிய இயேசு, "உங்களை பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்யுங்கள், உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று கூறினார். "தீமையை நன்மையினால் வெல்லு" (ரோம. 12:21) என்று பரி. பவுலும் கூறியுள்ளார். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனம் கொடு, அவன் தாகமாயிருந்தால் அவனுக்கு பானம் கொடு! நீ இப்படி செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய் (ரோம. 12:20) என்றும் பரிசுத்த பவுல் கூறியுள்ளதை கடைபிடித்தால் இன்று எங்கும் சண்டை, சச்சரவு, பிரிவினை நிச்சயமாக இராது! அல்லவா?' ஆனாலும் கர்த்தருடைய கோபாக்

கிளையே என்னவோ? என்னால் சரியாக கணிக்க முடியவில்லை. வேத வசனம் சொன்னது போல "இன்று கண்ட எகிப்தியனை இனி மேல் காண்பதில்லை" என்றது போல அந்த எகிப்தியன் அதே கம்பெனி நிர்வாகத்தினால் ஒரு மாதத்தில் நிர்வாகத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக வெளியேற்றப்பட்டு விட்டான். மேலும் நான் அந்த கிறிஸ்தவ நண்பர்கள் அறைக்கு வந்து ஜெபிப்பதையும், ஆவிக்குரிய புத்தகங்களை கொண்டு வந்து கொடுப்பதையும் இந்த எகிப்திய காவலாளிக்கு காட்டிக் கொடுத்த ஒரு தமிழ் முஸ்லிம் சகோதரனையும் என்ன காரணத்தினாலோ (என்னை முதல் தடவை காட்டிக் கொடுத்த இரண்டு வாரங்களுக்கு பிறகு) வேலையிலிருந்து நீக்கி உடனே இந்தியா விற்கு அனுப்பிவிட்டார்கள். உன்னைத் தொடுகிறவன் என் கண் மணியைத் தொடுகிறான் (சக. 2:8) என்று வேதம் சொன்னது மெய் யானதை என் அனுபவத்தில் உணர முடிந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! இவ்விதமாக சவுதி அரேபியாவில் இருந்த முந்தின நாட்களில் ஆண்டவர் அதிசயம் செய்ததை நினைவு கூர்ந்தேன்.

சோதனையிடுவோருக்கு கண்மயக்கம் அளித்த தேவன்

மேலும் ஒரு முறை (1996–மே மாதம்) தெஹ்ரான்(DAHRAN) என்னும் நகரத்திலிருந்து என்னுடைய மனைவியின் இளைய சகோதரி விமலாவை பார்க்க சென்றோம். அவள் அமெரிக்கா அரேபியா ஆயில் கம்பெனியில் நர்சாக பணிபுரிந்து வந்தாள். நாங்கள் மூன்று நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு அவளை பார்த்து விட்டு வரும்போது அங்குள்ள நண்பர் ஒருவர் கொடுத்த 30 ஆங்கில புதிய ஏற்பாடு வேத புத்தகங்களை ஒரு 'பிளாஸ்டிக்' பையில் போட்டு எடுத்துக் கொண்டு காரில் 'ஜெத்தா' போகப் புறப்பட்டோம். அந்த காம்பவுண்டை விட்டு வெளியே போகும் போது வெளியேறும் வாசலில் பாதுகாப்பு சோதனை செய்வார்கள். வழக்கமாக வெளியே போகும் கார்களின் டிக்கியை திறந்து ஏதாவது அந்த காம்பவுண்டிலிருந்து கடத்தி செல்லுகிறோமா? என்று சோதித்துப் பார்த்துவிட்டு தான் அந்த பாதுகாப்பு அலுவலர் அனுப்புவார். இதை முன்பே அறிந்த நாங்கள் எங்கள் காரின் பின் சீட்டில் என் மனைவி கசிலாவை அமர வைத்து, ஒரு தலையணையைப் பக்கத்தில் வைத்து கொள்ள வைத்தோம். அந்த தலையணை படியில் இந்த முப்பது வேத புத்தகங்கள் (புதிய ஏற்பாடு) கொண்ட பிளாஸ்டிக் பையை மறைத்து வைக்க செய்தோம். பின்பு ஜெபித்து விட்டு என்னுடைய மனைவியின் சகோதரியிடம் விடைப் பெற்றுக் கொண்டு அந்த வளாகத்தை விட்டு வெளியே செல்லும் வழியை நோக்கி எங்கள் கார் புறப்பட்டது. பாதுகாப்பு சோதனை வாசல் வந்ததும் பாதுகாப்புக் காவலர் காரை நிறுத்தினான். வழக்கமாக காரின் டிக்கியை திறக்கச் சொல்லி சோதனை செய்துவிட்டு, 'சரி போகலாம்'

என்று சொல்ல வாயெடுத்தவன் என் மனைவி உட்காந்திருந்த பின் சீட்டின் தலையணையைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து விட்டு "பின்கதவை திற" அது என்ன தலையணை? எதற்கு அது? என்று கூறியவாறே அந்த தலையணையைத் தூக்கி எடுத்து விட்டான்! ஐயோ என் ஆண்டவரே, அந்த பிளாஸ்டிக் பையையும் பார்த்து விட்டான்! "என்ன அந்த பையில்? என்று கேட்டுக்கொண்டே அதை வெளியே எடுத்து விட்டான். "ஐயோ! என்ன ஆகப் போகிறதோ! கர்த்தாவே!" என்று மனுஷீகமாக முதலில் அதிர்ச்சியுற்றாலும் உடனே மனைவியிடமும், காரில் எங்களோடு வந்த சகோதரனிடமும் "பயப்படவேண்டாம்" "ஸ்தோத்திரம் மட்டும் கூறிகொண்டு இருங்கள்" என்று சொல்லி விட்டு நானும் மனதிலே ஸ்தோத்திரங்களை கர்த்தருக்கு ஏறெடுத்துக் கொண்டேயிருந்தேன். அந்த பையை எடுத்து அந்த பாதுகாப்பு அலுவலர் அவைகளை எடுத்துப் பார்த்து புதிய ஏற்பாடு (New Testament) என்று மட்டும் எழுதியிருந்ததால், அவைகள் வேதாகமம் என்று முதலில் தெரியவில்லை. இருப்பினும் மேலதிகாரியிடம் காட்டும்படி அவைகளை எடுத்துக் கொண்டு சென்று விட்டான். ஆண்டவரே! "எலிசாவை கொல்ல வந்த சீரியா இராணுவத்தினரின் கண்களை குருடாக்கியது போலவே இந்த 'பாதுகாப்பு போலீஸ்' கண்களையும் குருடாக்கும்" என்று மனதில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். சென்ற போலீஸ் 10 நிமிடம் கழித்து அதே பையுடன் திரும்பி எங்களை நோக்கி வந்தான். நேரே வந்து "சரி....சரி இந்தப் புத்தகங்களை உங்கள் சகோதரியிடம் திரும்பி சென்று, 'குழந்தைகளின் கதைப் புத்தகம்' என்று எழுதி மீண்டும் கொண்டு வாருங்கள். பிறகு எந்த தடையுமின்றி நீங்கள் இந்த பையை எடுத்துப் போகலாம் என்று சொன்னார். உடனே ஒரு நிம்மதி, சந்தோஷம்! "கர்த்தாவே நீர் நல்லவர்" உமக்கு ஸ்தோத்திரம்! என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் காரைத் திருப்பி, விமலா அறைக்கு சென்றோம். அவளை வெளியே கொண்டு போகும் பொருட்கள் பட்டியலில் இந்த முப்பது புதிய ஏற்பாடு புத்தகங்களையும் "சிறுவருக்கான புத்தகங்கள்" என்று எழுதச் சொல்லி மறுபடியும் ஜெபித்து, பாதுகாப்பு சோதனை வாசலுக்கு மறுபடியும் வந்தோம். அதே பாதுகாப்பு காவலரிடம் கொடுத்து, "வணக்கம், நன்றி. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக" (Good-bye, Thankyou and God bless you) என்று சொல்லிவிட்டு அடுத்த நாள் 'ஜெத்தா'விற்கு சுகபத்திரமாக வந்து சேர்ந்தோம். இப்படி கர்த்தர் செய்த இன்னொரு அதிசயத்தை நினைவுகூர்ந்து நன்றி செலுத்தினேன். அன்று வேதாகமங்களை கடத்துகிறோம் என்று பிடித்திருந்தால் வேதாகமம் கொடுத்தவர், தங்க வைத்த விமலா நாங்கள் மூன்று பேர், எல்லோரும் அன்றே கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டு இருப்போம். ஏனெனில் இந்த

சம்பவத்திற்கு இரண்டு மாதங்கள் முன்பு தான் ரியாத் என்கின்ற சவுதியின் தலைநகரில் இருபது கிறிஸ்தவ சகோதரர்கள் (பல நாட்டு) அரபி வேதாகமங்களையும், ஆங்கில வேதாகமங்களையும் வினியோகித் தார்கள் என்று சிறைபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டிருந் தார்கள். அந்த வேகத்தில் நாங்களும் மாட்டியிருந்தால்? எப்படியோ கர்த்தருடைய காக்கும் கரங்கள் இந்த சம்பவத்திலும் எங்களை அற்புதவிதமாக தப்புவித்தது. கர்த்தர் உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார் (நீதி. 3:26) என்றும் “உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்” (சங். 91:3) என்ற வசனமும் எவ்வளவு உண்மையானது என்பதை அன்றைய தினம் எங்கள் அனுபவத்தின் மூலமாகவே ஆண்டவர் நிரூபித்தார்.

விமான நிலைய சோதனையிலும் தேவனுடைய கரம்

மூன்றாவது அதிசயமாக 1997 ஜீன் மாதம் நானும் என் மனைவியும் 20 நாட்கள் இந்தியாவிற்கு விடுமுறைக்கு சென்று ஜெத்தாவுக்கு திரும்பின நாள். ஜெத்தா விமானநிலையத்தில் சுங்க அதிகாரி பரிசோதிக்கும் இடத்தில் எல்லா மூட்டைமுடிச்சு பொருட்களையும் பரிசோதித்து அனுப்பும் இடம் வந்தது. முக்கியமாக போதை மருந்துகள் கிறிஸ்தவ மற்றமத நூல்கள், ஆடியோ, வீடியோ நாடாக்கள் சித்திரங்கள், விக்ரகங்கள் இவை இருக்கின்றதா? என்று சவுதி அரேபியா ஏர்போர்ட்டில் தீவிரமாக சோதித்து தான் வெளியே அனுப்புவார்கள். வேதாகமத்தை கண்டுபிடித்தால் அங்கேயே தூக்கி எறிவார்கள். அளவிற்கு அதிகமாக கொண்டு வந்தால் அப்படியே எங்களை நாட்டிற்கு திருப்பி அனுப்பியும் விடுவார்கள் எனினும் நாங்கள் 1985ஆம் வருடம் முதல் குறைந்தது. ஐந்து வேதாகமங்கள், அநேக ஆவிக்குரிய நூல்கள், கிறிஸ்தவ ஆடியோ, வீடியோ டேப்புக்களை எங்கள் 2,3 பெட்டிகளில் மறைத்து எடுத்து செல்வதுண்டு. அப்படி எடுத்துச் சென்று அநேகருக்கு அங்கு காப்பிகள் எடுத்து வினியோகித்து சுவிசேஷத்தை மறைமுகமாகப் பரப்புவதுண்டு அப்படியாக இந்த முறை ஏறக்குறைய 5 ஆங்கில, தமிழ் பெரிய வேதாகமங்கள் 10க்கும் மேற்பட்ட ஆவிக்குரிய நூல்கள் (J. சாம் ஜெபத்துரை, சகோ. ஸ்டேன்லி, பென்னிஹின் தமிழ், ஆங்கில புத்தகங்கள், இயேசு அழைக்கிறார் பத்திரிக்கைகள்) தேவ செய்திகள் அடங்கிய ஆடியோ, வீடியோ ஆகியவற்றை எங்களுடைய மூன்று பெட்டிகளிலும் மறைத்து வைத்து இருந்தோம். சுங்க அதிகாரி பரிசோதிக்கும் மேஜைக்கு வந்தோம். பரிசோதனை அதிகாரி பெட்டிகளை திறந்து மேலாக சோதனை இட்டு, பெட்டியை மூடி சரி போகலாம் என்று சொல்ல வாயெடுத்த வேளை, திடீரென்று சிகப்பு அட்டைப் போட்ட ஆங்கில வேதாகமம் ஒன்று எங்களின் ஒரு

பெட்டியிலிருந்து அவர் கண்ணில் பட்டு விட்டது. சத்துருவாகிய பிசாசு அவன் மூலம் கிரியை செய்ய, அவன் அது என்ன? என்றவாறு அவன் கையை எங்கள் பெட்டியின் உள்ளே விட்டு புதையலை எடுப்பது போல (தங்கப் புதையல்தான் அது) – அந்த வேதாகமத்தை வெளியே எடுத்து விட்டான். கோபமுடன், "இன்னும் வேறு எத்தனை புத்தகங்களை வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்க ஆரம்பித்து அந்த பெட்டியை முழுவதுமாக தீவிரமாக சோதிக்க ஆரம்பித்தான். "ஐயோ ஆண்டவரே! என்ன செய்வோம்? என்று நானும் என் மனைவியும் அதிர்ச்சியுற்றோம். ஏனெனில் அநேக ஆவிக்குரிய கிறிஸ்தவ புத்தகங்கள், அருமையான விலையுயர்ந்த தமிழ், ஆங்கில வேதாகமங்கள் அந்த பெட்டிக்குள் இருந்தது. இருப்பினும் "கர்த்தாவே நீர் இவர்களை காட்டிலும் பெரியவர்! அல்லவா? என்று மனதிற்குள்ளே ஜெபித்துக் கொண்டே இருந்தேன்.. மனைவியிடம் 'திகிலடையாதே! கர்த்தர் இந்த சோதனையை மேற்கொள்ள பெலன் தருவார்" என்று தைரியம் கூறினேன்.

பிறகு "ஓ! நிறைய கிறிஸ்தவ புத்தகங்கள் வைத்திருக்கிறீர்கள்" என்று கூறிக் கொண்டு புத்தகங்களையும், நான்கு வேதப் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு, ஒரு நீண்ட தாடியை வைத்துக் கொண்டிருந்த ஒரு சவுதி கஸ்டம்ஸ்(Customs) அதிகாரியிடம் கொண்டு சென்று எங்கள் இருவரையும் அவர் முன்பு நிற்க வைத்தான். 'என்ன நடக்கப் போகிறதோ" திக் திக் என்று இருதயத்தில் – மாம்சீகத்தில் – திகில் சூழ்திருந்த போதிலும், "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும்படி, ஆண்டவர் இந்த மனிதனுடைய இருதயத்தில் பேசுவார்" என்று மனதை திடப்படுத்திக் கொண்டேன். "இவைகள் என்ன புத்தகங்கள்? உண்மையைச் சொல்லுங்கள்" என்று கோபமுடன் கேட்டார் அவர். முதலில், "இவை எங்கள் பிள்ளைகளுக்கு நற்போதனைகள் சொல்லும் சமூகப் புத்தகங்கள்" என்று கூறினோம். அவர் அதை ஏற்றுக் கொள்ளாமல், இல்லை! உண்மையைச் சொன்னால் உங்களை விட்டு விடுவோம்! மறைத்தால், உண்மை பிறகு தெரியவந்தால் தண்டனையும், நாடு கடத்துதலும் இருக்கும்! என்றார். ஆவியானவர் உண்மையைச் சொல்லு, பரவாயில்லை! உன் ஊழியம் இந்த நாட்டில் தொடர வேண்டும்" என்று கூறுவது புரிந்தது. இவ்வளவு புத்தகங்கள் (15) ஆவியானவரே! எப்படி விட்டுவிடுவது? என்று கேட்டேன். அதற்கு ஆவியானவர், "பரவாயில்லை, மற்ற இரண்டு பெட்டிகளில் சில ஆவிக்குரிய நூல்கள் 20க்கும் மேற்பட்ட ஆடியோ, வீடியோ, 3 வேத புத்தகங்கள், செய்தி, பாடல்கள் கேசட்டுகள் உள்ளனவே! அவைகள் தப்பித்து விட்டது! அதற்காக ஸ்தோத்திரி" என்றார். சரி என்று அந்த அதிகாரியிடம் இந்த புத்தகங்கள் கிறிஸ்தவ

ஆவிக்குரிய நூல்கள், வேதாகமங்கள் தான்! ஆனால், எங்களுடைய குடும்ப நண்பர்களுக்கு மட்டுமே என்றேன். ஆவியானவர் அவர் உள்ளத்தில் கிரியை செய்திருக்கிறார். சரி! என்று இந்தப் புத்தகங்களை அப்படியே விட்டு விட்டு செல்லுங்கள். சரி பார்த்துவிட்டு, பின்னர் திருப்பித் தருவோம் என்றார். ஆனால் அதே சமயம் எங்கள் பாஸ்போர்ட் காப்பிகளை, ஆஸ்பத்திரி போன் நெம்பர்களையும் எடுத்துக் கொண்டார்கள். சரி! "கர்த்தர் எபிநேசர் இம்மட்டும் உதவி செய்தார். இனிமேலும் உதவி செய்வார்! பாதுகாப்பார்! என்ற விசுவாசத்துடன் வீடு திரும்பி விட்டோம். அந்த புத்தகங்களை அங்கேயே விட்டு வந்தது மனதிற்கு வேதனை தான். ஆனாலும் மற்ற இரண்டு பெட்டிகளில் இருந்த சில புத்தகங்கள், வேதாகமங்கள், ஆடியோ, வீடியோ, செய்தி கேசட்டுகள் 80% சோதனையில் சிக்காமல் வெளியே குறித்து கொண்டு வந்து விட்டது மனதிற்கு சற்று திருப்தியாக இருந்தது. "எல்லாவற்றிற்காகவும் எப்போதும் ஸ்தோத்திரியுங்கள்" என்றது போல கர்த்தர் செய்த அதிசயத்தை ஸ்தோத்தரித்தோம். இப்படி கர்த்தர் மூன்று முறையில் தப்புவித்தது போல பலமுறை என்னையும், என் மனைவியையும் இந்த சவுதி அரேபியா ஊழியப் பாதையில் அற்புதவிதமாக அதிசயவிதமாக தாங்கி, ஏந்தி வழி நடத்தி இருக்கிறார்!

அதே தேவன் அதிசயமான காரியத்தை செய்து இந்தச் சிறை வாசத்திலிருந்து என்னை சீக்கிரம் தப்புவிப்பார் என்று விசுவாசத்தில் உறுதியாய் நின்றேன். மூன்றாவது முறை அதிசயமாய் தாய் நாட்டிற்கு கொண்டு போவார் என்று நம்பிக்கையாயிருந்தேன்.

மூன்றாவது தடை

இந்த நாட்களில் இந்திய தூதரகத்தின் மேலதிகாரியும் (Vice-Consul) உடன் அதிகாரியும், நேரிலேயே விமான நிலையத்திற்கு சென்று கம்பியூட்டரில் என் மனைவி பிள்ளைகள் இந்தியா திரும்பின விவரங்களின் ஆதாரங்களைக் காட்டி பதிவு செய்ய வைத்திருக்கிறார்கள். பிறகு மூன்று நாட்கள் கழித்து மறுபடியும் விமான பயணத்திற்கு பதிவு செய்துவிட்டு அந்த அதிகாரிகளில் ஒருவர், நண்பர் அருணுடன் என்னை சிறையில் வந்து சந்தித்தார். "இந்த முறை நீ கண்டிப்பாக சென்னை செல்வாய்! எல்லாம் கம்பியூட்டரில் சரி செய்து விட்டோம். நூறு சதவீதம் தைரியமாக, பயப்படாமல் நீ செல்லலாம்" என்று அவர் சொன்னார். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

ஆக மூன்றாவது முறையாக அன்றிரவு 9.00 மணிக்கு சென்னை விமானத்தில் ஏற்றி அனுப்ப என்னை பஸ்ஸில் மாலை 4.00 மணிக்கு கொண்டு சென்றார்கள். நாடு கடத்தப்படும் விமான நிலைய நுழைவு வாயில் வந்தது. "ஆண்டவரே இந்த மூன்றாவது முறையாவது

வெற்றியைத் தாரும் ஐயா" என்று மனதில் ஸ்தோத்திரத்துடன் விண்ணப்பித்துக் கொண்டே பஸ்சை விட்டு இறங்கினேன். மாலை 4.30 மணி கை, கால்களில் இரும்பு சங்கிலிகள் கழற்ற சொன்னேன். "மாலை 9 மணிக்கு விமானத்திற்கு போகும் சற்று நேரத்திற்கு முன்பு தான் கழற்ற முடியும். இப்போது கழற்ற முடியாது! அந்த வேலியடைத்த மைதானத்தில் போய் காத்திரு" என்று அந்த கம்பி வேலி போட்ட சிமெண்ட தரை மைதானத்தில் விட்டு, கம்பி வேலிக்கதவினால் மூடி விட்டார்கள். சரி. கொஞ்ச நேரத்தில் இந்தியா செல்ல போகிறோம் அல்லவா? ஆகவே கடைசியாக இதை சகித்துக் கொள்வோம்! என்று, பாஸ்போர்ட் ஸ்டாம்ப் போட்டு என்னைக் கூப்பிடும் நேரத்திற்கு காத்துக் கொண்டிருந்தேன். ஸ்தோத்திர பலியை என் நாவு செலுத்திக் கொண்டே இருந்தது. மாலை 6.00 மணிக்கு ஒரு காவலர் அந்த வேலி அடைத்த மைதானத்தை நோக்கி வந்தார். படப்படப்புடன் கதவைத் திறந்து சாமான்களை சரிபார்க்கவும் பாதுகாப்பு சோதனை செய்யவும் என்னை அழைக்க வருகிறான் என்ற எதிர்பார்ப்புடன் அவரை நோக்கினேன். ஆனால் அவரோ பேசுவதற்கு நல்லவராகத்தான் இருந்தான். கொஞ்சம் பரிதாபமான குரலில் "மிகவும் வருந்துகிறேன்". நீ போக்குவரத்து சட்டத்தை மீறிய குற்றத்திற்கு அபராதம் கட்ட வேண்டிய பாக்கி உள்ளது. அதைக் கட்டாமல் விட்டதினால், இப்போது நீ போக முடியாது என்று கூறினான். என் மனக்கோட்டை அப்படியே 'மள மள' வென்று சரிய ஆரம்பித்தது. "ஐயா என்னிடம் என் மனைவி கொடுத்து விட்ட சென்ற கொஞ்சம் பணம் உள்ளது, இங்கேயே இப்போதே நான் கட்டி விடுகிறேன். அதையும் சரி செய்து என்னை இன்று அனுப்பி விடுங்கள்" என்று கேட்டேன். இங்கு கட்டக் கூடாது, மறுபடியும் 'புரைமான்' ஜெயிலுக்கு சென்று நண்பர் மூலமோ அல்லது அங்குள்ள போலீஸ் மூலமோ இந்த அபராதத் தொகையைக் கட்டி விட்டு வர வேண்டும். என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று கைவிரித்து விட்டு ஆபிஸை நோக்கி சென்றுவிட்டார். எனக்கு என்னை நானே கடிந்து கொள்ள ஆரம்பித்தேன். "இந்த அபராதத் தொகையை 6 மாதத்திற்கு முன்பே கட்டிவிட்டிருந்தால் இந்தப் பாடு வந்திருக்காதே" என்று நினைத்துக்கொண்டேன்.

உண்மையில் நடந்தது என்னவெனில் நாங்கள் 6 மாதத்திற்கு முன்பு இந்தியாவிற்கு திரும்புவதற்கு முன்பு நடந்த அந்த "ஸ்தோத்திர கூட்டத்தின் ஒழுங்குகளுக்கு இரண்டு நாட்களுக்கு வாடகைக் காரை உபயோகித்து வந்தேன். அப்போது அந்த காரை திரும்பவும் அந்த வாடகை கம்பெனிக்கு கொண்டு விடும்படி சென்று கொண்டிருந்த வேளையில் ஒரு சிக்னல் போஸ்ட்டை கடக்கும் போது ஒரு செகண்ட் மஞ்சள் கலர் பல்பு எரிந்து பச்சை கலர் எரியும். அந்த வேளையில்

ஒரு விநாடி முன்பு தான் கடந்திருப்பேன், உடனே பின்னாலேயே தொடர்ந்து வந்த போக்குவரத்து காவலர் என்னை நிறுத்தும்படி செய்து என்னுடைய டிரைவிங் லைசன்சை வாங்கி பாஸ்போர்ட் எண், வீட்டு எண் எல்லாவற்றையும் எழுதிக் கொண்டு அந்த அபராதத் தொகை கட்டும் பேப்பரையும் என் கையில் கொடுத்து விட்டு சென்றுவிட்டான் (150SR தான்). ஊருக்குப் போக 11 நாட்கள் முன்பு ஏன் இந்த கஷ்டம், அபராதம் என்று என் கவனக் குறைவையும் சத்துருவின் சோதனையையும் கடிந்துக் கொண்டேன். பாஸ்போட்டில் நாடு திரும்பும் வெளியேற்ற முத்திரை ஏற்கெனவே அடித்தாகிவிட்டது. ஆகவே இனிமேல் இந்த அபராதத்தைக் கட்ட தேவையில்லை. ஏனெனில் இங்கு தங்கும் அனுமதி அட்டையையும் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். எனவே அப்படியே அபராத தொகையைக் கட்டாமல் விட்டு விட்டேன்.

இப்போது, எப்படியாவது, எதையாவது காரணம் காட்டி என் பயணத்தை பலவழிகளில் தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை போலீஸார் முடிவு கட்டிவிட்டிருந்ததினாலே, இவையெல்லாம் அவர்கள் திட்டமிட்டபடி நடந்தது என்பதை அறிந்து கொள்ள ஆரம்பித்தேன். ஆனால் என்ன செய்ய முடியும்? கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்திரியுங்கள் என்ற வசனப்படி ஸ்தோத்திரம் மட்டுமே ஏறெடுத்து கொண்டு மீண்டும் இரவு 11 மணிக்கு அதே புரைமான் (நவீன நாஸி Camp) ஜெயிலுக்குக் கொண்டு சென்று தள்ளப்பட்டேன். என் உள்ளம் உடைந்தது. மீதியிருந்த எத்தியோப்பிய சகோதரர்கள் சகோ. டின்சாய், சகோ. கவாயு, சகோ. பஹாரு பிலிப்பைன்ஸ் சகோ. டென்னிஸ் மற்றும் அந்த ஜெயில் நண்பர்கள் என்னைப் பார்த்து "ஏன் போகவில்லை? ஏன் திரும்பிவிட்டாய்" என்று கேட்க ஆரம்பித்தனர். நடந்ததைக் கூறினேன். பின்னர் என்னை நானே திடப்படுத்திக் கொண்டு "என் கர்த்தர் கைவிடமாட்டார், அவருடைய நாளில் என்னை அனுப்புவார்" என்று சொல்லி விட்டு சாப்பிடாமலே அன்றிரவு படுத்துவிட்டேன். விமான நிலையத்தில் சாப்பாடு தண்ணீர் எதுவும் அந்த அதிகாரிகள் தர மாட்டார்கள். ஜெயிலுக்குத் திரும்பி வந்த நேரம் 11.30 மணி. நண்பர்கள் தாங்கள் இரவில் சாப்பிடும் "கூட்டு சாப்பாடும்" 10 மணிக்கே சாப்பிட்டு முடித்து விட்டிருந்தார்கள். மனதிலே பாரம்! வயிற்றிலே பசி! தண்ணீர் மட்டும் குடித்து விட்டு, பொழுது எப்போது விடியும்? நாளை அருணையும் பாக்கிஸ்தான் சகோ. பர்வீசையும் போனில் அழைத்துச் சொல்லவேண்டும். நாளையே இந்த போக்குவரத்து அபராதத் தொகையை செலுத்தும்படி சொல்ல வேண்டும்" என்று மனதிலே சிந்தித்தவாறு நெடுநேரத்திற்கு பிறகு அதிகாலை சுமார் 2 மணிக்கு உறங்க தொடங்கினேன்.

இந்த முறை 100% சென்னைப் போய் சேர்ந்து விடுவேன் என்று கூறிய சகோ. அருண், இந்திய தூதரக அதிகாரி, சகோ. பர்னீஸ் "நான் போகவில்லை என்பதை அடுத்த நாள் காலையில் நான் பார்க்கும் முன்பே அறிந்து கொண்டிருந்தார்கள். எப்படியெனில் வழக்கமாக இன்று இரவு 9 மணிக்கு இரவில் சென்னை விமானத்தில் "புறப்பட்டு வருகிறார்" என்ற செய்தியை ஒவ்வொரு தடவையும் அருண் சுசீலாவிற்கு போன் போட்டு சொல்லி விடுவார். அடுத்த நாள் காலை 8 மணிக்கு சென்னையில் 'சவுதியா' விமானத்திலிருந்து வெளியே வரும் பயணிகளில் நான் வராததை சுசீலாவிடம் போன் செய்து கேட்டு தெரிந்து கொள்ளுவார். அப்படியாக இரண்டு முறை சுசீலாவும், பிள்ளைகளும் சென்னை விமானநிலையத்திற்கு என்னை வரவேற்க வந்து ஏமாந்து போயிருக்கிறார்கள். அப்படித்தான் இந்த முறையும் நான் போகாததை அறிந்து, அவர்கள் மூவரும் என்னைப் பார்க்க ஓடோடி வந்தார்கள். ஏன் இப்படி ஆனது? ஏன் நீங்க முதலிலேயே அபராதத் தொகையைக் கட்டவில்லையா? என்று கேள்விகளை கேட்டனர். சகோ. அருண் பிறகு, "தைரியமாயிருங்கள். நான் 150SR அபராதத் தொகையைக் கட்டிவிட்டு வருகிறேன்", என்று பாஸ்போட் பிரிவுக்கு அன்றே சென்று கட்டிவிட்டு, அடுத்த நாள் கட்டின ரசீதின் காப்பியை என்னிடமும், ரசீதை அந்த போலீஸ் அதிகாரியிடமும் கொடுத்து இந்த முறை கண்டிப்பாக அனுப்பவேண்டும் என்று சொல்லி விட்டு சென்று விட்டார்.

நான்காவது முறையாக – சகலமும் நன்மைக்கே

மறுபடியும் நான்காவது முறை நான்கு நாட்களுக்குப் பிறகு முன்பதிவு செய்துவிட்டு விமான நிலையத்திற்கு என்னை கொண்டு சென்றார்கள். இந்த நான்கு நாட்களுக்கிடையில் நடக்க கூடாத ஒரு பயங்கரமான, வேதனையான காரியம் நடந்தது. என்னுடன் இருந்த எத்தியோப்பிய சகோதரர்கள் பாஸ். டின்சாய், பாஸ். பஹாரு, சகோ. கவாயூ என்னும் மூன்று பேரையும் திடீரென்று மாலை 6 மணி அளவிலே வெளியே போலீஸ் அதிகாரி அழைக்கிறார் என்று அழைத்துச் சென்றனர். ஏதோ பாஸ்போர்ட், பிரயாண விஷயங்களை அறிய அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டோம். ஆனால் 15 நிமிடங்கள் கழித்து திடீரென எத்தியோப்பிய சகோதரர்கள் மற்றும் சில நண்பர்கள் ஓடிவந்து "ஐயோ... அடிக்கிறார்கள், கொல்லுகிறார்கள்" என்று சத்தமிட்டு கொண்டே ஓடி வந்தனர். என்ன? யாரை? யார்? என்று நானும் எங்களுடைய சகோதரும் அதிர்ச்சியுடன் எழுந்து கேட்டோம். பஹாரு, டின்சாய் மற்றும் கவாயூ இவர்களின் கைகளில் சங்கிலிகளைக் கட்டி, உடலின் பின்புறம் முழுவதும் இரும்புக் கம்பியினால் போலிஸார் அடித்துக்

கொண்டிருக்கிறார்கள்'' என்றார்கள். மனம் பதற ஓடிச் சென்று பார்க்க முன்புறக் கம்பிக் கதவை நோக்கி ஓடினேன். அதற்குள் நிறையபேர் கூட்டம் கூடி அந்த முன்புறத்தை அடைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்னால் அந்த கோரக் காட்சியைப் பார்க்க முடியவில்லை. பார்க்காதது ஒரு வகையில் நல்லது என்று எண்ணிக் கொண்டேன். பார்த்திருந்தால் எத்தனையோ நாட்கள் இன்னமும் வேதனைப்பட்டிருப்பேன். ஆகவே திரும்பவும் என் இடத்திற்கு வந்து "ஆண்டவரே ஸ்தோத்திரம்'' இதைத் தாங்கும் பெலனை உம்முடைய இந்த மூன்று பிள்ளைகளுக்கு தாரும்'' என்று மட்டும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஏனெனில் இந்த அடியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் "இரும்பு கம்பியால் ஓங்கி ஓங்கி 80 அடிகள் அடிக்கிறார்கள். காரணம் முகமதுவிற்கு எதிராக இவர்கள் செயல்படுகிறார்கள். சிறைகைதிகளுக்கு போதிக்கிறார்கள்'' என்று ஒலிபெருக்கியில் அறிவித்து விட்டு அவர்களை அடித்ததாக கூறினர். இது தவறான குற்றச்சாட்டு ஆகும். சிறைக்குள் இயேசுவைப் பற்றி சுவிசேஷத்தைக் குறித்து கூறியது உண்மையே! ஆனால் அவர்களுடைய மதத்தையோ, மதத் தலைவர்களையோ, அவர்கள் தெய்வத்தையோ குறைகூறி தாக்கிப் பேசவில்லை. பிடிக்காதவர்கள், அங்கேயும் சத்துருவாகிய சாத்தானின் தூண்டுதலால் போலீஸ் அதிகாரிக்கு சொல்லிக் கொடுத்துவிட்டதால் இப்படி நேர்ந்தது. அரைமணி நேரம் கழித்து மூன்று பேரும் உள்ளே வந்தனர். இரண்டு பேர் அழுது கொண்டே வந்தனர். அதுவும் பாஸ்டர் பஹாரு எங்கள் 14 பேரில் மிகவும் தைரியமானவர், துணிச்சலாகப் பேசக் கூடியவர். அவரை 6 மாத சிறைவாசத்தில் கண்கலங்கிய நிலையில் நான் பார்த்ததேயில்லை. ஆனால் இந்த அடியின் வேதனையை அவரால் தாங்க முடியவில்லை. கண்களில் கண்ணீர் வழிய உட்கார, படுக்க முடியாமல் அவதிப்பட்டார். மூவருமே படுக்கக் கூட மிகவும் கஷ்டப்பட்டார்கள். முதுகு, புட்டங்கள் எல்லா இடங்களிலும் இரத்தம் உறைந்து பட்டை, பட்டையாய், வரிக் குதிரைப் போல 'சிவப்பு வரிகள்' உடல் பின் பகுதிகளில் காணப்பட்டன. சகோ. டின்சாய் மாத்திரம் அழாமல் "கர்த்தருக்காய் அடிக்கப்பட்டது சந்தோஷமே'' என்று கூறிக் கொண்டிருந்தார். இதில் என்ன ஆச்சரியம் என்றால் சகோ. டின்சாய் மிகவும் மெலிந்த நபர்! சட்டையை கழற்றினால் உடலின் மார்பு எலும்புகள் அப்படியே தெரியும். அப்படிபட்ட நோஞ்சான் உடல் பாகு உடையவர் இந்த 80 இரும்புக் கம்பி அடிகளை வாங்கியும் ஒன்றுமே நடக்காதது தன்னை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். "நான் அழுது துடித்தால் மற்ற மதத்து கைதிகள் நம் தேவனை தூஷிப்பார்கள். கர்த்தருக்காய் இந்த பாடுகளை அனுபவிப்பதில் சந்தோஷப்படுகிறேன்'' என்றார். பவுல் "கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் நிந்தைகளிலும்,

நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்"(2 கொரி. 12:10) என்று கூறியது என் நினைவிற்கு வந்தது. இவருடைய விசுவாசத்தைக் கண்டு வியந்தேன். இது என் விசுவாச வாழ்வை இன்னும் பலப்படுத்தியது. ஆவிக்குரிய பக்தி வைராக்கியத்தை அதிகப்படுத்தியது. அதே வேளை பாஸ்டர் பஹாரு வேதனை, வலியை தாங்காமல் துடித்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். மற்ற எத்தியோப்பிய சகோதரன் கவாயூவும் வலி வேதனையால் துடித்துக் கொண்டிருந்தார். என்னுடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. அவர்களை எப்படித் தேற்றுவது? என்று தெரியாமல் "உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு அடிக்கும் கர்த்தர் இயேசு ஒவ்வொரு பரிசைத் தருவார். நீங்கள் என்னை விட பாக்கியசாலிகள்" என்று சொல்லித் தேற்றினேன். முதுகில் இந்தக் கட்டு இருந்ததால் அவர்களால் மல்லாந்து படுக்க முடியவில்லை அவர்கள் நிலைமையைக் கண்டு எனக்கே அப்படி ஏற்பட்டது போல துடித்தேன். எனக்கும் சேர்த்து அடி கொடுத்திருக்கக் கூடாதா? அவர்களுடைய உபத்திரவத்தில் நானும் பங்கு கொண்டிருப்பேன். இப்போது, "நாங்கள் மட்டுமே அடிக்கப்பட்டோம், ஏன் உங்களுக்கு அடி விழவில்லை என்று மனதிற்குள்ளே என்னை நினைக்க மாட்டார்களா? உன்னாலே தானே இந்தப் பாடுகள்? என்று பிசாசும் கேட்பது போல என் இருதயம் வேதனைப்பட்டது.

மேலும் சகோ. பஹாரு கஷ்டப்பட்டு கழிவறைக்கு சென்று வந்தார். வந்தவுடன் கூறிய செய்தி, என்னை மிகவும் கவலைக்குள்ளாகியது. அவர் சிறுநீர் கழிக்கும்போது அதில் இரத்தம் கலந்து வந்தது என்று கவலை, பயத்துடன் சொன்னதை கேட்டபொழுது யாவரும் மிகவும் வேதனைப்பட்டோம். ஆனால் அவரிடம் "நம் ஆண்டவர் இயேசு அற்புதர்! நிச்சயமாய் உங்களுக்கு அற்புதம் செய்து பூரண சுகம் தருவார்! பயப்படவேண்டாம்! நாம் ஜெபம் செய்வோம்" என்று கூறி தைரியப்படுத்தினோம். ஏனெனில் முதுகுப் பகுதியில் 80 அடிகள் இரும்புக் கம்பியால் அடிக்கப்பட்டதால், "இரண்டு சிறுநீரகங்களும் (Kidneys) பாதிக்கப்பட்டு இரத்தம் சிறுநீரில் வந்திருக்கலாம் என்று அவர் பயந்திருந்தார். நாங்களும் முதலில் அப்படிதான் நினைத்தோம். இருந்தாலும் "கர்த்தர்மேல் முழு பாரத்தை வைத்து ஜெபிப்போம் அவர் நினைத்தால் இந்த இரத்தம் வருவதை அப்படியே, இன்று இரவே இப்போதே நிறுத்த வல்லவர்" என்று சொல்லி அவரையும், மற்ற இருவரையும் திடப்படுத்தினோம். பிறகு அவர்கள் மூவரையும் ஆறுதல் கூறி சாப்பிட வைத்தோம். பிறகு உறங்கும் முன்பு, நான் அவர்கள் மூவருடன் சேர்ந்து ஒவ்வொருவர் தலைமீதும், குறிப்பாக பாஸ்டர் பஹாருவின் சிறுநீரகப் பகுதியைத் தொட்டு "ஆண்டவரே! இந்த

இரத்தப்போக்கு இவருடைய சிறுநீரில் மறுபடியும் வராதபடிக்கு உடனே தடை செய்யும்! 12 வருட உதிரப்போக்கு கொண்டிருந்த ஸ்திரீ உம்முடைய வஸ்திரத்தை தொட்ட மாத்திரத்தில் சுகம் பெற்றது போல உம்முடைய வல்லமையுள்ள கரத்தின் ஓரத்தை இப்போது தொடுகிறோம் ஆண்டவரே" என்று கண்ணீர் வழிந்திட ஜெபித்தேன். பின்பு ஒருவாறு தூங்கிவிட்டோம்.

அடுத்த நாள் காலை சகோ. பஹாரு 8 மணிக்கு எழுந்து கழிவறைக்கு சென்றுத் திரும்பியவுடன் சிரித்த முகத்துடன் என்னை நோக்கி ஓடி வந்தார்! ஆச்சரியமான செய்தியைச் சொன்னார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" ஒரு துளி இரத்தம் கூட சிறுநீர் கழிக்கையில் வரவில்லை" என்றார். அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நம் கர்த்தர் எவ்வளவு நல்லவர் அல்லவா? என்று சொல்லி கர்த்தரின் அற்புத வல்லமையை நினைத்து துதித்தோம். பிறகு இந்த விதமாக இவர்கள் அடிப்பட்ட செய்தி எல்லாக் கைதிகளுக்கும் பரவி, பரப்பரப்பை ஏற்படுத்தியது. பல முஸ்லீம் கைதிகள் கூட வந்து இப்படி விசாரணையின்றி அடிக்க போலீசாருக்கு அதிகாரம் இல்லை. ஏன் இப்படி நடந்தது" கவலைப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறினார்கள். இந்த ஆறுதலான வார்த்தைகள் மூலம் சுபாவ அன்பை ஆண்டவர் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார். அதை பயன்படுத்துவதில் தான் "மனிதநேயம்" உள்ளது என்பதை அறிய முடிந்தது. மதம் மதவெறியை உண்டு பண்ணும் என்றும் உணர முடிந்தது. இந்த சம்பவத்தை, பிறகு எத்தியோப்பிய தூதரகம் அறிந்து கொண்டது. எனவே அவர்கள் தங்கள் தூதரக அதிகாரிகளை இந்த 'புரைமாண்' போலீஸ் அதிகாரியிடம் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தார்கள். இந்த ஜெயிலில் இவர்களை இப்படி விசாரணையின்றி அடிக்க உங்கட்கு உரிமை இல்லை என்று தைரியமாக வாதாடினார்கள். பிறகு அந்த மாநில கவர்னருக்கு பேக்ஸ்(FAX) மூலம் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து, இதனை விசாரிக்கக் கோரினார்கள். அந்த கவர்னரும் ஒரு சில தினங்களில் விசாரணைக்கு இரகசிய உத்தரவு இட்டிருக்கிறார். ஆகவே இந்த சிறையின் மூத்த போலீஸ் அதிகாரி பயந்து போய் "இந்த மூன்று சகோதரர்களையும் 3 நாட்கள் கழித்து மறுபடியும் தம் அறைக்கு வரும்படி அழைத்தார். அழைத்து சென்று அவர்களிடம் அவர் கேட்டது என்ன தெரியுமா? "நாங்கள் அடிக்கவில்லை" என்று எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள், மற்றும் உங்கட்கு மருத்துவ சிகிச்சைக்கு நாளை சிறை மருத்துவமனைக்கு அழைத்து செல்கிறோம். உங்களை சீக்கிரம் அனுப்ப ஏற்பாடு செய்கிறோம் என்று குழைந்து பேசி, சமாதானப்படுத்தி, வெற்றுத்தாளில் மேற்கண்டபடி

மட்டும் எழுதி கையெழுத்துப் போட நிர்பந்தித்திருக்கிறார்கள். இல்லையென்றால் மறுபடியும் துன்பப்படுவீர்கள் என்று எச்சரிப்பும் கொடுத்திருக்கின்றனர். ஆனால் இந்த மூன்று பேரும் உறுதியுடன் "நீங்கள் எங்களை அடித்துக் கொன்று போட்டாலும் கையெழுத்துப் போட மாட்டோம்! எங்களுக்கு பெரிய அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை வேண்டும். சிறை மருத்துவமனையில் வேண்டாம். ஏனென்றால் ஜெயில் மருத்துவமனையில் வேண்டுமென்றே வேறு ஊசி கூட போட்டு விடுவார்கள் என்ற பயம், சந்தேகம் இவர்களுக்கு வந்துவிட்டது. ஏனெனில் சில கைதிகளுக்கு அப்படி செய்திருக்கிறார்கள் என்று இவர்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறார்கள். அந்த போலீஸ் அதிகாரிகள் அதற்கு மேல், இவர்களை ஒன்றும் செய்ய இயலாமையால் சரி, சரி மேலும் எந்த புகாரும் எங்கள் மீது எழுதிக் கொடுக்க வேண்டாம்! உங்களைச் சீக்கிரம் அனுப்ப ஏற்பாடு செய்கிறோம் என்று நைஸாக பேசி அனுப்பி விட்டார்கள். ஆம் இந்த மூவருமே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவைப் போல கர்த்தருடைய சுவிஷேசத்தை தங்கள் நாட்டு கைதிகளோடு பகிர்ந்து கொண்டதால் அக்கினி வேதனைபட்டாலும், அந்த புறஜாதி போலீஸார் மிரட்டலுக்குப் பணியாமல், நம் தேவனின் மீது அவ்வளவு 'பக்தி வைராக்கியம்" கொண்டவர்களாய் உறுதியுடன், விசுவாசத்துடன் கர்த்தருக்காய் நின்றார்கள். ஆம் அவர்களுடைய பக்தி வைராக்கியமும், மெலிந்த உடலுடைய சகோ. டின்சாயின் சகிப்புத் தன்மையும் சகோ. பஹாரு, சகோ. கவாயூவின் தைரியமும் என்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பெரிதும் கற்றுக் கொள்ளும் பாடங்களாக அமைந்தன. இதற்காகவே இவர்களை ஆறுதல்படுத்தவே கர்த்தர் இவர்களுடன் இருக்கும்படியாய் என்னுடைய பயணத்தை மூன்றாவது முறையும் தடை செய்திருக்கிறார்! "எல்லாம் நன்மைக்கே!" என்று என்னைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆண்டவருக்கு நன்றியும் சொன்னேன். அடுத்த இரண்டு நாட்களில் நான்காவது முறையாக விமான நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள்.

விமான நிலையத்திற்கு நான்காவது முறை!

உறுதியான எண்ணத்துடன் விமான நிலையத்தில் வெளி நாட்டினரை அனுப்புமிடத்திற்குக் (Deportation terminal) கொண்டுச் செல்லப்பட்டேன். இந்த முறை என் இடது காலை இன்னொரு எகிப்திய கைதியின் வலதுகாலுடன் ஒரே இரும்பு சங்கிலியால் இணைத்துக் கட்டி விட்டார்கள். அவன் ஒருபக்கம் இழுக்க, நான் மறுபக்கம் இழுக்க, கால் தோல் அறுக்க, பஸ்ஸில் ஏற்றி உட்கார வைத்துக் கொண்டு சென்றார்கள். பஸ் டிரைவர் விமான நிலையத்தில் இறக்கிவிட்டு சென்று விட்டான். இந்த முறை என்னுடைய 'பயண

அனுமதி சீட்டு வெளியேற்ற முத்திரை' போடப்பட்டு விட்டது. அடுத்து ஒரு மைதானத்திற்கு சென்று காத்திருக்கச் சொன்னார்கள். இரவு 9 மணிக்கு விமானம்! ஒரு மணி நேரம் மட்டுமே இருந்தது. அப்பாடா! நன்றி ஆண்டவரே! என்னை இந்த நாளில் கொண்டு போகப் போகிறீரே என்று சந்தோஷத்துடன், ஆர்வமுடன், ஏக்கத்துடன் விமானம் அருகே என்னை ஏற்றிச் செல்ல வரும் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் 8 மணிக்கு, ஒரு 'சவுதியா' விமான அதிகாரி என்னை நோக்கி வந்தார். "சரி பஸ் வந்து விட்டது புறப்பட்டு வா" என்று அழைக்கதான் வந்திருக்கிறார்! என்ற ஆவல் துடிப்புடன், அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவர் சொன்னது பேரிடியாய் விழுந்தது. "இன்றைய சென்னை விமானம் (சவுதிய ஏர்லைன்ஸ்) கேன்சல் ஆகிவிட்டது. நீ போக முடியாது" என்று சொல்ல, என் ஆவல், மனக்கோட்டை முற்றிலும் சரிய ஆரம்பித்து விட்டது. நானோ, என் உயிரே ரத்தானது போல ஆகிவிட்டேன். முதலில் ஏதோ விளையாட்டு என்று நினைத்தேன். அவரிடம், "தயவு செய்து வேடிக்கை செய்ய வேண்டாம்" (Please don't joke) என் பாஸ்போர்ட்டில் வெளியேற முத்திரை எல்லாம் அடித்தாகிவிட்டது. அப்போதே விமானம் ரத்து ஆன செய்தி சொல்லியிருப்பார்களே! இல்லை, நீங்கள் என்னிடம் தமாஷ் பண்ணுகிறீர்கள் என்று சொன்னேன். அவரோ, கொஞ்சம் மனம் இளகியவராய் பேசினார், "என்ன காரணமென்று தெரியவில்லை (I don't know the exact reason) விமானம் ரத்து என்று மட்டும் போன் வந்தது. அவ்வளவு தான் எனக்கு தெரியும். உன்னுடைய நிலையைக் கண்டு வருந்துகின்றேன். மிகவும் வருந்துகிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். எனக்கு சத்தம் போட்டு அழ வேண்டும் போலிருந்தது. ஏன்! ஏன்! ஏன்! இந்த சோதனை? ஏன்! ஏன்! ஏன்! இந்த வேதனை? ஆண்டவரே! என்று உரத்த சத்தத்துடன் ஆண்டவரை நோக்கிக் கதற வேண்டும்போல் இருந்தது. ஆனால் "இமைப்பொழுது கைவிட்டேன். ஆனாலும் மீண்டும் உருக்கமான இரக்கத்தினால் உன்னை சேர்த்துக்கொள் வேன்" (மீட்டுக்கொண்டேன்) (ஏசாயா. 54:7) என்று ஆவியானவர் மூலம் பேசினார். மறுபடியும் அதே 'புரைமான்' ஜெயிலுக்கு திரும்பவும் ஏற்றி செல்லும் பஸ்ஸிற்காக காத்திருந்தேன். அதுவரை அங்கே உள்ள தனி அறையில் என்னைத் தள்ளி வெளியே கதவை பூட்டி விட்டார்கள். அங்கு குடிக்க தண்ணீர், சாப்பிட உணவு வசதிகளோ கிடையாது. மனதில் மிகப் பெரிய பாரம், துக்கம், சோர்வு, இருதயம் உடைய ஆரம்பித்தது. கர்த்தர் மேல் வெறுப்பு ஏற்படும்படி, சாத்தான் யோபுவிற்கு கொடுத்த பலவிதமான தொந்திரவுகள் போல தொடர்ந்து

பிரயாண தடை, தோல்வி, சோர்வு, சோதனை கொடுக்கிறான். எத்தனைமுறை தடைகள் வந்தாலும் கர்த்தரை நான் வெறுக்கக் கூடாது! என்று என்னை நானே எச்சரித்துக் கொண்டேன். "தொடர்ந்து துதி செய்!" என்று மட்டும் ஆவியானவர் அறிவுறுத்திக் கொண்டே இருந்தார். இந்த சூழ்நிலையில் எப்படி துதிக்க முடியும்? ஆனாலும் திடப்படுத்திக் கொண்டு, மனதிற்குள்ளே "எண்ணி எண்ணி துதி செய்வாய், எண்ணிலடங்காத கிருபைகளுக்காய்! என்றும் தாங்கும் உம் புயமே! இன்ப இயேசுவின் நாமமே"

யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ(தடைகளோ)
எலியாவின் தேவன் எங்கே?
உந்தன் விசுவாச சோதனையில்?

என்ற பாடலை கண்ணீர் மல்க மனதிற்குள்ளே பாடி என் விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன். இரவு 11 மணி பஸ் வந்தது. மறுபடியும் கை, கால்களில் இரும்பு சங்கிலியிடப்பட்டு, அதே 'புரைமான்" சிறைக்கே திரும்பக் கொண்டு செல்லப்பட்டேன். மறுபடியும் அதே சிறையா? மீண்டும் எத்தனை நாட்கள் கழித்து அனுப்பப் போகிறீர் ஆண்டவரே! என்று கேட்டுக் கொண்டே சிறையை நெருங்கியவுடன் பஸ்ஸை விட்டு கீழே இறங்கினேன். மறுபடியும் அதே ஜெயிலுக்குள் நுழைய, வாசலில் நின்று கொண்டிருந்த கைதி நண்பர்கள் மற்றும் இன்னமும் தங்கியிருந்த மூன்று எத்தியோப்பிய சகோதரர்கள், சகோ. டென்னிஸ், எதிர் கொண்டு ஓடி வந்து பரப்பரப்புடன் ஏன்? என்ன நேர்ந்தது? ஏன் போகவில்லை? இந்த முறையுமா? என்ன காரணம்? என்று கேட்க ஆரம்பித்தனர். நான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. நேரே என் பழைய இருப்பிடத்தில் சென்று உட்கார்ந்தேன். சில சகோதரர்கள் "அவரை தொந்திரவு செய்ய வேண்டாம். அவரை கொஞ்சம் இளைப்பாற விடுங்கள்" "பிறகு கேள்வி, காரணங்களை கேட்டுக் கொள்ளலாம்" என்றார்கள். அப்படியே 10 நிமிடம் என்னை ஆறுதல்படுத்திக் கொண்டு அவர்களிடம் என் விமானம் ரத்தாகி விட்ட செய்தியைச் சென்னேன். அவர்களால் நம்ப முடியவில்லை. "வெளியேற்ற முத்திரை அடித்த பிறகு தான் அவர்களுக்கு விமானப் பழுது தெரிந்ததா? வேண்டுமென்றே பொய் சொல்லி உன் பயணத்தை தடை செய்து, உன்னை மனசித்திரவதை செய்கின்றார்கள். உன் தூதரக அதிகாரிகளிடம் சொல்லி வேறு "ஏர் இந்தியாவிற்கு பதிவு செய்ய சொல் என்றார்கள். இந்த 'விமான டிக்கெட்' சவுதியா ஏர்லைன்ஸில் செல்லும்படி என்னுடைய ஆஸ்பத்திரியில் தரப்பட்டது. ஆகவே இதை ரத்து செய்து "ஏர் இந்தியாவில்" பயணம் செய்ய வேண்டுமெனில் புதிதாக கட்டண பணம்

கட்டி டிக்கட் வாங்க வேண்டும். SR2000 (ரூ. 25,000) வரைக்கும் ஆகும், யாரைக் கேட்பது? நண்பர்களைக் கேட்டால் கொடுப்பார்கள். ஆனால் எனக்கு விருப்பமில்லை. எப்படியும் ஆண்டவர் அடுத்த முறை இதே 'சவுதியா விமானத்தில் அனுப்புவார்' என்று நம்பிக்கைக் கொண்டேன். நாட்கள் தாமதமானாலும் பரவாயில்லை, யாருக்கும் 'பணத் தொந்திரவு' செய்ய வேண்டாம். இம்மட்டும் உதவின எபிநேசர் இனியும் நிச்சயம் உதவி செய்வார் என்று தைரியமாய் அடுத்த பயணத்திற்கு என் மனதை தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்தேன்.

இதற்கிடையில் என் மனைவி சுசிலா, பிள்ளைகள், தகப்பனார், உடன் பிறந்தோர், உற்றார் உறவினர் எல்லோருக்கும் வேலூரில் பதற்றம்! ஏன் இத்தனை முறை பயணத் தடைகள்? என்ன நடக்கிறது. அங்கே? புரியாமல் தவித்திருக்கிறார்கள். என் பிள்ளைகள் மின்னி, பென்னிக்கு முழு ஆண்டு தேர்வு (மகன் பென்னிக்கு 10 ஆம் வகுப்பு ICSC போர்டு பரீட்சை. மகள் மின்னிக்கு 12 ஆம் வகுப்பு ICSC போர்டு பரீட்சை) முக்கியமான பிப்ரவரி, மார்ச் மாதங்கள் இந்த நேரத்தில் இந்த விதமான ஏமாற்றங்கள், தடைகள் கேள்விப்பட்டு படிக்காமல் சோர்ந்து போய் பரீட்சையில் தோல்வி அடையவும் வாய்ப்பு ஏற்படுமே? என்ற கவலை எனக்கும் சுசிலாவிற்கும் ஏற்பட்டது. இப்படி இந்தியாவில் யாவருக்கும் துக்கம், வேதனை, பாடுகள். நான் அங்கே சவுதி சிறையில் தனியே வாடி, தவித்துக் கொண்டிருந்தேன். சகோ. அருண் பர்வீஸ் (பாக்) சகோ. ஆஷிர் (பாக்) இவர்களே என்னை அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டு ஆறுதல் கூறினாலும், என்னை ஆட்கொண்டு தேற்றியவர் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் ஒருவரே!

உண்மையில் விமானம் ரத்தாகிவிட்டதா? அல்லது பொய் சொல்லுகிறார்களா? என்ற கேள்வியும், சந்தேகமும் எழுந்த வண்ணமாகவே இருந்தன. இந்திய தூதரக அதிகாரிகளிடம் கடந்த சென்னை விமானம் உண்மையிலேயே ரத்து ஆனதா? என விசாரிக்கும்படி கேட்டேன். அவர்களும் அடுத்த நாள் வந்து, "ஆம்! ஏதோ பொறிகளில் சீர்கேடாம்!(TECHNICAL MISTAKE). ஆதனால் ரத்து செய்து விட்டார்களாம். இது வழக்கமான தடைதான். சந்தேகம், பயம் வேண்டாம்! என்று சொல்லி விட்டு போய் விட்டார்கள். ஆனால் உண்மையான உள்நோக்கம், என்னை இவ்வளவு சீக்கிரம் அனுப்பி விடக் கூடாது என்பதற்காகவே விமானத்தையே அன்று ரத்து செய்திருக்கிறார்கள் என்று பின்னர் மிகவும் ஆதாரப்பூர்வமாக தெரிய வந்தது. நம்பவும் முடியாது. நம்பாமலிருக்கவும் முடியாது. என்னை தடைசெய்யவே கருவியில் கோளாறு என்று சொல்லி அன்றைய சென்னை (சவுதியா) விமானத்தை தடை செய்திருக்க அதிக வாய்ப்புண்டு. எப்படியோ சாத்தான் மேலும் மேலும் என்னுடைய

விசுவாசத்தில் சோதனையின் உச்சக்கட்டத்திற்கு கொண்டு சென்று கொண்டிருந்தான். கர்த்தர் இதை அனுமதித்தார் என்றுதான் நான் நம்புகிறேன். பார்வோனிடம், மோசேயும், ஆரோனும் தேவ ஜனமாகிய இஸ்ரவேலரை விடுதலை செய்து அனுப்பும்படி வேண்டியபோது 10 தடவைகள் சரி, சரி அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு கடைசியில் அனுப்பாமல் தடை செய்து, வேண்டுமென்றே தாமதித்தது போலவே என்னுடைய சம்பவங்களும் நடந்து கொண்டிருந்தன. ஆனால் இறுதியில் கர்த்தர் தமது மகிமைக்காகவே இப்படி பார்வோன் மனதைக் கடினப்படுத்தினார் என்று சொல்லி, பிறகு கடைசியில் அவர்களை மோசே மூலம் விடுவித்து வழி நடத்தினது போல நிச்சயம் என்னையும், எத்தனை முறையானாலும் கடைசியில் தோல்வியடைய விடமாட்டார். வெற்றியையே தருவார் என்று சொல்லி என்னை நானே இந்த வேதாகம சம்பவத்தின் மூலம் திடப்படுத்திக் கொண்டேன். விமான பயணத்தின் 5-வது படையெடுப்புக்கு தயார்படுத்திக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் நிறைய இரும்பு கம்பி அடிகள் வாங்கிய பாஸ்டர் பஹாருவை எத்தியோப்பிய தலைநகரான “அடிஸ் அபாபா” விற்கு அனுப்ப ஏற்பாடுகள் தகவல்கள் எங்கள் காதுகளுக்கு எட்டின முதலில் மனைவியை (7 மாத கர்ப்பிணி) இந்த சிறைக்கு அழைத்து வர நிர்பந்தித்து கொண்டிருந்தவர்கள் இப்போது இவனை சீக்கிரம் இவன் நாட்டிற்கு நாடு கடத்தி விடுவோம்”. தாமதித்தால் இவன் நம்மை பிரச்சனையில் மாட்டி வைத்துவிடுவான் என்ற பயத்தின் காரணமாக அவரை அனுப்ப முடிவு செய்துவிட்டார்கள். ஆகவே கர்த்தரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு(கர்த்தருக்காய் அடிப்பட்டவர்) சகலமும் நன்மைக்காகவே நடக்கும் (ரோமர் 8:28) என்ற வசனத்தின் பிரகாரமாகவே இந்த சித்திரவதையின் மூலம் அவருக்கு நன்மையாகவே முடிந்தது. அடிபடுவதற்கு முன்பு பலவிதமான தடைகளை பாஸ்டர் பஹாருவின் பயணத்திற்கு காரணங்களாக வைத்திருந்தார்கள். அதிலே முக்கியமானது நண்பர் வீட்டில் தங்கியிருந்த தன் மனைவியை அதே ‘புரைமான் பெண்கள் சிறையில்’ அடைத்து இருவரையும் சேர்த்து அனுப்ப திட்டம் போட்டிருந்தனர். அவரை, தன் நண்பர்களிடம் சொல்லி அவர் மனைவியை சிறைக்கு கொண்டு வர வற்புறுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் பாஸ்டர் பஹாருவின் மனைவி 7 மாத கர்ப்பிணி.... அவளுடைய பலவீனம், இயலாமை இவற்றை மருத்துவ சான்று மூலம் நிரூபித்து உறுதியாய் தம் மனைவியை இங்கு கொண்டு வரக்கூடாது என்ற நிலையில் அவர் உறுதியாய் நின்று கொண் டிருந்தார். அதன் பிறகு எப்படியோ “நீ போகிற அன்று இரவு இங்கு உன் மனைவியை அழைத்து வந்தால் போதும்”, உடனே பஸ்சில் உங்கள் இருவரையும் ஏற்றி விமான நிலையத்திற்கு அனுப்பிவிடுவோம், பயப்பட வேண்டாம்” என்று சொல்லியிருந்தார்கள். அதன் பிறகு

அடுத்த நாள் இரவு மனைவியை அந்த ஜெயிலுக்கு வரச்சொல்லி விமான விலையத்திற்கு இருவரையும் ஒரே பஸ்சில் ஏற்றி அனுப்பினார்கள். இதுவும் கர்த்தரின் அற்புத செயல் அல்லவா? இல்லையெனில் அவருடைய 'கர்ப்பிணி மனைவி' அந்த அருவருப்பான பெண்களின் நாடுகடத்தப்படும் சிறையில், இந்த நிலையில் எப்படி கஷ்டப்பட்டிருப்பார்கள்? கற்பனை செய்யவே வேதனையாக இருந்தது. இருப்பினும், கர்த்தர் அந்த பாடுகளுக்கு அவரையும், அவர் மனைவியையும் உட்படுத்தாமல் பட்ட அடிகளின் மூலம் ஒரு பெரிய நன்மையை அவர்கள் இருவருக்கும் செய்து உடனடியாக எத்தியோப்பியா திரும்ப வழி செய்தார்; கர்த்தர் எவ்வளவு மனதுருக்கமுள்ள தேவன்!

தேவன் கவாயுவுக்கு செய்த அதிசயம்!

அதுமட்டுமின்றி வேறொரு அதிசயத்தையும் 80 அடிகள் வாங்கிய அடுத்த எத்தியோப்பிய சகோதரன் கவாயூவிற்கு செய்தார். அது என்னவெனில் சகோ. கவாயூ சாலை விதியை கார் ஒட்டும்போது மீறினதற்கான அபராத தொகையை கட்டி முடிக்க வேண்டும் என்பதே! இதில் இங்குள்ள வேடிக்கையும் வேதனையுமான காரியம் என்னவென்றால் ஒரு கம்பெனி முதலாளி மூலமாய் டிரைவராக பணிபுரியும் ஒருவர் சாலை அபராதத் தொகைக்கு உட்பட்டிருந்தால் தன்னுடைய மீறுதலுக்கு கட்ட வேண்டிய பணத் தொகையோடு தன் முதலாளி ஏதாவது சாலை அபராததொகை கட்ட வேண்டிய பாக்கி வைத்திருந்தாரானால், அதையும் சேர்த்து கட்டிச் சரி செய்ய வேண்டும். அப்போதுதான் பாஸ்போர்ட்டில் வெளியேற்றம் முத்திரையை குத்துவார்கள். இன்னும் சற்று விளக்கமாகக் கூறுகிறேன். சகோ. கவாயூ தன்னுடைய சாலை விதி மீறல் அபராதத் தொகை ரூ. 300/– பாக்கி வைத்திருந்தார். அதே நேரத்தில் அவருடைய முதலாளி திரு. அகமது உதாரணமாக ரூ. 3000/– பாக்கி வைத்திருப்பாரானால் அதையும் கவாயூவே சேர்த்து கட்டி சரி செய்யவேண்டும். இவர்தான் தன் முதலாளிக்கு செய்தி அனுப்பி உடனே அவருடைய பாக்கியை கட்ட சொல்ல வேண்டும் ஒரு சில முதலாளி பாவம் இவன் விடுதலையாகிப் போகட்டும், நம் அபராதத் தொகையை கட்டி விடுவோம் என்று செலுத்தி விடுவார்கள். ஆனால் பெரும்பாலானவரோ இவன் எப்படியாவது செலுத்தட்டும் அல்லது போகட்டும் நமக்கென்ன? இப்போது என்னிடம் பணம் இல்லை. "நீயே என்னுடையதையும் கட்டிவிட்டு போ" என்று கைவிடுபவர்களும் உண்டு. மிகவும் வினோதமான சட்டம் அல்லவா? இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னுடைய அபராத தொகையையே கட்டமுடியாத சூழ்நிலையில் தன் முதலாளியின் பெரிய அபராதத் தொகையை எங்ஙனம் கட்டுவது? இப்படி அதிகமான டிரைவர் பணி

செய்த கைதிகள் இந்த "சாலை அபராதத் தொகை அளவுக்கதிகமாக கட்ட முடியாமல் அங்கேயே பல மாதங்கள் கைதிகளாக உழன்று கொண்டிருக்கும் காட்சியை, நிலையை நான் நேரிலேயே கண்டேன். அவர்களுடைய மனக்குமுறலை, வேதனையை அறிந்தேன். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதைத் தவிர வேறு உதவி செய்ய என்னாலும் சரி, எவராலும் முடியாதது. மிகவும் கொடுமையான, வினோதமான சட்டம் இந்த புனித நாட்டிலே! மனித உரிமை அடிப்படை அம்சமே இல்லை! அவர்(சகோ. கவாயூவின் ஸ்பான்சர்) அச்சமயம் ஜெட்டாவில் இல்லை, எங்கோ வெளியூர் சென்று விட்டிருந்தார் பணமும் இல்லை. எப்படி? என்ன செய்வது? என்று தவித்துக் கொண்டிருந்த வேளையில் தான் 80 அடிகள் வேறு அடிக்கப்பட்டார். ஆனால் அதன் பிறகு இவர்கள் மேல் கொடுத்த புகார் நன்மையை விளைவித்தது. உடனே அடிபட்ட இவர்களை அவரவர் நாட்டிற்கு அனுப்பிவிடுவோம். இவர்கள் இருந்தால் நமக்குதான் பிரச்சனை, சிக்கல்! என்று அடித்த போலீஸ் அதிகாரிகள் எப்படியோ இவருடைய 'அபராதத் தொகையை ரத்து செய்து, சரி சரி, கம்பியூட்டரில் தவறான தகவல் இருந்தது, உன் அபராதத் தொகையை குறித்து எதுவும் கட்ட தேவையில்லை! ஆகவே நாளை இரவு நீயும் புறப்பட ஆயத்தமாயிரு! என்று நாங்கள் யாவரும், "தீமையை நன்மையாய் மாற்றிய நம் கர்த்தராகிய இயேசுவிற்கு" ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தோம். சகோ. கவாயூவின் முகத்தில் ஏற்பட்ட முகமலர்ச்சியைக் கண்டு என் மனம் குளிர்ந்தது. இதற்கு முன்பு அவரைப் பார்க்கும் போதெல்லாம் (அதுவும் கடுமையாக அடிபட்ட பிறகு) என் இருதயம் மிகவும் வேதனைப்படும். இவர் இப்படி வேதனைப்படுவதற்கு நானும் ஒரு காரணம் அல்லவா? என்று என்னை நானே நொந்து கொள்வேன். ஆனால் இப்போது அவரும் (கவாயு) எத்தியோப்பிய நாட்டிற்கு ஏற்றி அனுப்பப்பட போகின்றார் என்பதை அறிந்து கொண்டபோது என் உள்ளம் உவகை கொண்டது. உன்னத தேவனைத் துதித்தது.

ஆம் அடுத்த நாள் காலை 10 மணி அளவில் சகோ. பஹாருவை அழைத்து அவர் மனைவியை விமான நிலையத்திற்கு வரச் சொல்லிவிட்டார்கள். அவரையும் மாலை பயணத்திற்கு தயாராகி இருக்கச் சொன்னார்கள். "கர்த்தர் செய்த பெரிய அற்புதம்" என்றே சொல்ல வேண்டும். இரவு 10 மணிக்கு சகோதரன் கவாயூ, சகோ. பஹாரு எத்தியோப்பிய தலைநகர் 'அபீஸ்அபாபா'வுக்கு ஏற்றி அனுப்பிட விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விட்டார்கள். பிரிய விடையுடனும், கண்ணீருடனும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி, அவர்கள் இருவர் தலைமீதும் நான், பாஸ். டின்சாய், பாஸ். டென்னிஸ் கைகளை வைத்து ஜெபித்து அனுப்பினோம். ஒருபுறம் மனதில் அதிக

நிம்மதி. சந்தோஷம்! ஆனால் இத்தனை மாதங்களாக சிறையின் பாடுகளிலே பங்கு கொண்டு, கிறிஸ்துவின் அன்பிலே நெருங்கி இணைக்கப்பட்டவர்களாய் இருந்து விட்டு, பின்னர் பிரிந்து செல்வது நெஞ்சை பிழிந்தது. சகோ பஹாரு, "உங்களுடைய தாழ்மை, அமைதி, சகிப்புத்தன்மை, என்னை மிகவும் கவர்ந்தது. அவைகளை மறவாமல் கடைபிடிப்பேன் என்று அவர் (பாஸ்டர் பஹாரு) என்னைப் பற்றி கூறியது இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. நானும் அவரை பாராட்டி சொன்னது, "உங்களுடைய தைரியம், நீதிக்காக போராடும் துணிவு, மனஉறுதி, அடிகள் வாங்கியும் காத்தரை மறுதலியாத விசுவாசம் என்னை கவர்ந்தது.அதை நான் கடைபிடிப்பேன் என்று கூறினேன். மேலும், எனக்குப் பிந்தி கைது செய்யப்பட்ட இவர்கள் எனக்கு முன்பு, விடுதலையாகி அவரவர் நாட்டிற்கு, வீட்டிற்கு பல வருடங்கள், பல மாதங்கள் கழித்து போகிறார்கள் என்றறிந்தவுடன் அவர்கள் முகத்தில் பொங்கி எழுந்த சந்தோஷம் எங்கள் மனதிலும், முகத்திலும் சந்தோஷத்தைக் கொடுத்தது. முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்று (மத். 19:30) ஆண்டவராகிய இயேசு கூறினது போலவே இந்த நிகழ்ச்சி ஆவிக்குரிய காரியத்தில் எச்சரிப்பாக காணப்படுகிறது அல்லவா?

நெருங்கியது 5வது பயணம்

அடுத்த இரண்டு நாட்களில் என்னுடைய 5வது படையெடுப்பிற்கு விமான நிலையத்திற்கு செல்ல என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். இந்த நாட்களில் சந்தேகம், திகில், குழப்பம் தொடர்ந்து தோன்றி என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. இந்த முறையாவது ஆண்டவர் வெற்றி தருவாரா? அல்லது கைவிடப்பட்டு விடுவோமா? ஆண்டவர் மறந்து விடுவாரா? என்று பலவிதமான வீண் நினைவுகள் வாட்டத் துவங்கினது. ஆனாலும் ஏன் இப்படி வீணாய் சிந்தித்து நேரத்தைக் கடத்த வேண்டும்? இங்கு எத்தனையோ முஸ்லீம் இந்து, புத்தமத (இலங்கை, தாய்லாந்து, நேபாளம்) கைதிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு சுவிசேஷத்தை முடிந்த அளவு கூறிவிடலாமே? இதற்காக ஒருவேளை ஆண்டவர் என் பயணத்தைத் தாமதம் செய்திருக்கலாம் அல்லவா? என்று மனதிற்குள்ளே சிந்தித்து, பக்கத்திலுள்ள இலங்கை, நேபாள நண்பர்களிடம் கிறிஸ்துவின் அன்பு, மனந்திரும்புதல், பாவ மன்னிப்பின் நிச்சயம், இரட்சிப்பின் அவசியம் இவற்றை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தேன். இலங்கை நண்பர் "நான் நிச்சயமாய் என் நாட்டிற்கு திரும்பி சென்றவுடன் பூரண சுவிசேஷ சபைகளுக்குச் செல்லுவேன். நல்ல வாழ்க்கையை வாழ்வேன்! என்று கூறியதுடன் நேபாளம் (100% இந்துநாடு) சென்ற பிறகு நன்றாக

வேதத்தைப் படித்து தனக்குள்ள சந்தேகங்களை நீக்கிய பிறகு 100% 'முழு கிறிஸ்தவனாக' மாறி விடுவேன் என்றார். இந்த அளவிளாவது இரண்டு குற்றவாளிகளை ஆண்டவருடைய சத்தியத்திற்கு நேராக வழி நடத்த முடிந்ததே என்று ஆறுதல் அடைந்தேன். ஆகவே விமான பயண தடையும், தாமதமும் - எல்லாம் நன்மைக்கே! இரண்டு புறஜாதிகள் மனந்திரும்பினார்களே! என்று அறிந்து ஆண்டவருக்கு இந்த வாய்ப்பிற்காக நன்றி செலுத்தினேன். மனதின் பாரங்கள், இந்த இரட்சிப்பின் சந்தோஷத்தினால் எவ்வளவோ குறைந்து விட்டது. ஆம் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்பது எவ்வளவு உண்மை! ஆம்! நீதிமான்கள் என்று கூறும் பலர், ஆண்டவர் இயேசுவினால் கழுவப்பட்ட நீதிமான்களாக மாற விரும்பாமல், சத்தியத்தை ஏற்று கொள்ளாமல், தங்களின் மனித முயற்சியினாலும், நற்கிரியையினாலும் பரலோகத்தில் நுழைந்து விடலாம் என்று நினைக்கிறார்கள் எவ்வளவு பரிதாபம் அல்லவா! என்று அவரிடம் கூறினேன். அதன் பிறகு நானும் சகோ. டின்சாய், சகோ. டென்னிஸ் மட்டுமே மீதி இருந்தோம். சகோ. டின்சாய்யையும் உடனே எத்தியோப்பியாவிற்கு அனுப்ப முயற்சித்து, அவரையும் தயாராக இருக்க சொன்னார்கள். ஆனால் அவரோ, "என்னுடைய SR18,000 (3.2 லட்சம்) கொடுத்து வாங்கிய டெயொட்டா 'கரோலா' கார் தவறாக கைப்பற்றப்பட்டு போலீஸார் எடுத்து சென்று விட்டனர். அதைத் திருப்பி தந்து, அதை என் நாட்டிற்கு கப்பலில் ஏற்றி அனுப்பும் வரை எத்தனை நாட்கள் மாதங்கள் ஆனாலும் இங்கேயே தங்கி அந்த முறைமைகளை செய்வேன். நீங்களும் எனக்கு விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டும்" என்று தைரியமாக போலீஸாரிடம் சொல்லிவிட்டார். உண்மையிலேயே இவருடைய 'மனதைரியம்' என்னைக் கவர்ந்தது நானாக இருந்தால் "போனால் போகட்டும் என்று விட்டு விட்டு வந்திருப்பேன் (அப்படி நிறைய மின்சார போட்டா பிரதி எடுக்க உதவிய மிஷின், குளிர்ப்பதன பெட்டி, வீட்டிலிருந்த நிறைய பொருட்களை விட்டு, விட்டு வந்தோம்). சகோதரன் டென்னிஸ் (பிலிப்பைன்ஸ்) அவர் பெயரில் 5 கார்களை வாங்கி நண்பர்களுக்கு உதவி செய்திருந்தார். அவைகளை அவருடைய முதலாளி தான் வாங்கி தன் பெயரில் மாற்றி கொள்கிறேன் என்று வாக்களித்தவர் அவைகளை மாற்றும் முறையை மிகவும் தாமதமாக செய்து கொண்டிருந்தார். மேலும் டென்னிஸின SR25,000/- ஐ தராமல் 2 மாதத் சம்பளத் தொகையை பணி முடிப்பு தொகையாகத் தருகிறேன் என்று "நாகூசாமல் அவருடைய மனைவியிடம் அவர் (முதலாளி) நன்றியில்லாமல் கூறி இருக்கிறார். எனவே தனக்கு வரவேண்டிய முழுத் தொகையை தரச் சொல்லி, பிலிப்பைன்ஸ் தூதரகம் மூலம் கேட்டுக் கொண்டிருந்தார். இவ்விரண்டு காரணங்களினால் இவருடைய பயணம் தள்ளிக் கொண்டே சென்றது.

எனக்கோ தற்போது ஒரு காரணமும் இல்லை. பாஸ்போர்ட், டிக்கெட் எல்லாம் தயார்.

ஐந்தாவது முறையாக விமான நிலையம் செல்லும் நாளுக்கு காத்திருந்தேன். பயம், திகில் ஒருபுறம் என்னை தளர்வுற செய்தது. மறுபுறம் ஆண்டவர் "நீ அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்" (சங். 46:10) என்று கூறி திடப்படுத்தினார். "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; (சங். 42:11) என்று தாவீது தன்னையே ஆற்றி தேற்றித் திடப்படுத்திக் கொண்டது போல நானும் என்னையே இந்த வசனத்தினால் தேற்றித் திடப்படுத்திக் கொண்டேன்.

5வது பயணம்! பெரிய தடை!

பிப்ரவரி 3ஆம் தேதி 9 மணி இரவு, விமானத்திற்கு செல்ல மறுபடியும் கொண்டு செல்லப்பட்டேன். இந்த முறை எங்கள் மீதமிருந்த சகோதரர்கள் டென்னிஸ் மற்றும் சகோதரர் டின்சாய்க்கு மட்டுமே நான் பயணம் செய்வதை சொல்லிவிட்டு சென்றேன். காரணம் புறமதத்தாருக்கு அடிக்கடி சொல்லிவிட்டு, போகாமல் திரும்பி வரும்போது ஒருவித கேலி, கிண்டல், பலவிதமான சந்தேகமான கேள்விகள் கேட்டார்கள். ஆகவே இதைத் தவிர்க்கவே இவர்களிடம் மட்டும் கூறிவிட்டு விமானநிலையத்திற்குச் சென்றேன். இந்த முறை என்னுடைய பாஸ்போர்ட்டில் 'வெளியேற்றம் முத்திரையை'(EXIT) மறுபடியும் குத்தினார்கள். நிம்மதி வந்தது. "இரவு 9 மணிக்கு விமானம் புறப்படும். 8.15 மணிக்கு உன்னை எடுத்துச் செல்லும் பஸ் வரும்" என்று கூறினார்கள். பின்பக்கத்தில் உள்ள காத்திருப்பு மைதானத்தில் (Waiting ground) (Lounge அல்ல) இரவு 7.30 மணியிலிருந்து 8.30 மணி வரை அடுத்திருந்த மைதானத்தில் சங்கிலியிடப்பட்ட கால்களுடன் பஸ்ஸிற்காக காத்து நின்றேன். இந்த ஒருமணி நேரத்தில் எத்தனை ஸ்தோத்திரங்கள் ஏறெடுக்க முடியுமோ அத்தனை ஸ்தோத்திரங்களை ஆண்டவருக்கு ஏறெடுத்தேன். ஏனெனில் சத்துருவாகிய சாத்தான் இடையிடையே என்னை "இன்றைக்கு நீ போய் விடுவாயா? ஏதாவது சொல்லி உன்னை தடை செய்துவிடப் போகிறார்கள் பார்!" என்று கேலி கிண்டல் செய்வது போல எனக்கு தோன்றியது. அதனால் ஏற்பட்ட சோர்வு, பயம், திகில், சந்தேகம், குழப்பங்களை முறியடிக்க இடைவிடாமல் ஸ்தோத்தரித்துக் கொண்டே இருந்தேன். இரவு 8.30 மணி ஆகிவிட்டது. 9 மணிக்கு விமானம் புறப்பட 30 நிமிட நேரம் தான் இருந்தது. "சீக்கிரம் பஸ் வரவேண்டும்! ஆண்டவரே!" என்று படபடப்புடன் ஜெபித்துக் கொண்டே இருந்தேன். 8.35 மணிக்கு பஸ் வந்தது! "அப்பாடா" ஸ்தோத்திரம் ஆண்டவரே! என்று சொல்லிவிட்டு

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். நான் ஒருவனே அந்த பஸ்சில் பிரயாணம் செய்த சென்னைக்கு நாடு கடத்தப்படும் கைதி. பஸ் புறப்பட்டது. "சவுதி அரேயிாவிற்கு டாட்டா" சொன்னேன். ஆனால் அதே வேளையில் 17 வருட காலங்களாக கர்த்தர் எங்களை ஆசீர்வதித்த விதங்களையும், என்னுடைய ஊழியங்களையும் நினைத்துப் பார்த்துக் கொண்டே "ஆண்டவரே இந்த நாட்டை எப்பொழுது இரட்சிப்பீர்?" என்கின்ற மனபாரத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தேன். இரவு மணி 8.40 பஸ் மிகவும் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. சீக்கிரமாய் போகாதா? விமானம் புறப்பட 15 நிமிடங்கள் மட்டுமே இருந்தது. மிகுந்த துடிப்பு, படப்படப்பு என் உள்ளத்தில் தோன்றியதால் முகம் வியர்த்தது. வியர்வைத் துளிகளை துடைத்து கொண்டே அமர்ந்திருந்தேன். மேலும் பஸ்சிற்கு முன்னால் ஒரு பாதுகாப்பு வாகனம் பின்னால் இன்னொரு பாதுகாப்பு வாகனம் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. ஆம் மிகவும் "ராஜ மரியாதை"யுடன் அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். முக்கியமான குற்றவாளிகளை அவ்விதமான கடும் பாதுகாப்போடு விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கமாம். அவர்கள் கண்களுக்கு முன்பதாக நான் விசேஷித்த குற்றவாளியாக காணப்பட்டாலும், என் தேவனுடைய பார்வைக்கு "நீ விசேஷித்ததவன்"என எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

சென்னை செல்லும் 'விமானம்' அருகே கொண்டு போய் என் பஸ்வை நிறுத்தினார்கள். இரவு மணி 8.45. 9 மணிக்கு விமானம் புறப்பட தயாராக என்ஜின்கள் எல்லாம் இயக்கப்பட்ட ஓசை! விமானப் படிகளில் சென்னை செல்லும் விமானப் பயணிகள் ஏறிக் கொண்டிருந்தார்கள். "நன்றி ஆண்டவரே இப்போது என் தாய் நாட்டிற்கு, சென்னைக்கு, என் அன்புக்குரியவர்களைப் பார்ப்பதற்கு அனுப்பப் போகிறீரே" என்று தைரியமும், நம்பிக்கையும் ஏற்பட ஆண்டவருக்கு நன்றி செலுத்த ஆரம்பித்தேன். பஸ் கதவை டிரைவர் திறக்கிற ஓசை கேட்டது. உட்கார்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்து நின்றேன், கதவு திறந்தவுடன், இறங்கி கண்ணெதிரே நிற்கும் விமானத்திற்குள் ஏறி உட்காரும்படி! பஸ்சின் கதவு திறக்கிற ஓசை, திடீரென்று கதவு மூடும் ஓசையாக மாறியது. உடனே பெரிய அதிர்ச்சி! டிரைவரைப் பார்த்தேன்! பயணிகள் இருக்கைக்கும் டிரைவரின் இருக்கைக்கும் இடையே கண்ணாடித் தடுப்பு. ஒருவரையொருவர் பார்க்கலாம். ஆனால் பேச முடியாது. டிரைவர் கண்ணாடி தடுப்பிற்கு பின்னிருந்து உட்காரும்படி சைகை காட்டினான். படப்படப்புடனும், குழப்பத்துடனும் உட்கார்ந்தேன். ஆண்டவரே! இந்த முறை எந்த தடையும் வரக் கூடாது என்று மனத்திற்குள்ளேயே ஜெபித்துக்

கொண்டிருந்தேன். ஆனால் கர்த்தர் தமது வல்லமையை விளங்கும் பொருட்டு பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தியது போல அந்த சவுதி அதிகாரிகளின் மனதையும் ஏனோ மறுபடியும் கடினப்படுத்தி விட்டார். ஆம் திடீரென ஒரு விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி விமானத்திற்குள் ஏறி ஓடிச் சென்று கொண்டிருந்தார். விமானத்திற்குள் சென்று அங்கிருந்த விமான சிப்பந்திகளிடம் ஏதோ பேசினார். பிறகு 5 நிமிடம் கழித்து விமான மேல் படிகட்டில் நின்றவாறு அங்கிருந்த என் பஸ் டிரைவரை நோக்கி "கையினால் சைகை காட்டியவாறு பஸ் கதவைத் திறக்காதே; அவனை அப்படியே திரும்பி எடுத்துச் செல்லு" என்று மிகவும் வேகமாக கைகளை அசைப்பது தெரிந்தது! புரிந்தது! அந்த கைகள் என் பயணத்தை தடைசெய்ய என் பஸ் மறுபடியும் என்னைஜெயிலுக்கு (நாடு கடத்தப்படும்) திரும்பி கொண்டு செல்ல ஆரம்பித்தது. "ஐயகோ" இன்றைக்கும் தடையா? இவ்வளவு மிக அருகில், ஏணிபடியருகில் விமானத்தின் அருகே அழைத்து வந்து விட்டு மறுபடியும் வந்த இடத்திற்கு அழைத்து செல்வது "வாழைப்பழத்தை உரித்து எடுத்து ஒரு சிறுவனின் வாயருகே கொண்டு சென்று விட்டு, அவன் ஆர்வமுடன் உண்ண வரும்போது பழத்தை திரும்ப எடுத்து விடுவது போல என்னையும் ஆசைக்காட்டி, மோசம் செய்துவிட்டார்களே இந்த அதிகாரிகள்! துடித்தேன்! துவண்டேன்! மறுபடியும் காவல் ஜீப் முன்னும், பின்னும் செல்ல விமான நிலைய நாடு வெளியேற்றம் செய்யும் டெர்மினலுக்கு(Airport deportation terminal) க்கு பஸ் திரும்பியது.

"தகர்ந்தது விசுவாசம்"

"வானம் இடிந்து விழுந்தது போலவும் பூமி நிலைமாறி; ஜலங்கள் கொந்தளிப்பது போலவும் உணர்ந்தேன். ஏன்? இப்படி நடக்கிறது. ஏன் இப்படி செய்கிறார்கள்? 5 முறைகளும் இப்படி வேண்டுமென்றே தடை செய்கிறார்களே! இதில் ஏதோ சதி திட்டம் இருக்கிறது. இனி நான் என் ஊருக்கு செல்லவே முடியாது போலுள்ளதே! ஏமாற்றம் அதிர்ச்சி, பயம், திகில், குழப்பம் என் இருதயத்தை கண்ணாடிப் போல சுக்கு நூறாக உடைத்தது. கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கை! விசுவாசம் முற்றிலும் தகர்ந்து போக ஆரம்பித்தது. "மரண இருளின் பள்ளத்தாக்கிலே, நான் ஒரு அனாதையாய் நிற்பது போல ஆறுதலற்று, சமாதானமற்று, தோல்வியுற்று, ஏமாற்றத்துடன் இருந்த என்னை விமான நிலைய அலுவலகத்தில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அந்த பஸ்சிலிருந்து இறங்கி நடக்கக் கூட என் உடலில் பெலன் இல்லை. நடைப்பிணமாக இறங்கினேன். அங்கிருந்த அதிகாரிகளிடம் ஓடிச் சென்று கேட்டேன் "ஏன் இப்படி 5 முறை தடைகளை விதிக்கிறீர்கள்? விமானம் வரை கொண்டு சென்று ஏன் திருப்பிக் கொண்டு வந்து

விட்டீர்கள் என்று மனம் பதறியவாறு கேட்டுக் கொண்டேயிருந்தேன். ஒருவரும் சட்டை செய்யவில்லை! பதிலும் சொல்லவில்லை. "பட்டகாலிலே படும் என்பது போலவும்" "வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போலவும் அங்கிருந்த ஒரு போலீஸ் என்னுடைய கேள்விகளை கேட்டு எரிச்சலடைந்தவனாய் ஓடி வந்து என் ஷர்ட் காலரைப் பிடித்து ஓங்கி என் நெஞ்சில் ஒரு குத்து விட்டான். எந்த இருதயம் ஏற்கெனவே உடைந்து வேதனையுடன் காணப்பட்டதோ அதே நெஞ்சில் அவன் குத்தினான்(Punch). இது இன்னும் எனக்கு அவமானம், வேதனை, துக்கத்தைக் கூட்டியது. செய்வதறியாது, பேசுவதறியாது அவர்கள் காட்டிய அறையில் உள்ளே போய் உட்கார்ந்தேன். அந்த அறைக் கதவைப் பூட்டியும் விட்டார்கள். பஸ் வந்து என்னை மறுபடியும் 'புரைமாண்' ஜெயிலுக்கு அழைத்து செல்லும் வரை நான் அங்கேயே காத்திருக்க வேண்டும். புயல் காற்றினால் இடிந்து போன ஒரு குடிசை எப்படி இருக்குமோ அந்த அலங்கோல நிலைமையில் என் ஆவி, ஆத்துமா, சரீரம் இருந்தது. கர்த்தர் "உண்மையிலேயே ஜீவிக்கிறாரா? அவருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் உண்மைதானா? "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று அவர் கொடுத்த வாக்குறுதி எங்கே? பலவாறு கேள்விகள், குழப்பங்கள் தோன்றி என்னை அலைக் கழித்தன. தண்ணீர், இரவு உணவு கூட கொடுக்க அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. எனக்கு பசியும் இல்லை. எதிலும் ஆர்வமும் இல்லை. நடைப்பிணமாக சலனமற்று அமர்ந்திருந்தேன். இரவு 12 மணிக்கு பஸ் வந்தது. வெளியே கொண்டு வந்து மறுபடியும் "புரைமான்" ஜெயிலுக்கு ஏற்றி விட ஆயத்தம் செய்தார்கள். அப்போது கடைசியாக ஒரு போலிஸிடம் 'ஏன் இப்படி 5 முறையும் என் பயணத்திற்கு தடை' என்று கேட்டதற்கு அவன் கிட்டே வந்து சொன்னான் "இது அமிரின் (கவர்னர் அல்லது உள்துறை அமைச்சர்) இரகசிய உத்தரவு என்று மட்டும் சொல்லி விட்டான். "சத்துருவினுடைய சதி திட்டம்" இப்போது எனக்கு புரிய ஆரம்பித்தது. இனம் புரியாத பயம், திகில், கலக்கம் எனக்குள் கூட ஆரம்பித்தது. அதிகாலை 1.00 மணிக்கு அதே புரைமாண் சிறைக்குக் கொண்டு வரப்பட்டேன். உள்ளே வந்தவுடன் அப்போது விழித்திருந்தவர்கள், பின்னர் காலையில் எழுந்து என்னைப் பார்த்தவர்கள் வியப்புடன் என்னைப் பார்த்து வழக்கமான கேள்விகளை கேட்க ஆரம்பித்தார்கள். மற்றும் சில கைதிகள், "5 முறையும் இவ்விதமான தடைகள் எந்த கைதிக்கும் எங்களுக்கு தெரிந்த வரையில் நடந்தது கிடையாது. உனக்கு மட்டும் இப்படி நடக்கிறது. அப்படியானால், ஏதோ சதி திட்டம் தீட்டுகிறார்கள். உன்னை வேறு வழக்கில் போட்டு மாட்டிவிட்டு அதிக வருடங்கள் சிறையில் வைக்கலாம் அல்லது. 'தலையை வெட்டவும் செய்யலாம்'. ஆகவே 'நீ முஸ்லீமாக

மாறிவிடு' உடனே உன்னை விடுதலை செய்து விடுவார்கள்'' என்று சிலரும் அவரவர் கருத்தினை அருகில் வந்து இரகசியமாக சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அதன் பிறகு தனிமையில் இருந்தபோது ஜெபிக்கவும், துதிக்கவும் நினைத்தாலும் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சாத்தானும் அவனுடைய பொல்லாத ஆவிகளும் என் எதிரே நின்று கேலி கிண்டலுடன் "உன் ஆண்டவர் இயேசு ஜீவனுள்ள ஆண்டவர் என்று நீ நம்புவது வீண்! பார்த்தாயா? உன் நிலைமையை? உன் தேவன் கைவிடமாட்டார், விலக மாட்டார். என்றாயே, இப்போது உன்னை கைவிட்டு விட்டாரே! உன்னை விட்டு விலகிவிட்டாரே! இப்போது என்ன செய்ய போகிறாய்? உன் ஊருக்குப் போய் உன் தகப்பன், மனைவி பிள்ளைகள், உன் உடன் பிறந்தோரை போய் சந்திக்க வேண்டுமென்றால் 'முஸ்லீமாக மாறிவிடு'' உன்னை உடனே சொந்த ஊருக்கு கண்டிப்பாக அனுப்பி விடுவார்கள்! என்று கேட்பது போல உண்மையாகவே என்னுடைய நிலைமை காணப்பட்டது. அந்த சமயத்தில் சில முஸ்லீம் கைதிகளும் இதையே கூற ஆரம்பித்தனர்.

விசுவாச சோதனையின் உச்சகட்டம்!

ஒரு வினாடி, அப்படியும் கூட நினைத்து விட்டேன். தாய்நாட்டிற்கு சென்று தகப்பன், மனைவி, பிள்ளைகளை பார்க்க வேண்டுமே. ஆகவே முஸ்லீமாக மாறிவிடலாமா? Atleast விடுதலை அடைந்து ஊர் சென்றடையும் வரை! என்றெல்லாம் நினைக்க ஆரம்பித்து விட்டேன்! ஆனால் உடனே ஆவியானவர் மூலமாக ஆண்டவர் பேச ஆரம்பித்தார். 'முதல் நாளிரவு 2.45 மணிக்கு தனி சிறையில் அடைத்தபோது "படப்போகிற பாடுகளைக் குறித்து பயப்படாதே! மரணபரியந்தம் உண்மையாயிரு'' என்று நான் சொன்னபோது நீயும் ஆம் ஆண்டவரே என்ன நேர்ந்தாலும் சரி, நான் மரணபரியந்தம் உண்மையாய் இருப்பேன்'' என்று வாக்களித்தாயே! அவ்வளவு தானா உன் வாக்குறுதி? உன் விசுவாசம்? உன் மனஉறுதி? உன் தீர்மானம், என் மேல் வைத்த உன் நம்பிக்கை அவ்வளவுதானா? என் நாமத்தை தூஷித்து விடப்போகிறாயா? உலகமெங்கும், உனக்காக உபவாசித்து ஜெபிக்கும் விசுவாசிகளை, தலைகுனிய வைக்கப் போகிறாயா? என்னை மறுதலிக்கவும், பின் வாங்கவும் முடிவு செய்து விட்டாயா? என்று பலவாறு கேட்க ஆரம்பித்தார். ஆண்டவர் அவற்றை கண்ணீரோடும், துக்கத்தோடும் கேட்பது போலவே இருந்தது. உடனே நான் உணர்வடைந்தவனாய், குத்தப்பட்டவனாய் ஆண்டவரை நோக்கி, "இயேசுவே! என் ஆண்டவரே! என்னை மன்னியும், உமக்கெதிராக நான் இவ்வாறு நினைத்தது மிகவும் பாவமே! என்ன நேர்ந்தாலும் சரி, உம்மை விட்டு பிரிந்து, பின்வாங்கி போக மாட்டேன், மறுதலிக்க

மாட்டேன்! என்று மறுபடியும் வாக்குக் கொடுத்தேன். ஆண்டவரும் "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற விசுவாசிகளின் பக்தி வைராக்கியத்தையும், அப்போஸ்தலர்களின் விசுவாச உறுதியையும், அவர்கள் எவ்விதம் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள் என்பதையும் நினைவுபடுத்தினார். "மேலும் இந்தியாவின் வட மாநிலங்களிலே கடந்த வருடம் இரத்த சாட்சியாய் மரித்த கிரஹாம் ஸ்டென்ஸ், அவருடைய இரண்டு ஆண்பிள்ளைகள் குறித்த செய்திகளை நீ அறிவாயே, இப்போது உன்னுடைய சாட்சி" என்ன? என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தார். உடனே எனக்குள் ஒரு பக்தி வைராக்கியம் பொங்கி எழுந்தது. "கெத்சமனே தோட்டத்திலே நெற்றி வியர்வை இரத்தத் துளிகளாக விழும்படி இயேசு மன்றாடி ஜெபித்த அந்த ஜெபம் "**ஆம் பிதாவே என் சித்தப்படியல்ல உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது**" என்பது! ஆம், தன்னை முழுவதுமாய் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புகொடுத்த அந்த காட்சி என்னை மிகவும் பாதித்தது. நானும் ஒரு முடிவிற்கு வந்தேன். உம்முடைய நாமத்திற்காகவும், உம்முடைய சுவிசேஷத்தை இந்த இஸ்லாமிய நாட்டில் அறிவித்ததற்காகவும், மற்றும் இந்த நாடு இரட்சிப்பிற்குள் வருவதற்கும் "என் தலைவெட்டப்பட்டு இரத்தம் சிந்தப்படவேண்டும் என்பது உம் சித்தமானால் அதற்கு நான் தயார் உம் சித்தம் என் வாழ்வில் ஆகக்கடவது. என் மனைவி, பிள்ளைகளை நீர் பார்த்துக் கொள்வீராக" என்று முழுமையாக என்னை அவர் பாதத்தில் அர்ப்பணிக்க தீர்மானித் தேன். அதே வேளை, ஒரே ஒரு வேண்டுகோளை ஆண்டவரிடம் சமர்ப்பித்தேன், "ஆண்டவரே என்னை நீர் ஜீவனோடு சுகபத்திரமாக ஏற்றி என் தாய் நாட்டிற்கு அனுப்புவீரானால், என் ஜீவனுள்ள நாளெல்லாம் உமக்கு ஜீவனுள்ள சாட்சியாய், உம் நாமத்தை மகிமைப்படுத்தி வாழ்வேன்" என்பதே அது. கர்த்தர் இந்த ஜெபத்தைக் கேட்டார். ஆனால் இதற்கிடையில் ஏன் இந்தவிதமாக 5வது முறையாக விமானப்படிகள் வரை பஸ்சில் கொண்டு சென்று விட்டு திருப்பி கொண்டு வந்து விட்டுவிட்டார்கள்? என்ன காரணம்? என்பதை நண்பர் அருணிடம், இந்திய தூதராக அதிகாரிகள் மூலமாக கேட்கும்படி கூறினேன். அடுத்த நாள் அவர்கள் வந்து கூறியது எனக்கு இன்னும் பயம், திகிலை உண்டு பண்ணியது. இம்மாதிரியான முக்கிய கைதிகளை நாடு கடத்தும்போது ஒரு 'பாதுகாப்பு காவலன்'(ESCORT POLICE) கூடவே மும்பை அல்லது சென்னை வரை அனுப்புவார்களாம். அப்படியாக அன்று அந்த பாதுகாப்பு போலீஸ் அதிகாரி இல்லாததால் கடைசி நிமிடத்தில் உன்னை அனுப்ப முடியாது என்று தடுத்து விட்டதாகக் கூறினார்கள். பாதுகாப்பு காவலர் கூட அனுப்புமளவிற்கு நான் என்ன பெரிய கிரிமினல் குற்றவாளியா? தீவிரவாதியா? கூடவே வந்து ஏதாவது காரணம் சொல்லி சென்னையிலிருந்து திருப்பிக்

கொண்டு வந்து விடுவார்களோ? என்றெல்லாம் மறுபடியும் சாத்தான் என்னை சோதித்து வீண் குழப்பங்கள், கலக்கங்கள், திகில் என் மாம்சீகத்தில் உண்டு பண்ணி விட்டான். ஆனாலும் ஆண்டவர் 'பலங்கொண்டு திடமனதாயிரு' நான் உன்னோடிருக்கிறேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. என்னை நம்பு! சோர்ந்து விடாதே! மரணபரியந்தம் உண்மையாயிரு, விசுவாசமாயிரு! என்று ஆவியானவர் மூலம் திடப்படுத்தி கொண்டேயிருந்தார். அருமை நண்பன் அருண் இந்துவாக இருந்து ஆண்டவரை மனதில் ஏற்றுக் கொண்டவர். கடைசியாக என்னைப் பார்த்து விட்டு செல்லும்போது கூறியது எனக்கு சவாலாகவும், வெட்கமாகவும் கூட இருந்தது. ஆம். அவர் சொன்னது, " இந்த 5 முறைகளும் நீங்கள் உபவாச ஜெபத்துடன் செல்லவில்லை. இந்த முறையாவது உபவாசத்துடன் செல்லுங்கள், நானும் உபவாசித்து ஜெபிக்கிறேன்" என்று கண்ணீருடன் சொல்லிவிட்டு, இந்த முறை கண்டிப்பாக கர்த்தர் உங்களை கொண்டு செல்வார். கவலை, பயம் கொள்ள வேண்டாம் என்று என்னை திடப்படுத்தி விட்டு சென்றுவிட்டார். ஆம் கடந்த 5 முறைகளும் உபவாசத்துடன் செல்லவில்லை. இந்த முறை உபவாசித்து செல்லுவோம் என்று தீர்மானித்தேன். ஆம் வேதத்திலே "இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்திலும் புறப்பட்டு போகாது" (மாற்கு 9:29) என்று ஆண்டவராகிய இயேசு சொன்னது என் நினைவிற்கு வந்தது.

பாதிக்கப்படாத 6வது முறை தோல்வி

பிப்பரவரி 6 ஆம் தேதி விமானத்திற்கு டிக்கெட் பதிவு செய்ய நண்பர் அருணும், இந்திய தூதரக அதிகாரியும் முயற்சி செய்தார்கள். ஆனால் அதுவும் காத்திருப்புப் பட்டியலில்(Waiting list) இல் இருந்ததால் அன்று போக முடியவில்லை (இது 6வது தடையாகும்).

வெற்றி ஏழாவது முறை!

ஆனால் பிப்ரவரி 7 ஆம் தேதி விமானத்தில் ஒரு இருக்கை உள்ளது. நிச்சயப்படுத்தி(confirm) விட்டோம். ஆகவே கண்டிப்பாக 7 ஆம் தேதி நீங்கள் புறப்படுகிறீர்கள். "தைரியமாக, சந்தோஷமாக இருங்கள்" என்று நண்பர்கள் கூறிவிட்டு சென்று விட்டனர். மனதைத் தேற்றி, பெலப்படுத்திக் கொண்டு பிப்ரவரி 7 ஆம் தேதி காலை 6 மணியி லிருந்து தண்ணீர் கூட குடிக்காமல் உபவாசிக்கவும், ஜெபிக்கவும், ஸ்தோத்தரிக்கவும் ஆரம்பித்தேன். மாலை 6 மணியானது. விமானம் இரவு 11.45 மணிக்கு புறப்படும்! தேவனுக்கு நன்றி செலுத்தினேன். பிப்ரவரி 7 ஆம் தேதி 7வது முறையாக விமானப் பயணத்திற்கு தயார்!

வேதத்திலே 7 என்ற எண் பரிபூரணத்தையும், வெற்றியையும் குறிக்கும். சிலுவையில் இயேசு மொழிந்த 7-வார்த்தைகள், 7-நாட்கள், 7-வாரங்கள், 7-குத்துவிளக்குகள், 7 கலசங்கள் (என் திருமண நாளும் செப். 7 தான்). அது போலவே இந்த பிப்ரவரி 7ஆம் தேதி என் சிறை வாழ்விலே வெற்றியைக் கொடுக்கட்டும் என்று உபவாசத்துடன் ஜெபித்துவிட்டு நண்பர்களிடம் விடைபெற்று மாலை 6 மணிக்கு புறப்பட்டேன். சிலர் "இந்த முறையாவது நீ போய் விட வேண்டும். திரும்பி வந்தால் இங்கு சேர்க்க மாட்டோம்" என்று சிரித்துக் கொண்டே சொல்லி வழி அனுப்பி வைத்தார்கள். சிறையை விட்டு வெளியே வந்தவுடன் வழக்கம் போல் கால்களில் இரும்பு சங்கிலி இட்டார்கள். ஸ்டோர் ரூமுக்குச் சென்று என் தோள்பைகளை எடுக்கச் சென்றேன். மேலும் கூடவே இன்னுமொரு 'சூடான்' நாட்டு கைதியின் காலும் என்னுடைய காலோடு ஒரே சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்தது. அவர் தன்னுடைய தோள் பையை தேடி எடுத்துக் கொண்டுவிட்டார். நானும் என்னுடைய ஒரு பையை தேடி எடுத்து கொண்டு விட்டேன். ஆனால் இன்னொரு தோள் பை (கறுப்பு நிறம்) தேடி பார்த்துக் கொண்டு இருந்தேன். பலமுறை தேடியும் அந்தப் பை கிடைக்க வில்லை. நேரம் சென்று கொண்டிருந்தது. அந்த ஸ்டோர் பொறுப்பாளரும் தேடி பார்த்துவிட்டு இல்லை. யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டிருக் கிறார்கள் என்றார். எனக்கு மிகவும் வேதனை, அதிர்ச்சி ஏற்பட்டது. காரணம் அந்த பையில் தான் விலை உயர்ந்த வசன விளக்க வேதாகமம்(Daily Application Bible) (ஒவ்வொரு வசனத்திற்கும் விளக்கம்) வைத்திருந்தேன். அதன் விலை ரூ.3000/- மற்றும் புதிய KJV வேதாகமம், பாடல் புத்தகங்கள், சிறுவர் பள்ளி பாடல்கள், எழுத தொடங்கியிருந்த என்னுடைய சிறை அனுபவங்கள் நோட்டு புத்தகம் மற்றும் சில முக்கிய புத்தகங்கள் வைத்திருந்தேன். கால் சங்கிலிகள் இழுக்க, அறுக்க அறை முழுவதும் எவ்வளவோதரம் தேடியும் அந்த பையை மட்டும் காணவில்லை. யாரோ தவறுதலாக எடுத்துச் சென்றிருக்க வேண்டும் அல்லது வேண்டுமென்றே இந்த போலீஸ் அதிகாரிகள் எதையோ ஆராய்ந்து கண்டுபிடித்து எடுத்துச் சென்றிருக்க வேண்டும். இந்த முக்கியமான வேதாகமம் தொலைந்து போனது எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. ஏதோ பெரிய சொத்தை இழந்து போனதைப் போலத் துடித்தேன். நேரம் கடந்து கொண்டிருந்ததால் இந்த சூடான் கைதியும், வெளியே அழைத்துச் செல்ல காத்திருந்த போலீஸ்காரனும் கோபத்துடன் சத்தம் போட ஆரம்பித்தார்கள். 'சீக்கிரம் வெளியே வா' நேரம் ஆகுது, விமான நிலையம் போக வேண்டும். உடனே இப்போது வரவில்லையெனில் உன்னைவிட்டு விட்டு, இப்போது போய் விடுவேன் என்று போலீஸ் கோபத்துடன் திட்டிக் கொண்டிருந்தான். "முக்கியமான என் பை ஒன்று

காணவில்லை தேடி எடுக்க ஒரு 10 நிமிடம் அவகாசம் கொடுங்கள்" என்று கெஞ்சி கேட்டும் பயனில்லை. "எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை"(I don't care) என்று அவன் மொழியில் சொல்ல, வேறுவழியில்லாமல் அந்த பையையும் முக்கியமாக வேதத்தையும் இழந்த கனத்த இருதயத்துடன் 'சரி' என்று, அந்த ஸ்டோர் பொறுப்பாளரிடம் "பை கிடைத்தால் என் நண்பரிடம் சேர்த்து விடுங்கள்" என்று சொல்லிவிட்டு, அந்த போலீசுடனும், சூடான் கைதியுடனும் புறப்பட்டேன். விமான நிலையம் சென்றடையும் வரை அந்த வேதாகமப் புத்தகங்களையும், மற்ற பாடல் புத்தகங்களையும், பறி கொடுத்ததையும் நினைத்து வருந்திக் கொண்டேயிருந்தேன். 5 நிமிடம் கூட தேடியிருந்தால் ஒருவேளை கிடைத்திருக்கலாம். ஆனால் மறுபடியும் விமானப் பயணத்திற்கு தடையும் ஏற்பட்டு இருக்கும். மிகுந்த சத்துருவின் சோதனையில் சரி, "இந்த வேதப்புத்தகம் எடுக்கிறவருக்காவது இது பயன்படட்டும்!" என்று ஆண்டவருக்கு சொல்லிவிட்டு இந்த முறை சத்துருவின் தடையை வென்றே ஆகவேண்டும் என்று புறப்பட்டு விட்டேன். வெளியேறும் நிலையம் வந்தது. வழக்கமாக அங்கிருந்த குளியலறையில் குளிக்க அனுமதித்தார்கள். குளித்து உடைகளை மாற்றி கொண்டேன். இந்த முறையும் பிரயாண அனுமதி முத்திரை குத்தப்பட்டு டிக்கெட் எல்லாம் சரி ஆகிவிட்டது. 8 முதல் 10 மணி வரை ஒரு அறையில் தங்க வைத்தார்கள். இன்று விமானத்தில் ஏறி விட்டால், அது போதும் என்று துதித்தும், ஜெபித்தும் கொண்டும் இருந்தேன். இரவு 11.45 மணி விமானத்திற்கு, 10.30 மணிக்கே விமானத்திற்கு ஏற்றி செல்லும் பஸ் வந்து விடும் என்றார்கள். 10.30 மணி ஆனது. 11 மணி ஆனது. பஸ் வரவே இல்லை. மனதில் மறுபடியும் திகில், சந்தேகம், காரிருள் போல சூழ ஆரம்பித்தது. "இன்றைக்கும் வேண்டுமென்றே பஸ் பழுது என்று ஏதாவது காரணம் காட்டி தடை செய்து விடுவார்களோ?" என்று வீணாக கவலைப்பட ஆரம்பித்தேன். ஆனாலும் "உபவாச ஜெபத்துடன் புறப்பட்டுள்ள இந்தப் பயணம் நிச்சயம் வாய்க்கும்" என்று மறுபக்கம் தைரியமான வார்த்தைகளுடன் ஆவியானவர் பேசினார். 'பொறுமை' பொறுமை என்றது என் மனம். ஆம் "உபத்திரவம் பொறுமையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது" (ரோமர் 5:3) என்ற வசனத்தின்படி நீடிய பொறுமை, எனக்கு பரிசாக ஆண்டவர் இதன் மூலம் கொடுத்தார். ஒருவாறு என்னை ஏற்றிச் செல்லும் பஸ் 11.15 மணிக்கு, விமானம் புறப்பட 30 நிமிடங்களுக்கு முன்னதாக வந்தது. ஸ்தோத்திரம்! நன்றி ஆண்டவரே! என்று சொல்லி விட்டு பஸ்ஸில் ஏறினேன். இப்போது நாடு கடத்தப்படும் சென்னை வாசி நான் ஒருவனே. அந்த விமானத்தில் செல்வதால், அவ்வளவு பெரிய பஸ்சில் நான் மாத்திரமே ஏற்றப்பட்டேன். மறுபடியும்

முன்னும் பின்னும் பாதுகாப்பு போலீஸ் ஜீப்புகள். ஒரு அமைச்சர் சென்றால் எப்படியோ அப்படியே அழைத்துச் செல்லப்பட்டேன். ஆவியானவரும், "நீ கூட ராஜரீக ஆசாரியனும்(Royal Priest) ஜீவனுள்ள தேவனின் ஊழியக்காரன் (Minister of Living God) அல்லவா!" என்று வேடிக்கையாக சொல்லி என்னை கலகலப்பாக்கினார். மணி 11.45 விமானத்தின் அருகே பஸ் நிறுத்தப்பட்டது. பஸ்சின் கதவு திறக்கவில்லை. இன்றும் படக்,படக் என இருதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. இரண்டு அதிகாரிகள் விமானத்தில் ஏறி உள்ளே சென்று பிறகு 5 நிமிடங்கள் கழித்து கீழே இறங்கி வந்தார்கள் "ஐயோ ஆண்டவரே இந்த முறையும் இவர்களைத் தடை செய்யவிடாதிரும். கதவை திறக்கும் படி, உத்தரவு கொடுக்கும்படி செய்யும் என்று சொல்லி, ஆண்டவரோடு சம்பாஷணை செய்து கொண்டே இருந்தேன். இந்த முறை பஸ் டிரைவரிடம் "கதவைத் திற" என்று உத்தரவிட்டார்கள். மேலே விமானத்திற்குள் நீ போகலாம் என்றார்கள். "மிக்க நன்றி" என்று அவர்களிடம் சொல்லிவிட்டு விறு விறுவென்று படிகட்டுகளில் ஏறினேன்.

"ஜெத்தாவுக்கு கடைசி டாட்டா!"

உச்சிக்கு சென்று ஒருமுறை ஜெத்தா நகரை அந்த இரவின் மின் விளக்கு வெளிச்சத்தில் நின்று பார்த்துவிட்டு, உள்ளே என் இருக்கையை நோக்கி சென்றேன். இருக்கை எண் 62D பணிப்பெண் காட்ட, சென்று என் இருக்கையில் உட்கார்ந்தேன். சிறப்பு விமானம்! சென்னைக்கு செல்லும் பயணிகள் 40 பேர்கள் தான் இருந்தார்கள். அதுவும் இடையில் எங்கும் இறங்காது. நேரே சென்னை விமான நிலையம் தான் சென்று இறங்கும் என்று ஒரு பணிப்பெண் கூறினாள். மனதில் ஒரு தைரியம் சந்தோஷம், நிம்மதி ஏற்பட்டது! வழக்கமாக 8 மணி நேரம் ஜெத்தாவிலிருந்து சென்னைக்கு பயண நேரம். ஆனால் இப்போது 5 மணி நேரம் தான் விமானப் பயணம்! எல்லாம் நன்மைக்கே! என்று ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். விமானத்தில் என் இருக்கை ஜன்னல் ஓரமாக இருந்தது. அந்த சிறு கண்ணாடி ஜன்னல் வழியாக கடைசியாக ஜெத்தா நகரத்தை ஒருமுறை கூட பார்த்துக் கொண்டேன். 17 வருட காலம் வாழ்க்கையின் முக்கிய காலத்தை இந்த நாட்டில் பணத் தேவைக்காக, வாழ்வின் உணர்வுக்காக வந்து பணி செய்தாலும், கர்த்தருடைய ஊழியத்தை செய்த நாட்கள்! ஆண்டவர் தம் கிருபையால் எங்களை தம்முடைய பணிக்காய் பல பாடுகள், நிந்தனைகள், மத்தியில் வழிநடத்தி, ஆசீர்வதித்த, நிகழ்ச்சிகளை ஒருமுறை நினைவு கூர்ந்தேன். "எருசலேமே! எருசலேமே கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழ் கூட்டிச் சேர்க்குமாப்போல நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்க்க

மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாது போயிற்று'' என்று கதறி அழுது எருசலேமின் மனதிரும்புதலுக்காக ஆண்டவர் கண்ணீர் விட்டது போல (மத். 23:37) என் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது. என் கன்னங்களில் வழிந்தது. "அழகிய ஜெத்தா நகரமே! அரபு தேசமே! நீயும் என்றைக்கு மனந்திரும்பி, இயேசுவின் கல்வாரி அன்பை ருசித்து அவரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளப் போகிறாய்? எத்தனை கிறிஸ்தவ விசுவாசிகளை இப்படி சிறையிலிட்டு, கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பாய்?'' ஆண்டவரே நீர் தாம் இந்த மக்களுக்கு இரங்கி, எப்படியாவது இரட்சிக்க வேண்டும்! என்று மனதில் பாரத்துடன், வேதனையுடன் ஜெபித்தேன்.

விமானம் இன்னும் புறப்படவில்லை! ஏதாவது, யாராவது வந்து தடை செய்து விடுவார்களோ! சத்துரு ஒருபக்கம் சந்தேகம் பயத்தை தூண்டி விட்டுக் கொண்டே இருந்தான். ஆனால் 11.50க்கு விமானம் புறப்படும் ஓசை! தொடர்ந்து விமானம் நகரும் உணர்வு! ஆம் விமானம் ஓடும் பாதையில் மேலே எழும்பி வேகமாக முன்னேறிச் செல்ல ஆரம்பித்தது. "நன்றி இயேசப்பா'' என்று வாய்விட்டு சத்தமாகக் கூறிவிட்டேன்! பக்கத்தில் சிலர் திரும்பிப் பார்த்தார்கள். ஆனாலும் நான் வெட்கப்படவில்லை. என் நிம்மதி!.... என் மகிழ்ச்சி!..... என் விடுதலை உணர்வு! என் பாடுகளிலிருந்து முற்றிலும் விடுதலை! எனக்கும் ஆண்டவருக்கும் மட்டுமே அது தெரியும்!

"கடைசி சந்தேகம்"

பிரயாணம் முழுவதும் துதியும் ஸ்தோத்திரமும் ஆண்டவருக்கு செலுத்தி கொண்டிருந்தேன். இடையில் சிறிய கலக்கமும், குழப்பமும் ஏற்பட்டது. என்னவெனில், சென்னை சென்றடைந்த பின்பு மறுபடியும் சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெத்தா சிறைக்கு திருப்பி கொண்டு வந்து விடுவார்களோ?'' என்ற கலக்கம் ஏற்பட்டது. ஏனெனில் என்னோடு சிறையிலிருந்த ஒரு தமிழ்நாட்டுக்காரர் சொன்னது என் நினைவிற்கு வந்தது. 6 மாதங்களுக்கு முன்பு அவருடைய முதலாளி சரியான சம்பளம் தராததினால் எப்படியாவது தப்பி, தன்னுடைய நாட்டிற்கு வருவதற்காக போலி பாஸ்போர்ட் தயார் செய்து,ஜெத்தா விமான நிலயத்தையும் கடந்து 'மும்பை' விமானத்தில் ஏறி 'மும்பை' அடைந்தாராம். ஆனால் அந்த மும்பை இமிகிரேஷன் கவுண்டரில் இவரின் 'போலி பாஸ்போர்ட்' கண்டு பிடிக்கப்பட்டு மறுபடியும் அடுத்த விமானத்திலேயே திருப்பி ஜெத்தாவிற்கே அனுப்பி விட்டார்களாம். ஜெத்தா போலீசுக்கு தெரிவித்ததால் அவர்கள் விமான நிலயத்திற்கே வந்து அந்த நபரை கைது செய்து 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டார்களாம். (6 மாத தண்டனையை முடித்துத்

தான் பின்பு அவர் மதுரையை சென்றடைந்தார்). இந்த சம்பவம் நினைவிற்கு வந்ததால் "என்னையும் அப்படி அலைகழிப்பார்களோ" என்ற பயம், ஒருபுறம் ஏற்பட்டது. ஆனால் மறுபுறம் ஆண்டவர் இயேசு அப்படி விட மாட்டார். இந்த முறை இன்னுமா சந்தேகம்? என்று ஆவியானவரின் வார்த்தைகளும் ஒலித்து என்னை திடப்படுத்தியது. இப்படி 'மனப்போராட்டம்' நடந்து கொண்டே இருந்தது. காலை 7 மணி விமானத்திற்குள் 'இன்டர்காம்' இல் விமான ஒட்டி பேசினார் "இன்னும் 15 நிமிடத்தில் விமானம் சென்னை விமான நிலையத்தை அடையப்போகிறது" எல்லோரையும் தயாராக இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். கண்ணாடி சன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். சென்னை அருகேயிருந்த பசுமை நிறைந்த கிராமங்கள், இந்திய மண்ணையும் கண்டேன். காலை சூரியன் தன் இளம் கதிரொளியை வீசிக் கொண்டிருந்தது. இன்னும் 15 நிமிடத்தில் தாய் நாட்டின் மண்ணில், சுதந்திரமான தேசத்தில் கால் வைக்கப் போகிறோம். அன்பான உள்ளங்களைப் பார்க்கப் போகிறோம் என்று நினைத்தபோது உள்ளம் பரவசமானது! படபடப்பு, ஆர்வம் எல்லாம் அதிகரிக்க ஆரம்பித்தது. காலை 7.15 மணிக்கு விமானம் கீழ் இறங்க ஆரம்பித்தது. சென்னை நகரம் பரங்கி மலை தெரிந்தது. விமான நிலையம் தெரிந்தது! உள்ளம் துடிக்க எப்போது வெளியே இறங்கி வருவோம் என்கின்ற ஆர்வம் மிகுந்தது. விமானம் தரையை தொட்ட ஓசை கேட்டது. 'இப்போது இறங்கலாம்' என்கின்ற பணிப்பெண்ணின் அறிவிப்பு கேட்டது. இருக்கையை விட்டு எழுந்தேன். 'சவுதி ஏர்லைன்ஸ்' விமானத்திற்கு குட்பை! நன்றி! சொல்லிவிட்டு வேகமாக முன்னேறி, விமானம் விட்டு, வெளியே வந்தேன்.

"அடைந்தேன் சென்னையை"

நேராக இமிகிரேஷன் கவுண்டருக்கு வரிசையில் நின்றேன். பாஸ்போர்டில் நுழைவு ஸ்டாம்பு அடித்துவிட்டார்கள். இப்போது பயம் திகில் முற்றிலும் அகன்று போய்விட்டது. பூரண நிம்மதி! ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! கூறினேன். பெட்டிகள் சுற்றி வரும் இடம் சென்று, என்னுடைய தோள்பையை எடுத்து கொண்டேன். நேராக 'கீரின் சிக்னலை' நோக்கி நடந்தேன் அந்த அலுவலர் சோதித்தப் பிறகு, வெளியேறும் வாயிலை நோக்கி சென்றேன். வெளியே வந்தேன்! முதலில் ஒருவர் முகம் கூட தெரியவில்லை. யாரும் வரவில்லையா? ஏமாற்றம் ஏற்படுவதற்குள் என் மனைவி சுசிலாவின் முகம் எதிரே தெரிந்தது. ஓடி வந்து கட்டித் தழுவினாள். பிறகு என் மகன் பென்னியை முத்தமிட்டு தழுவினேன். பின்னர் என்னுடைய சக சகோதரர் இன்பா, சகோதரி ராணி இருவரும் என்னை அரவணைத்துக் கொண்டனர். என் மாமியாரும் என் கையைப் பிடித்துக் கொண்டார்.

ஒவ்வொருவரின் முகத்திலும் சந்தோஷம், சமாதானம் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வந்தது. பிப்ரவரி 8 ஆம் தேதி காலை 8.00 மணி சுதந்திரமான என் இந்திய தேசத்தின் சுதந்திர காற்றை சுவாசித்தேன். பூரண விடுதலை. பாடுகள், உபத்திரவங்கள், சித்திரவதை மேல் வெற்றியை கொடுத்த என் ஆண்டவர் இயேசுவிற்கு அங்கேயே நாங்கள் ஆண்டவருக்கு ஜெபத்தின் மூலம் நன்றி செலுத்தினோம். சில நிமிடங்களில் அருமை அண்ணன் சுவிசேஷகர் டாக்டர். ஜான் சாலோமனும் அவர் மனைவியும் கையில் சந்தன மாலையுடன் வந்து என் கழுத்தில் போட்டு விட்டு கட்டித் தழுவிக் கொண்டார்கள். அவர்களுடைய கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. மறுபடியும் அவர் எங்களோடு சேர்ந்து அங்கேயே ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார். என் தந்தை சகோதர, சகோதரிகளுக்கு விமான நிலையத்திற்கு வரவேண்டாம் என்று நான் சொல்லியிருந்தேன். காரணம் ஒவ்வொரு முறையும் என்னுடைய பிரயாணம் தடைப்பட்டுக் கொண்டிருந்ததால் வந்து திரும்பிச் செல்வது ஏமாற்றம், நேரம், எல்லாம் வீணாகப் போகும் மேலும் கடைசியாக நான் வந்தபோதும், அதிகாலை 1 மணிக்கு தான் என் மனைவிக்கு நான் புறப்பட்டு வருவது தெரிந்திருக்கிறது. ஆகவே அனைவருக்கும் தெரிவிக்க இயலாத ஒரு சூழ்நிலை.

அன்பு மகளின் பட்டமளிப்பு விழா

இப்போது மின்னி மகள் எங்கே என்று நான் கேட்டபோது அவள் பெங்களூர் பள்ளியில் இருக்கிறாள். இன்று மாலை அவளுக்கு 'பட்டமளிப்பு விழா' இப்போது நேரே பெங்களூர் தான் செல்லுகிறோம் என்றார்கள். மகன் பென்னிக்கு நான் வருவதற்கு 4 நாட்கள் முன்பு தான் 10 ஆம் வகுப்பு பட்டமளிப்பு விழா நடந்து முடிந்திருந்தது. அன்றும் என்னை மிகவும் எதிர்பார்த்திருக்கிறார்கள். வேனிலேயே காலை உணவு சாப்பிட்டு முடித்தேன். நேரே பெங்களூர் பயணமானோம். மாலை 4.30மணி பெங்களூர் சென்றடைந்தோம். அங்குள்ள ஒரு நண்பரின் வீட்டிற்குச் சென்று குளித்து உடை மாற்றிக் கொண்டோம். மாலை 5.30 மணி. 6.00 மணிக்கு மின்னி மகளின் பட்டமளிப்பு விழா! அவள் பள்ளியை நோக்கி புறப்பட ஆரம்பித்தோம். சரியாக மாலை 5.55 மணிக்கு அவள் பள்ளியை அடைந்தோம். அங்கு 12ஆம் வகுப்பு மாணவியர் அழகாக புடவை அணிந்து மேடைக்குச் செல்ல வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அந்த வரிசையில் என் மகளும் புடவையில் மிகவும் அழகாக நின்று கொண்டிருந்ததை தூரத்திலிருந்தே நான் பார்த்துவிட்டேன். முதலில் அவள் என்னைப் பார்க்கவில்லை. அவளுக்கு நான் வருவது முற்றிலும் தெரியாது. ஆனால் என் மனைவி அவளைப் பார்த்து நான் வந்திருப்பதை சொல்ல உடனே அதிர்ச்சி,

ஆச்சரியம், சந்தோஷம் முகத்தில் தோன்ற "டாடி" என்று ஓடோடி வந்து என் கழுத்தைப் பிடித்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். என் கண்களிலும், அங்கிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் துளிகள்! நான் என் மகளை தேற்றி, "சரி மகளே விழாவிற்கு நேரமாகிவிட்டது "நீ போ" விழா முடிந்ததும் நிறைய பேசலாம்" என்றுச் சொல்லி அனுப்பிவிட்டேன்.

கடந்த பிப்ரவரி 7 ஆம் தேதி! இதே மாலை 6மணி சவுதி அரேபியாவின் 'ஜெத்தா' பட்டணத்தில் நாடு கடத்தப்படும் விமான நிலையத்தில் "இன்றைக்காவது ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றுவாரா மாட்டாரா? என்று கொஞ்சம் சந்தேகப்பட்டிருந் தேன். ஆனால், "நான் கர்த்தர்! நான் மாறாதவர்" (மல். 3:6) "வானமும், பூமியும் ஒழிந்து போம் என் வார்த்தைகளோ ஒருபோதும் ஒழியாது" (மத். 24:35) என்று கூறிய வாக்குறுதிகளுடன் "கர்த்தர் என் வாழ்வில் தாம் "வாக்குத்தத்தங்களின் தேவன்" "கைவிடாத தேவன்" "மறவாத தேவன்" "உடன்படிக்கையின் தேவன்" என்பதை நிரூபித்து காட்டினார்.

யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்; அவன் கால்களை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள். அவன் பிராணன் இருட்டில் அடைப்பட்டிருந்தது; கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது"

ராஜா ஆள் அனுப்பி அவனைக் கட்டவிழ்க்க சொன்னான். ஜனங்களின் அதிபதி அவனை விடுதலை பண்ணினான் (சங். 105:17–20). கர்த்தர் தம் வாக்குத்தத்ததை நிறைவேற்றுமளவும் பிசாசின் சோதனையை எனக்கு அனுமதித்தார். "மரணபரியந்தம் உண்மையாயிருக்க அவர் கிருபை 6 மாதம் 20 நாட்கள் சிறைவாசத்தில் போதுமானதாக இருந்தது. என் பெலவீனங்களிலே அவருடைய பெலன் பூரணமாயிருந்தது. "உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று என் விசுவாச சோதனையில் வெற்றி பெற வல்லமையைக் கொடுத்தார். என் தந்தை, என் மனைவி, பிள்ளைகள், உடன் பிறந்தவர்களை, அவரே ஆற்றி, தேற்றி, பெலப்படுத்தி, தாங்கி, வழி, நடத்தினார். ஆயிரம் தலைமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையும், அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக் கிறார். "அவரே அதை யாக்கோபுக்கு பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும், உறுதிப்படுத்தியவர்" (சங். 105:8–11) என்ற வசனங்களின்படி அதே உடன்படிக்கையை ஆபிரகாமின் சந்ததியாகிய எங்களுக்கும் கொடுத்தார். என் தாத்தாவின் பெயர்

ஆபிரகாம்! என் தந்தையின் பெயர் ஈசாக்கு! என் அண்ணனின் பெயர் யாக்கோபு! என் மகனின் பெயர் பெஞ்சமின்! ஆக பழைய ஏற்பாட்டு ஆபிரகாம் சந்ததியை மட்டும் அல்ல, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ குடும்பமான எங்கள் "ஆபிரகாம் தலை முறையையும்" கைவிடாமல் தம் உடன்படிக்கையை" தம் அளவற்ற கிருபை, அன்பு தயவு, மனதுருக்கத்தினால் நிறைவேற்றினார். **"இந்த ஏழைக் கூப்பிட்டான்! கர்த்தர் கேட்டு எல்லா இடுக்கண்களிலிருந்தும் நீங்கலாக்கி இரட்சித்தார்"** (சங். 34:6) என்ற வசனத்தின்படி, ஆரம்பத்திலே அமெரிக்க அரசாங்கம், மேற்கத்திய கிறிஸ்தவ அரசாங்கம், இந்திய அரசாங்கம், கிறிஸ்தவ நிறுவனங்கள் எனக்கு உதவி செய்து, விடுதலை செய்ய சவுதி அரசாங்கத்தை நெருக்க மாட்டார்களா? என்று அவர்களையே நோக்கிப் பார்த்த நாட்கள் உண்டு. ஆனால் கடைசியில் என் மனைவி, பிள்ளைகள் நான் மற்றும் யாவரும் **"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்; வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும்"** (சங். 121:1–2) என்று கர்த்தர் இயேசுவையே நோக்கிப் பார்த்தோம். "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை (சங். 34:5) என்ற படி எங்கள் முகங்கள் வெட்கப்படாதபடிக்கு கர்த்தர் கடைசியில் இந்தப் பாடுகளை மேற்கொள்ள பெலன் தந்து, விடுதலையைக் கொடுத்து, உயிரோடு தாய்நாட்டிற்கு கொண்டு வந்து, என் குடும்பத்தாரை சந்திக்கக் கிருபைச் செய்தார். எங்கள் 17 வருட சவுதி அரேபியாவில் சம்பாதித்த பணத்தினாலோ, படிப்பினாலோ, செல்வாக்கினாலோ, அமெரிக்க, இந்திய மற்ற அரசாங்கங்களினாலோ என் விடுதலை வரவில்லை. **"ஜீவனுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அளவில்லாத கிருபையினாலும் உலகமெங்குமுள்ள ஆயிரக்கணக்கான விசுவாசிகளின் கண்ணீர், உபவாச ஜெபத்தினாலும் மட்டுமே! எனக்கு 'விடுதலை கிடைத்தது!** என்று நான் மிக உறுதியாகக் கூறுவேன். அல்லேலூயா!

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும் கர்த்தர் அவைகளெல்லாவற்றினின்றும் அவனை விடுவிப்பார் (சங். 34:19) என்கின்ற வாக்கின்படி எனக்கும், என் குடும்பத்திற்கும் ஏற்பட்ட எல்லா துன்பங்கள், துக்கங்கள், சோதனைகள், பாடுகள் இவை அனைத்தினின்றும் என்னை விடுவித்தார். ஆம் "என் ஆத்துமாவை மரணத்திற்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தார்" (சங். 116:8)

எங்கள் வாழ்வில் ஏற்பட்ட (6 மாதம் 20 நாட்கள்) கொந்தளிப்பை அமர்த்தினார், அதின் அலைகள் அடங்கினது! அமைதலுண்டானது.

சந்தோஷப்பட்டோம்! நான் நாடின துறைமுகத்தில் (சென்னை விமானநிலையத்திற்கு) என்னை கொண்டு வந்து சேர்த்தார் (சங். 107:29–30)

தாவீது சங். 109:30 இல், "கர்த்தரை நான் என் வாயினால் (நல்லவர், வல்லவர், போதுமானவர், கிருபை, இரக்கம், தயவு, மனதுருக்கம் உள்ளவர்) துதித்து, அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன் என்று பொருத்தனை செய்து கூறியது போல நானும், எனக்கு மறு ஜீவன் தந்த ஜீவனுள்ள ஆண்டவர் இயேசுவிற்கு, என் ஜீவனுள்ள நாளெல்லாம், ஜீவனுள்ள சாட்சியாய் வாழ்வேன்" என்று பொருத்தனை செய்துள்ளேன். அவ்விதமாகவே முழு நேர ஊழியத்திற்கு, இது 'ஆண்டவருடைய அழைப்பு' (சிறையிலிருக்கும் போதே ஆண்டவர் நீ எனக்கு முழு நேரப் பணிக்கு வேண்டும் என்று தரிசனத்தில் அழைத்ததினாலே) என்பதை முழுக்க உணர்ந்தவனாக என்னுடைய ஊழியத்தை சாட்சி மூலமாகவும், நற்செய்தி கூறும் சுவிசேஷகனாகவும் செய்ய அர்ப்பணித்து கொண்டுள்ளேன். பிப்ரவரி 10 ஆம் தேதி டாக்டர் P.P ஜோப் "கிறிஸ்துவுக்காய் சித்திரவதை" இயக்கத்தின் இயக்குனர் (P.P.Job, Director "Tortured for Christ" South Asia) என் வீட்டிற்கே நேரடியாக வந்து நலம் விசாரித்து பேட்டி கண்டார். அவருடன் சேர்ந்து வேலூர் கிறிஸ்துவின் சேனை நடத்திய "நற்செய்திப் பெருவிழாவின்" கலந்து கொண்டு என் சாட்சியை முதன் முதலாக பகிர்ந்து கொண்டேன்.

அதன் பிறகு பிப்ரவரி 17–20 வரை சென்னையில் நடந்த அற்புதம் 2002 ("Miracle 2002") மூன்று நாட்கள் அற்புத ஊழியம் சுவிசேஷகர் டாக்டர் ஜான் சாலோமன் அவர்கள் நடத்திய கூட்டங்களில் நானும் என் மனைவியும் சாட்சியைப் பகிர்ந்து கொண்டோம். அந்த சுவிசேஷப் பெருவிழாவின் 2வது நாள் கூட்டத்தில் டாக்டர் ஜான் சாலொமோன் எங்கள் இருவரையும் மேடையில் அழைத்து பெரிய சபைத் தலைவர்கள் நடுவில் அமரச் செய்து பொன்னாடைப் போர்த்தி "தமிழ்நாட்டு ரிச்சர்ட்டு உம்பிராண்ட்" என வாழ்த்தினார். அக்கூட்டத்தில் இருந்த 5000 பேர்களும் எழுந்து நின்று கைதட்டி, கனப்படுத்தி கௌரவப்படுத்தினார்கள்.

அதன் பிறகு ஏப்ரல் 31–ஜூலை 1 பாலக்காடு கேரளாவில் நடந்த "சுவிசேஷப் பெருவிழவில் டாக்டர் பி.பி. ஜோப் முக்கிய தேவ செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்தார். அப்போது அவர் என்னையும், என் மனைவியையும் கூட அழைத்து சாட்சி பகரும்படியாக அன்பு கட்டளையிட்டார். நாங்கள் இருவரும் அங்கு அவருடன் சென்றோம். அப்போது மேடையில் எங்களை கேரள சபைத் தலைவர்கள் மத்தியில்

உட்கார வைத்து 5000 பேர்கள் கூடியிருந்த கூட்டத்தினர் மத்தியில் கேரள கிறிஸ்தவர்கள் சார்பில், கேரள ஆர்ச் பிஷப் மலர் செண்டு எங்களுக்குக் கொடுத்து "ஜீவனுள்ள சாட்சிகள்" என்று சொல்லி வரவேற்றனர். அந்த இரண்டு நாட்கள் கூட்டத்திலும் நானும், மனைவியும் தனித்தனியே சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டு கேரள கிறிஸ்தவர்களை விசுவாச ஓட்டத்தில் திடப்படுத்தினோம்.

அதனைத் தொடர்ந்து வேலூரில் ஸ்தோத்திரக் கூட்டம் ஒன்றை என் அண்ணன் Rev. ஜேக்கப் விவேகானந்தா (Rev. Jacob Vivekananda) (சத்துவாச்சாரி சபை போதகர்) தலைமையில் ஒழுங்கு செய்து நண்பர்கள், வேலூர் மாவட்ட ஆயர்கள், சுவிசேஷகர்கள், விசுவாசிகள், உறவினர்கள் கூட்டிச் சேர்த்து கர்த்தர் எங்களுக்குச் செய்த அற்புதங்களை சாட்சிகளாக பகிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினோம். அதிலும் டாக்டர். ஜான் சாலொமோன் எங்களை வாழ்த்தினார். செய்தியும் அளித்தார் முன்னாள் பிஷப் Rev. RT. பாஸ்கர் மற்ற கிறிஸ்தவ தலைவர்களும் வாழ்த்திப் பேசினார்கள். திருப்பத்தூர் அபிஷேக ஆராதனை (ஜுன் 2002) கூட்டத்திலும் எனக்கு 'சாட்சி' கூற அண்ணன் சாம் ஜெபத்துரை வாய்ப்பு கொடுத்து வாழ்த்தினார்கள்.

இந்த முக்கிய நிகழ்ச்சிகளை குறிப்பிட்டு எழுதும் காரணம் என்னவெனில், 17 வருடம், 16 வருடம் என்று கடுமையாக உண்மையாக சவுதி அரேபியா அரசாங்கத்து ஆஸ்பத்திரியில் பணிபுரிந்து பணிக்காலம் முடிந்து வரும்போது எங்கட்கு "பிரிவு உபசாரா விழா" நடத்தக் கூடாது என்று எங்கள் இரண்டு துறைகளுக்கும் (X ray, Nursing) மேலிடத்து உத்தரவு போடப்பட்டது. எங்களுடைய பணியைக் குறித்து ஒரு வார்த்தை பாராட்டியோ அல்லது சிறிய அன்பளிப்போ கொடுக்காமல் விட்டு விட்டார்கள். சவுதி மனிதர்கள் எங்களை கனப்படுத்தாவிட்டாலும் தேவ மனிதர்கள், தேவப் பிள்ளைகள் எங்களை வாழ்த்தி, கனப்படுத்தியது எங்களுக்கு பெரும் உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

"ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் பிதாவானவர் அவனைக் கனம் பண்ணுவார்" (யோ.12:26) என்ற வேதவசனப்படி பிதாவாகிய தேவனே இவர்கள் மூலம் கனப்படுத்தினார்! இன்னும் கனப்படுத்துவார் என்று விசுவாசிக்கின்றோம். கர்த்தருடைய நாமத்திற்கே மகிமை உண்டாகட்டும்.

பண நஷ்டம், பொருள் கஷ்டம்!

* என் மனைவினுடைய பணிமுடிப்பு தொகை ரூ. 3 லட்சம் சவுதி அரசாங்கம் வேண்டுமென்றே சில காரணம் காட்டி கொடுக்காமல் ஏமாற்றி விட்டார்கள்.

* எங்களுடைய சொந்த சாமான்கள் 'கார்கோ'(CARGO) மூலம் அனுப்பியதில் ஒரு சரக்குப் பெட்டி (பெரியது முக்கியமான துணிமணி பொருட்கள் அடங்கியது) சென்னைக்கு இன்னும் வந்து சேரவே இல்லை (ரூ. 50,000 மதிப்பு)

* எங்களுடைய சொந்த கம்பியூட்டர்(Personal Computer) போலீஸ் எடுத்துச் சென்று பாழ்படுத்தி திருப்பி தந்து விட்டார்கள் (ரூ. 30,000 மதிப்பு)

* எனக்கு ஊழியத்திற்கென்று ஒரு மேல்நாட்டவர் கொடுத்த போட்டோ காப்பி எடுக்கும் மிஷின்(Heavy size Fast Photocopy Machine)(ரூ. 2 லட்சம் மதிப்பு) போலீஸார் பறிமுதல் செய்து, திருப்பிக் கொடுப்போம் என்று வாக்கு தந்து பின் தராமல் ஏமாற்றி விட்டார்கள்

*பல வீட்டுச் சாமான்களை அப்படியே விட்டு விட்டு வந்து விட்டோம்.

சரீரத்தில் நஷ்டம்

ஏறக்குறைய ரூ.10 லட்சம் இழப்பு. என்னுடைய சரீரத்தில் சிறையில் கடைசி நாட்களில் (என்னை விமானப் பயணம் செய்யாவிடாமல் 5 முறை தடை செய்ததால்) ஏற்பட்ட கடுமையான மூளைத் தாக்கத்தால் என்னுடைய இடதுபக்க முக பகுதியில் லேசான பக்கவாதம் (Left facial Palsy) ஏற்பட்டிருக்கிறது. இடது பக்க நெற்றியிலிருந்து இடதுமுகம் வரை தொடர்ந்து வலியும் வேதனையும் சில வேளைகளில் "வார்த்தை கள்" வேகமாக பேசமுடியாத படி குறைவு ஏற்பட்டது. வேலூரிலுள்ள தலைசிறந்த CMC மருத்துவமனையில் சென்று, சோதித்து பார்த்து, மருந்து எடுத்து வந்த பிறகு சிறிது முன்னேற்றம் உண்டு. என் பரம வைத்தியவர் "இயேசு" பூரண சுகம் தருவார், என்கின்ற நம்பிக்கை யோடு அவருக்காய் உயிருள்ள நாள்வரை சாட்சியாய் வாழ்வேன். அதை எந்த சத்துருவும் நிறுத்த முடியாது. ஆகவே இவ்வளவு நஷ்டங்கள் "உடல், பொருள், பணம் விஷயங்களில் ஏற்பட்டாலும் "கிறிஸ்து எனக்கு ஜீவன்! சாவு எனக்கு ஆதாயம்! (பிலி. 1:21) என்றும் கிறிஸ்துவுக்காய் எல்லாவற்றையும் நஷ்டம் என்றும் விட்டு விட்டேன் (பிலி. 3:7,11) என்ற பவுல் போல..கிறிஸ்துவுக்காய் நஷ்டங்களை பற்றி கவலைப்படுவதை விட்டு விட்டேன்.

நன்றி

என்னுடைய விடுதலைக்காய் ஜெபித்த உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். என்னையும், என் மனைவியையும் இந்த 6 மாதம்

20 நாட்கள் ஆதரித்து உதவி செய்த அனைத்து KSA நகரில் வசித்த கிறிஸ்தவ சகோதரர்கள், உற்சாகப்படுத்திய நெஞ்சங்களில் முக்கியமாக சகோ. சாம் கென்ட்ரிக்(USA), சகோ. ரிச்சர்ட் பிரெய்டிச் (USA), சகோ. ஸ்டீவ்ஸ்னெய்டர் (USA) ICC President சகோ. ஆக்சல்(USA), Dr. P.P. ஜோப் (Tortured for Christ, S. Asia Director) Dr. ஜான் சாமுவேல் (Miracle Ministry, Chennai) சகோ. சாம் ஜெபத்துரை (அன்றன்றுள்ள அப்பம், சென்னை), சகோ. சாம், சகோ. ஏமிசாம் குடும்பம், சகோ. இம்மானுவேல் குடும்பம், (ஆம்பூர்) சகோ. மோகன், சகோதரி லாலி மோகன், கேரளா சகோ. வர்கிஸ், சகோ. விலாஸ், சகோ. சங்கீதா மரியப்பா வர்கிஸ், பாஸ்டர். பிலிப், அமெரிக்க, கனடா இந்திய தூதரக அதிகாரிகள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆருயிர் நண்பர் சகோ. அருண், சகோ. பர்வீஸ், சகோ. ஆஷிர் (பாக்) சகோ. இம்மானுவேல் (இலங்கை) சகோ. பியூஸ் குடும்பம், பாஸ்டர் கிருஷ்நாத், சகோ. ஜெயக் குமார், சகோ. எபிநேசர் (ரியாட்) சகோ. சிரில் கிருபா (அபா) சகோ. B. Bagadur அவர்கள் அனைவருக்கும் மற்றும் எனக்கு தோள் கொடுத்த சவுதி ஊழியத்தில் பங்கேற்ற சகோதரன் ஜேம்ஸ், சகோ. குசை, சகோ. மோஸஸ், சகோ. வில்லியம், சகோ. ஜார்ஜ் மற்றும் தமிழ், மலையாளம், பாகிஸ்தான், இலங்கை, எத்தியோப்பிய சபை சகோதர சகோதரிகளையும் மற்றும பெயர் குறிப்பிட்டு எழுத முடியாத, என்னையும் என் மனைவி, பிள்ளைகள், பெற்றோரை உற்சாகப்படுத்தி ஆறுதல்படுத்திய அனைவருக்கும் நினைவு கூர்ந்து நன்றி செலுத்தி கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்க ஜெபிக்கின்றேன்.

ஜெப வேண்டுகோள்

என்னோடு சிறையில் பாடுகளின் மத்தியில் உற்சாகப்படுத்தி கிறிஸ்துவுக்காய் எல்லா நஷ்டங்கள், கஷ்டங்களை அநுபவித்த பாஸ்டர் பென்சமீன் (நைஜீரியா), பாஸ்டர் பஹாரு (எத்தியோப்பியா), 3. பாஸ்டர் டின்சாய் (எத்தியோப்பியா) 4. சகோ கிப்ரோன் 5. சகோ கவாஜு (எத்தியோப்பியா) 6. சகோ. கெலாகில் 7. சகோ. மிஸ்பின் (எத்தியோப்பியா) 8. சகோ. அராயா (எத்தியோப்பியா) 9. சகோ. இஸ்கந்தர் (எரித்திரியா) 10. சகோ. யூசுப் (எத்தியோப்பியா) 11 சகோ. மெபர்டு (எத்தியோப்பியா) 12. சகோ. வொர்க்கு (எத்தியோப்பியா) மற்றும் 13. பாஸ்டர் டென்னிஸ் (பிலிப்பைன்ஸ்) இவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி வாழ்த்துகிறேன். நீங்களும் இவர்கள் உயர்வுக்காய் ஜெபியுங்கள்.

ஊழியத்தின் பெயர்

"கன்மலையின் குரல்" (VOICE OF THE SOLID ROCK) எனும் முழு நேர கவிசேஷ ஊழியத்தை தொடங்கி நடத்தி வருகிறோம். கடந்த 7

மாதங்களாக (இதை எழுதும்போது 10-9-02) கர்த்தர் இந்தியாவின் பல சபைகள், குழுக்கள், எழுப்புதல் கூட்டங்களில் அடியேனையும் மனைவியையும் பயன்படுத்தி சாட்சியையும், செய்தியையும் கொடுக்கும்படி செய்து வருகிறார். ஏறக்குறைய கடந்த மார்ச் 28 (2001) விருந்து 1½ வருடங்களாக இரண்டு பேரும் வேலை வருமானம் இல்லாத நிலையிலும் என்னை,என் மனைவி, இரண்டு பிள்ளைகளின் படிப்பு செலவுகளை சந்தித்து போஷித்து வழிநடத்தி வருகிறார். அநேக விதங்களில் எங்களை சவுதி அரேபியா ஊழியங்கள் மூலம் பயன்படுத்திய தேவன் கிறிஸ்துவுக்காய் சிறை அனுபவ சாட்சி மூலமும் தம் சுவிசேஷத்தை பரப்பும்படி அற்புதவிதமாக பயன்படுத்தி வருகிறார். அல்லேலூயா! கர்த்தருக்கே துதி கனம், மகிமை உண்டாகட்டும். பிலி. 1:12ல் பவுல் **"எனக்கு சம்பவித்தவைகள் எல்லாம் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று"** என்று கூறியது போல,என் வாழ்விலும் இவைகள் சம்பவித்தன. அது எங்களின் இந்த சிறையின் பாடுகள் சோர்ந்துபோன விசுவாசிகளை, ஊழியரை, திடப்படுத்தவும், விசுவாசத்தில் உறுதியாய் நிற்க செய்யவும், இயேசு ஜீவிக்கிற உண்மையான ஆண்டவர், இரட்சகர் என்று உறுதியோடு சுவிசேஷம் அறிவிக்கவும் ஏதுவாயிற்று.

கர்த்தருக்கே துதி, கனம், மகிமை, மாட்சிமை மகத்துவம் உண்டாவதாக. என் குடும்பத்திற்காக, ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஆதரவு தாருங்கள், உற்சாகப்படுத்துங்கள். ஆம் கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ பட்டயமோ இவை எல்லாவற்றின் மேல் நம்மில் அன்பு கூருகிறவராலே (இயேசுவின் மூலம்) ஜெயம் கொடுத்த என் தேவனுக்கே கோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக! (ரோம. 8:35,38)

விசேஷித்த வேண்டுகோள்

"என்னுடைய சகோதரர் இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும், விண்ணப்பமுமாய் இருக்கிறது" (ரோம. 10:1) என்று பவுல் கூறியது போல இந்த பாடுகள், சித்திரவதைகளை செய்த இந்த இஸ்மவேலரும் (சவுதி) இயேசுவை அறிந்து இரட்சகராய் ஏற்று கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பமும் ஜெபமும் கூட! "பிதாவே தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்த, செய்கிற இவர்களை மன்னியும்" என்று இவர்களுக்காக பிதாவிடம் மன்றாடுவோம். சத்துருக்களை சிநேகிப்போம்! துன்பப்படுத்தின இவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கட்டும். இவர்களைப் போல இயேசுவின் அன்பை அறியாமல் கிறிஸ்தவ

ஊழியர்களை, சுவிசேஷகர்களை, மிஷினரிமார்களை துன்புறுத்தும், உபத்திரவப்படுத்தவும், கொலை செய்யவும் சாத்தானால் தூண்டப்படும் மனிதர்கள் இயேசுவின் அன்பை ருசித்து, இயேசுவின் சீடராக மாற நாம் ஜெபிப்போம்!

நினைவிற்கு

"அழிந்து போகின்ற பொன் அக்கினியால் சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும், மகிமையுண்டாகக் காணப்படும் (1 பேதுரு 1;7) "அல்லேலூயா!"

"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது, நீங்கள் (நாம்) களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு பங்காளிகளான தால் சந்தோஷப்படுங்கள்" (1 பேது. 4:13).

ஒருவன் (நாம்) கிறிஸ்தவனா(ரா)யிருப்பதினால் 'பாடுபட்டால்', வெட்கப்படமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்த கடவ(ன்)வோம் (1 பேது. 3:16)

நாங்கள் (நாம்) எப்பக்கத்தில் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிற தில்லை, கலக்கமடைந்தும், மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை (2 கொரி. 4:8). மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இந்த லேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான, நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி. 4:17)

அல்லேலூயா!

உங்கள் கருத்துக்கள், புத்தகம் மூலம் பெற்ற ஆசீர்வாதங்கள், ஆவிக்குரிய நன்மைகள், ஆவிக்குரிய ஜீவியத்தில் பலன் ஏற்பட்டிருக்குமானால் அடியேனுக்கு எழுதவும். என் ஊழிய பாதை வளர்ச்சிக்கும், என் எழுத்துப் பணிக்கும் உற்சாகமாய் இருக்கும்.

கிறிஸ்துவின் பணியில்

சகோ. பிரபு ஐசக்,

கன்மலையின் குரல் ஊழியங்கள்

(VOICE OF THE SOLID ROCK MINISTRIES)

13, 2வது குறுக்கு சி.எம். ஜான் தெரு

செங்குட்டை, காட்பாடி, வேலூர் மாவட்டம்

PHONE : : 0416 - 2297676 CELL : 94862 48250

EMAIL - ADMIN @ VOSR MINISTRIES.COM

PRABHU ISSAC @ YAHOO.COM WWW.VOSR MINISTRIES.COM

ஆசிரியர் குடும்பமாக இயேசுவின் பணியில்

தற்போது சுவிசேஷகராக தேவனுடைய பணியில்

அற்புத பெருவிழா–2002

சென்னை மாநாட்டில் சாட்சி பகரும்போது

கோவையில் அனைத்துலக உபத்திரவப்படுவோர் மாநாட்டில்

டாக்டர் ஜோப் அவர்களால் கௌரவிக்கப்படுகிறார்

இந்த 2-ஆம் பதிப்பை சமீபத்தில் மறைந்த (5-7-2006) என் அருமைத் தந்தை திரு. ஐசக் ஆபிரகாம் அவர்களுக்கு அர்ப்பணிக்கின்றேன்.

Preaching at "Thilak Nagar" Gospel Meeting, Bangalore, Karnataka





Our DVD & Cassette Releases



Philedelphia - பாகிஸ்தான் Fellowship - உடன்



New Jersey (U.S.A.) A.I.C.C. Church Pastor Rev. B.B.C. Kumar
அவர்களுடன் (எனது மாமா மகனுமாவர்

New Jersey Pastor Oswin உடன்

Washington D.C. முக்கிய கிறிஸ்துவ நிறுவனத்தலைவர்களுடன்
மகள் ஜோஹன்னா பிரபு Bro .பிரபு

Mrs & Past. Alexander Samuel & His Fellowship members at AL-AIN (U.A.E.)

குவைத் Pastor ஸ்டீபன் தமிழ் ஜெபக்குழுவினருடன் ஊழியத்தின்போது

Washington D.C. Senator building ல் பல்வேறு பிரதிநிதிகள் முன்னிலையில்

The families (Bro. Stephen's & Mr. Edwin's) who took much care during my Bahrain Ministry

கன்மலை ஜெபவீடு திறப்பு விழாவின் போது (5-6-2004) Pastor. ஒவன் ராபர்ட்ஸ், Dr. ஜான் சாலமோன், Pastor S.A. சுந்தரராஜ், Rev. I. ஜேக்கப் விவேகானந்தன் முன்னிலையில் திறந்து வைக்கப்படு இன்று அநேக ஆத்துமாக்களுக்கு ஆறுதல், சமாதானம், விடுதலைத்தரும் ஜெபவீடாக மாறியிருக்கிறது.



நியூ-ஜெர்ஸி (USA) யில் என்னை மிகவும் ஊக்கப்படுத்திய எனது உறவினர்கள் Mathews, Mrs. Hanna Mathews

குவைத் ஊழியத்தில் அன்பு பாராட்டிய விசுவாசிகளுடன்

மாதந்தோறும் கன்மலைக்குரல் ஊழியங்கள் நடத்தும் இலவச மருத்துவமுகாம்

புத்தக ஆசிரியரும் குடும்பத்தாரும்

1980 லிருந்து 1981வரை வேலூர் சி.எம்.சி மருத்துவ மனையில் இப்புத்தக ஆசிரியர் சகோதரர் பிரபு ஐசக் எக்ஸ்ரே டெக்னிஷியனாகவும் (Radiographer - X - Ray Technician) ஆகவும், இவர் மனைவி சகோதரி சுசிலா நர்ஸ் ஆகவும் பணிபுரிந்து பிறகு, 1984 ஆகஸ்டிலிருந்து சவுதி அரேபியாவில் ஜெத்தா (Jeddh) நகரில் அரசு மருத்துவமனையில் இப்புத்தக ஆசிரியர் சகோதரர். பிரபு ஐசக் அவரது மனைவி சகோதரி சுசிலா ஆகிய இருவரும் குமார் 16 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியுள்ளனர். ஆசிரியர் தனது பணிக்காலத்தில் நோயுற்று நலிந்தோரை குணமாக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டது மாத்திரமல்ல "இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" (ரோம. 10:1) என பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டிருப்பதுபோல இயேசுவே ஆண்டவர் என்று அறியாத சகோதரர்களாகிய இஸ்மவேலர்கள் ஆத்தும இரட்சிப்பை அடைய வேண்டுமென்றும், அறிந்திருந்தும் ஆராதிக்க வகைதெரியாதிருந்த, வேலைகளினிமித்தம் குடியேறிய பன்னாட்டுக் கிறிஸ்தவர்களையும் ஒருங்கிணைத்து ஆராதனையில் வழிநடத்தி அநேகரை இரட்சிப்பின் பாதையில் வழிதிருப்பியுள்ளார்.

இதையறிந்த காவல்துறைஇரகசியப் பிரிவினர் இவரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். சவுதி சிறையில் சரீரத்திலும் சிந்தையிலும் தாங்கொணா சித்திரவதைக்குள்ளானார். ஆனாலும் அவருக்குச் சம்பவித்தவைகள் சுவிசேம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று. சிறையில் முஸ்லீம் தீவிரவாதிகளுக்கும் சுவிசேஷம் எட்டத்தக்கதாக அவர் செயல்படத் தேவன் அவருக்கு உதவி செய்துள்ளார். கடைசியாக அவர் மிக இழிவான வகையில் நடத்தப்பட்டு சிறையிலிருந்து நாட்டைவிட்டு வெளியேற்றி இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். ஆனாலும் சவுதி மண்ணில் அவர் விதைத்த தேவவசனமாகிய அழிவில்லாத வித்துக்கள் முளைத்தெழும்பும் நாட்கள் வரும். நமது மிகக் குறுகிய ஞானத்தைக் கொண்டு தேவனின் ஆராய்ந்து முடியாத எல்லையற்றஞானத்தை விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

ஆனால், ஆசிரியரின் அனுபவங்களின் மூலமாக ஒன்றைமாத்திரம் நாம் தெளிவாக அறிந்து கொள்ளுகிறோம். "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம. 8:28).